www.padippakam.com




36 வது ஆண்டு மலர்

ஜனவரி 2001

# மல்லிகை

ஆசிரியர்
டொமினிக் ஜீவா

ரூபா 100/-

படிப்பகம்

www.padippakam.com

VGS 1976 VIJAYA

Service to the Farmers for more than two decades

Dealers in Agro chemical Sprayers
&
Vegetable Seeds etc

**VIJAYA** GENERAL STORES

(Agro Service Centre)

No. 85, Sri Ratnajothy Sarawanamuthu Mawatha
(Wolfendhal Steet)
Colombo-13
Tele:327011

Rani

THE FLAVOUR OF LANKA

*Chillie Powder
*Curry Powder
*Turmeric Powder

* Chicken Masala
* Mutton Masala
* Fish fry Masala

RANI GRINDING MILLS

Manufacturers of Quality Masala Products
219,Main Street,
Matale.
Tel:066-22425

படிப்பகம்

www.padippakam.com

ஜனவரி 2001

271



மல்லிகை

'ஆடுதல் பாடுதல் சித்திரம் கவியாதியனைய
கலைகளில் உள்ளம் ஈடுபட்டென்றும்
நடப்பவர் பிறர் ஈனநிலை கண்டு துள்ளுவர்'

'Mallikai' Progressive Monthly Magazine

36 ஆவது ஆண்டு மலர்

# கண்களுக்குப் புலப்படாத காயங்கள்

இந்த 36-வது ஆண்டு மலரை உங்களது கரங்களில் சமர்ப்பிப்பதில் மகிழ்ச்சியடைகின்றோம்.

இந்த மலர் இந்த ஆண்டு ஜனவரி மாதமே வெளிவந்திருக்க வேண்டும். அல்லது கொஞ்சம் பிந்திக் கூட வந்திருக்கலாம்.

உங்களனைவருக்கும் தெரிந்த காரணத்தால் இந்த மலர் சுணக்கமாக வருகின்றது. நம்மால் தவிர்க்க இயலவில்லை.

மல்லிகைக் காரியாலயத்தில் இருந்து கொண்டு இதழ்களையும் ஆண்டு மலர்களையும் உருவாக்கிக் கொண்டிருப்பது மாத்திரமே எமது வேலையாக இருந்து விடுவதில்லை. அது நம்மைப் போன்றவர்களுக்குத் தோதான வேலையுமல்ல.

அது ஒரு படைப்பாளியின் கடமையுமல்ல.

நம்மைப் பொறுத்தவரை தேடுதல் தான் எமது தலையாய நோக்கம். தேடல்கள் மூலம் தேடியடையும் உண்மைகளையும், தகவல்களையும் பெறுபேறுகளையும் வாசகர் முன் சமர்ப்பித்து மல்லிகையையும் உங்களையும் செழுமைப்படுத்துவதே எமது தலையாய நோக்கமாகும்.

இப்படியாகத் தேடல் முயற்சிகளில் ஈடுபடும் வேளைகளில் எப்படியோ மல்லிகையின் பல வேலை நாட்கள் அபகரிக்கப்பட்டு விடுகின்றன.

தவிர்க்க முடியாத நிலைதான் இது என்பதை நீங்கள் புரிந்து கொள்வது நல்லது.

கடந்த ஆண்டு 35-வது ஆண்டு மலருக்கு அடுத்ததாக அவுஸ்திரேலிய மலரை வெளியிட்டிருந்தோம்.

அந்த மலர், கணிசமான பிரதிகளை அவுஸ்திரேலியாவில் பரந்தளவில் பரவிப் பயன்பட்டது. அத்துடன் ஐரோப்பிய நாடுகளில் அந்த மலரும் சென்ற ஆண்டு 35-து மலரும் வரவேற்கப்பட்டது.

மல்லிகை இதழ்களைப் பற்றி நாம் ஒன்றைத் தெளிவாகப் புரிந்து கொண்டுள்ளோம்.

வெளிவரும் மாதங்களோ, திகதிகளோ, ஆண்டுகளோ அதன் உள்ளடக்கக் காத்திரத்திற்கு முக்கியமானதல்ல. காலம் பிந்தினாலும்

அட்டைப்படம்:
ரமணி
கோட்டச் சித்திரம்:
ஸ்ரீதர் பிச்சையப்பா

படிப்பகம்

www.padippakam.com

தொடர்ந்து மல்லிகை இதழ்கள் தங்களது கைவசம் கிடைக்க வேண்டும் எனப் பலர் வேண்டுகோள் விடுகின்றனர்.

மல்லிகை வர்த்தகச் சஞ்சிகையல்ல. அதன் சகல அடக்கமுமே தனிமனித உழைப்புடன் கூடிய அர்ப்பணிப்புச் சேவைதான்.

இதைப் புரிந்து கொண்டவர்கள் தெளிவாகத் தெரிந்து கொண்டால் சரி. இதைத் தான் நாங்கள் விரும்புகின்றோம்.

மல்லிகையை - குறிப்பாக அதன் ஆண்டுமலர்களைத் தயாரிக்கும்போது - சிருஷ்டிக்கும் போது என்று கூடச் சொல்லலாம் - இன்றைய திகதிக்கல்ல, இன்றைய மாதத்துக்குக் கூட அல்ல, எதிர்காலத் தலைமுறைக்கு இந்த மலர்களை அர்ப்பண உணர்வுடன் தயாரிக்கின்றோம் என்ற தெளிந்த சிந்தனையுடனேயே உருவாக்குகின்றோம்.

இதைப் போன்ற மலர்கள் தினசரிப் பத்திரிகைகளைப் போல, திகதி பார்த்து விட்டுத் தூரப்போட்டு விடத் தக்க செய்தி ஏடுகளல்ல. வருங்காலஒத்தில் உங்களது பேரன், பேத்திகள் பல்கலைக் கழக ஆய்வுக்குப் படிக்கும் போது இதன் பழைய இதழ்கள் அவர்களது உயர் கல்விக்கு அவசியம் தேவைப்படலாம். எனவே பத்திரமாகப் பாதுகாத்து வைத்திருங்கள், பழைய இதழ்களை.

பழைய மல்லிகை இதழ்கள் சம்பந்தமாக எமக்கு நேரடி அநுபவம் ஒன்று ஏற்பட்டதை உங்களது கவனத்திற்குக் கொண்டு வருவது நல்லது என்று கருதுகின்றோம்.

உங்களுக்குத்தான் தெரியுமே யாழ்ப்பாணத்தை விட்டு கொழும்பிற்கு மல்லிகையுடன் நாமும் உள்ளூர்ப் புலம் பெயர்ந்ததுடன் பழைய இதழ்கள் அங்கேயே முடங்கிப் போய் விட்டன.

இரண்டு ஆண்டுகளுக்கு முன்னர் ஒரு தேவைக்காக ஓர் இதழ் தேவைப்பட்டது. தேடித் தேடி அலைந்தோம். கடைசியில் வெள்ளவத்தையில் ஒஞஒரு நண்பரிடம் அந்த இதழ் இருப்பதாகக் கேள்விப்பட்டு அணுகினோம். அந்த இதழின் அன்றைய விலை ஐம்பது சதக் காசுதான். ஆனால் அவசர தேவை கருதி நாம் அதற்குக் கொடுத்த விலை எண்பது ரூபாய்கள். அத்துடன் ஆட்டோச் செலவு வேறு.

அன்றுதான் எமக்குக் கூட மல்லிகையின் இலக்கிய அருமை புரிந்தது. அதன் பெருமை தெரிந்தது.

எனவே தெளிவாக ஒன்றைக் குறிப்பிட்டுச் சொல்ல விரும்புகின்றோம். மாதம், வாரம், பார்த்து வாங்குபவர்கள் உதட்டைப் பிதுக்கியபடி இலக்கியம் படிப்பவர்கள் தயவு செய்து மல்லிகையைப் புரட்டிப் பார்த்து வாங்காதீர்கள்.

இது உங்களுக்காக உருவாகும் சஞ்சிகையுமல்ல. உங்களது ரஸனையை ஆதர்சமாகக் கொண்ட வெளியீடுமல்ல.

தயவு செய்து வழியை மறிக்காதீர்கள்.

மல்லிகையில் எழுதுபவர்களுக்கு ஒன்றைச் சொல்லி வைக்கின்றோம். உங்களது இலக்கிய நாமம் இன்று சமுத்திரங்களைக் கடந்து, கண்டங்களையும் தாண்டி அந்த அந்த நாடுகளில் உச்சரிக்கப்படுகின்றதென்றால் உங்களது அசாத்தியத் திறமை மாத்திரம் அதற்குக் காரணமாய் அமைந்து விடவில்லை.

முப்பது வருடங்களுக்கு முன்னர் ஒரு சிற்றிலக்கிய ஏட்டின் ஆசிரியர் தெருத் தெருவாக, ஒழுங்கை ஒழுங்கையாகக் குடாநாட்டின் சகல பிரதேசங்களிலும் கொண்டு சென்று விற்று வந்தானே அதையும் நீங்கள் கொஞ்சம் கவனத்தில் வைத்திருப்பது நல்லது.

காந்தியடிகளும் பிச்சைக்காரனும், உருவத்தில் மற்றவர்கள் பார்வையில் ஒத்தவர்களைப் போலக் காட்சி தரலாம். கையில் தடி, அரையில் முழங்காலுக்கு மேலே வேட்டி, மெலிந்த உடல்.

காந்திய எளிமையும் பிச்சைக்காரனின் இல்லாமையும் ஒன்றல்ல. இரண்டுமே வேறு - வேறு.

மல்லிகையின் எளிமையையும் அதை உருவாக்குபவரின் எடுத்துக் காட்டுக்குரிய அர்ப்பணிப்பு உணர்வையும் இன்றும் கொச்சைத்தனமாகப் பார்த்து மனசுக்குள் எடை போடுபவர்கள் இதைப் புரிந்து கொண்டால் ஈழத்து இலக்கியத்திற்கு நல்லது.

படிப்பகம்

www.padippakam.com

மல்லிகை

# சரியாக ஒரு மாதம்

2000 ம் ஆண்டு டிசம்பர் 22 ந் திகதி புறப்பட்டேன்: அங்கிருந்து 2001 ஜனவரி 22 இல் நாடு திரும்பினேன். இந்த ஒரு மாத இடைத் தங்கலில் எனது ஐரோப்பிய இலக்கியப் பயணம் நடைபெற்று முடிந்தது.

ஐரோப்பாவிலுள்ள பாரம்பரியப் பிரபலம் வாய்ந்த மூன்று தேசங்களினது தலை நகர்களுக்கும் போய் வந்தேன்.

பாரிஸ் - பேர்லின் - லண்டன்!

இந்த மேலை நாட்டுப் பிரயாணம் எனக்குள் ஏற்படுத்தியுள்ள மிகப் பெரிய தாக்கத்தையும் பார்வை விரிவையும் இன்று எனக்குள் நானே உணர்ந்து கொள்ளுகின்றேன்.

நான் போனதே பாரிஸ் மாநகரில் நடைபெற்ற புலம் பெயர்ந்த தமிழர்களினது 27லது இலக்கியச் சந்திப்பில் கலந்து கொள்வதற்குத்தான்.

இரண்டு முழு நாட்களும் இந்த இலக்கிய விழா நடைபெற்று முடிந்தது. ஆழமான கருத்துப் பரிமாறல்களும் இலக்கியக் கருத்து மோதல்களும் எதிர்காலத்தில் செய்யப்போகும் ஆக்கபூர்வமான வேலைத் திட்டங்களும் விவாதத்தில் இடம் பெற்றன.

ஐரோப்பிய நாடுகளிலிருந்து பல பேராளர்கள் இந்தச் சந்திப்பில் கலந்து கொண்டு சிறப்பித்தனர்.

நான் கலந்து கொண்ட மிகக் காத்திரமான இலக்கிய விழாக்களில் இதுவுமொன்று.

என் நெஞ்சின் அடி ஆழத்தில் இதன் செழுமை வியாபித்துள்ளது. பல திசைகளிலுமிருந்து வந்து இந்த இலக்கியச் சந்திப்பில் கலந்து கொண்ட பேராளர்களின் முகங்களைப் பார்த்துப் பார்த்து என் மனசில் அவர்களது முகங்களைப் பதிய வைத்துக் கொண்டேன்.

அவர்களையும் இந்தக் கட்டத்தில் நினைத்துப் பார்க்கின்றேன்.

எத்தனை எத்தனை விதமான மனிதர்கள் இவர்கள்!

இத்தனை இலக்கிய நெஞ்சங்களையும் நான் எனது சொந்த மண்ணில் கடந்த காலங்களில் சந்தித்திருப்பேனோ என்பது சந்தேகம் தான்.

இவர்களில் பலரை நேரடியாகச் சந்தித்து உரையாடி, சிரித்து, சுக துக்கம் விசாரித்து மகிழ்ந்து திரும்பியிருக்கிறேன்.

என் வாழ்க்கையில் எனக்கேற்பட்ட பெரும் பேறுகளில் இதுவுமொன்று என்றே கூற வேண்டும்.

விழாவில் கலந்து கொண்டவர்கள் என் மீதும் மல்லிகை மீதும் காட்டிய பரிவு கலந்த பாசத்தை, கரிசனையைப் பார்த்து நான் உண்மையிலேயே பிரமித்துப் போய் விட்டேன்.

இவர்களில் பலர் தரமான சுவைஞர்கள்: இன்னும் சிலர் ரஸிகர்கள். பெரும்பாலோர் எழுத்தாளர்கள்.

சந்திப்புக்குப் பேராளர்களும் வந்திருந்தோ: இலக்கிய ஆர்வம் காரணமாகவும் உந்துதலின் வெளிப்பாடாகவும் உணர்ச்சி பூர்வமாகவும் தத்தமது மனக் கருத்துக்களை வெளி வெளியாக வைத்து விவாதித்தனர்.

படிப்பகம்

www.padippakam.com

கேட்கக் கேட்கச் சந்தோஷமாகவிருந்தது.

ஐரோப்பாவிலுள்ள ஒரு பாரம்பரிய இலக்கிய விசாலம் கொண்ட ஒரு நாட்டின் தலைப்பட்டினத்தில் தமிழ் இலக்கிய விழாவில் தமிழில் உரத்த குரலில் விவாதிக்கின்றனரே, என நினைத்த பொழுது எனது சர்வாங்கமுமே புளகிந்தது. மனசு பெருமையால் பூரித்தது.

புலம் பெயர்ந்த தமிழனின் சாதனைகளில் இதுவுமொன்று.

பலரும், ஏன் நான் உட்பட ஒரு கருத்துக் கொண்டிருந்தோம்.. புலம்பெயர்ந்த நம்மவர்கள் காலப்போக்கில் தமது தாய்ப்பாஷையை இயல்பாகவே மறந்து, புகலிடம் தேடிய நாட்டினது மொழிகளுடன் கலந்து, தமது தனித்துவத்தையும் கலாசார விழுமியங்களையும் இழந்து போய் விடுவார்களோ என எண்ணியிருந்தோம்.

அந்த எண்ணமே தவறு என எதார்த்த நிகழ்ச்சிகள் நிரூபிக்கின்றன. மொழி மீதும் கலாசார பண்பாடுகள் மீதும் அவர்கள் வைத்திருக்கின்ற அபார பற்றையும் பாசத்தையும் விசுவாசத்தையும் பார்க்கும் போது நாம் தான் வீணாகச் சந்தேகப்படுகின்றோமோ என எம் மீதே எமக்குச் சந்தேகம் ஏற்படுகின்றது.

சூழ்நிலையும், யுத்த நிலையும் எதிர்காலப் பயமும் அவர்களை இந்த நாட்டை விட்டுப் பிரிந்து போக வைத்திருக்கலாம்.

ஆனால் எத்தனை எத்தனை சமுத்திரங்களை, மலைகளைக் கடந்து போக வைத்திருந்த போதிலும் கூட, இந்த மண்ணை, இந்த மண்ணின் வாசனையை, மொழியின் பாரம்பரியத் தொன்மையை மறக்கடிக்கச் செய்யவில்லை.

எனவேதான் பாரிஸில் தமிழுக்கு விழா எடுக்கிறார்கள். பெர்லினில் தமிழில் இலக்கியவிமர்சனம் நடத்துகிறார்கள். லண்டனில் தமிழில் தொலைக்காட்சிகளையும் வானொலி நிகழ்ச்சிகளையும் சிறு சஞ்சிகைகளையும் தொடங்கி இயக்கி வருகின்றனர்.

நான் அடிக்கடி மேடைகளில் சொல்லி வருவதை இங்கு எழுத்தில் பதிந்து வைக்கின்றேன். இதே கருத்தைச் சில மாதங்களுக்கு முன்னர் சென்னையிலும் நான் சொல்லியிருக்கின்றேன்.

தமிழகத்துக்குத் தமிழர்கள் ஐரோப்பிய அல்லது அமெரிக்க நாடுகளுக்குக் குடும்பத்துடன் போனால் தங்களது இருப்பை நிலை நாட்டிக் கொள்வதற்காக மகளுக்குப் பரதநாட்டியம் பழக்குவார்கள். அடுத்து கூட்டம் குழுவாகச் சேர்ந்து முருகன் கோயிலொன்றைத் தமது இருப்பிடங்களுக்குச் சமீபமாக ஸ்தாபிப்பார்கள்.

நம்மவர்களோ இதில் வித்தியாசமாகச் செயல்படுவார்கள். புலம் பெயர்ந்துள்ள நம்மவர்களில் புத்திஜீவிகளில் சிலர் ஒன்று கூடி தமது இருப்பை நிலைநிறுத்துவதற்காக இலக்கியக் கழகமொன்றை உருவாக்குவார்கள். சிறிது காலம் சென்ற பின்னர் இவர்களில் பலர் இணைந்து ஓர் இலக்கியச் சஞ்சிகையை வெளியிடுவார்கள். தொடக்கத்தில் நெருக்கம் இருக்கும். தொடர்ந்து முரண்பாடு தோன்றும். குறுங்குழுவாதம் தலை காட்டும். குழுக்குழுவாகப் பிரிவார்கள். கண்ணை கட்டித் தங்களைத் தாங்களே திட்டித் தீர்ப்பார்கள்.

இவையனைத்தும் அங்கு தமிழில்தான் நடைபெறும். நமது தமிழர்கள் மத்தியில்தான் இடம் பெறும்.

ஐரோப்பாவில் கூட்டுக் குழுக்களால் இப்படி ஆரம்பிக்கப்பட்டு, பின்னர் கருத்து மோதலால் பிரிந்து போன சிற்றிலக்கிய ஏட்டாளர்கள் பலரை எனது இந்த இலக்கியப் பயணத்தில் சந்தித்து உரையாடியுள்ளேன்.

ஒவ்வொருவரும் மனந்திறந்து என்னுடன் பேசினார்கள். இத்தனைக்கும் அவர்களது ஆத்ம சுத்தத்தில் எனக்குப் பரிபூரண நம்பிக்கையுண்டு.

இந்த மூன்று ஐரோப்பிய மாநகரங்களில் இவர்களைத் தனித் தனியே சந்தித்த சமயம் இவர்கள் நேரில் சொன்ன சகல கருத்துக்களையும் அபிப்பிராயங்களையும் திறந்த மனசுடன் கேட்டறிந்து கொண்டேன்.



படிப்பகம்

www.padippakam.com

புலம் பெயர்ந்த நம்மவர்களை அதிலும் இளைஞர்களைப் புரிந்து கொள்வதற்கு அவர்களது பிரச்சினைகளை தெளிவாகத் தெரிந்திருக்க வேண்டும். நமது பிரச்சினைகள் போன்றனவையல்ல. அவர்களது பிரச்சினைகள் ஒவ்வொருவருக்கும் தனித்தனியாக ஒவ்வொரு பிரச்சினை.

தொழில் நெருக்கடிகள், வாழ்க்கைச் சிக்கல்கள், வயது முதிர் கன்னியான அக்காவின் கலியாணத்திற்கு ஊருக்குக் காசு அனுப்ப வேண்டிய அவசர தேவை, மற்றும் கொழும்பில் லாட்ஜில் வந்து மூன்று வருட காலமாகத் தங்கியுள்ள தாய்க்குச் செலவுக்குக் கொடுக்க வேண்டிய கட்டாயக் கடனை இப்படி எத்தனை எத்தனையோ...!

இத்தனைக்கும் அந்தக் குளிர் மண்டிய பனி கொட்டும் பிரதேசத்தில் தொடர்ந்து வாழ்ந்து கொண்டு தொடர்பு அறுந்து போகாமல் ஒன்று கூடி ஆண்டுக்கு ஆண்டு தமிழ் மொழியின் ஆக்க வளர்ச்சி பற்றி விவாதிக்கின்றனர் என்றால் அவர்களுக்குத் தமது மொழியின் மீதுள்ள ஆழ்ந்த பற்றும் பாசம்தானே காரணமாக இருக்க முடியும்.

அடுத்த 28-வது இலக்கியச் சந்திப்பு பனி போர்த்த நாடான நோர்வேயில் நடைபெற இருக்கின்றது.

27-வது விழா முடிவில் பாரிஸ் விழாவில் வைத்தே வந்திருந்த பேராளர்களுக்கு இந்தத் தகவலைப் பகிரங்கமாக அறிவித்து விட்டார்கள்.

சென்ற தலைமுறைக்காரர்கள் நமது நாட்டில் மன மயக்கத்தில் ஆழ்ந்திருப்பதைப் போல, இவர்களில் சிலரும் இத்தகைய மன மயக்கத்திற்கு ஆட்பட்டிருந்தவர்களே.

அதாவது பிரபல தமிழகத்து நட்சத்திர எழுத்தாளர்களை விரும்பி அழைத்து ஷோ' நடத்தச் சிலர் விரும்பியிருந்தனர்.

பல்வேறு வாழ்க்கை அநுபவங்களுக்கு உட்பட்டுப் பதப்படுத்தப்பட்டு நெறிப்படுத்தப்பட்டுள்ள இளந் தலைமுறையினர் இப்படியாக அழைக்கப்படுவதை எதிர்த்து நம்மைப் போன்றவர்களைத்தான் எதிர்காலத்தில் அழைத்துச் சிறப்பிக்க வேண்டும் என வற்புறுத்திக் கூறி அதற்கான ஆயத்தங்களையும் செய்து கொடுத்தனர்.

இந்த மெய்யான ஆர்வலர்களின் வேண்டுகோளின் நெருக்குதல் கவனமாகத்தான் நான் பாரிஸ் ஒன்று கூடலுக்கு விசே' அழைப்பாளராக அழைக்கப்பட்டிருந்தேன்.

என்னை அழைத்ததில் பலருக்கு பெரிய மனநிறைவு.

இதைப் போலத்தான் பெர்லினில் நான் கலந்து கொண்ட ஷமல்லிகை மாலை' ஒரு மாலை நேரத்து இலக்கியச் சந்திப்பு பூரண நிறைவுடன் நடந்தேறி முடிந்தது.

தங்களில் ஒருவனாக, அந்த விதமான பந்தாவுமற்ற ஒருவனாக, மெய்யான இலக்கிய நெஞ்சம் கொண்ட நண்பனாக என்னை இனங் கண்டு பழகினர்: நேசித்தனர்.

எனது ஐரோப்பிய இலக்கியப் பயணத்தில் எனக்குக் கிடைத்த பெறுபேறே அங்கு நான் சந்தித்த நண்பர்கள்தான்.

லண்டனோ மிகப் பிரமாண்டமான மாநகரம்.

மல்லிகையை ஆரம்ப காலத்தில் வாசித்துப் பழக்கப்பட்டவர்கள், மல்லிகையின் வளர்ச்சியில் அக்கறை காட்டிப் போ'த்து வந்தவர்கள், என்னுடைய கிட்டிய நண்பர்கள், உறவினர்கள் என ஒரு பெருங் கூட்டத்தினரே லண்டனில் வாழ்ந்து வருகின்றனர். அத்துடன் எனதும் மல்லிகையினதும் பெயரை முன்னரே கேட்டுத் தெரிந்து வைத்திருப்பதுடன் என்னை இதுவரை நேரில் பார்த்தறியாதவர்கள் கூட, லண்டனில்தான் பெரும்பாலோர் இருந்தனர்.

ஐரோப்பாவில் நானிருந்த ஒருமாத காலத்தில் இருபது நாட்களுக்கு மேல் நான் லண்டனில்தான் தங்கியிருந்தேன்.

அங்க ஐந்து கூட்டங்களுக்கு மேல் இலக்கியச் சந்திப்புக்கள் இடம் பெற்றிருந்தன. தனிப்பட்ட சந்திப்புகள் இடையிடையே நிகழ்ந்தன.



படிப்பகம்

www.padippakam.com

என்னுடைய நீண்ட காலத் தோழர்களான, மிக நெருக்கமான நண்பர்களான ஸ்ரீ கங்காதரன், வங்கன் தேவராஜன், சிவலிங்கம் போன்ற முக்கியமான மூவர்தான் என்னை லண்டனுக்கு அழைக்க முன்னின்று உழைத்தவர்கள்.

பாரிஸ் விழா முடிந்ததும் அப்படியே நாடு திரும்பத்தான் முதலில் முடிவெடுத்திருந்தேன். அதற்கமைய பிரெஞ்ச் விசா கூட எனக்கு எட்டே எட்டு நாட்களுக்குத்தான் தந்திருந்தனர். எனவே சந்திப்பு முடிந்ததன் பின்னர் திரும்புவதுதான் எனது முன்னைய திட்டம். இவர்கள் மூவரும் ஏதோ ஏற்பாடுகள் எல்லாம் செய்து விசா ஏற்பாடுகளைச் செய்து தந்தனர்.

இந்த மூவரின் அன்பாதரவும் ஒத்துழைப்பும் இல்லையென்றால் நான் லண்டன் பயணத்தையே எண்ணிக் கூடப் பார்த்திருக்க மாட்டேன்.

பல பழைய இலக்கிய நண்பர்களை அங்கு சந்தித்துக் கலந்துரையாடியது என் வாழ்க்கையில் மறக்க முடியாத சம்பவங்களில் ஒன்றாகும்.

பத்மநாப அய்யர், மு.பு'பராஜன், ஓவியர் கிரு'ணராஜா, நேமிநாதன், இளவாலை அமுத போன்றோரை அங்கு சந்தித்தது மறக்கமுடியாது. நாடகக் கலைஞர் தம்பதியினரான பாலேந்திரா ஆனந்தராணி போன்றோர் தமது இல்லத்துக்கு என்னை அழைத்துக் கௌரவித்தனர். அங்கு நடந்த சந்திப்பில் பலர் கலந்து கொண்டு சிறப்பித்தனர்.

அடுத்துப் பொங்கல தினத்தில் புதிதாக ஒரு மன்றம் அங்குரார்ப்பணம் செய்து வைக்கப்பட்டது. அதில் நான் சிறப்புப் பேச்சாளராகக் கலந்து கொண்டேன்.

நான் லண்டனுக்கு வந்திருப்பதை நண்பர்கள் மூலம் கேள்விப்பட்டிருந்த பழைய நண்பர் பாமா இராஜகோபால் தனது பத்திரிகையான ஷபுதினம்' என்ற இதழில் ஷ லண்டனில் டொமினிக்ஜீவா'என இரண்டு கலம் தலைப்பில் எனது வருகையைப் பாராட்டியிருந்தார்.

ஷதீபம்' என்ற தொலைக்காட்சி எனது ஒரு மணிநேரப் பேட்டியை இரைண்டு நாட்களாகப் பிரித்து ஒளிபரப்புச் செய்தது. என்னை அதற்காகப் பேட்டி கண்டவர் இந்த மண்ணைச் சேர்ந்த வளர்ந்து வரும் கலைஞர் இளைய அப்துல்லாஹ். இந்தப் பேட்டி அகில ஐரோப்பாவையும் சென்றடையக் கூடியது. இதைப் பார்த்த பலரும் தொலைபேசியில் தொடர்பு கொண்டனர்.

அதைப் போலவே மூன்று ஒலிபரப்பு நிறுவனங்களும் எனது பேட்டியை சுடச்சுட ஒலிபரப்பின. தமிழ்ப்பிரியா, சந்திரா தியாகராஜா என்ற இரு மல்லிகை எழுத்தாளர்களும் இப்பேட்டியைக் கேட்டு என்னுடன் தொலைபேசியில் தொடர்பு கொண்டு தமது மகிழ்ச்சியைத் தெரிவித்தனர்.

நட்ட நடுச் சாமத்தில்கூட, தொலைபேசி என்னுடன் உரையாடக் காத்திருந்தது.

ஜனவரி 20 ந் திகதி அதாவது நான் நாடு திரும்புவதற்கு இரண்டு நாட்களுக்கு முன்னர் எனக்கொரு பாராட்டுவிழா நடைபெற்றது.

அது எனக்கொரு பிரியாவிடை விழாவாகவும் அமைந்தது.

''ஈழத்தின் மூத்த தமிழ் எழுத்தாளர் மல்லிகை டொமினிக் ஜீவாவின் மிக நீண்ட தமிழ்ப் பணியையும் 36 ஆண்டுகளாகத் தொடர்ந்து மல்லிகை இதழை வெளியிட்டு வருவதையும் பாராட்டி பிரித்தானியா வாழ் தமிழ் பேசும் மக்களின் சார்பாக இந்த விழா ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

இந்த மண்ணில் வாழ்ந்து வருகின்ற ஜீவாவின் இலக்கிய நண்பர்களையும், இலக்கிய ஆர்வலர்களையும் விழாவில் கலந்து கொண்டு சிறப்பிக்குமாறு அன்புடன் அழைக்கிறோம்'' என அழைப்பிதழ் கூறியது.

பல நிறுவனங்களைச் சேர்ந்தோர் பாராட்டிப் பேசினர். மடிவில் ''ஜீவாவின் இலக்கியம்'' பற்றி திரு. மு. நித்தியானந்தனும், ஷமல்லிகையும் சிற்றிலக்கிய ஏடுகளும்' என்பது பற்றி திரு. மு. புஷ்பராஜனும், ''ஜீவாவின் அரசியல்'' பற்றி திரு. வி. சிவலிங்கமும் சிறப்புரையாற்றினர்.

முடிவில் எனது சிறப்புரை இடம் பெற்றது.

சபையோர்களிடமிருந்தும் லண்டன் மாநகரத்திடமிருந்தும் விடை பெற்றுக் கொண்டேன்.

**-டொமினிக் ஜீவா -**



படிப்பகம்

www.padippakam.com

# வேரும் விழுதுகளும்

சுதாராஜ்

புது வருடப் பிறப்புக்கு நாட்கள் நெருங்கிக் கொண்டிருக்கின்றன என்றதும் அவருக்குப் பயமாகயிருந்தது. இன்னும் மூன்று கிழமைகளே இருக்கும் நிலையில் நாட்கள் ஒவ்வொன்றாகக் கடந்து போகப் போகப் பயம் அதிகரித்துக் கொண்டிருந்தது. எப்படிச் சமாளிக்கப் போகிறேனோ என்று முழுசாட்டம் பிள்ளைகளுக்குப் புத்தாடை, உடுதுணிகள் வாங்க வேண்டும். ஐந்து பேருக்கும் வாங்கு வதானால் எவ்வளவு தேவைப்படும்? அதற்கு எங்கே போவது?

போன வருடத்தைப் போல இந்த வருடமும் கடத்தி விட முடியாது போலிருந்தது. மூத்த மகன் பிரகாஷ் ஏற்கனவே அவருக்குச் சொல்லி வைத்து விட்டான்.

"அப்பா...! எனக்கு இந்த முறை வருடப் பிறப்புக்கு நீல சேர்ட் வாங்கித் தாங்கோ! ஸ்கூலுக்கும் போடக்கூடிய தாய் இருக்கும்!"

வருடப் பிறப்பு என்பது ஒரு சாட்டுத்தான். பிள்ளைகளுக்கு ஸ்கூலுக்குப் போடுவதற்கு உடை தேவைப்படுகிறது. மனைவி சரசு கூட அவருக்கு அவ்வப்போது சொல்லுவதுண்டு.

"ஒரு ஆமான உடுப்பில்லாமல் அதுகள் எப்படி ஸ்கூலுக்குப் போறது?"

அவர் அப்போது மனைவியைச் சினந்து பேசுவார்.

"என்ன சரசு?... நிலைமை விளங்காத மாதிரி கதைக்கிறீர்.... என்னை என்ன செய்யச் சொல்லுறீர்?"

அவளுக்கு நிலைமை தெரியும் என்பது அவளுக்குத் தெரியும். ஆனால் அவளும்தான் என்ன செய்வது? வேறு யாருக்குப் போய் முறையிடுவது? எனினும் அப்படிச் சத்தம் போட்டால் அவள் திரும்பவும் அந்தக் கதையை எடுக்க மாட்டாள்.

உள்ளது இரண்டு சோடி உடுப்புகள்தான். பாடசாலையால் பிள்ளைகள் வந்ததும் அதைத் தோய்த்துலர்த்தி அடுத்த நாளைக்காக ரெடி பண்ணி வைத்து விடுவாள். உடைகளில் கிழியல்களுக்குத் தையல் போட்டே அவளுக்கு அலுத்தே போயிற்று.

அவரது மகள் மீரா இரண்டு நாளுக்கு முன்னர்தான்:

"அப்பா! பார்த்தீங்களா... கிழிஞ்சு போயிருக்கு!... பிள்ளையள் எல்லாம் பகிடி பண்ணுதுகள்... இது என்ன போஸ்ட் ஒபீஸா... என்று!"

மீரா சட்டைக் கிழியலில் கைவிரலைவிட்டு அவருக்குக் காட்டியபோது அது இன்னும் கொஞ்சம் "சர்ர்"எனக் கிழிந்தது.

"ஆ....ஆ... கவனமம்மா... கவனம்!" அவர் பதறிப் போனார்.

"பிள்ளைகளுக்கு இந்தச் சட்டையை தைத்துக் குடும்!"மனைவிக்கு உத்தரவு போட்டார்.

"அப்பா வருடப் பிறப்புக்கு எனக்கு இரண்டு யூனிபோம் தைப்பிச்சுத் தந்தீங்களென்டால் போதும்!"

குமர்ப்பிள்ளை.. ஒரு நல்ல உடுப்பில்லாமல் இந்த மாதிரிப் போய் வருகிறாளே என்ற கவலை அவரது மனதை வருத்தியது. ஆனால் என்ன செய்வதென்றுதான் புரியவில்லை.

யாழ்ப்பாணத்துக்கு எதிரான இராணுவ நடவடிக்கையின் போது இடம்பெயரவேண்டி வந்தபோது, எடுத்தது பாதி எடுக்காதது பாதியாக ஓடியது திரும்ப வந்து பார்க்கையில்.... பறிபோயிருந்த பொருட்களுடன் உடுதுணிகளும் போய்விட்டன.

யாழ்ப்பாணத்துக்குள் ஆமி மூவ்பண்ணி வந்தபோது சாவகச்சேரிப் பக்கம் போய்த் தெரிந்த ஒருவரின் வீட்டில் ஒதுங்கினார். ஐந்து பிள்ளைகளுடனும், பல குடும்பங்கள் தங்கியிருந்த வீட்டில் படாத பாடு படவேண்டியிருந்தது. பிறகு கிளாலிக்கூடாக கிளிநொச்சிப் பக்கம் பயணமாகி நண்பரொருவரின் காணியில் குடிசை (மாதிரி)ஒன்றை அமைத்துக்



படிப்பகம்

www.padippakam.com

குடியேறினர். சரியான மறைப்புமின்றிக் குமர்பிள்ளையையும் வைச்சுக் கொண்டு... இது என்ன சீவியம் என அவருக்கு சினமாயிருந்தது.சாப்பாட்டுக்கும் ஒரு வழியுமில்லை. நிவாரணம், அது - இது என ஒவ்வொரு தேவைக்கும் மற்றவனின் கையை எதிர்பார்த்து அலைந்து திரிவது என்ன வாழ்க்கை.? ஏன் இப்படி ஓடித்திரிகிறோம்? உயிரைத் தக்கவைத்துக் கொள்வதற்கா? எப்படியாவது வாழ்ந்து முடிப்பதற்கா? அவரது மனம் குழம்பிப் போகும். அப்போது அவருக்குப் பிள்ளைகளின் நினைவு வரும். இந்த இளம் பிள்ளைகளை வைத்துக் கொண்டு எத்தனை கொடுமைகளுக்குப் பயப்பட வேண்டியுள்ளது.?

ஆமி மூவ் பண்ணி வருகிறது என்றதுமே அவர் நடுங்கிப்போனார். பிரகாசையும் மீராவையும் நினைத்துத் தான் அந்தப் பயமெல்லாம். இந்தப் பிள்ளைகள் அவங்களின் கையில் அகப்பட்டால்... அதுகளின் வயது காரணமாகவே ஒரு கேள்வி நியாயம் இருக்குமா? கடவுளே இந்தப் பிள்ளைகளுக்கு ஒன்றும் நேர்ந்திடக்கூடாது. இதுகளை எங்காவது கொண்டு தப்பிப் போய் விட வேண்டும்.

கிளிநொச்சியிலிருந்தபோது... பிள்ளைகள் ஒன்று மாறி ஒன்று காய்ச்சலில் விழுந்தார்கள். மழை, குளிர் நுளம்பு, மலேரியா! கடைக்குட்டிக்கு நிமோனியா வந்து மூச்செடுக்கவும் அவஸ்தைப் பட்டுக்கொண்டு கிடந்தாள். மருந்து மாயங்கள் கூடச் சரியாக இல்லை.

பிள்ளைகள் பட்ட வேதனையை அவரால் தாங்க முடியவில்லை. எதையும் தாங்கிக் கொள்வார். பிள்ளைகளுக்கு ஒன்றென்றால் தாங்க மாட்டார் துடித்துப் போவார்.

யாழ்ப்பாணத்துக்கு ஆட்கள் திரும்பிப் போகிறார்களாம் என்ற கதைகள் அடிபட்டதும்... போய்விடலாமா? எனத் தனக்குள்ளே கேள்விகள் கேட்டுக்கொண்டிருந்தார். முடிவெடுக்கும் தைரியம் இல்லாதிருந்தது.

"நடக்கிறது நடக்கட்டும்.... வீட்டுக்கே போய்விடுவோம் வாங்கோ!.... இந்தப் பிள்ளைகள் இப்படிக்கிடந்து கஷ்டப்படுகிறதை என்னால் பார்த்துக் கொண்டிருக்கேலாது!" சரசு அழுதாள்.

மனைவியின் அழுகை அவரது நெஞ்சைத் தொட்டு உருக்கியது.

பிள்ளைகளும் நச்சரித்துக் கொண்டிருந்தார்கள்.

"அப்பா வாங்கோ... வீட்டுக்குப் போவோம்! எக்ஷாமும் வருகுது! கஷ்டப்பட்டுப் படிச்சதெல்லாம் வீணாய்ப் போய் விடும்!" பிரகாஷ் அடம்பிடித்துக் கொண்டிருந்தான்.

பிள்ளைகளின் கல்வி பாழாகிக் கொண்டிருக்கிறதே என்ற கவலை அவரை ஒருபுறம் போட்டு மாய்த்துக் கொண்டிருந்தது. திரும்பவும் யாழ்ப்பாணம் போய்விடலாம் என முடிவெடுத்தார்.ஆனால் திரும்பப் போவதை நினைக்கும் போதெல்லாம் நெஞ்சிடிதான். என்ன நடக்குமோ?

இராணுவச் சாவடிகளைத் தாண்டும் போதெல்லாம் அவருக்குப் பிரசர் அதிகரிக்கும். பிரகாஷையும் மீராவையும் அவர் தன் கைக்குள்ளேயே பொத்திப் பொத்திக் கொண்டு வந்தார். சில சோதனைச் சாவடிகளில் பிரகாஷையோ மீராவையோ தடுத்து விடுவார்கள். விசாரணையாம்! அவர் அந்த இடத்தை விட்ட நகர மாட்டார்.

"நீங்க அந்தப் பக்கத்துக்குப் போங்க!" மிரட்டுவார்கள். அவர் போக மாட்டார்.

"அது என்ர பிள்ளை ஐயா! எப்படி விட்டுட்டு போறது? ஒரு சோலி சுறட்டுக்கும் போகாத பிள்ளை! உங்களை கையெடுத்துக் கும்பிட்டன்... ஒண்டும் செய்யாமல் விட்டிடுங்கோ!" அவர்கள் முன்னிலையில் அழுதே விடுவார். பிள்ளைகளுக்காக கண்டவன் நிண்டவனுக்கெல்லாம் கையெடுத்துக் கும்பிடவேண்டியுள்ளது. இந்த பிள்ளைகளுக்காகத்தான் உயிரைவைத்துக் கொண்டிருக்க வேண்டும் போலிருக்கிறது. கடவுளே, நானும் இல்லையென்றால் இதுகளை யார் பார்ப்பார்கள்? இந்த யுத்தமும் பிரச்சனைகளும் எப்ப தீரும்? இதுகள் எப்ப நிம்மதியாக வாழும்? எப்போதும் அவருக்கு மனதுக்குள் இதுதான் பிரார்த்தனை.

தடைகளைத் தாண்டித் தாண்டி வந்து பார்த்தால்... வீடு இடிந்து போய் கூரை நிலத்தைத் தொட்டுக் கொண்டு கிடக்கிறது. வருகிற வழிகளெல்லாம் பல வீடுகள் இடியுண்டு, உடைந்து சிதறி, கூரை பிரிந்து பல விதமான கோலங்களில் கிடந்தன. அவற்றையெல்லாம் பார்த்துப் பார்த்துப் பயந்து கொண்டே வந்தார். எங்கட வீட்டுக்கு என்ன கதியோ?

சிறிய வீடுதான். இரண்டு சிறிய அறைகள்.முன் விறாந்தை. ஒரு பக்கம் குசினி. அவரது தகுதிக்கேற்ற படி கட்டியிருந்தார். அதில் நிம்மதியாக படுத்தெழும்பினார். ஐந்து குஞ்சுகளையும் அந்த வீட்டிலேயே பெற்றெடுத்தார். இடம் பெயர்ந்து பல இடங்களிலிருந்த போதெல்லாம் இந்த வீடு அவருக்கு கனவுகளில் வந்திருக்கிறது. காதலித்துக் கட்டிய மனைவியைக் கானகத்தில் கைவிட்டு வந்தது போன்ற சோகம். அந்தத் திண்ணையில் படுத்தெழும்பும் சுகம் தனக்கு வேறேதும் இல்லையென்றே நினைப்பார்.

சரசு கதறியே விட்டாள். "இதைப் பார்க்கவா இஞ்ச திரும்பி வந்தம்?" பிள்ளைகள் திகைத்துப் போய் நின்றார்கள். "அம்மா!... அழாதேங்கோ!" எனச் சொல்லிச் சொல்லி மீராவும் விம்மலெடுத்து அழத்தொடங்கினாள். அவர் அசைய வில்லை. இப்படி எத்தனையோ இழப்புக்களையும் இழப்புக்களிலிருந்து எழுச்சியையும் கண்ட மனத் தைரியம் வாய்க்கப்பெற்றவர்போல் நின்றார்.

"ஏனம்மா?...ஏன் அழுகிறீங்கள்? இப்ப என்ன நடந்திட்டுது.? யோசிச்சுப் பாருங்கோ நாங்கள் போகாமலே இங்க இருந்திருந்தால் என்ன கதி? எங்கட தலையிலே விழவேண்டிய குண்டை எங்கடை வீடு தாங்கி இருக்குது! அழாதேங்கோ! வர்ற வழியெல்லாம் பார்த்தனீங்கள்தானே? எத்தனை சனங்களுக்கு எத்தனை விதமான இழப்புக்கள்!.... அழுது என்ன செய்கிறது?"

இடிபாடுகளை அள்ளி ஒரு பக்கம் போட்டார். பிள்ளைகளும் கைகொடுத்தார்கள். பொறிந்து போய்க் கிடந்த கூரையைக் கழற்றி எடுத்துச் செப்பனிட்டார். தெரிந்தவர்களிடம் வாங்கி வந்த தென்னங் கிடுகுகளால் வீட்டை வேய்ந்தார். "நாங்கள் வெட்ட வெட்டத் தழைப்போம்."



படிப்பகம்

www.padippakam.com

எனப் பிள்ளைகளுக்கு உற்சாகமூட்டினார்.

அவர் குடும்பத்துடன் திரும்பவும் யாழ்ப்பாணம் வந்து விட்ட செய்தியறிந்து மாணிக்கம் மாஸ்டர் பார்க்க வந்திருந்தார். மாணிக்கம் மாஸ்டர் முன்னர் ஸ்கூலில் அவருக்குப் படிப்பித்தவர். பிள்ளைகளுக்கும் வீட்டுக்கு வந்து பாடம் சொல்லிக் கொடுப்பதுண்டு.

"இஞ்ச வராமல் வன்னிப் பக்கம் போயிடுவீங்களோ என்று கூட யோசிச்சன்! இந்த வீட்டை எப்படிக் கோயிலை ப்போல வைத்திருந்தனீங்கள்! அது இடிஞ்சு கிடக்கிற தைப் பார்க்க எனக்கே பொறுக்கயில்லை. அடிக்கடி வந்து பார்த்து விட்டு போனவன்...வேற என்னத்தைச் செய்யிறது... இப்ப நீங்கள் வந்து சேர்ந்திட்டீங்கள் என்றதும் ஆறுதலாயிருக்கு!'

மாணிக்கம் மாஸ்டர் ஏதாவது பேச ஆரம்பித்தாலே கேட்டுக் கொண்டிருக்க வேண்டும் போலிருக்கும். குறுக்க பேச மனம் வராது.

"தமிழ்ச்சனங்கள் இந்த நாட்டில எத்தனை விதமாய் வதைப்பட்டிட்டுதுகள்!.. நாங்கள் இதையெல்லாம் பார்த்துப் பயந்திடக் கூடாது. சலித்துப் போகக் கூடாது. இந்த இடத்தை விட்டு ஒரேயடியாய் ஓடியிடக் கூடாது. இது எங்கட மண். எங்கட மூதாதையர் பரம்பரை பரம்பரையாக வளர்ந்த மண்!.."

மாணிக்கம் மாஸ்டர் சொல்வதைக் கேட்க மனசு தெம்படைவது போலிருந்தது. ஆற்றாமையோ அல்லது காரணம் புரியாததொரு கவலையோ உள்ளே புகுந்து நெஞ்சையடைப்பது போலும் ஓர் உணர்வு.

"ஐம்பத்தெட்டிலே.... எழுபத்தேழுல.... எண்பத்து மூன்றிலே.... எல்லாம் தெற்குப் பக்கமிருந்த தமிழ்ச் சனங்களுக்கு எவ்வளவு கொடுமைகள் நடந்திது? பெண் பிரசுகளைக் கேவலப்படுத்தி... உயிர்களைக் குடிச்சு.... தமிழருக்குச் சொந்தமான வீடுவாசல்களை..... வியாபாரத் தலங்களை.... பக்டரிகள் எல்லாம் கொழுத்தி எரிக்கப் பட்டது... அப்ப, அடிச்சுக் கலைச்சபோது எங்கட சனங்க ளெல்லாம்... இஞ்சால ஓடி வந்ததுகள்... பாதுகாப்பாக இருக்க வடக்கு, கிழக்குப் பகுதிகள் இருந்திச்சுது...

...இப்ப என்ன நடக்குது? வடக்கு கிழக்கிலையும் எங்களுக்குப் பாதுகாப்பு இல்லை. எத்தனை நாட்கள் பதுங்கு குழிக்குள்ளே கிடந்தும்... எத்தனை உயிர்களைப் பறிகொடுத்திட்டம்? சமாதானத்திற்கான யுத்தம் என்ற பேரிலே... இந்தப் பக்கம் இருக்கிற வீடு வாசல்கள்... பொருளாதார வசதிகள் எல்லாம் அழிக்கப்படுகுது... யுத்தம் ஏற்படக்கூடிய நிலைமையை உருவாக்கினது ஆர்?... ஒரு உதாரணத்துக்குச் சொல்லுறன்... எங்கட பிள்ளைகளின்ரை படிப்பில கையை வைச்சு முளையி லேயே கிள்ளி எறியலாம் என்று திட்டம் வகுத்தது ஆர்?"

பிரகாஷ் ஓ.எல் பரீட்சையில் எட்டும் "டி" எடுத்துச் சித்தியடைந்தான். அவர் பூரித்துப் போனார். திரும்ப யாழ்ப்பாணம் வந்தது நல்லதுக்குத்தான் என்றும் தோன்றியது. குப்பி விளக்கில் கண்கள் பூந்திப் பூந்திப் பார்த்து அவன் படிக்கும்போது அவர் ஏசியும் இருக்கிறார்.

"காணுமடா!... இனிக்காணும்!...போய்ப்படு!.. இந்த மங்கல் வெளிச்சத்தில படிச்சால்...கண் பழுதாய்ப் போயிடும்!...'.

அவன் போய்ப் படுக்கமாட்டான். அவரும் அவன் படித்து முடித்துப் படுக்கப் போகும் வரை விழித்துக் கொண்டிருப்பார்.

இந்த டியூசனுக்குப் போக வேணும்... அந்த டியூசனுக்குப் போக வேணும்... என்று பிரகாஷ் சொன்ன போதுகளில் சினந்து விழுந்திருக்கிறார்.

"பள்ளிக் கூடத்தில ஒழுங்காய்ப் படிக்காதவர்களுக்குத் தான் டியூசன்! அங்க விளையாடித் திரிஞ்சால்.... ரியூசன் தேவைதான்!"என ஒரு நக்கல் போலச் சொல்லியிருக்கிறார்.

அவன் அதற்கு மறு கதை பேசாமல் தலையைக் குனிந்து கொண்டு போயிடுவான். ஆனால் ரியூசனுக்குத் தருவதற்கு அவரிடம் பணமில்லை என்று அவனுக்குத் தெரியும். ரியூசனுக்குப் போய்வரும் நண்பர்களின் வீடுகளுக்குப் போய்ப் போய்க் கேட்டுப் படிப்பான். அவன் படிக்கத்தான் போகின்றானா! அல்லது வேறு ஏதாவது இயக்க நடவடிக்கைகளில் ஈடுபடுகிறானா! என அவருக் குச் சந்தேகம் வந்ததும் உண்டு. அசுகை தெரியாமல் சில நாட்களில் பிறகால் போய்ப் பார்த்துமிருக்கிறார்.

படிப்பு, படிப்பு என்று நடந்தே அலைந்து திரிவான். "அப்பா!... ஒரு சைக்கில் இருந்தால் நல்லது... எவ்வளவு தூரம் நடக்கிறது?... நடந்து நடந்து... இரவில படுக்கேலா மல்... கால் உளையுது... சைக்கிள் ஒன்று வாங்கித் தாங்கோ!"

"அந்தக் காலத்தில நான் எப்படிப் பள்ளிக்குப் போய் வந்தவனென்று தெரியுமா? எவ்வளவு தூரம் நடந்து திரிஞ்சிருக்கிறன்!... உங்களுக்கு இப்ப சொகுசு தேவைப்ப டுது...! கஷ்டப்பட்டுப் படிச்சால்தான் முன்னுக்கு வரலாம்!" என எதையாவது சம்பந்தமில்லாமலும், தன்னை ஒரு சாதனை வீரனைப் போலவும் குறிப்பிட்டு மகனது வாயை மூடிவிடுவார்.

தின்னவேலியிலிருந்து ஹிந்து கொலிச்சுக்கு நடந்தே போய் வருவது அவர் நினைவில் வரும். பலபலத்து விடியு முன்னரே தோட்டத்துக்குத் தண்ணீர் இறைக்க வேண்டும். தம்பி தண்ணீர் கோல அவர் துலா மிதிப்பார். ஐயா மரவள்ளிக்கும் மிளகாய்க் கன்றுகளுக்கும் தண்ணீர் கட்டுவார். பிறகு வெளிக்கிட்டு பள்ளிக்கூடத்துக்கு... ஓட்ட மும் நடையுமாகப் போனாலும் நேரம் கடந்துவிடும். பிரே யர் தொடங்கிவிடும். இப்போதுள்ள ஆமிக்காரரைப்போல அப்போது பள்ளிக்கூடத்தில் பிறிஃபெக்ட்மார், லேட்டாக வருபவர்களையெல்லாம் வாசலில் தடுத்து வைத்திருப்பார் கள். பிறேயர் முடிந்து கேனுடன் வரும் பிறின்சிபல்லிடம் கை நீட்டி அடி வாங்க வேண்டும். "அம்மா" என உறைக் கும். மாட்டை மேய்ப்பவர்களைப் போல ஏன் வாத்திமார் பிரம்பு வைத்திருக்கிறார்கள், என யோசித்திருக்கிறார். எத்தனை அடி அடித்தாலும் மாடு சுரணை இல்லாமல், ஆனால் தனது கடமையையும் செய்து கொண்டிருக்கிறது. அவரும் தவறாது தோட்டத்திற்குத் தண்ணீர் விட



படிப்பகம்

www.padippakam.com




# Jeya Agency (PVT) LTD

[IMPORTERS & DISTRIBUTORS OF PRINTED BOOKS.]

No. 10 Upper Ground Floor, People's Park Complex,
Colombo-11, Sri Lanka,
Tel: 438227 Fax: 332939
Dir: 074-710366 E-Mail: jeya@eureka.lk

Show Room:

**JEYA BOOK CENTRE**
91-99 Upper Ground Floor,
People's Park Complex,
Colombo-11.
Tel: 438227 Fax: 332939

Branch

**JEYA BOOK CENTRE**
688, Galle Road, Colombo-3.
Tel: 580594
Fax: 332939


படிப்பகம்

www.padippakam.com

வேண்டும். தவறாது பாடசாலைக்கும் வருகிறார். தவறாது அடியும் விழும்.

"நாங்களெல்லாம் அப்ப... எவ்வளவு கஷ்டப்பட்டுப் படிச்சம்... இப்ப... உங்களுக்கு வசதிகள் கூடிப்போச்சுது!' மகனுக்கு ஒரே போடாகப் போடுவார். பிரகாஷ் அதற்கு எதுவும் பேசாமல் போய்விடுவான்.

எல்லாம் பொருளாதாரப் பிரச்சனைதான். சீமெந்துத் தொழிற்சாலையில் போர்மனாக வேலை செய்தவர். யுத்தம் தொடங்கிய பிறகு தொழிற்சாலை இயங்காமல் போய்விட்டது. சில காலம் சம்பளமும் இல்லாமல் ஒன்றுமில்லாமல் இழுபறியாய் இருந்தது. பின்னர் ஏதோ ஒரு கொஞ்சம் கையிற் தரத் தொடங்கினார்கள். தொழிற் சாலை இயங்கிக் கொண்டிருந்தபோதே ஓவர்டைம் வேலை செய்து கைநிறைய உழைத்தாலும் அப்படி இப்படித்தான் சமாளிக்கக் கூடியதாக இருந்தது. இப் போது, இந்தப் பிச்சைக் காசை எடுத்து என்ன செய்வது? ஆனால் கிளிநொச்சியிலிருந்து யாழ்ப்பாணம் வந்ததே அந்தக் காசையும் நினைவிற் கொண்டுதான்.

இப்போது, பிரகாஷ் சிறப்பாகப் பரீட்சையில் சித்தியடைந்திருப்பது அவருக்குப் பெருமையளித்தது. தனது கவலைகளையெல்லாம் ஆற்றிவிட்டது மாதிரி ஓர் உற்சாகமும் தோன்றியது.

"என்ன பாடுபட்டும் என்ர பிள்ளையைப் படிப்பிச்சுப் போட வேணும்!'' மனதில் ஒரு வைராக்கியம் போல நினைத்துக் கொண்டார். "நான் சாப்பிடாமல் கிடந்தாலும்... பரவாயில்லை... பிள்ளையைப் படிப்பிச்சுப் போட வேணும்!'

படிப்பித்துவிட்டால்?... பிறகு?... பிறகு? அவருக்குச் சற்றுக் குழப்பமாயிருந்தது. பிறகு அந்தக் குஞ்சு பறந்து போய்விடுமே?... இப்போது யாழ்ப்பாணத்திலிருந்து, படித்தவர்கள் அனேகர் பறந்து போய் விட்டார்களே! படிப்பு ஒரு காரணமாயிருந்து தன் பிள்ளையைத் தன்னிட மிருந்து பிரித்துவிடுமோ என்றும் அவருக்குக் கலக்கமாயிருந்தது. பிரகாஷ் தன்னைவிட்டுப் போய்விடுவானா? "அப்பா!... அப்பா!... என்று ஒரு நாய்க் குட்டியைப் போல கால்களுக்குள் சுற்றி வரும் பிள்ளை... ஒரு நாளைக்குத் தன்னைப் பிரிந்து போயே விடுவானா? அவருக்குத் தனது தம்பிமாரின் நினைவு வந்தது. அவர்க ளெல்லாம் படித்து ஆளாகியதும் பறந்து போய்விட்டார் களே! ஆஸ்திரேலியாவிற்கு ஒருவன், கனடாவுக்கு ஒருவன் என்று மைகிரேஷன் விசா கிடைத்துப் போய்விட்டார்கள்.

கொழும்பில் இன்னமும் இருக்கும் தம்பி கூட வெளிநாட்டில் இருப்பவன் போல இந்தப் பக்கம் வருவதுமில்லை. அவனும், அவுஸ்திரேலியாவுக்கோ, கனடாவுக்கோ மைகிரேஷன் விசாவுக்கு முயற்சிப்பதாக வும், கிடைத்ததும் போய்விடுவேன் என்று சொல்லிக் கொண்டிருக்கிறான்.

போனவர்கள் இனித் திரும்ப வருவார்களா? எப்போது வருவார்கள்? அவர்களுக்குப் பெயர் சூட்டியது நினைவிருக்கிறது. அவர்களை தூக்கி விளையாடியது நினைவிருக்கிறது. அவர்கள் மேற்படிப்புக்கு வந்து யூனிவர்சிற்றி என்ரர் பண்ணியபோது சந்தோஷம் பொங்கி யது நினைவிருக்கிறது. இப்போது அவர்களெல்லாம் கண்காணாத தேசங்களில்... எங்கோ ஒரு திக்கில்.

அப்போது அவரது தந்தையின் சம்பாத்தியம் அவர்களது படிப்புச் செலவுக்கு ஈடுகொடுக்குமளவுக்குப் போதாது. அதனாற்தான் அவரும் படிப்பை இடைநடுவில் நிறுத்திக் கொண்டு சீமென்ற் பக்டரியில் வேலைக்குச் சேர்ந்திருந்தார்.

தம்பியவர்கள் பாஸாகியதும் "நீங்கள் படியுங்கோ!... செலவைப்பற்றி யோசிக்க வேண்டாம்!''என உற்சாக மூட்டினார். அவர்களை எப்படியாவது படிப்பித்து ஆளாக்கி விட வேண்டும் எனக் கனவு கண்டார். இராப் பகலாக ஓவர்டைம் வேலை செய்து உழைத்தார்.

தம்பியவர்களிடமிருந்து கடிதங்கள் வரும். அவர்களது தேவைகளைக் குறிப்பிட்டு எழுதியிருப்பார்கள், 'காசு கொஞ்சம் அனுப்பி வையுங்கோ!'

கொஞ்சமென்றால் எவ்வளவு? அது இரு நூறா? இரண்டாயிரமா? அவருக்குப் புரியாமலிருக்கும். ஆனால். தம்பியவர்கள் அந்தரித்துப் போய்விடக் கூடாதே என்று கவலையாயிருக்கும். தன் கையில் இல்லாவிட்டா லும்,யாரிடமாவது மாறிவிடுவார். சில வேளைகளில் பணம் கைக்கு கிடைக்கத் தாமதமாகிவிடும். தபாலில் அனுப்பச் சுணங்கி விடுமோ என றெயினில் பயணமாகி நேரிலேயே கொடுத்து விட்டு வருவார். அப்படிப் போவதற்கு தம்பியவர்களை நேரிலே பார்த்த ஆறுதலும் ஏற்படும் என்பதும் ஒரு காரணம்.

சம்பளமெடுத்ததும் பட்ட கடனெல்லாம் அடைக்க வேண்டும். கை வெறுமையாகி விடும். அக்காவின் திருமணத்திற்குப் பட்ட கடன்... மற்றும் வீட்டுச் செலவுகள் என்ற ஐயா ஏற்கனவே கடனாளியாகியிருந்தார். அதையும் ஈடுகட்ட வேண்டும். அக்கா திருமணம் முடித்து போய்விட்டாலும்... அவளுக்கு அன்றாடக் கஷ்டங்கள் வசதிக் குறைவு இருந்தது. 'வீட்டுக்குச் சொல்ல வேண்டாம்... ஏதாவது தந்து உதவி செய்...தம்பி!' என அவளும் எழுதியிருப்பாள். இவற்றையெல்லாம் சமாளித்துக் கொண்டு இனி வரும் மாதத்தையும் எதிர் கொள்ள வேண்டும்!

வேலைக்கு வந்தால்... மத்தியானச் சாப்பாட்டையும் தவிர்த்துக் கொள்ளப் பழகியிருந்தார். பக்டரிக்கு முன்னுள்ள கடையில் அவர், மற்றைய தொழிலாளர்க ளைப்போல "எக்கவுண்ட்'' வைத்திருக்க மாட்டார். அது செலவு அதிகரிப்பதற்கு ஒரு வழி என்ற பயம் அவருக் கிருந்தது. நண்பர்களோடு போய் ரீ.. சிகரட் (நண்பர்களுக்கு) அது இது என்று எடுத்துக் கொண்டு கொப்பியில் பதிந்து விட்டு வந்தால்... பின்னர் மாத முடிவில் முழிக்க வேண்டி வரும்.

கடையில் எக்கவுண்ட் இல்லை. கையில் காசுமில்லை. ஆனால் பசிக்கும். பல நாட்களில் பசியோடு எப்படியோ நேரத்தைக் கடத்தி விடுவார். ஆனால் பசி தாங்க முடியாத அளவுக்கு அவரை பல தடவைகள்



படிப்பகம்

www.padippakam.com

வாட்டியதுண்டு கால்களில் ஒரு நடுக்கம் ஏற்படும். நடக்க முடியாமல் தடுமாறும். உடல் சோர்ந்து போகும். அது மணியண்ணனுக்குத் தெரிந்துவிடும். மணியண்ணை அவரது செக்சனில் அவருக்குக் கீழே வேலை செய்த ஒரு மூத்த மெக்கானிக்.

''என்ன சேர்?... முகம் வாடிக் கிடக்கு? சாப்பிடயில்லையா?''

அதற்கு அவர் சமாளிப்பாக ஏதாவது கூற முயல்வார். ஆனால் மணியண்ணை விடாப்பிடியாகக் கேட்டுக் கொண்டு இருப்பார்.

''சொல்லுங்கோ!...சாப்பிட்டனீங்களா?... சாப்பிட்டனீங்களா?'

மணியண்ணையிடம் கடைசியாகச் சரணடைய வேண்டி வரும். தனது கஷ்ட நஷ்டங்களை அவர் அவ்வப்போது மணியண்ணையுடன் கதைத்துக் கொள்வதுண்டு. அவரது நிலைமையைத் தெரிந்து வைத்திருந்ததால் போலும், மணியண்ணைக்கு அவர் மேல் ஒரு வித இரக்கமும், கரிசனையும் இருந்தது. சிலவேளைகளில் மணியண்ணை கேட்காமலே ...தானாகச் சென்று வாய்விட்டுக் கேட்டிருக்கிறார்.

"மணியண்ணை... பசிக்குது! இனியும் தாக்குப் பிடிக்கேலாது!... என்ன செய்வம்?" ஒரு பகிடியைப் போல் இந்த விஷயத்தை மணியண்ணைக்குத் தெரிவித்தாலும் என்ன செய்வது என்பது மணியண்ணைக்குத் தெரியும். இரண்டு பேருமாக முன் கடைக்குப் போவார்கள். முன் கடையில் மணியண்ணைக்கு 'எக்கவுன்ட்' இருந்தது. அங்கு அவர் பாணும் பருப்புக் கறியும் சாப்பிடுவார். அந்தக் கணக்குகளையெல்லாம் குறித்து வைத்து, மாத முடியச் சம்பளமெடுத்ததும் மணியண்ணையிடம் கொடுத்து விடுவார்.

தம்பியவர்கள் யுனிவர்சிட்டியில் பட்டமெடுத்ததும், தான் பட்ட கஷ்டமெல்லாம் வீண் போகவில்லை என்று சந்தோஷமாயிருந்தது. ... ஆனால்... அவர்களெல்லாம் இப்போது அவருடன் இல்லையே! ஒவ்வொருவராக ஆஸ்திரேலியாவுக்கும் கனடாவுக்கும் குடி பெயர்ந்தபோது அவருக்குச் சந்தோஷமாக இருந்ததா? கவலையாக இருந்ததா? அவருக்குப் புரியவில்லை. 'எங்கையாவது போய் நல்லாயிருக்கட்டும்' என்று மனதார வாழ்த்தினார். 'இங்கயும் இந்த நாட்டில இருந்து என்னதான் செய்யிறது?"

ஒரே வீட்டிலிருந்து ஒன்றாக விளையாடி, ஒருவருக்கு ஒரு காய்ச்சல் துன்பம் வந்தால் துடித்துப்போய்... அம்மா தந்த சாப்பாட்டை வயிறு நிறைய உண்டு, ஐயாவைக் கண்டதும் ஒதுங்கி வாழ்ந்த வாழ்க்கை இல்லையென்றாகிவிட்டது. அந்த ரம்மியமான நினைவுகள் மட்டும் மனதில் உண்டு. இந்த நாட்டில் இனப்பாகுபாடும் யுத்தப் பிரச்சனையும் இல்லாமலிருந்தால்... இப்படித் திக்குத் திக்காகச் சிதறிப் போகாமல் இங்கேயே இருந்திருப்பார்களோ? எப்படியோ, இங்கிருந்து சீரழியாமல் போன இடங்களிலாவது நிம்மதியாக இருக்கட்டும் என மன ஆறுதலடைய முயல்வார். ஆனால், 'அவர்களை இனி எப்போது காண்போம். இனி எப்போது வருவார்கள். எப்போதாவது வருவார்களா?' என்ற கேள்விகள் பிறக்கும்.

ஷெல் விழுந்து வீடு உடைந்து போன விஷயத்தை எழுதியபோது திருத்த வேலைக்கென பணம் அனுப்பியிருந்தார்கள். 'காலமெல்லாம் உழைத்துக் கட்டிய வீட்டை நீங்கள் இழந்து நிற்கிறீர்கள். இங்கு நாங்கள் எங்கள் எதிர்கால உழைப்பையெல்லாம் இட்டு (வங்கியில் கடனெடுத்து) வீடு வாங்கியிருக்கிறோம்' என எழுதியிருந்தார்கள்.

சென்ற இடங்களிலெல்லாம் காலூன்றி விழுதுவிடுவது மகிழ்ச்சிதான். தமிழ் விழாக்கள் கூட நடத்துகிறார்களாம். சென்ற இடங்களிலெல்லாம் எங்கள் தேமதுரத் தமிழைச் சிறக்கவைக்கும் அவர்களின் செயலை அறிய உள்ளம் பூரித்து உணர்ச்சி வசப்படுகிறது. ஆனால் பிறகும் அதேபயம்... இந்த மண்ணையும் மண்ணடி வேர்களையும் மறந்தே போய் விடுவார்களா? அவருக்குப் புரியவில்லை. தம்பி! நீங்களெல்லாம் ஒரு நாளைக்கு இங்கு வரவேண்டும். (அல்லது வந்து போக வேண்டும்)

இந்த மண்ணை மறக்கக் கூடாது. உங்களை வளர்த்தெடுத்த வேர்கள் இங்குதான் இருக்கின்றன.

கனடாவிலும் ஆஸ்திரேலியாவிலும் தம்பியவர்கள் சொந்தமாக வீடு வாங்கி விட்டார்கள் என்றதும் ஒரு வித சந்தோஷம். மீண்டும் அதே கேள்விகள்... அது சந்தோஷமா? ... கவலையா? இவர்களெல்லாம் அங்கே வீடு வாங்கி விட்டார்கள். அங்கங்கே குடும்பத்துடன் நிலைத்து விட்டார்கள். திரும்ப இங்கு வருவார்களா? இங்கு அச்சுவேலியிலும் தின்னவேலியிலும் இருந்து கொண்டே ஒரு நல்ல நாள் பெருநாளுக்குக் கூட ஒருவரை ஒருவர் சந்திப்பது கஷ்டமாயிருக்கிறது. ஆஸ்திரேலியாவிலும் கனடாவிலும் இருந்து பிள்ளைகளின் போட்டோக்கள் வருகின்றன. சில வேளைகளில் வீடியோவிலும் பதிவு செய்து அனுப்புவார்கள். 'போர்த்தே பார்ட்டி' அது இது என்று டெக் வாடகைக்கு எடுத்து வந்து தன் பிள்ளைகளோடு கூட இருந்து பார்ப்பார். அந்தப் பிள்ளைகளை எப்போது நேரில் காண்போம் எனப் படங்களைப் பார்த்துக் கொண்டே உள்ளம் குமுறுவார். அல்லது அந்தப் பிள்ளைகளைக் காணுமுதலே காலம் வந்து போய்ச் சேர்ந்து விடுவேனோ? அவர்கள் பெரியவர்களானதும் ஒரு வேளை இந்தப் பக்கம் வருவார்களோ? வரும்போது இந்த நாடு யுத்தமில்லாமல் இருக்குமா? வந்தாலும் அவர்களுக்கு தன்னை ஞாபகமிருக்குமா? பாசமிருக்குமா? பெரியப்பா ...தஸ் ... புஸ் ... கிஸ் என ஏதாவது ஆங்கிலத் தனமாகத் தங்களது கடமையை முடித்துக் கொண்டு போய் விடுவார்களோ? ஐயோ!... அப்படி இருக்கக் கூடாது.

பிரகாஷ் பரீட்சையில் எட்டும் "டி" எடுத்த விஷயத்தை எழுதியதும் அவர்களுக்குப் பரம சந்தோஷம். அவர்களது கைபடப் பிரகாசுக்கு கடிதம் எழுதினார்கள்.. படிப்புச் செலவுகளுக்குப் என்று பணமும் அனுப்பியிருந்தார்கள். "நீ படிச்சு ஒரு டொக்டராக வரவேணும்... அப்பாவின் கஷ்டங்களை நீதான் தீர்க்க வேண்டும்!''



படிப்பகம்

www.padippakam.com

அவருக்கு அது வருத்தமாயிருந்தது. இந்தச் சிறுவனின் மனசுக்கு சுமையை ஏற்றுவதுபோல அந்த வாக்கியம் அமைந்திருந்தது. அதை அவர் விரும்பவில்லை.

"மகன்! என்ர கஷ்டங்களை நீ யோசிக்க வேண்டாம். அப்பன்! நீ படிச்சு நல்ல நிலைமைக்கு வந்தால்... அதே போதும் எனக்கு!"

யுத்தம் தொடங்கிய காலத்திலிருந்தே அவர் வேலையுமின்றி வேற எந்தப் பிழைப்புக்கும் வழியுமின்றி இருந்தபோது தம்பியவர்கள் அவ்வப்போது பணம் அனுப்பிவைப்பார்கள். வாழ்க்கை கட்டையிலேறி விடாமல் ஓரளவேனும் ஓடிக்கொண்டிருப்பதற்கு அவர்கள்தான் காரணம். தாங்க முடியாத காலகட்டங்களிளெல்லாம் அவர்கள் விழுதுகள் போலத் தாங்கி நின்றதை நன்றியுடன் நினைத்துக் கொள்வார். இப்போது அவர்களிடம் கேட்டுப்பார்த்தால் என்ன? வருடப் பிறப்பும் வருகிறது. பிள்ளைகளுக்குச் சரியான உடுதுணிகூட இல்லை. ஏதாவது பார்த்து அனுப்பிவையுங்கோ என எழுதிப் பார்க்கலாமா? அவருக்கு கூச்சமாயிருந்தது. தம்பியவர்கள்தானென்றாலும் ஓர் அளவு இல்லையா? எப்போதும் கையேந்திக் கொண்டு போனால் அவர்கள் என்ன செய்வது? அவர்களும் குடும்பம் பிள்ளைகள், குட்டிகள் என்று ஆகி விட்டவர்கள். செலவுகள் அதிகரித்திருக்கும். அவர்களைக் கஷ்டப்படுத்தக் கூடாது. தன் இயலாமையில் எப்போதாவது எழுதிவிடுவதுண்டு. அவர்களும் எந்த அளவுக்குத்தான் உதவி செய்து கொண்டிருக்க முடியும்? வேறு யாரிடமாவது கடனாகக் கேட்டுப் பார்க்கலாம். யாரிடம் கேட்பது? கேட்கக் கூடியவர் களிடமெல்லாம் கேட்டு விட்டார்கள். ஏற்கனவே வேண்டி யவை இன்னும் திருப்பிக் கொடுக்கவுமில்லை. இப்போது அவரைக் கண்டதும், 'இவர் கடன் கேட்டு விடுவாரோ' என முன்னெச்சரிக்கையாக ஒதுங்குபவர்கள் அதிகம்!

தனக்கு இது ஒரு ராசியோ என எண்ணிப் பார்த்திருக் கிறார். உழைக்கத் தொடங்கிய காலத்திலிருந்தே தன்னிறைவு கண்டதில்லை. ஏதாவது ஒரு தேவைக்காக கடன்பட வேண்டி வந்து விடும். கை நிறைய உழைத்திரு க்கிறார். ஆனால் அதையும் மீறிய தேவைகள். அதனால் கடன் பட்டு...கடன் பட்டு கடனைச் செலுத்த இங்கு பட்டு அங்கு செலுத்தி... அங்கு பட்டு இங்கு செலுத்தி கடனாளியாக இல்லாது நிம்மதியாக இருக்கிற ஒரு நாள் வருமா? என ஏங்கியிருக்கிறார். வேண்டாம், மற்ற யாரிடமும் போக வேண்டாம் தம்பியவர்களிடமே கேட்க லாம், எப்பவாவது என்ர மகன் நல்லாய் வந்தால் நீங்கள் செய்த உதவிகளையெல்லாம் மறக்கமாட்டான். வருடப் பிறப்பும் வருகுது... கொஞ்சம் அனுப்பி வையுங்கோ"

தேவராசா அண்ணன் கொழும்புக்குப் போவதாகச் சொன்னவர். அவரிடமே கொழும்பிலிருக்கும் தம்பியிடம் கொடுக்கும்படி கடிதத்தைக் கொடுத்துவிடலாம். அவன் மற்றவர்களுடன் ரெலிபோனில் கதைப்பான். அவர்களது காசு வரச் சுணங்குமானால் இவனையே அனுப்பி வைக்கும்படி எழுதலாம். பின்னர் அவர்களது காசு வந்ததும் எடுத்துக் கொள்ளட்டும்

''விடிஞ்ச நேரமுதல்... என்ன இதிலையிருந்து யோசிச்சுக் கொண்டிருக்கிறியள்?... எந்தக் கோட்டையைப் பிடிக்கிறதுக்கு? எழும்புங்கோ! எழும்பிப் பார்க்கிற அலுவலைப் பாருங்கோ!"

சரசு அதட்டுவது போலத்தான் பேசுவாள். ஆனால் அதட்டலல்ல. அன்புக் கட்டளை என்று எடுத்துக் கொள்ளலாம். தான் ஒரே இரையாக இருந்து யோசிப்பது அவளுக்கு சங்கடமாயிருக்கிறது. இந்த மனுசனுக்கு இப்படி இருந்து யோசித்து யோசித்தே ஏதாவது ஆகிவிடுமோ என்ற பயம் அவளுக்கு என்பது அவருக்குத் தெரியும்.

இருந்த இடத்தை விட்டு எழுந்தார். குளித்து விட்டு வந்து சாமி படத்துக்கு முன்னால் போய் நின்று திருநீறு பூசினார். "கடவுளே" என மனமுருகி வேண்டினார். தனது தந்தையையும் தாயையும் நினைத்தார்.

மனைவியை, பிள்ளைகளை. தம்பியவர்களை, அவர்களது குடும்பம் பிள்ளைகளை எல்லோரையும் நினைத்து எல்லோருக்காகவும் பிராத்தனை செய்தார். எல்லோரும் ஒரு தொல்லையுமில்லாமல் இருக்கவேணும். இந்த யுத்தம் கெதியில முடிய வேணும். எல்லோரும் ஒன்று சேர வேணும். இன்றையப் பிரார்த்தனையில் ஒரு விசேஷ அம்சத்தையும் வேண்டுகோளாக விடுத்தார். கைக்கு எப்படியாவது பணம் வந்து சேர வேணும். பிள்ளைகளுக்குப் புதுவருடத்துக்குப் புத்தாடை வாங்கக் கூடிய வசதி பிறக்க வேணும்.

தன்னால் இயலாது என்ற கட்டம் வந்ததும் கடவுளிடம் விட்டுவிடுவார். இலகுவாகத் தப்பிக்க இது ஒரு வழியாயுமிருந்தது. கடவுளும் ஏதோ ஒரு வழியில் அவரது பிரார்த்தனைகளுக்குச் செவிசாய்ப்பதுண்டு. இல்லாவிட்டால் எப்படி அவருக்குத் தனது தந்தையின் கடன்தனிகளைத் தீர்த்திருக்க முடியும்? தம்பியவர்களைப் படிக்க வைத்திருக்க முடியும்? பிள்ளைகளை இந்த அளவுக்கு வளர்த்தெடுத்திருக்க முடியும்? கடவுளும் அவரது பிரச்சனைகளைத் தீர்த்து வைக்காத நேரங்களில் அல்லது கடவுளுக்கும் இயலாமற் போன தருணங்களில் அதற்கொரு நியாயம் கற்பித்து அட்ஜஸ்ட் பண்ணிக் கொள்ளப் பழகியிருந்தார். 'இப்ப காலம் சரியில்லை... நல்ல காலம் வந்தால் எல்லாம் நல்லதாய் நடக்கும்!'

நல்லகாலம் எப்போது வரும் என அவருக்கு ஏக்கமாயிருக்கும். இந்த நாடு எப்போது சீரடையும்? எப்போது இந்த யுத்தம் ஒரு முடிவுக்கு வரும்? எப்போது எங்களுடைய பிள்ளைகள் சுதந்திரமாக நடமாட முடியும்? பிள்ளைகளை வெளியிலே விடுவதானால், பெண் பிள்ளைகளுக்கு மட்டுமன்றி ஆண் பிள்ளைகளுக்கும் இப்போது துணை போக வேண்டியுள்ளது. வெளியே போன பிள்ளைகள் திரும்ப உருப்படியாக வந்து சேர்வார் களா! என்ற பயம் உலுக்கிக் கொண்டிருக்கிறது. ஒவ் வொரு நாளும் ஒவ்வொரு விதமான செய்திகள் வருகின் றன. சீருடையில்... வந்தவர்கள் வானில் ஏற்றிக் கொண்டு போனார்களாம். பிறகு எந்த இடமென்று இல்லை. பெற்ற வர்கள் நெஞ்சு குமுற அலைந்து திரிகிறார்களாம். இது என்ன சீர்? பொழுது பட்டால் எப்போது விடியுமென்று நெஞ்சிடிக்கிறது. மூச்சு விடுவதற்கே பயந்து பயந்து சீவிக்க வேண்டியுள்ளது. பிள்ளைகள் தும்மினால் இரு



படிப்பகம்

www.padippakam.com

மினால் கூட சரசு பதற்றமடைகிறாள். "மெல்ல... மெல்ல... சத்தம்போடாதயிங்கோ!" இரவில் வீட்டடங்குச் சட்டம்.

கொலைகள் ஒரு புறம். கொள்ளையர்கள் பற்றிய பயம் இன்னொரு புறம். மூலைக்கு மூலை தொடங்கப்படும் கேடு கெட்ட சினிமாக்கள்.... கசிப்பு வியாபாரம். இப்போது மற்றவித போதை வஸ்துக்களும் புளங்கத் தொடங்குகின்றன என்ற கதைகளும் அடிபடுகிறது. மாணிக்கம் மாஸ்டர் சொல்வதுபோல திட்டமிட்டே எங்களுடைய கலாச்சாரம் சீரழிக்கப்படுகிறதா? இதிலெல்லாம் எங்களுடைய பிள்ளைகள் சிக்கித் தொலைந்து விடுவார்களோ என்று பயமாயிருக்கிறது... இங்க திரும்ப வந்தது சரியா என அவருள் கேள்விகள் பிறக்கின்றன. இங்கு வராமல் வேறு எங்கு போவது? ஏன் போக வேண்டும். தப்பிப் பிழைப்பதற்கா? வாழ்க்கை என்பது தப்பிப் பிழைத்து உயிர் வாழ்வது மட்டுமா? எத்தனை இடர் வரினும் இந்த மண்ணை விட்டு ஓடாது, இதில் வேர் பாய்ச்சி எங்களுடைய பிள்ளைகளிடம் ஒப்படைத்து விட்டு போவது உன்னதமான வாழ்க்கை ஆகாதா? சரசு சொல்லுவாள், "நாங்களும் எங்கையாவது ஒரு நாட்டுக்குப் போயிருக்கலாம். இந்தத் தலையிடிகள் இல்லாமல் நிம்மதியாக சீவிச்சிருக்கலாம். இந்தப் பிள்ளையளின்ர எதிர்காலமாவது நல்லாய் வந்திருக்கும். அவர் அதற்கு பதில் பேச மாட்டார். சரசுக்கு விசர் என நினைத்துக் கொள்வார். பின்னர் மனைவியைச் சமாதானமடையச் செய்ய வேண்டுமென எண்ணிக் கொண்டு "வசதியுள்ள ஆட்கள் போகினம்... நாங்கள் எங்க போறது?" என ஓர் எதிர்க் கேள்வியைப் போடுவார்.

அவருக்குத் தெரியும், பிள்ளைகளின் எதிர்காலத்தை எண்ணிக் கொண்டே ஒவ்வொரு நாளும் தங்களுடைய புத்திக்கு எட்டியவாறு ஒவ்வொரு இடங்களிலும் போய் தஞ்சமடைகிறார்கள். அல்லது யாழ்ப்பாணத்திலேயே தங்கிவிடுகிறார்கள்.

மீரா பாடசாலைக்குப் போக ஆயத்தமாகி வந்து நின்றாள். "அப்பா நான் ரெடி.. வாங்கோ போகலாம்!"

பிரகாஷையும் அழைத்துக் கொண்டு அவர் புறப்பட்டார். அவரவர் பாடசாலைகளில் அவர்களை விட்டு விட்டு அவர் கையெழுத்திடப் போக வேண்டும். சீமெந்து தொழிற்சாலை அலுவலகம் தற்காலிகமாக ஓரிடத்தில் இயங்குகிறது. கையெழுத்திட்டுப் பெறும் (சம்பளப்) பணத்தில் தான் சாப்பாட்டுப் பிரச்சனை ஒருவாறு சரிக்கட்டப் படுகிறது. இது கூடச் சரியா? என அவரை யோசிக்கத் தூண்டியிருக்கிறது. ஆனால் வேறு வழியில்லை. அப்போதும் மாணிக்க மாஸ்டரின் ஞாபகங்கள் தான் நினைவில் வரும். "மறைமுகமாக நாங்கள் இப்படியொரு நிலைமைக்குள் தள்ளிவிடப்பட்டிருக்கிறம்.! உலருணவு... நிவாரணம் என்று எல்லாத்துக்கும் வேற கையைத்தான் எதிர்பார்த்து நிக்க வேண்டியிருக்கு... பார்த்தியளோ!" கையெழுத்திட வந்த ஏனைய நண்பர்கள் சிலரைக் கண்டபோது மனதில் சபலம் தட்டியது. சற்று பேதலித்தது. இவர்கள் யாரிடமாவது கேட்டுப் பார்த்தால் என்ன? அவருடைய நிலைமை தெரிந்த நல்ல மனம் கொண்ட நண்பர்கள் சிலர் உள்ளனர். பல தடவைகள் உதவி செய்திருக்கிறார்கள். கேட்டுப் பார்க்கலாம். சரி வந்தாலும் வரக் கூடும். இப்போது பணம் கிடைத்தால் பிள்ளைகளுக்கு தேவைப்படும் உடைகளைப் பார்த்து வாங்குவதற்கு அவகாசமிருக்கும். பின்னர் தம்பியவர்களிடமிருந்து காசு வந்ததும் இதைத் திருப்பிவிடலாம்.

காசு கிடைத்து பிள்ளைகளுக்கு புத்தாடை வாங்கிக் கொடுத்து அவர்கள் குதூகலிப்பதை மானசீகமாக நினைத்துப் பார்த்தார். அவரது உள்ளமும் குதூகலித்தது. புதிய ஆடையென்றால் யாருக்குத்தான் சந்தோஷமிருக்காது? அவருக்குக்கூட, புதிதாக ஒரு சேர்ட் போட்டுப் பார்க்க ஆசைதான். மணமுடித்த ஆரம்ப காலங்களில் திருமணநாள் நினைவாக, மற்றும் அவரது பிறந்த நாள் என்று சரசு அவருக்குச் சேர்ட் வாங்கித் தருவாள். சேர்ட் கைக்கு வந்த உடனேயே அதைப் போட்டு கண்ணாடியில் அழகு பார்த்து விடுவார். கொஞ்ச காலம் தான் இதெல்லாம் தடல்புடலாக நடந்தது. அதன் பிறகு சரசுவுக்கும் அலுத்துப் போயிருக்கக்கூடும்! அல்லது அவளது தலையையும் அழுத்திய பொருளாதாரப் பிரச்சினை காரணமாயிருக்கலாம். இப்போது மண நினைவு நாளும் பிறந்த நாளும் வருவதும் போவதும் தெரியாமல் போய்விடும்.

காசு கிடைத்தால், இந்த வருடப் பிறப்புக்கு தனக்கும் ஒரு சேர்ட் வாங்கினாலென்ன என்று அவருக்கு ஆசையாயிருந்தது. 'கந்தலைக் கசக்கிக் கட்டு' என எங்கேயோ ஒரு பாடல் ஞாபகம் இருக்கிறது. அது போலத்தான் தனது நிலைமையும் போய்க் கொண்டிருக்கிறது. வருடப் பிறப்புக்குப் புத்தாடை அணிந்து அயலிலுள்ள பிள்ளைகளின் உடைகளுடன் ஒப்பிட்டு 'இது நல்லது' என மகிழ்ந்த காலம் இன்றும் நினைவிருக்கிறது. தனது பிள்ளைகளுக்கும் அது போலத்தான் ஆசை இருக்கும்? புத்தாடையைக் கண்டு பிள்ளைகள் துள்ளிக் குதிப்பதை நினைக்கும் போதே நெஞ்சில் ஒருவித இதம் வருடியது.

அந்த ஆர்வத்தில் ஒரு சில நண்பர்களிடம் அணுகி கேட்டுப் பார்த்தார்.

"உங்களுக்கு இதொரு விளையாட்டாய்ப் போச்சுது! நெடுகலும் கடன்... கடன் என்றால் நாங்கள் எங்க போறது? உங்களைப் போலத்தான் எங்களுக்கும் கஷ்டம்." என்பது போன்ற பதில்கள்தான் கிடைத்தன.

சுமாரான வருமானம் உள்ளவர்களுக்கும் இங்கு வாழ்க்கையைக் கொண்டு நடத்துவது கஷ்டம் என்பது உண்மைதான். பொருட்கள் எதைக்கேட்டாலும் தடை... தட்டுப்பாடு, கிடைக்கக் கூடியதாயிருந்தால் கொடுக்க முடியாத விலை. இந்த விசித்திரத்தில் அன்றாடம் சீவியத்தைக் கொண்டு நடத்துவது எப்படி?

சரி, தம்பியவர்களிடமிருந்து பணம் வரும்வரை பொறுமையாயிருக்கலாம், என மனதைக் கட்டுப்படுத்த முயன்றார். எனினும் சில வேளைகளில் மனம் கேட்க மறுக்கிறது. கொழும்புக்குப் போன தேவராசா அண்ணன் பத்து நாட்களில் வருவதாகச் சொல்லியிருந்தார். எப்போது அந்த நாள் வரும் என எண்ணிக் கொண்டிருந்தார்.

விற்கக் கூடியதாக ஏதாவது இருக்கிறதா? என்றும்



படிப்பகம்

www.padippakam.com

அவரது சிந்தனை ஓடியது. நகை... நட்டு என்ற ஒன்றும் இல்லை, வீட்டில், சமையல் பாத்திரங்களையும் சாப்பாட் டுக் கோப்பைகளையும்கூட சரசு அவர் கண்ணில் பட விடுவதில்லை.

நாலைந்து கோழிகள் வீட்டில் நிற்கின்றன. அவற்றை விற்றுவிட்டால் என்ன? அந்தக் கதையைக் கேட்டதும் சரசு அடிப்பதுபோல வந்து விட்டாள்.

"அதுகள் நிற்கிறதும் உங்கட கண்ணுக்கை குத்திப் போட்டுதா? அதுகள் நிற்கிற புண்ணியத்தில தாலே பிள்ளைகள் இடைசுகம் முட்டை சாப்பிடுதுகள்? பிள்ளை யளுக்கு வேறு என்ன சத்தான சாப்பாடு குடுக்கிறம்?"

பிள்ளைகளுக்குப் போஷாக்கான சாப்பாடு இல்லை என்ற கவலை அவருக்கும் உண்டு. மினுக்கென்று இருக்கவேண்டிய பருவத்தில் எலும்பும் தோலுமாகிக் கொண்டிருக்கிறார்கள்.

தேவராசா அண்ணன் வந்து சேர்ந்திருப்பாரா? என இடையிடையே அவரது வீட்டுப் பக்கம் போய் பார்த்து வந்தார்.

"போனவரை இன்னும் காணயில்ல... அதுதான் கவலைப்பட்டுக்கொண்டிருக்கிறேன்,..."

"வந்திடுவார்!... யோசியாதையுங்கோ! தெரியாதா... கொழும்புப் பயணம்... போக்குவரத்து பெமிசன் எடுக்கவே... அலையவேண்டியிருக்கும்." தேவராசா அண்ணனின் மனைவிக்கு அவர் ஆறுதல் கூறிவிட்டு வருவார். ஆனால் வருடப்பிறப்புக்கு முன் அண்ணன் வந்து விட வேண்டுமே! என்ற ஏக்கம் இவருக்கிருக்கும்.

வருடப்பிறப்புக்கு இன்னும் ஒரே ஒரு நாள் மட்டும் உள்ளது என்ற நிலையில் அவருக்குக் காய்ச்சலே பிடித்து விடும் போலிருந்தது. இன்றைக்கும் தேவராசா அண்ணன் வரவில்லை யென்றால் என்ன செய்வது? பிள்ளைகளிடமென்றால் இன்னும் எதிர்பார்ப்பு இருக்கிறது. இன்றைக்குக் காசு வந்துவிடும் என்று சொல்லிக் கொண்டிருக்கிறார்கள். தேவராசா அண்ணன் வீட்டுக்கு ஒரு முறை போய் பார்த்து வரலாம் என்று தோன்றினாலும், நெடுகலும் போய் அலைவதை அவர்கள் எப்படிக் கருதுவார்களோ என ஒருவித சுய கௌரவம் தடுத்தது. மாலைவரை தாமதித்து பார்த்து விட்டுப் போகலாம்.

ஆனால் ஒரு அற்புதம் நிகழ்வதைப் போல தேவராசா அண்ணன் வீடுதேடி வந்தார். தம்பி கொடுத்தவிட்டதாக அந்த என்வலப்பையும் கொடுத்தார். பிரகாசும் மீராவும் அவருக்குப் பக்கத்தில் ஓடிவந்து விட்டனர். அவர் வந்தவரோடு கதைத்துக் கொண்டிருக்கப் பிள்ளைகள் அவர் கையிலிருந்த என்வலப்பை பிடித்துப் பிடித்துப் பார்த்தார்கள். அவருக்கு அதை அந்தக் கணமே உடைக்க வேண்டும் என்ற ஆவல், ஆனால் தேவராசா அண்ணன் தனது கொழும்புப் பயணத்தில் ஏற்பட்ட இடைஞ்சல்களையும், தனது சாதுரியத்தால் இவ்வளவு கெதியாக வரமுடிந்ததையும் ஒரு சாதனை போல சொல்லிக் கொண்டிருந்தார். போன பிறகு உடைக்கலாம் எனப் பொறுமையைக் கடைப்பிடித்தார். தனது கைவிரலால் மெதுவாக என்வலப்பின் உள்ளடக்கத்தை உணர்ந்து பார்த்தார். தடிப்பாகத்தான் இருக்கிறது... எவ்வளவு அனுப்பியிருப்பார்கள்?

என்வலப்பை உடைத்தபோது ஐந்தாறு பக்கம் பக்கமாக கடிதம்! பணம் இல்லை! சரியாகக் கவனிக்க வில்லையோ? எனத் தாள்களை ஒவ்வொரு ஒற்றையாகத் திருப்பித் திருப்பிப் பார்த்தார். இல்லை,பணம் இல்லை, கலவரத்துடன் கடிதத்தைப் படித்தார், சாராம்சம் இதுதான்.

"நீங்கள் எழுதியிருந்த பண விஷயமாக அவர்களுடன் ரெலிபோனில் கதைத்தேன். உடனடியாக அனுப்புவதற்கு வசதியில்லையாம். பின்னர் அனுப்புவதாகச் சொல்லச் சொன்னார்கள். தங்களுக்கும் குடும்பப் பொறுப்புக்கள் இருக்கிறது... இப்படி நெடுக அண்ணைக்கு அனுப்பிக் கொண்டிருக்கேலுமோ? தன்னுடைய குடும்பத்தைக் கவனிக்கிற பொறுப்புணர்வு அண்ணைக்கு இருக்க வேணும்,... நெடுகலும் தங்களுடைய கையை எதிர் பார்த்துக் கொண்டிருக்கக் கூடாதாம்! அவையள் எப்ப அனுப்புவினமோ தெரியாது.... அதை நம்பி என்ர கையில் உள்ள கொஞ்ச நஞ்ச காசையும் உங்களுக்கு அனுப்பிவிட்டு நான் என்ன செய்யிறது? கொழும்புச் சீவியத்தைப் பற்றி தெரியும் தானே?..'

இந்த விஷயத்தை நோகாமல் சொல்லுவதற்காக ஆறோ ஏழோ தாள்கள் செலவளிக்கப்பட்டிருந்தன. ஆனால் அவருக்கு நொந்தது.

கைகளை அகல விரித்துத் தழைத்த மரமொன்றில் அடிவேரை வெட்டி விட்டது போலச் சதுரமெங்கும் ஆடியது.

பக்கத்தில் நின்ற மீரா கேட்டாள்

"காசு அனுப்பவில்லையா அப்பா?"

"இல்லை அம்மா!"

"ஏன்?"

அவர் பதிலளிக்கவில்லை. சில கேள்விகளுக்குப் பதில் சொல்ல முடியாது. அல்லது பதில் தெரியாது. வாழ்க்கையில் பதில் சொல்லப்படாத, பதில் அறிய முடியாத நிறையக் கேள்விகள் இருக்கின்றன. அந்தக் கேள்விகள் நினைவில் வந்தால் அவரை இராப்பகலாய் வருத்துவதுண்டு.

கடிதத்தை மீராவின் கையில் கொடுத்தார். அதிலிருந்த வாக்கியங்கள் திரும்பத் திரும்ப நினைவில் வந்து அவரை அடித்துப் போடுவது போலிருந்தது. மனதை ஒரு நிலைப்படுத்தி நிதானிக்க முயன்றார். தனது இயலாத தன்மையால் தம்பியவர்களையும் கஷ்டப்படுத்தி விட்டேனோ! என்ற குற்ற மனப்பான்மைக்கு உட்பட்டவர் போலானார். நீண்ட நேரம் யாருடனும் பேசாமலிருந்தார். மனைவி வந்து அவரை ஆறுதல் படுத்தினார்.

"அதுக்கேன் கவலைப்படுறீங்கள்... அவையளுக்கும் என்ன கஷ்டமோ? ஆருக்குத் தெரியும்?கடவுள் விட்டவழி!"இருள் வந்து மெல்ல மெல்ல மூடிக்கொண்டிருந்தது. வேளைக்கே படுக்கைக்குப்



படிப்பகம்

www.padippakam.com

போனார்.ஆனால் உறக்கம் வரவில்லை. சரசு வந்து படுத்து அடித்துப் போட்டது போல உறங்கி விட்டாள். பகல் முழுவதும் மாய்ச்சல் படுகிற தேகம் போலும், படுத்ததும் உறங்கி விடுவாள். அது அவளுக்கு ஒரு கொடையென நினைத்திருக்கிறார். அதுவும் நல்லது தானே? மனக் கவலைகளுக்கு தூக்கத்தை விட வேறு மருந்து ஏது? ஆனால் அவர் எத்தனையோ இரவுகள், எத்தனையோ கவலைகளில் தூங்காமலே கிடந்து உளன்றிருக்கிறார்.

இந்தா இந்தா என்று சொல்லிக் கொண்டு புது வருடம் வந்து பிறந்து விட்டது! அது அவருக்குத் தெரியவில்லை. இன்னும் படுக்கையைவிட்டு எழும்பாமலே கிடந்தார்.

"வருடப் பிறப்ப நாளும் அதுவுமாய்... இப்படிப் படுத்திருக்கிறார். மனைவி சத்தமிட்டு சொல்லிக் கொண்டிருக்கும் சத்தம் கூட அவருக்குக் கேட்கவில்லை. "அப்பாவைப் போய் எழுப்பம்மா!" என மகளை அனுப்பினாள். மீரா ஓடிவந்து அப்பாவை எழுப்ப அவர் அசையாமல் கிடந்தார். அவரைத் தொட்டு அசைத்தாள். "அப்பா!... எழும்புங்கோ!...எழும்புங்கோ!..." அவர் துடித்துப் பதைத்துக் கொண்டு எழுந்தார்.

"விடிஞ்சுட்டுதாம்மா!"

"ஓமப்பா!"

எவ்வளவு அருமையான வார்த்தை! விடியல்! இந்தப் புதுவருடம் இங்கு எல்லோருடைய வாழ்க்கையிலும் அந்த விடியலைக் கொண்டு வராதா? இந்த வருடமாவது குண்டுச் சத்தங்கள் ஓய்ந்து போகாதா?

மகளைத் திரும்பிப் பார்த்தார். அவள் நின்ற கோலம் அவருக்கு அழுகையைக் கொண்டு வந்தது.

வருடப் பிறப்பு எவ்வளவு சந்தோஷமான நாள். அதிகாலையில் எழுந்து குளித்து கோயிலுக்குப் போய் வந்து அறுசுவை உணவருந்தி...

பிள்ளைகளுக்கு இன்றைக்கு விசேடமான சாப்பாடு செய்து கொடுக்கக் கூட ஒரு வழியும் இல்லையே... அவ்வளவு ஏன்.. இன்றைய வயிற்றுப் பாட்டுக்கே என்ன வழியோ தெரியாது,... சரசுவுக்குத்தான் அந்தப் புதிருக்கு விடை தெரியும்,... சாமான் சக்கட்டு வேண்டும். கனகு கடையில் கடனுக்கு மேல் கடன் ஏறி விட்டது. மாதாந்தம் எடுக்கிற சொற்ப சம்பளத்தில் சுமாரான தொகையை கனகு கடைக்குக் கொடுத்தாலும் கடனை முற்றாக தீர்த்துச் சரிக்கட்ட முடிந்ததில்லை. ஏதாவது சாமான் கேட்டுப் போனால் "இல்லை" "முடிஞ்சு போச்சு" என ஏதாவது சொல்லித் திருப்பி விடுகிறாள். நின்று மன்றாட்டமாக கேட்டுப் பார்த்தால் "இருக்கிற கடனைக் கொடுத்திட்டு... பிறகு சாமான் வேண்ட வாங்கோ!" என முகத்திலடிக்கிறாள்....

"என்னப்பா யோசிக்கிறிங்கள்....?"

"ஒன்றுமில்லையம்மா!... ராமுழுக்க நித்திரயில்லை.... விடியப் புறமாய் அயந்திட்டன் போல அதுதான் எழும்பாமல் கிடந்திட்டன்."

"கவலைப்படுகிறீங்களா...அப்பா? எங்களுக்கு புது உடுப்பு வேண்டாம்...இருக்கிறது போதும்! நீங்கள் கவலைப்பட வேண்டாம்!"

அவர் தன் கைக்குள் மீராவை அணைத்துக் கொண்டு நெஞ்சுக்குள் விம்மினார்.

எழுந்து வெளியே வந்தார். குளிக்கும் போதும் யோசனை ஓடிக் கொண்டே இருந்தது. கொஞ்சக் காசாவது கையில் கிடைக்குமானால்? இப்படியொரு நல்ல நாள் பெருநாளிலாவது பிள்ளைகள் வாய்க்கு ருசியாக ஏதாவது சாப்பிடவேண்டாமா?

வாழை மரங்களைப் போய்ப் பார்த்தார்.இன்னும் வெட்டப் படாமல் புதிதாக விரிந்திருக்கும் இலைகளைக் கணக்கிட்டுப் பார்த்தார். நாற்பது ஐம்பது ரூபா தேறினாலும் பரவாயில்லை. அவற்றை வெட்டி எடுத்துக் கொண்டு சந்தைக்குப் போனார்.

தின்னவேலிச் சந்தையில் சனங்கள் குறைவாயிருந்தது. இலைகளை அப்படியே ஒரு வியாபாரிக்கு விலை பேசிக் கொடுத்தார். பணம் கைக்கு வந்ததும் சற்றுத் தெம்பு, புறப்படலாம் எனத் திரும்பியபோது... சற்றுத் தொலைவில் மணியண்ணை! சுமார் இருபது வருடங்களுக்கு முன் ஓய்வு பெற்றவர் மணியண்ணை. இப்போது வயோதிபம் வந்து விட்டது. மட்டுக்கட்ட முடியவில்லை. வயோதிபம் எல்லோருக்கும் தான் வருகிறது. எவ்வளவு திடகாத்திரமாக இருந்த மனுஷன். இப்படித் தளர்ந்து போய் விட்டாரே! வயோதிபம் காலத்தோடு வருகிறதா? கஷ்ட்டத்தோடு வருகிறதா?

ஓய்வு பெற்ற பிறகு மணியண்ணையை இரண்டொரு முறை காண நேர்ந்திருக்கிறது. இவரது இடம் மயிலிட்டி என்ற படியால் சந்திக்கும் வாய்ப்பு கிடைத்ததில்லை. இப்போது இடம் பெயர்ந்து யாழ்ப்பாணப் பக்கம் வந்து விட்டார் போலிருக்கிறது. ஓய்வு பெற்ற போது பணத்தில் தனது மகளுக்கு மணமுடித்துக் கொடுத்தாராம். அவரது மகளும் இரண்டு மகன்களும் ஐரேப்பிய நாடுகளில் குடிபோய் விட்டார்களாம். செலவுக்கு காசு அனுப்பி வைப்பார்கள்.... இப்படியே காலத்தைக் கடத்திக் கொண்டிருக்கிறேன்! என முன்னர் கண்ட போது மணியண்ணை சொன்னது ஞாபகம் வந்தது.

அவரது மனதில் பளிச் சென ஒரு வெளிச்சம். மணியண்ணையிடம் கேட்டுப்பார்க்கலாம். நிச்சயம் உதவி செய்வார்.

அவரது மனம் ஒரு துள்ளுத் துள்ளியது. மணியண்ணையை நோக்கி நடந்தார். மணியண்ணையும் அவரை அடையாளம் கண்டு கொண்டு வந்தார்.

"மணியண்ணை!"

கையைப் பிடித்தார். மணியண்ணை கை நடுங்கி நடுங்கி அவரைத் தழுவிக் கொண்டார். கண்ணீர் முந்திக் கொண்டு வந்தது.

"மணியண்ணை எப்படியிருக்கிறீங்கள்?"

"காலயிலிருந்து ஒரு தேத்தண்ணி கூட குடிக்கயில்லை வயிறு புகையிது... பத்து ரூபாயென்றாலும் இருந்தாத் தாங்கோ!"

வாழையிலை விற்ற காசு கையிலிருந்தது. அதை அவர் அப்படியே மணியண்ணையின் கையில் கொடுத்தார். ●



படிப்பகம்

www.padippakam.com

சிவபாக்கியம் இடிந்து போனாள். எதிர்பாராத விதத்தில் செல்லாச்சி மண்டையைப் போட்டு விட்டாள்.செய்வதறியாத் திகைப்பின் மத்தியிலே தான் சொந்த பந்தங்கள் சூழலாயினர்.

சண்முகம் கவலையின் ரேகை கூடக் காட்டாமல் ஸ்கூட்டரோடு ஒன்றிப் போய்ச் சுழன்றடித்தான். எங்கிருந்து வந்தானோ தெரியவில்லை. லான்ட் மாஸ்டரில் வாடகைக் கதிரை முதலில் வந்தது. பிரமுகர்கள் வந்தால் உட்காரும் வசதியே அவனுக்கு முதன்மையாகத் தெரிந்திருக்கிறது.

ஏழெட்டு ஊர்களுக்கும் அப்பால் இருந்து பறை மேளக் கூட்டம் டெலிக்கா வானில் வந்து சேர்ந்தது. ரெடிமேட் கம்பிப் பாடைக்கு பிளாஸ்ரிக் பூச்சரங்கள் சுற்றிக் கட்டப்பட்டன. காய் வாழைகள் வண்டியிலே வந்ததும் சண்முகமே வாசல் தூணோடுதூணாகத் தூக்கி நிறுத்தி வைத்தான். தோரணங்கள் நீள நீளமாகத் தொங்க விடப்பட்டன.

இதெல்லாம் நடப்பதே சிவபாக்கியத்தை ஆறுதல் படுத்தியது. ஒரு வாய்க் கோப்பி கூடத் தொண்டையை நனைத்திட முடியா நிலை. மிடறு வெறுங் குடலை வருடி நின்றது. முழு உரிமைக்காரி.

ஸ்காபரோவிலிருக்கிற சரோஜினிக்கு தாய் சிவபாக்கியத்திற்கும் தெரியாமலேயே தொலை பேசியில் மரண அறிவிப்பும் பண அறவீட்டுக் கோரிக்கையும் மின் வேகத்தில் போனது. அந்த அந்தரத்தில் அவளிடமிருந்து வரப் போகின்ற தொகையைச் சண்முகம் மாத்திரமே எதிர் பார்ப்பது அவனது குடுமி ஆடுகின்ற வேகத்தில் எவருக்கும் தெரியாது.

ஊர் வம்பெல்லாம் ஒவ்வொருத்தர் வாய் வழியே ஊற்றெடுக்கின்ற இடமாகச் சிவபாக்கியத்தின் வீடமைந்தது. வெள்ளிக் குத்துவிளக்கில் பக்குவமாகச் சண்முகமே திரி வைத்தான். தகரப் பந்தலுக்குள் சிறு குடங்கள் மூட்டைகட்டி எடுத்து வந்தான். அய்யர் வருவதில் தாமதம் ஏற்பட்டாலும் சாவீட்டிற்கு வந்தவர்கள் அலுப்புக் காட்டவேயில்லை. எல்லாக் கதிரைகளும் நிரம்பிச் சிலர் நின்று கொண்டிருந்தார்கள். ஒப்பாரியும் அது இல்லாத நேரத்தில் பறையடிப்புமாக மாறி மாறிக் களை கட்டிக் கொண்டது.

சிவபாக்கியம் தன் கழுத்திலிருந்த ஒற்றைச் சங்கிலியைத் தடவிப் பார்த்தாள். அவளால் செலவு செய்யக் கூடிய ஒரேயொரு பெறுமானமான அது வெறுமனே உருண்டது.

ஒன்று விட்ட சகோதரன் முறையான இரத்தினமும் சந்தர்ப்பத்தை நழுவ விடாமல் சளைக்காது வாரியிறைத்தான். கனடாவிலிருந்து சுளை பிடுங்கிக் கொள்வதில் முனைப்பு உந்தித் தள்ளிட அதிக விலைச் சவப்பெட்டியும் குளிப்பாட்டல் திரவியங்களும் வாங்கித் தள்ளினான். இந்தப் புது வியாபாரத்தில் முதலீடுகள் செய்தால் கனடா மண் ஒரு போதும் துரோகம் செய்யாது என்பதை நம்பி இம்மியும் இரண்டாகப் படாமல் செயலில் இறங்கிக் கொண்டான்.

சரோஜினி பார்க்கவென வீடியோக் கமிராவை கூட கூலி கொடுத்து வரவழைத்துப் போட்டான் சண்முகம். போட்டா போட்டி வலுத்துக் கொண்டிருந்த வேளை வந்திருந்தவர்கள் சுடலை ஞானக் கிறுக்கில் சுருட்டையும் வெற்றிலையையும் மாறி மாறி பதம் பார்த்தனர். ஒழிவு மறைவாக ஸ்பெசல் சாரயமும் விநியோகிக்கப்பட்ட போது ஸ்பொன்சர் பண்ணியவர் சண்முகமா? இரத்தினமா? என்றே எல்லோரும் அலசி ஆராய்ந்தனர்.

"இந்தக் காலத்திலை இப்பிடியும் செத்த வீடு செய்யக் கிடைக்குமே? கும்பகோணக் குளியலுக்கு வந்த அந்தப் பூதக்கிடாரத்தைப் பாக்க இடிபட்ட சனத்தில ஐம்பது பேர் மட்டில செத்தினம்"

கிழவர் நாட்டு நடப்புப் பேசினார்.

"ஓமோம் ஐம்பத்தஞ்சில சிவாஜி திருப்பதிக்குப் போனார். என்டவுடனே கட்சியால வெளியேற்றிச் சாணியடிச்சுச் சண்டை போட்ட ஒரே ஆக்கள் எப்பிடித் தலைகீழாய் மாறியிட்டினம்"

வரலாற்றை வெளிப்படுத்தினார் கேட்டவர்.

இரத்தினமே குளித்து மூழ்கிக் கொள்ளிக் குடமெடுக்க முன் வந்தார். சண்முகம் பந்தலுக்குள் உரல் இடித்தான். இருவருமே நாயகர் வேடம் தரித்ததைப் பெண்களும் ஒப்பாரியை மறந்து இரசித்தார்கள். செல்லாச்சி மரக் கட்டையாகக் கிடந்தபடி அப்பப்பட்ட சந்தன அத்தர்களால் மூடுண்டு போயிருந்தாள். சிவபாக்கியமே ஓயாது அழுதவளான பாராட்டுப் பார்வையையும் இரசிப்பையும் ஏகோபித்த தெரிவையும் பெற்றாள். நிறை குடிகாரர் சிலர் தமது செலவிலேயே வெடி கொளுத்தி ஆரவாரம் செய்ய ஆசைப்பட்டனர். ஆனால் பாடை சலனமின்றியே தூக்கப்பட்டது.

சைக்கிள் வைத்திருந்த எண்பது வீதமானவர்கள் குறுக்கு வழியில் சுடலை போய் விட்டதால் ஊர்வலம் வெறிச் சோடிப் போனது. மூலைக்கு மூலை பறைச் சமர் சண்முகத்தால் ஏற்பாடாகி இருந்தது. கொள்ளி

# படரும் பாதி

சி. சுதந்திரராஜா



படிப்பகம்

www.padippakam.com

வைப்பதில் இரத்தினரை ஏன் விட்டுக் கொடுத்தான் என்பதில் விளங்காப் புதிர் உறைந்து கிடந்தது.

சுடலை மடத்தடியில் பிணம் எரியத் தொடங்கிட சண்டை வலுத்தது. கனடாவிலிருந்து வரப் போகிற இரண்டரை இலட்சத்திற்கும் எவர் உரித்தாளர் என்பதே அங்கிருப்பவர்கள் எல்லோரதும் ஒரே கேள்வி.

சுடலை நடுவில் தூர்ந்து பற்றைச் செடியாலும் பாசியாலும் மூடுண்ட புதைகுழிக் கிணற்றில் அவர்கள் எவருமே தண்ணீர் அள்ளி ஒரு சிரங்கையாவது குடித்ததில்லை. அதெல்லாம் அதோ பிணம் எரிக்கிற பசுவனும் பரம்பரையும் தினந்தோறுஞ் செய்த வருகின்ற கைங்கரியம்.

எதனையுமே கருத்தில் கொள்ளாது வாய் வீச்சில் சண்முகமும் இரத்தினமும் இறங்கியது கண்டு வேடிக்கை பார்த்தனர். நான் தான் கூடச் செலவழித்தவன் என்பதேதான் இருவரதும் வாதம்.

ஓய்வு பெற்ற நீதவான் தீர்ப்புச் சொன்னார்.

"சண்முகத்திற்கு அறுபது. இரத்தினத்தாருக்கு நாற்பது. சமாதானமாய்ப் போங்கோ"

அவர்கள் கலையும் போது கொள்ளி வைத்த நெருப்பு நெஞ்சாங்கட்டை வரை வியாபித்தும் கோர வடிவமெடுத்தும் எரிந்தது.

# பேசப்படாத வார்த்தைகள்

பஸீல்

வார்த்தைகளை
உன்னிடம் பேசாமல் இருப்பது
சுகமாகவும் இருக்கின்றது
சுமையாகவும் இருக்கின்றது...

தள்ளித் தள்ளிப் போடச் செய்கின்ற
தயக்கப் பிரசவம் மாதிரி...

மனக் கருப்பைக்குள் அடைத்து வைத்தபடி
காலத்தை நீடித்துக் கொண்டிருக்க முடியாமலும்
அவதியுறும் மனம்...

அழகாகவே அனைத்தையும் ஒப்பனை
பார்த்துவிட்ட பின்பும்
இன்னும் இன்னும்



கொஞ்சம் தயக்கம் காட்டுகிறது மனசு...

நீ தானாகவே வந்து விழுந்தவளுமல்ல
நானாகவே வருந்தி அழைத்தவளுமல்ல
இரண்டிற்கும் இடையில்...

நாள் போக நாள் போக
வார்த்தைகள் பெருகிப் பெருகி
புதிய வடிவங்களாகி
புதிய ஆசைகளுடன்
புதிது புதிதாக வந்து கொண்டிருக்கின்றன...

முடித்து விட்டால்
எல்லாமே முடிந்து விடலாம்...

என்னை விட்டுப் போன பிறகு
என்னுடையது என்ற சொந்தம் கூட
எனக்கில்லாது போய் விடலாம்...

இப்படியெல்லாம் பல்கிப்
பெருகுகிறது கண்ணே
எனது வார்த்தைகள்
உன்னிடம் சொல்லப்படாமலேயே...!



படிப்பகம்

www.padippakam.com

# தீடலைரிப்பு

சிங்களத்தில் : சைமன் நவகத்தேகம
தமிழில் : இப்னு அசுமத்

அனைத்து நாட்களிலும், கடந்த நான் கைந்து ஆண்டு காலத்துக்குள் எம்மிடம் ஒப்படைக்கப்பட்ட கடமைகளை நான் ஒழுங்குறச் செய்துள்ளேன். என்னையும் விட, என்னுடன் சேர்ந்து வேலை செய்கின்ற சமூக சேவக, சேவகிகள் இந்தப் பணிகளைச் செவ்வனவே நிறைவேற்றியுள்ளனர்.

கடந்த ஆறுமாத காலமாக, விடுதலை முன்னணியினராலும் அரசாங்கத்தினாலும் அவசர காலச் சட்டம் பிரகடனப்படுத்தப்பட்டுள்ளது. இது குறித்து எம்மிடம் ஒரேயொரு சந்தேகமே நிலவி வருகிறது. எமது பாதுகாப்பினைக் கருத்திற் கொண்டு, அரசாங்கம் அவசரகாலச் சட்டத்தைப் பிரகடனப்படுத்துகிறது. இதற்கும் மேலாக அவசரகாலச் சட்டத்தினைப் பிரகடனப்படுத்துபவர்கள் விடுதலை முன்னணியினரா, இல்லை இவ்விரு தரப்பிற்கும் உட்படாத வேறுமொரு இயக்கமா?

"டிரிங்.... டிரிங்.... டிரிங்....."

தொலை பேசி மணி ஒலிக்கிறது. நான் 'ஹலோ' என்று கூறாமல் செவிமடுக்கிறேன்.

"நாம் சொன்னோம் தானே இந்த அலுவலகத்தை மூடச் சொல்லி? எத்தனை முறை சொல்லிவிட்டோம்? நாளை ஆகும்போது நீர் உயிருடனிருக்க ஆசையா? இல்லை, செத்துப்போக ஆசையா?"

அச்சத்துடன் நான் எதையோ கூற விழைகிறேன்.

"வந்து... இதுதான் சகோதரர் - இப்போது பேசுவது யாரென்று எனக்குத் தெரியாது. இங்கு வேலை செய்வது நானல்ல - இங்கு வேலை செய்கின்ற மற்ற ஆண்களும், பெண்களும் அவர்கள் உரிய நேரத்திற்கு வேலைக்கு வருகிறார்கள் -என்னால் எப்படி இந்த அலுவலகத்தை மூட முடியும்?"

"இது ஒரு சதி! அவர்கள் உமக்கு பயம் போலும்!"

"ஹலோ! ஹலோ! ஹலோ!"

கொஞ்சம் கேளுங்கள் - இந்தக் காலத்தில் யார் எனக்குப் பயப்படுவார்கள்? அவர்கள் வேலை செய்வது சேரிக் குடிசைகளில் அங்கிருப்பவர்கள் எமது பிள்ளைகளுக்குப் பாதுகாப்பு வழங்குகின்றனர்."

"நீர் செத்துப் போக ஆசையா?"

"சாக....?"

என்னால் அதற்கு பதில் கொடுக்க முடியவில்லை. நான் பேயறைந்தது போலாகிறேன்.

"ஹலோ! ஹலோ! ஹலோ...."

பிரச்சினை இதுதான் - நேற்றோ அல்லது நேற்றைக்கு முன்தினமோ கலைஞரொருவர் கொலை செய்யப்பட்டார். யாரது பேசுவது? எம்மால் தவறேதும் நடந்திருந்தால், வாருங்களேன் கொஞ்சம் பேசிப்பார்ப்போம். நீங்கள் விடுதலை முன்னணியினர் என்று சொன்னால் நினைக்க முடியாது!"

"உமக்கு எமது கடிதம் கிடைத்ததா?"

"கிடைத்தது"

"அதில் இரத்தக் கையெழுத்தைக் கண்டீரா?

"கண்டேன்"

"நீர் அதைப் பிரதமருக்கும் காட்டினீர்தானே?"

"நான் வேறென்ன செய்ய? எனது மகள்,எனது மனைவி, மேலும் பிள்ளைகள் பலரும் கண்டனர்!"

"இன்றிரவு உம்மைக் கொல்லுவோம்"

"ஹலோ! ஹலோ! ஹலோ.... என்னைக் கொன்று போட்டு என்ன நடக்கப் போகிறது? இந்த நாட்டில் விடுதலை ஏற்படுமா? புதியதொரு அரசாங்கம் அமையுமா? எப்படியும் நான் விரைவில் செத்துப் போவேன் - சிகரெட் குடித்தே இந்தக் கொலைகளின் மூலம் தற்போது ஆட்சியிலிருப்பவர்களது பலம் உறுதி பெறுகிறது!"

"அவை எல்லாம் எமக்குத் தெரியாது - இதுதான் எமது தலைமைச் செயலகச் சகோதரரது கட்டளை!"

"அதாவது, என்னைக் கொன்று போட்டால் விடுதலை அரசாங்கமொன்று உருவாகும்!"

"ஹலோ, உம்மைப் போன்றவர்களால்தான் இந்த அரசு இதுவரை காலமும் ஆட்சியிலிருக்கிறது!"

"எனக்கென்றால் இது எதுவும் புரியவில்லை - நாங்கள் சேரிக் குடிசைகளிலுள்ள ஏழைக் குழந்தைகளுக்குச்



படிப்பகம்

www.padippakam.com

சேவை செய்கிறோம்!''

"அமெரிக்காவின் நன்கொடையினால்!"

"இல்லை இல்லை ஐக்கிய நாடுகள் சபையின் உதவியினால்!''

"ஐக்கிய நாடு என்பது அமெரிக்காதானே?"

"இல்லை இல்லை - ஐக்கிய நாடுகளின்..."

"ஐசே, அது அமெரிக்காவில்தானே இருக்கிறது?"

"ஆமாம் - ஆமாம் - என்றாலும்...நியூயோர்க்கில் - ஜெனீவா - ஹலோ - ஹலோ...''

"எமக்கு அவற்றால் பயனில்லை - இன்று இரவு, இல்லை பகல் 10.00 மணிக்கு உம்மைக் கொல்லுவோம்!"

"ஹலோ - ஹலோ - ஹலோ!... எனது காரியதரிசி இந்தத் தொலைபேசி அழைப்புக்களினால் பயந்து விலகிச் சென்றுவிட்டாள். ஏனையவர்கள் வேலை செய்கிறார்களே, நான் என்ன செய்வது?"

"எம்மிடமா கேட்கிறீர்?... அவர்களையும் நாம் கொல்லுவோம்!''

"ஹலோ - ஹலோ... அவர்களைச் சேரிகளில் உள்ளவர்கள் பாதுகாக்கின்றனர். இந்தப் பகுதிக்கு மட்டும் போக வேண்டாம். வேண்டுமென்றால் என்னைக் கொல்லுங்கள், நீங்கள் சும்மாவே செத்துப் போவீர்கள். எமது பிள்ளைகளின் மீது அந்த மக்கள் மிகுந்த விருப்பம் கொண்டிருக்கிறார்கள்.''

"ஹலோ... நான் நினைக்கிறேன் நீங்கள் விடுதலை முன்னணியைச் சேர்ந்தவர்களல்ல. திருட்டுக் கும்பல்தானே? ஹலோ - ஹலோ - பறையன்களே - நீயெல்லாம் பொய்க்காரக் கும்பலைச் சேர்ந்தவன்கள்தானே, எனக்கு விளங்குகிறது. நீ கேட்டுக் கொண்டிருப்பது, மூச்சு இழுத்து விடுவது எல்லாமே கேட்கிறது!... நீயெல்லாம் இங்கே கிட்டடியில் இருப்பவன்கள்தானே? நீயெல்லாம் எனது மண்டையைக் குழப்புகிறீர்கள். நான் சொல்லுகிறேன் - நான் வீட்டுக்குப் போகப் போவதில்லை - நான் அங்கு போனால் - நீயெல்லாம் வந்தால் எனது பிள்ளைகள் மரணிக்கக்கூடும். நானிந்த 'ஒபீஸி'லேயே இருப்பேன்! வாங்கடா பார்ப்போம்!"

"நீ என்ன செய்ய?'' கடூரமான குரல்.

" நான் எதுவும் செய்யமாட்டேன் - இதோ கதவு திறந்து இருக்கிறது - முதலாவதாக வருபவனைக் கொல்லுவேன்!''

"எப்படிக் கொல்லுவாய்?"

நான் முட்டாளைப்போல் மரண பயத்துடன் பதில் கொடுக்கிறேன்.

"கொல்லுவது இப்படித்தான். திரைப்படங்கள் பார்த்து இருக்கிறாயா? - முதலாவதாக வருபவனின் ரிவோல்வரை அல்லது துப்பாக்கியைத் தூக்கி அடிப்பேன் வயிற்றுக்கு!"

"ஹஹ்...ஹஹ்...ஹக்...ஹக்... நீர் புதுமையான முட்டாளல்லவா? உம்முடைய புத்தகங்களை வாசிக்கும்போது நாம் நினைத்தோம் சிறந்த புத்திசாலியென்று!''

''முட்டாள் என்பதால் என்னிடம் கவனமாக இருக்கவும்!'' ,

"டக்...டிரக்..."

"ஹலோ - ஹலோ - வெட்டிப் பிசாசே!""

அதன் பின்னர் நான் பயத்தால் நடுங்குகிறேன். நான் பார்த்திருக்கும் திரைப்படங்கள் பற்றி நினைக்கிறேன். குறிப்பாக மிக அருகில் இருக்கும் படமாளிகையில் பார்த்திருந்த 'கராட்டி'த் திரைப்படம் பற்றி நினைக்கிறேன். உடனடியாக என்னைக் கொலை செய்வதற்கு யாராவது வந்தால் அவர்களைத் தாக்குவது எப்படி என நினைக்கிறேன். 'கராட்டி' பற்றி அல்ல, நான் சிறு காலம் தொட்டு தெரிந்துள்ள தடியடி பற்றி அடுத்ததாக நினைக்கின்றேன்.

"டிரிங்..... டிரிங்....... டிரிங்......."

"ஹலோ! - ஹலோ! - "ஹலோ எனக்குக் கேட்கிறது உங்களில் யாரோ ஒருவர் கேட்டுக் கொண்டிருப்பது'

கடூரமான குரல்!

"இல்லைச் சகோதரரே இப்போது உம்மைக் கொலை செய்வது யாரென்று தெரியுமா?""

"யார் ஹலோ - ஹலோ "

"உம்மை அடுத்தபடியாக நாங்கள் கொல்வது எமக்கு எதிரானவர்கள் என்பதற்காக எம்மீது குற்றஞ் சுமத்துவதற்காக!''

"இது நல்ல கதையல்லவா! நீர் தானே முதன் முதலில் என்னோடு பேசியது?"

"என்றாலும் யார் பேசியது என உமக்குத் தெரியுமா?"

"இனி நீங்கள் நியாயத்தின் பக்கம் பேசுவதென்றால் என்னைப்பற்றியல்ல, எனது பிள்ளைகளைப் பற்றிப் பார்க்க வேண்டும் தானே?"

"யார் பிள்ளைகள் என்போர்?"

"எனது அலுவலகத்தில் வேலை செய்பவர்கள் சேவக சேவகிகள்!''

"அவர்கள் பிள்ளைகளா? ஒரு சிலர் திருமணம் முடித்தவர்கள்''

"அது உண்மை! என்றாலும் நான் குறிப்பிடுவது பிள்ளைகள் என்றே - ஹலோ - ஹலோ - ஹலோ!'' மீண்டும் கடூரமான குரல்

''சேரிகளுக்குச் சென்று என்ன அவர்கள் செய்கிறார்கள்?''

"இல்லை! இல்லை! அரசியல் அல்ல! தாய்ப்பால் கொடுத்தல், இளம்பிள்ளை வாதத்துக்கு முன்கூட்டியே மாற்றுச் சக்தி வழங்குதல்... ஹலோ - ஹலோ''

"நீங்கள் இதைச் செய்வது நடைமுறையில் இருக்கும் முறைமையின்கீழ்?''

""ஹலோ - ஹலோ கொஞ்சம் கேளுங்கள்...''

"நீர் பயந்துவிட்டுள்ளீர் தானே?''

""இல்லை........ ஹலோ......... ஹலோ...... ஆமாம் பயந்துவிட்டேன். இல்லை... இல்லை....ஹலோ...... ஹலோ''



படிப்பகம்

www.padippakam.com

நான் சுற்றும்முற்றும் பார்க்கிறேன். எல்லோரும் அலுவலகத்தை விட்டுப் போய்விட்டுள்ளனர். வேறு நாட்களில் இந்த மாடி வீடுகளில் எல்லாப் பக்கத்திலிருந்தும் எரிச்சலை உண்டு பண்ணுகின்ற அளவுக்கு வீடியோத் திரைப்படங்களின் ஒலி கேட்கும். தமிழ், ஹிந்தித் திரைப்படக் கேசட்கள். இன்று எல்லாமே மௌனமாகியுள்ளன. நானிந்த அமைதியினால் சற்று நிலை தடுமாறுகிறேன்.

எனது மனதைத் தடுமாற வைப்பதில் யாருக்கும் இருக்கும் உரிமை என்ன? நாம் தினந்தோறும் எம்மிடம் ஒப்படைக்கப்பட்ட அலுவல்களை ஒழுங்குறச் செய்துள்ளோம். தேவைக்கும் அதிகமாகச் செய்துள்ளோம். எமது தவறு அது தானா?

என்ன இருப்பினும் நான் பயத்தால் நடுங்குகின்றேன். பயமில்லை என்று நினைத்துக்கொள்ள முயற்சிக்கிறேன். பத்து மணிக்குப் பதினைந்து நிமிடங்கள் இருக்கும் போது அலுவலகக் கதவை பூட்டுகின்றேன். எனக்கு ஒரு புத்தகத்தையோ அன்றி எதையுமோ வாசிக்க முடியாதிருக்கிறது. எயிட்ஸ் நோய் பற்றித் தொடர்புச் சாதனங்களினூடாக ஏதாவது எச்சரிக்கையொன்றை எமது மக்களுக்கு அறிவிக்க வேண்டுமென்று ஐக்கிய நாடுகளது அமைப்பு எனக்குத் தெரிவித்திருந்தது. இந்தப் பிரச்சார வேலையை எவ்வாறு செய்ய முடியுமென நான் எண்ணிப் பார்க்கிறேன். அதனிடையே இந்த மரண அச்சுறுத்தல்!

நான் மீண்டும் சென்று, அலுவலகக் கதவு நன்றாகப் பூட்டப்பட்டுள்ளதா? என நிதானித்துப் பார்க்கிறேன். அதனிடையே கதவைச் சற்றுத் திறந்து சுற்றுமுற்றும் பார்க்கிறேன். எல்லோரும் கதவுகளை மூடிக் கொண்டுள்ளனர். ஆட்சியிலிருக்கும் அனைவரும் அவசரகாலச் சட்டத்தைப் பிரகடனப்படுத்தியுள்ளனர். நான் கேட்டுக் கொண்டிருக்கின்றேன். மருதானைப் புகையிரத நிலையத்திலிருந்து புகையிரத இயந்திரமொன்றின் ஓசை கேட்கிறது. ஒரே இரைச்சல். எங்கேயோ செல்வதற்கு இயந்திரமொன்றை உயிர்ப்பிப்பது எந்தத் துணிவான சாரதி? எமது கட்டிடத்தின் மேலேயுள்ள நீர்த் தாங்கி நீரினால் நிரம்புகிறது. நான் கேட்டுக் கொண்டிருக்கின்றேன். இதற்கு மட்டும் நீரப் பாய்ச்சுவது யார்?

எமது பிள்ளைகளைப் போன்றே பொது வசதிகள் சபையிலும் யாரோ ஒரு பணியாளர் துணிச்சலுடன் பணியாற்றுவதாக என்னுள் எண்ணமேற்றப்படுகிறது.

எனது மரண பயத்தைக் குறைத்துக் கொண்டு, துணிவினை வெளிக்காட்டிக் கொள்ள நான் முயலுகின்றேன்.

நானொரு சிகரட்டைப் பற்ற வைத்துக் கொண்டு அலுவலகத்தினுள்ளே அங்குமிங்கும் நடக்கிறேன். நாம் பெருமை கொள்ளத் தக்க அட்டவணை ஒன்று உண்டு. அது சுவரில் மாட்டப்பட்டிருக்கிறது. அதன்படி எமது பிள்ளைகளுக்கு மாதத்தில் முப்பது நாட்கள் வேலை செய்துள்ளனர்.

இதனிடையே எனது சிகரட் பற்ற நினைத்துக் கொள்கிறேன். இந்த நேரத்தில் சிகரட் ஒன்றைப் பற்றவைத்துக் கொண்டது ஏன்? இதன் மூலம் எனக்கு ஆத்ம பலமொன்று கிடைப்பதாலா? கைக்கருகில் இருக்கிற மரணபயத்தைக் குறைத்துக் கொள்ள இந்தச் சிகரட் எனக்கு உதவி புரியுமா?

அர்த்தமில்லாத மரணபயம் எல்லா இடங்களிலுமாகப் பரவியுள்ளது. எப்படியேனும் இன்னும் சிறிது காலத்தில் நாம் இறந்து விடுவோம், இல்லையா? நான் பௌத்த கதைகளைப் பற்றி நினைவுபடுத்த விழைகிறேன். என்னால் ஒரு ஸ்லொஹுத்தையெனும் நினைவு படுத்திக் கொள்ள முடியவில்லை. என்ன இருப்பினும் சகல ஸ்லோஹுக் கதைகளிலும் மரணம் எமது கதைகளில் எப்படிக் கூறினாலும், கூறாவிட்டாலும் மருதானைக் கோட்டே வீதி யொன்றில் வாகனமொன்றுக்குள் அகப்பட்ட நாம் இறக்கக் கூடும். பணம் கொடுத்து நாமொரு பயணம் மேற்கொள்ளுவதற்காக விழுந்தேனும் இறக்கக் கூடும்.

நான் மீண்டும் அலுவலகத்தின் கதவு, ஜன்னல்களை பரீட்சித்துப் பார்த்து விட்டு நித்திரை கொள்வதற்காகச் செல்கிறேன். நித்திரை சிறந்த பிரயோகமாகும். வாழ்க்கையின் அனைத்துப் பிரச்சனைகளையும் மறந்து விட முடியும்.

நித்திரை என்னை நோக்கி வருவதாக இல்லை.

ஒரு காலத்தில் என்னுடன் பழகிய 'ஹிப்பி' யுவதி பற்றிய ஞாபகம் வருகிறது. அவளது பெயரை ஞாபகப்படுத்திக் கொள்ள முனைகிறேன். எனக்குப் பல பெயர்கள் ஞாபகத்துக்க வருகின்றன. ஷேன் - ஜேன் - ஹயிம் - கிறிஸ்டீன்!

ஒரு யுவதி எனது ஆலிங்கனத்திலிருந்தவாறு இவ்வாறு கூறினாள்.

''நான் ஆசைப்படுவதனாலேயே யாருடனாவது இருக்கிறேன். ஒரு நாள் என்னை விளையாட்டுப் பொருளாக எடுத்துக் கொண்டான் ஓர் அராபியன் - உங்களுக்குத் தெரியும், நான் முழு உலகத்தையும் தனியாகச் சுற்றி வருபவள். நான் என்ன செய்தேன் தெரியுமா? நான் பலஹீனமாக கூரையைப் பார்த்துக் கொண்டு விழுந்து கிடந்தேன்! நான் முஷ்டியால் உதைத்தேன். அவனது ........க்கு ! அவன் மயங்கி விழுந்தான்!!!''

என்னைக் கொலை செய்வதாக அச்சுறுத்தியவர்கள் வந்தால் நானும் அவ்வாறே செய்ய வேண்டுமென நினைத்துக் கொள்கிறேன்.

''அடிவயிற்றுக்கே அடிக்க வேண்டும்!!!'' என்றாலும் இப்படியானவர்கள் ஒருவருக்கப்பின் ஒருவராக ரவைகளைத் துப்பும் 'மெஷின் கன்' போன்ற துப்பாக்கிகளைக் கொண்டுதானே வருவார்கள், இல்லையா? டீ 56 - ஏ.கே 47....''

நான் பேயறைந்ததைப் போலாகின்றேன்.

கற்பழிப்பில் கூட இனிமை இருக்கக் கூடும். ஆசை இல்லாத விட்டாலும் சற்று நேரம் சென்றதன் பின் ஆசை உருவாகலாம். அந்தத் துஷ்டடன் தான் கற்பழிப்பது



படிப்பகம்

Best Wishes For The 36th Year

MALLIKAI

# JV CREATIONS

FOR
TYPE SETTING, TAMII, ENGLISH & SINHALA
HIGH QUALITY LASER PRINTING
OFFSET PRINTING

258/3, DAM STREET,
COLOMBO-12
TP:01.421987



Excellent
Photographers

For
Wedding Portraits
&
Child Sittings

# HAPPY PHOTO

300,Modera street
Colombo-15
T-phone:526345

www.padippakam.com

கூடிய ஆசையினால் பித்துப் பிடிப்பததனால் தான் என்றாலும் மெஷின் துப்பாக்கிக்கு, தாமதித்தாவது ஆசையுடன் முகங் கொடுப்பது எப்படி?

நான் மேலும் பேயறைந்ததைப் போலாகிறேன்.

பூனையொன்று அழுவது எனக்குக் கேட்கிறது. இது மிகவும் தரித்திரம் பிடித்த அழுகை போன்று எனக்குப் படுகிறது. எமது அலுவலகத்தின் பிள்ளைகளும் நானும் அதற்கு அநேகமாக உண்ண, குடிக்க கொடுத்துள்ளோம். பழக்கம் காரணமாக அது வரும். அது அல்ல. இது ஒரு பெண் பூனை என்று எனக்குப் படுகிறது. இதற்குக் கூட உண்ண, குடிக்க கொடுக்கவில்லை போலும். சகல கடைகளும் மூடப்பட்டுள்ளன. இவை குறித்து நினைக்கும் போது எனக்கு பயங்கரமான பசி எடுக்கிறது. ரஞ்சனி இன்று காலை வீட்டிலிருந்து கொண்டு வந்த சோற்றுப் பாசலை எனக்குக் கொடுத்தாள். அவள் மத்தியானம் எப்படிச் சாப்பிடுவாள் என்பதைச் சிந்தித்துப் பார்க்காமல் முழு சோற்றுப் பாசலையுமே நான் சாப்பிட்டு விட்டேன். உணவு என்ற ரீதியில் கோவாவிற்கு என்னுள் அதிக விருப்பமில்லை. என்றாலும் கோவாவுடன் மிகவும் விரும்பி சகல சோற்றுப் பருக்கைகளையும் சாப்பிட்டேன். பெட்டைப் பூனை என்மீது எதிர்பார்ப்பு கொண்டிருந்ததாக தெரிகிறது. சுவரில் ஊர்ந்து செல்கின்ற கரப்பான் பூச்சியைப் பிடிப்பதற்காக அது உயரப் பாய்கிறது. அது குட்டி ஈன இருப்பதாக எனக்குத் தெரிகிறது. பட்டினியில் கிடந்தாலும் அதன் வயிறு முட்டிக் கொண்டிருக்கிறது.

மதுபானம் அருந்தினால் அனைத்தையும் மறந்துவிட்டு நித்திரை கொள்ள முடியும். மருதானைப் பகுதியில் சகல மதுபானக் கடைகளும் மூடப்பட்டுள்ளன என்பது என் ஞாபகத்துக்கு வருகிறது. என்ன இல்லாவிட்டாலும், அருகாமையில் ஓர் இடத்தில் கசிப்பு விற்கப்படுவது குறித்து நானறிவேன். நான் 'பொக்கட்டு' களைத் துளாவிப் பார்க்கிறேன். ஐம்பது ரூபா நோட்டொன்று இருக்கிறது. நான் படிகளில் இறங்கிக் கீழ் மாடிக்குச் செல்கிறேன். தற்போது பத்து மணி தாண்டி விட்டது. பத்து மணிக்கு என்னைக் கொல்லுவதாக அச்சுறுத்தினார்கள் தானே? இந்தக் கட்டிடத்தின் காவல்காரன் கீழ் மாடியிலேயே இருக்கிறான். அவன் மேசை மீது தலையைச் சாய்த்துக் கொண்டு நித்திரையில் மூழ்கி இருப்பதாக எனக்குத் தெரிகிறது. எனது நடைச் சத்தத்திற்கு விழித்தது போன்று உடனடியாக அவன் எழுகிறான். நித்திரை கொண்டதற்கு மன்னிப்புக் கேட்பது போல என்னைப் பார்க்கிறான். நான் அவனுடன் நட்பு ரீதியாகச் சிரிப்பதற்கு முயலுகின்றேன்.

"நாடு தலைகீழாகப் புரண்டாலும் உமக்கென்றால் நன்றாகத் தூக்கம் வருகிறது."

"என்ன தூக்கம் சேர்! நேற்று அந்தியிலிருந்து இதே இடத்தில்! அடுத்த வேலைக்கு வரவேண்டியவன் வரவில்லை. பஸ் இல்லாமல் இருக்கும்"

"என்ன விசேஷத் தகவல்கள்?"

"அதோ..... அந்த திணைக்களத்தின் செக்கிறுாரிட்டியைக் கொன்றோர் - துப்பாக்கியையும் எடுத்துச் வெசன்றுவிட்டார்களாம் - எமக்குத் துப்பாக்கி இல்லாதது ஒரு வகையில் நல்லது - இல்லாவிட்டால் சனியன், துப்பாக்கியை எடுக்க எங்களையும் கொல்லுவார்கள்."

நான் அவனைத் தாண்டிச் சென்று கட்டிட முற்றத்தில் உலாவுகிறேன். நடப்பட்டிருக்கும் பூஞ்செடிகள் வாடிப்போயுள்ளன. அவற்றைக் கவனித்துப் பார்க்கும் ஊழியர் ஒரு வாரத்திற்கும் மேலாக வேலைக்கு வரவில்லை. நானிந்த காவல்காரனைப் பற்றிச் சிந்திக்கிறேன்.

யாராவது என்னைக் கொல்லுவதற்கு வந்தால் இவன் என்ன செய்வான்? பிஸ்டலோ அன்றி டீ 57 ரகத் தன்னியக்க ஆயுதமோ தேவையில்லை. ஒரு கத்தியைக் காட்டினாலே போதுமானது. நான் நித்திரையில் இருந்தாலும் கூட அவர்களது கட்டளையை வந்து, ஏதாவதொரு தேவை குறித்துக் கூறி என்னை எழுப்பிக் கதவைத் திறந்து கொடுப்பான்.

அடுத்ததாக நான் என்னைக் குறித்து ஆச்சரியமடைகிறேன். இவ்வளவு அச்சுறுத்தல்கள் இருந்தும் நான் கீழ் மாடியில் உலாவிய படி அச்சுறுத்தியவர்களது இலக்குக்கு உட்பட்டவாறு 'கேட்' அருகாமையிலேயே உலாவுகின்றேன். இது புரிந்து கொள்ள முடியாத, என்னுடையதேயான ஏற்கத்தகாத செயலாகும். நான் தெருப் பக்கமாகப் பார்த்துக் கொண்டிருக்கிறேன். சொறி நாயொன்று நீண்ட தூரக் குறிப்பிடத்தக்க பயணமொன்று மேற்கொள்ளவதைப் போன்று என்னைக் கூடப் பாராது அவசர கதியில் பயணிக்கிறது. தெருவோரத்தில் நான் பெயரளவில் தெரியாத மரக் கிளையில் நிறைந்திருந்த காகக் கூட்டமொன்று தம் முன்னால் இல்லாத உணவு பற்றிக் கூறித் தூர இருக்கும் காகங்களை அழைக்கின்றன.

காவற்காரன், என்னைப் பார்த்து பார்த்துவிட்டு நிச்சயமற்ற தன்மையுடன் உலாவிக் கொண்டிருக்கின்றான். நான் அருகில் இருக்கும் போது அவன் அமருவதில்லை. அவனும் அவனது நண்பர்களும் புரிந்து கொள்ள முடியாத அளவுக்குக் கூடுதலான கௌரவத்தை எனக்கு வழங்குகின்றான். என்னைக் கொல்லுவதற்கு யாராவது வந்தால் அவர்களுக்கு இவன் உதவக் கூடும். என்றாலும் மனதால் என்னைப் பற்றி அநேகமாகத் துன்பப்படுவான் என்று எண்ணுவதற்குக் காரணங்களுண்டு. இந்தச் சிந்தனையினால் அவர்கள் குறித்து என்னுள் ஆழ்ந்த துன்பம் போன்றதொரு உணர்வு ஏற்படுகிறது. அதன்பின் எனக்கு இப்படித் தோன்றுகிறது. இது என்னைப் பற்றியே ஏற்படுத்திக் கொள்ளக் கூடிய ஆத்ம அனுதாபமா?

நான் எனது செயளாளர் பற்றி சிந்திக்கிறேன். அவள் மிகவும் பக்தி பூர்வமாகச் சேவையாற்றினாள். இந்த வேலைத் திட்டத்தை ஆரம்பிப்பதற்கும் இதனை வளர்த்தெடுத்துக் கொள்வதற்கும் பகல் இரவு பாராமல் கடினமாக வேலை செய்தாள். தொடர்ந்து தொலைபேசி மூலமாகவும் தபால் மூலமாகவும் எனக்குக் கிடைத்த அச்சுறுத்தல்களால் அவள் அச்சமுற்றாள். முதலில் அவள் அச்சங் கொண்டது என்னைப் பற்றி இரக்கத்தால் கையொப்பமிடப்பட்ட கடிதமொன்றை வாசித்தபடியே ஒருமுறை அவள் அழுதாள். கால ஓட்டத்தில் என்னைக்



படிப்பகம்

www.padippakam.com

குறித்து ஏற்பட்ட அச்சத்தைத் தனக்கே பொருத்திக் கொண்டாள் போலும். யாருக்கும் கூறாமலேயே அவள் விடுப்பில் சென்று விட்டாள். மீண்டும் அவள் வரவில்லை. இப்போதைக்கு மூன்று மாதங்கள் கடந்து விட்டன. அவளால் ஏற்பட்டுள்ள அலுவலகப் பணியை நிரப்புவதற்கு யாருமே முன்வரவில்லை. ஏதாவதொரு ஃபைல் தேவைப்படும் பொழுது என்னால் அதைத் தேடிக் கொள்ள முடியாது. தொலைபேசி மணி ஒலிக்கும் போது, அடித்துக் கொள்ளும் இதயத்துடன் அதிலிருந்து எப்பொழுதும் கேட்கக் கூடிய குரல்களின் அச்சுறுத்தல்களை நான் மட்டுமே தனிமையில் கேட்டுக் கொண்டிருக்க வேண்டும். இந்த அச்சுறுத்தல்கள் அவளுக்கானவை அல்ல என்றாலும் அவள் எந்தளவு விரக்தியடைந்திருப்பாள் என்ற எண்ணம் என்னுள் எழுகிறது. அவள் குறித்துச் சில வேளைகளில் என்னுள் நியாயமற்ற உணர்வுகளும் எழுகின்றன.

மிகவும் கடினமானதொரு சந்தர்ப்பத்தில் அவள் எம்மைக் கைவிட்டுச் சுயநலப் பயணமொன்று சென்று விட்டாளோ? என எனக்குத் தோன்றுகிறது. இது எந்தளவு நியாயமற்ற சிந்தனையாகும்? அடுத்ததாக நான் எனக்குத் தெரியாத நபர்கள் குழுவொன்று குறித்து எனது வைராக்கியத்தைத் தொடுக்கிறேன். குறைந்த பட்சம் எனக்கு ஆதரவாக விருந்த,எமது வேலைத்திட்டத்தில் சேவை செய்கின்ற அப்பாவிப் பிள்ளைகள் குறித்து மிகுந்த பக்தியுடனிருந்த, நல்லதொரு பெண்ணை என்னிடமிருந்து பிரிக்க இந்தத் தீர்க்கதரிசனமற்ற அச்சுறுத்தல்காரர்களால் முடியுமாகியுள்ளது.

"துரைக்கு எதுவும் வேண்டுமா? கடைகளெல்லாம் மூடி! அதென்றால் இங்கே பக்கத்திலிருந்தே கொண்டுவர முடியும்!"

நான் ஐம்பது ரூபா நோட்டை அவனிடம் கொடுக்கிறேன்.

"எனக்கென்டாத் தேவையில்லை. பியதாசவுக்குத் தேவையெண்டா கால் போத்தல் எடுக்கவும். அங்கு இருந்தால் சிகரட் கொஞ்சம் கொண்டு வாரும்.""

"சேர் குடிக்கும் பிரேன்ட் இல்லை"

"என்ன இழவாவது"

ஏதோவொரு காரணத்தால் நான் பலஹீனமாகி எரிச்சலுடன் கூறுகின்றேன்.

அவனைத் தாண்டி எனது அலுவலகத்தை நோக்கிப் படியேறுகின்றேன். படிகள் சிலவற்றை ஏறுவது மிகவும் களைப்பான செயல் என்று என் பாதங்களுக்கும் மனதுக்கும் தெரிகிறது.

முன் கூட்டியே, எனக்கு மீண்டும் தொலைபேசியின் இரைச்சல் கேட்கிறது. நான் அதை நோக்கிச் செல்கிறேன். ரிசீவரைக் கையிலெடுக்காமல் நீண்ட நேரமாக தொலைபேசியைப் பார்த்துக்கொண்டிருக்கிறேன். அதன் ஒலி நிற்பதாகத் தெரியவில்லை.

எனது ஹிருதயத் துடிப்பு அதிகமாகிறது. நான் எதுவும் கூறாமல் செவிமடுத்துக் கொண்டிருக்கிறேன்.

ஆச்சரியமடைகிறேன். பிரையனின் நட்புக் குரல் எனக்குக் கேட்கிறது. நான் வியப்பினால் மலர்கிறேன்.

"யார் - சனீ இருக்கிறாரா?"

"ஆம் - ஆமாம் - பிரையன்!"

"என்ன இது காலையிலேயே தூங்கிக் கொண்டு இருந்தீரா? அதுவல்ல - எப்படி சாப்பாடு எல்லாம்? கொழும்பில் எல்லாக் கடைகளும் மூடியல்லவா? நான் ஒரு சின்ன வேலை காரணமாகவே பேசுகிறேன் - தெரியுந்தானே எமது சிறியாவதி - அதுதான், அந்த ரொம்பவும் முடியாத அங்கஹீனப் பிள்ளை - அவளுக்கு ரொம்பவும் சுகமில்லை - நான் பொலீசுக்குக் கூறினேன் - வரும்போது அனுமதிப் பத்திரமொன்று தருவதாகக் கூறினார்கள் - எமது வாகனம் கொஞ்சம் அப்செட் - சனீயின் வாகனத்தை எடுத்துக் கொண்டு வரமுடியுமா? பிள்ளையை ராகமைக்கு அல்லது பொரளை லேடி ரிஜ்வேயிற்குக் கொண்டு செல்ல வேண்டும்"

"சரியான வேலைதான் பிரையன், எனது டிரைவர் வேலைக்கு வரவில்லை! என்ன செய்வது?"

"ஓ...ஹ்ம்! - சரி - நான் எப்படியாவது வருகிறேன். எனக்குக் கொஞ்சம் உதவுங்கள் - வரும்போது ஒபீசுக்கு வருகிறேன்"

பிரையன் பேசுவது ஹெந்தலை பிரீத்திபுர சிறுவர்கள் இல்லத்திலிருந்தே. அது புத்தி சுவாதீனமற்ற சிறுவர்களுக்கான சமூக சேவை இல்லமாகும். நானும் ஓய்விருக்கும் போதெல்லாம் உதவி, ஒத்தாசை செய்கின்றேன்.

"பிரையன் - பெகஸஸ் ரீஃப் ஹோட்டலிலிருந்து வாகனமொன்று கேளுங்கள் - டூரிஸ்ட் வாகனமொன்றில் போவது மிகவும் சுலபம்!"

உடனடியாக என்னுள் பாரிய தெம்பு ஏற்பட்டுள்ளது. அவரது அன்புக் குரலே அதற்குக் காரணமல்ல. இவ்வாறானதொரு சந்தர்ப்பத்தில் வெறுமனே பொழுதைப் போக்காமல், ஏதேனுமொரு சேவையைப் புரிவதற்காகக் காலத்தைச் செலவிடுவது மனதுக்கு உறுதி. எமது பிள்ளைகள் வேலை நிமித்தம் வனாத்தமுல்லைக்கு நடந்தே சென்றனர். வரும் போது அங்கும் சென்று வரலாம்.

நான் முற்றத்திலே மிகவும் தென்புடன் உலாவுகிறேன். எனக்கொரு கவிதை எழுதக்கூட மனம் வருகிறது. இது நேற்று நள்ளிரவு ஞாபகத்திற்கு வந்த கருப்பொருளாகும்.

"உலகம் உறங்கிய பின்

விழிப்புடனிருக்கிறேன்.

உலகமே விழித்தவுடன்

நித்திரையில் விழுகிறேன்"

இதில் இரண்டாவது வரி குறித்து எனக்குள் திருப்தியில்லை. அதனால் கவிதையின் அடுத்து வரும் கருத்துக்களை ஒழுங்குபடுத்தி எழுதுவதற்கும் எனது மனதைச் சரிபடுத்திக் கொள்ள முடியவில்லை. நான் மீண்டும் ஒழுங்குபடுத்திக் கொள்ள முனைகிறேன். இது ஒரு கஷ்டமான காரியமல்ல. கண்டிப்பாகக்



படிப்பகம்

www.padippakam.com

கவர்ச்சியானதொரு பயிற்சியாகும்.

"உலகமே உறங்கும் போது
விழிப்புடன் இருக்கிறேன்
உலகின் விழிகளின் நடுவே
நித்திரை உலகில் வாழ்கிறேன்.

இந்த இரு வரிகள் குறித்து எனது மனதுக்குள் எதுவித விருப்பும் இல்லை.

இருப்பினும் நான் அனைத்து உள்ளார்ந்த அச்சங்களையும் சந்தேகங்களையும் மறந்துவிட்டு அவசர கதியில் உண்டான தெம்பான உடம்புடன் முற்றத்தினூடே அங்குமிங்கும் நடக்கிறேன்.

பிரையனுடன் நான் லேடிரிஜ்வே வைத்திய சாலைக்குச் சென்றேன். அவர் தொடர்ந்து பி.பி.சீ செய்திகள் பற்றிக் கூறுகின்றார். மரணம் மற்றும் அழிவுகள் பற்றி அவர் கூறும் எதுவும் என்னுள் துன்பத்தையோ அன்றி மகிழ்ச்சியையோ ஏற்படுத்தவில்லை. எனக்கு முக்கியம் அவரது குரலின் ஆதரவான தன்மை தான். நான் மீண்டும் மீண்டும் பின்புற ஆசனத்தில் மாலா அக்காவின் மடியில் செயலற்றுக்கிடக்கும் சிறியாவதியைப் பார்க்கின்றேன். அவளுக்கு இருக்கும் நோய் எதுவென்று யாருக்குமே கூற முடியவில்லை. அதிகமாகக் காய்ச்சல் இருப்பது மட்டும் தெரிகிறது. அவள் வாயையும் விழிகளையும் மூடியபடி மயக்கமுற்றவளாக இருக்கின்றாள். ஒன்பது வயதுக்குரிய தோற்றமிருக்கும்.

வைத்தியசாலை கேட்டருகே எமக்குக் கெட்ட விதமான செய்தியொன்று கிடைத்தது. அவ்விடத்தில் இரு இராணுவச் சிப்பாய்கள் இருந்தனர். மதிலில் ஒட்டப்பட்டிருந்த அறிவித்தல் இரண்டினை நாம் வாசித்தோம். அவை பாதி கிழிக்கப்பட்டிருப்பினும் சில வார்த்தை வரிகள் எம்மால் வாசிக்க முடியுமாக இருந்தன.

'...மரணம் ... வேலைக்கு ... மரணம்!'

நாம் சென்ற வார்ட்டில் ஒரு வைத்தியரும் வயதான ஒரு பணிப்பெண்ணும் இருந்தனர்.

'வேண்டுமானால் நிறுத்தி விட்டுப் போங்கள் - மிகவும் மோசமான நோயாளிகளை மட்டுமே நாம் பார்க்கிறோம் - யாரும் வேலைக்கு வரவில்லை!'

நாம் எதுவும் பேசவில்லை. இவ்வாறான அச்சுறுத்தல்களுக்கு மத்தியில் பணிபுரியும் இந்த இருவர் பற்றி எமது இதயங்கள் கடமைப்பட்டிருக்கின்றன. நாம் ஒருவரையொருவர் முகம் பார்த்துக் கொள்கிறோம். தெளிவான எந்தவோர் உணர்வும் அவர்களது முகங்களிலே இல்லை. ஒரு கட்டிலின் மீது கட்டில் விரிப்பொன்று இருக்கிறது. அது முழுவதுமாக ஈக்கள் அங்கும் இங்கும் உலாவுகின்றன. தலையணை போன்று ஏதாவது சிறியதொன்று அதனுள் இருப்பதாக எண்ண முடியும். பிரையன் அந்த விரிப்பைத் தூக்கிப் பார்க்கிறார். அரைவாசி கரைந்து போன நிலையில் ஒரு குழந்தை பிறந்து அதிக நேரமிருக்காது. வைத்தியரும் பணிப்பெண்ணும் எம்மைப் பார்ப்பது கிடையாது. குழந்தைகளை வைத்துக் கொண்டு பல தாய்மார்கள் கட்டில்களின் மீது உள்ளனர். அனைவரும் செய்வதறியாது அமைதியாகவே இருக்கின்றனர். இரு குழந்தைகள் ஒரே நேரத்தில் அழ ஆரம்பிக்கின்றன.

பிரையன் மாலாக்காவுக்குச் சைகை செய்கிறார். மாலா மீண்டும் சிறியாவதியைத் தூக்கிக் கொள்கிறார். நாம் வைத்தியசாலையை விட்டுப் புறப்படுகிறோம். இவ்வாறான அழிவுகள் ஏற்படும் போது தான் உயிருடன் இதுவரை இருந்தோமா என்பது கூடத் தெரியாத புத்தி மந்தமான சிறியாவதி பற்றி என்ன கதைக்க இருக்கிறது?

இப்போதெனது முயற்சிகள் யாவும் செயலிழந்து போய் விட்டது. வனாத்த முல்லைக்குப் போக வேண்டும் என்று கூறுவதற்கு என் நா வளையவில்லை. நாம் பேசாமல் பயணஞ் செய்தோம். களனிப்பாலத்தின் நடுவே வாகனம் நிறுத்தப்பட்டது. எதுவுமே கூறாமல் பிரையன் போலீஸ் அனுமதிப் பத்திரத்தைக் காட்டுகிறார்.

'ஏன் பிள்ளையை பாரமெடுக்கவில்லையா?' மிலிட்டரிப் பொலிஸ் உத்தியோகத்தர் ஒருவர் வாகனத்திற்குள் எட்டிப் பார்த்தவாறே கேட்கிறார். பிரையன் எதுவுமே கூறவில்லை.

நாம் வத்தளைச் சந்தியூடாக எலகந்தைப் பக்கமாகப் பயணஞ் செய்து கொண்டிருக்கிறோம். ஊரடங்குச் சட்டம் இருந்தாலும், இங்கே பாதைகளில் அதிகம் பேர் இருந்தனர். அவர்கள் மிகுந்த அச்சத்துடன் மெதுவாக வாகனத்தைப் பார்க்கின்றனர். பெண்களோ குழந்தைகளோ எவருமே பாதைகளில் இல்லை.

'நாம் தனியார் டிஸ்பென்சரிக்குப் போவோமா?'

'எல்லாம் மூடி!'

பிரையனின் குரலில் எதுவித ஈரமும் இல்லை. தொண்டை வரண்டு போனது போல் அவர் இருமுகிறார்.

'டொக்டர் ஜயசிங்காவின் வீட்டுக்குப் போவோம்'

அவர் வாகனத்தைத் திருப்புகிறார். டொக்டர் மிஸிஸ் ஜயசிங்காவின் இரண்டு மாடி வீட்டின் முன் முற்றத்தில் வாகனம் நிறுத்தப்படுகிறது. பிரமாண்டமான அல்சேஷன் நாயொன்று குரைத்துக் கொண்டே பாய்ந்து வருகிறது. நாம் வாகனத்தின் ஜன்னல் கதவுகளை மூடிக் கொள்கிறோம். மேல்மாடியின் ஜன்னலொன்று திறக்கப்படுகிறது. யாரோ எட்டிப் பார்த்து விட்டுக் காணாமல் போகிறார். அடுத்ததாக மிஸிஸ் ஜயசிங்க் முகத்தை வெளிக்காட்டுகிறார்.

'விஸ்கி - விஸ்கி' நாயைக் கூப்பிடுகிறார்.

சற்று நேரத்திற்குப் பின்னர் கீழ்த்தளத்தின் கதவு திறக்கப்படுகிறது. நாய் உள்ளே செல்கிறது. அவர் கையை ஆட்டுகிறார்.

நாம் சிறியாவதியையும் தூக்கிக் கொண்டு உள்ளே செல்கிறோம். அவர் கதவை மூடி விடுகிறார்.

'பிள்ளைக்கு என்ன?'

பிரையன் பேசவில்லை.

'அந்தக் கவிச்சியில் பிள்ளையை வையுங்கள்'

அவர் பேசுவது ரகசியக் குரலில். வெளியே யாருக்காவது கேட்கக் கூடும் என்ற பயத்தினால் போன்று.

'இந்தப் பிள்ளைக்குக் கடந்த சில காலமாக வலிப்பு'

அவர் கைகளால் சைகை செய்துவிட்டு மாலாக்காவுடன் பிள்ளையையும் எடுத்துக் கொண்டு



படிப்பகம்

www.padippakam.com

அறையினுள் செல்கின்றார்.

நாம் நின்று கொண்டே இருக்கிறோம். செய்வதறியாத சந்தர்ப்பமொன்றைக் கடத்துவதைப் போன்று பிரையன் சுவரில் தொங்க விடப்பட்டிருக்கும் ஓர் ஓவியத்தைப் பார்த்துக் கொண்டிருக்கிறார். மோனாலீஸா வழக்கமான, புரிந்து கொள்ள முடியாத பார்வையினால் பிரையனையோ என்னையோ பார்த்துக் கொண்டிருக்கிறார். எத்தனை நூற்றாண்டு காலமாக அவர் பல்வேறு நிகழ்வுகளை இந்தப் பார்வையால் பார்த்துக் கொண்டிருக்கிறார் இல்லையா? தன்னை ஓவியமாக்கிய டாவின்சியைப் பார்த்துக் கொண்டிருந்ததுவும் இந்தக் கேலிச் சிரிப்பலைகளை முகத்தில் தேக்கிக் கொண்டுதான்!

மாலக்கா குழந்தையைத் தூக்கிக் கொண்டு வருகிறாள். நாம் மிஸிஸ் ஜயசிங்கவைப் பார்க்கின்றோம்.

"இன்ஜெக்சன் ஒன்று கொடுத்துள்ளேன். - நான் நினைக்கவில்லை..." அவர் ரகசிய சுபாவத்துடன் கூறுகிறார். புலப்படாத அனைத்து அச்சுறுத்தல்களும் அவரது கண்களில் குறிக்கப்பட்டிருக்கின்றன.

பிரையன் 'பர்சை' எடுக்கிறார். மிஸிஸ் ஜயசிங்க கைகளை அசைத்து அதை நிராகரிக்கிறார் கதவின் பக்கமாகச் செல்கிறார். அவருக்குச் செய்ய வேண்டிய அனைத்தும் செய்யப்பட்டுள்ளன. இவ்வாறான வேளையில் நாம் உடனடியாகக் கிளம்பிப் போகவேண்டும். அவரைப் பாதுகாக்க எம்மால் முடியாது.

நாம் மௌனமாகவே பயணிக்கின்றோம். வேலைக்காரியோ யாரோ மேல்மாடியின் ஜன்னலூடே பார்த்துக் கொண்டிருக்கிறாள். அவளது முகத்தில் உளவு பார்க்கின்ற ஒருவரது ரகஸியப் பார்வை தென்படுகிறது. பள்ளியாவத்தையினூடாகச் செல்லும்போது, கடற்கரையில் பாரிய சனக் கூட்டமொன்று கூடி நிற்பது தெரிகிறது.

பிரையன் வாகனத்தை நிறுத்திப் பார்த்துக் கொண்டிருக்கிறார். அங்கு எமக்குத் தெரிந்த மீனவர்கள் பலர் இருக்கின்றனர்.

நானும் வாகனத்திலிருந்து இறங்கி பிரையன் பின்னால் செல்கிறேன். தலை இல்லாத மனிதச் சடலங்கள் சில கரையொதுங்கிக் கிடக்கின்றன. களனி கங்கையினூடாக வரும் மனிதச் சடலங்கள் கரையொதுங்குவது இங்குதான். சடலங்களைப் பார்க்காமல் இருப்பதற்கு நான் முயற்சிக்கின்றேன். ஒரு சிலர் பிரையனுடன் உரையாடுகின்றனர்.

முரட்டுத் தோற்றமுள்ள மனிதனொருவன் என்னை நோக்கி வருகிறான். எனக்கு அவனது நையாண்டிப் பார்வை பழக்கமானது. எனது உத்தியோகபூர்வ வாகனம் வரும்பொழுது பாதையில் இருந்தால் வேறு நாட்களின போது எனக்கு சிரிப்பின் மூலம் உபசரிப்பான். இன்று அவன் என்னை நையாண்டிப் பார்வை பார்த்துக் கொண்டு இருண்ட முகத்துடன் என்னைத் தாண்டிச் செல்கிறான். என்னைத் தாண்டியவுடன் 'த்தூ' என்று காறித் துப்புகிறான். என் பக்கம் சற்றுத் திரும்பிப் பார்க்கிறான்!

"உம்முடையவர்களது அரசு செய்கின்ற காரியம்!"

என்னைப் புறக்கணித்துப் போகின்ற அவனை நான் பார்க்கிறேன். எனது உடம்பு முழுதும் சிலிர்த்துவிட்டது.

பிரையன் திரும்பி வருவதற்கும் முன்பே நான் கரையோரமாக நடந்து வாகனத்தருகே செல்கிறேன். பின்புற ஆசனத்தில் சிறியாவதியை அணைத்துக் கொண்டிருந்த மாலாக்காவைக் கூட நான் பார்க்கவில்லை.

"சிறியாவதியின் உடம்பு குளிர்கிறது தொரை!" மாலாக்காவின் குரல் எனக்குப் புற உலகிலிருந்து முணுமுணுக்கும் குரல் போன்றே கேட்கிறது. கடலின் இரைச்சலுக்குக் கூட என் இரு செவிகளும் செவிடாகியுள்ளன. எனது உடம்பு குளிராக இருந்த போதும் செவிகள் இரண்டும் சூடேறி இருப்பதாகப்படுகிறது.

பிரையன் வந்து என்னைக்கூடப் பாராமல் வாகனத்தை உயிர்ப்பிக்கிறார்.

அரசுடன் தொடர்பான ஓர் ஸ்தாபனத்தில் நான் வேலை செய்கிறேன்.

"நான் எப்படி இதற்குப் பதில் சொல்வது?" என்று கூறத் தோன்றுகிறது. அவ்வாறு கூறினால் நான் கூறுவது என்னவென்று பிரையனுக்குப் புரியுமா? அடுத்தது இந்த மனிதர்களைக் கொன்று, கழுத்துகளை வெட்டி ஆற்றில், கடலில் போட்டது யாரென்று உறுதியாக யாருக்குத்தான் கூற முடியும்?

வாகனத்திலிருந்து இறங்கி வந்த ஒன்றரைக்கண் மனிதனின் பின் சென்று அவனது கன்னத்தில் அறைய நினைக்கின்றது. நான் கண்களை மூடிக் கொள்கிறேன். உடைந்து சிதைந்து போன பாதையினூடே வாகனம் குலுங்கி - குலுங்கிப் பயணிக்கிறது. பிரையன் வேண்டுமென்றே மேடு பள்ளங்களின் மேல் கவனமின்றி வாகனத்தைச் செலுத்துவதாக எனக்குப் படுகிறது.

நான் மனதைச் சரிப்படுத்திக் கொள்ள முனைகின்றேன்.

"அந்த மனிதன் எனக்கு ஏசியதானது ஏசுவதற்கு வேறு எவரும் இல்லாததால் போலும்! முதலாவது முன்னால் வந்தவரிடம் மன வருத்தத்தையும் வைராக்கியத்தையும் தீர்த்துக் கொண்டான்!"

நான் ஆச்சரியமடைகிறேன். பிரையன் இவ்வாறு கூறுகிறார்.

"நேற்று ஆத்தர் சி. கிளார்க் உரையாற்றினார். இந்தப் பிரிவினைவாத யுத்தத்தை, பயங்கரவாதத்தை விட மிகவும் பயங்கரமானது இந்தக் கடலரிப்பு"" என்று - இன்னும் சில காலத்தில் இந்தப் பாதையும் கடலுக்குள் அரித்துக் கொண்டு போய்விடும். நாட்டில் பாதி கடலுக்குள் புதையுண்டு போகும்! வேனின் ' ஷொக் எப்ஸோபர்' எல்லாம் இறங்கிவிட்டது.

சிறியாவதி பற்றி மாலாக்கா கூறியதைப் பிரையனிடம் கூற எனது நா எழவில்லை. மாலாக்கா தனது மடியில் வைத்துக் கொண்டு வருவது இன்னொரு இறந்த சடலத்தை அல்லவா? நாம் எமது ஒவ்வொருவரினதும் கண்டிப்பான தனிப்பட்ட சிந்தனைகளில் மூழ்கித் திராணியற்ற நிலையில் பயணிக்கின்றோம். கடலுக்குள் அரித்துச் செல்லப்படும் பாதையின் மேடு பள்ளங்களில் மோட்டார் வாகனம் மட்டும் மிகுந்த பலத்துடன், விரைவில் செயலிழந்து விடக்கூடிய ஹிருதயம் போன்று 'கடாஸ்...கடாஸ்...' என்று குலுங்குகிறது.



படிப்பகம்

www.padippakam.com



# மைக்கல் ஓண்டாட்ஜி

கே. எஸ். சிவகுமாரன்



இலங்கையில் பிறந்து, கனேடிய ஆங்கில இலக்கியத்துறைக்கு வளம் சேர்த்து, உலக இலக்கியப் பரிசுகளைப் பெற்று வருபவர் மைக்கல் ஓண்டாட்ஜி (Michael Ondaatje) இவர் ஒல்லாந்து / இந்தியக் கலப்பு வம்சத்தில் உதித்தவர். இவருடைய உடன் பிறப்பாளர் கிறிஸ்தபரும் கனடாவில் வளமான வணிகம் மேற்கொள்ளும் ஒருவர்.

மைக்கல் ஓண்டாட்ஜிக்கு அடுத்தடுத்து இலக்கிய விருதுகளும் பரிசுகளும் அவர் எழுதிய நூல்களுக்காகக் கிடைத்து வருகின்றன. பிரான்ஸ் நாட்டின் பிறி மெடிச்சி (PRE MEDICI) பரிசு மிக அண்மையில் கிடைத்ததொன்று.

இற்றைக்கு 38 வருடங்களுக்கு முன் நமது நாட்டை விட்டகன்று இங்கிலாந்து சென்ற மைக்கல் அதன் பின்னர் கனடாவில் குடிபுகுந்தார். அங்கு லின்டா ஸ்போல்டிங் என்ற மாதை மணம் புரிந்தார். இவர்கள் இருவரும் இப்பொழுது 'பிறிக்' (BRICK) என்ற இலக்கிய ஏட்டை நடத்தி வருகின்றனர். இலக்கியத்தில் முதுமானிப் பட்டம் ஆங்கில இலக்கியத்துறை ஆய்வுகளுக்காக வழங்கப் பட்டது. நெடுங்காலமாகக் கனடாவில் வசித்து வரும் மைக்கல், ரொரோன்ரோ யோர்க் பல்கலைக் கழகத்தில் விரிவுரையாளராகப் பணி புரிகிறார். வட அமெரிக்காவைச் சேர்ந்த உலகப் புகழ் பெற்ற படைப்பாளியாக அவர் கணிக்கப்பட்டு வருகிறார். அமெரிக்காவிலிருந்து வெளி வரும் தரமுயர்ந்த செய்தித்தாளான 'த உவோல் ஸ்ரீற் ஜேர்னல்' (The Wall Street Journal) அவருக்குப் புகழ் மாலை சூட்டியுள்ளது.

இலங்கையில் தலை சிறந்த ஆங்கில எழுத்துக்கு ஆண்டு தோறும் க்ரேஷன் பரிசு (GRATIEN PRIZE) வழங்கப் பட்டு வருகிறது. க்ரேஷன் என்பவர் டச்சு இனத்தைச் சேர்ந்த இலங்கையின் முன்னாள் உயர் நீதியரசரும் மூதவை உறுப்பினருமாவார். "பூக்கர் பரிசை" (BOOKER PRIZE) மற்றொரு எழுத்தாளருடன் பகிர்ந்து கொண்ட மைக்கல் ஒண்டாட்ஜி, தனது பணப்பரிசின் ஒரு தொகையை க்ரேஷன் நம்பிக்கைச் சொத்தாக ஆக்கி, அதிலிருந்து ஆண்டுதோறும் ஈழத்து ஆங்கில மொழி வாயிலான இலக்கியநூல்களுக்குப் பரிசளித்து வருகிறார்.

இந்த 'க்ரேஷன் பரிசை' வழங்குவதற்கான அங்குரார்ப்பண வைபவத்திற்கு மைக்கல் ஒண்டாட்ஜி கொழும்பு வந்திருந்தார். அவ்வைபவத்தில் உரையும் ஆற்றினார். அச்சமயம் அவரிடம் சென்று எனது 'Aspects of Culture in Sri Lanka' என்ற நூலை அன்பளிப்புச் செய்து சிறிது நேரம் உரையாடும் பெருமை கிடைத்தது.

மைக்கல் ஒண்டாட்ஜியின் தாராளத்தன்மை மெச்சத் தக்கது. பிரித்தானிய பொதுநல அமைப்பு நாடுகளிடையே அதியுயர்ந்த இலக்கியப் பரிசுத் திட்டம் 'பூக்கர் பரிசு' ஆகும். இந்தப் பரிசைப் பெற்றுள்ள மைக்கல், கனடாவிலும் பல பரிசுகளைப் பெற்றுள்ளார். அவற்றுள் சில: 'கிரிவிம பசிபிக் றிம் புக் பிரைஸ்' (KIRIVIMA PACIFIC RIM BOOK PRIZE) ஜிலர் பரிசு (GILLER PRIZE).

'தி இங்லிஷ் பேஷன்ட்' (The english Patient) என்ற நாவல் திரைப்பட வடிவமாகவும் வெளிவந்து ஒஸ்கார் (OSCAR) விருதுகளைப் பெற்றது. இவருடைய மற்றொரு நாவலான 'அனில்ஸ் கோஸ்ட்' (ANIL'S GHOST) உலகெங்கும் அதிக விற்பனையாகும் நாவல்களாகும்.

மைக்கல் ஒண்டாட்ஜி வெறுமனே நாவலாசிரியர் மாத்திரமல்லர். கவிஞர், திறனாய்வாளர், இலக்கிய ஏட்டின் ஆசிரியர், திரைப்பட நெறியாளருங் கூட. தனது பெற்றோர், பேரன் / பேத்தி போன்றோரின் சரிதத்தை, 'ரன்னிங் இன் த ஃபெமிலி' (Running in the family) என்ற நினைவாக்கமாக தந்துள்ளார் மைக்கல். 1982 ல் இந்த நூல் வெளியாகியது. தனது ஈழத்து வேர்களை இனங் கண்டு மைக்கல் ஒண்டாட்ஜி இந்த நூலை எழுதினார்.

'ஒரே பந்தியிலேயே, ஒண்டாட்ஜியும் அவருடைய கற்பனை வளமும் கண்டங்களைக் கடந்து சென்று விடும்' என ஒரு திறனாய்வாளர் மைக்கலின் எழுத்து வன்மையை குறிப்பிடுவதற்காக அவ்வாறு வருணித்தார். இன்னொருவர் விபரிக்கிறார்.

'ஜேஸ் ஒத்திசைகள், திரைப்பட 'மொன்டாஜ்' உத்தி, மிக ஆழமான அழகு மொழி வளம் ஆகியனவற்றின் வியத்தகு சேர்க்கையே மைக்கலின் எழுத்து நடை'.

'ஆசியப் பாரம்பரியத்தை இறுகத் தழுவி 'ஜிட்பேர்க்' பங்காளியாக அவர் எடுத்துச் சுழல்கிறது' என்கிறார் மற்றொரு திறனாய்வாளர்.

ஆயினும் சமூக யதார்த்த நாவல்களை விரும்பிப் படிக்கப் பழகிக் கொண்ட வாசகனாகிய எனக்கு, மைக்கல் ஒண்டாட்ஜியின் புனைகதைகள் தூரவிலகிச் செல்லும் பிரமையை உண்டு பண்ணுகிறது. மேனாட்டுச் சந்தைக்காக, அந்நிய விநோதக் கதைகளைச் சில ஆசிய எழுத்தாளர்கள் எழுதுகிறார்களோ என்று எண்ணத் தோன்றுகிறது. இவ்வாறு கூறுவதனால், அற்புதமான எழுத்தாளரான மைக்கல் ஒண்டாட்ஜியின் தகைமையை நான் கேள்விக் குறியாக்குகிறேன் என்றில்லை. அவருடைய கவிதைகள் அழகு மிகு சொல்லோவியங்கள்.

தற்சமயம் ஷியாம் செல்வதுரை, ரொமேஷ் குணசேகர, ஏ. சிவாநந்தன், யஸ்மீன் குணரத்ன, கொலின் சில்வா போன்ற இலங்கையர் ஆங்கில இலக்கியத்தில் சில அவதானிப்புக்களைப் பெற்றுள்ளனர். அவர்களுள் மைக்கல் ஒண்டாட்ஜி மிக முக்கியமானவர். இலங்கையில் பிறந்தாலும் அவர் குடிபுகுந்த நாடான கனடாவுக்கே அவர் பங்களிப்பு பெருமை தருகிறது. கனேடிய ஆங்கில இலக்கியம் குறிப்பிடத்தக்க வளர்ச்சியைப் பெற்றுள்ளது.



படிப்பகம்

www.padippakam.com

தேவைகளைத் தீர்க்கும்
திறமை யிருப்பவர்கள்
ஆவலினை அடக்கி நிற்கும்
அறிவிலிகள் புதுமை தேடும்
காவலுக்குள் அகப்பட்டுக்
காலம் வீணாய்க்கரையும்
நோவினைகள் செய்ய
நுளைந்திடுதல் காண்கின்றோம்!

ஏது இது புதுமையென
ஏமாந்த சோனகிரிப்
பாதுகாவல் தேடு மொரு
பழையமுறை இன்றிதற்குச்
சூதுவாதுள்ள உலகில் இருப்பதற்குச்
சொந்தமாய் ஒருமறைவிடத்தைத்

தோதுக்காய் ஆக்கித்தொடர்தல்
துணையாகும் என் றோதுகிறார்!
வாய்ப்பந்தல் ஜீவிதத்தின்
வழிமுறைக்குத் தற்காலிகமாய்
ஓய்வெடுக்க உதவுமொரு
உத்தி இது இன்று
நோய்வாய்ப் பட்டிருக்கும்
நமது போர்ச் சூழலுக்கும்
நாய்வால் நிமிர்த்துகின்ற
நாட்டின் மற்றவர்க்கும் பொருந்தும்!

ஆமைகளும் ஊமைகளும்
அடர்ந்து நிற்கும் புதரிலுள்ள
தீமைகளை யணுகாது
திறமையுள்ள காரியங்கள்

# ஆக்கிரமிப்பு



கவிஞர் ஏ. இக்பால்

நாமமிட்டுச் செயல்புரிந்து
நாட்டு மக்கள் வரிப்பணத்தைத்
நாமெடுத்து அநுபவிக்கும்
தறுதலைகள் ஒழிப்பதெப்போ!
ஒரு கால ஆட்சிக்குள்
உட்புகுந்து திறமையற்றுக்
கருங்காலிக் கம்புகளாய்க்
காடேறி நிற்பவர்கள்
திருந்தாத பேர்வழிகள்
திருத்துதற்குச் செயல்முறையில்

விரும்பாது விட்டுவிட்டால்
வீணாகும் நம் நிதியம்!

ஆக்கிரமிப்பு எப்போதோ
அணுகிவிட்ட போதிலும்
நீக்கிவிட எத்தனிப்போர்
நேரெதிராய் நிற்பதினால்
ஊக்குவித்து அவர் செயல்கள்
ஊறவிட்ட போதினிலும்
வாக்கு நிறைவேறவில்லை
வாட்டமுற்று விழிபிதுங்கும்!



படிப்பகம்

www.padippakam.com

# முணுமுணுப்பு எம்மை எழுதத் தூண்டியது

*ஏ.பி.வி. கோமஸ்*

நல்ல நண்பன் மேமன் கவியின் "ஒரு பிரதியின் முணுமுணு"த்தலைத் தொடர்ந்து வாசித்து வரும் நேயர்களில் நான் ஒருவன். அதிலுள்ள அடிப்படையான விடயம் என்றோ முளைத்த ஒரு விடயம் தான்-'மரபுக்கவிதையா? புதுக்கவிதையா? முடிவு காண முடியாத பிரச்சினைதான். எனில், எம் மனதில் பட்டதை எழுத எண்ணினோம். சரியோ பிழையோ யாமறியோம். ஏனெனில் மாற்றுக் கருத்துக்கள் இருப்பதால் தானே இப்பிரச்சனை முடியாமல் தொடர்கிறது.

நானும் ஏதோ 'கவிஞன்' என்று பெயர் பெற்றவன். தினபதியின் 'தினமொரு கவிதை' பகுதிக்குக் கவிஞர்களின் கவிதைகளை சிபாரிசு செய்யும் கவிஞர்களின் பட்டியலில் பெயர் பதித்திருந்தனர். மேலும், யாப்பிலக்கணம் கற்றுள்ளோம். ஆங்கிலத்திலும் PROSODY - யாப்பிலக்கணம் படித்துள்ளோம்.

எனவே, எமக்கும் இப் பிரச்சனை பற்றி எழுத ஏதோ அறிவும் தகுதியும் உண்டு என்று எண்ணுகின்றோம்.

ஆம். 'மரபு' என்றால் என்ன என்பதில் பிரச்சனையே இல்லை. தொன்று தொட்டு வழங்கி வருவது என்கின்றனர். சரி, கவிதை இலக்கணம் அதாவது செய்யுள் இலக்கணம், எனில் யாப்பிலக்கணம் தொன்று தொட்டு வழங்கி வருவது என்பர். மேலும், இதை மீறக்கூடாது என்பர். அவ்வாறெனில் ஏன் 'பழையன கழிதலும் புதியன புகுதலும் வழுவல அல்லது குற்றமில்லை என்றனர். மீறலாம் என்பதுதானே கருத்து.

முதலில் இலக்கணம் இருந்தால் தான் அதற்கு இலக்கணம், அதாவது சில சட்டங்கள் எழுதலாம். எனவே இலக்கியம் முதல் அதன் வழி வந்ததே இலக்கணம். இவ்வாறு இலக்கணம் எழுதிய பிறகு அதன் வழி எழுத, பேச வழி கொள்கிறார்கள். எனவே 'கவிதையை' பொறுத்த அளவில் முதலில் செய்யுள் இலக்கணம்தான் இருந்திருக்க வேண்டும்.

ஆம், முதலில் 'செய்யுள்' என்னும் கவிதை எழுதினர். அந்தச் செய்யுளுக்கு இலக்கணம் எழுதியபின் அந்த இலக்கணத்தின் அடிப்படையில் செய்யுள்கள் சமைத்தனர். இவ்வாறு யாத்த காரணத்தால் 'யாப்பிலக்கணம்' உருவாகியிருக்க வேண்டும். 'செய்யுள் யாத்தல்' என்னும் 'கவிதை யாத்தல்' என்றே கூறி வந்தனர்.

குறில் நெடில் எழுத்துகள் இவ்வாறு ஓசைபடும் பொழுது அசையாகும் என்றும், இத்தனை அசை சீராகும் என்றும், இத்தனை சீர் அடியாகும் என்றும் விரித்தனர்.

ஏன்? எழுத்து எண்ணி அமைக்கின்ற செய்யுள் கூட இருக்கிறதே. உதாரணத்துக்கு ஒன்று காண்போமா?

கட்டளைக் - கலிப்பா: தேமா, புளிமா என்னும் மாச்சிரை முதற்சீராக உடைய நாற்சீரடி, முதலசை நேரசையாயின் அதாவது தேமாவாயின் - பதினோரெழுத்தும் பெற்று, இது ஓர் அரையடியாய், இத்தகைய அரையடி இரண்டு கொண்ட அடி நான்கு வருவன கட்டளை கலிப்பா எனப்படும். எழுத்தெண்ணும் போது ஒன்று நீக்கி எண்ண வேண்டும். இது கட்டளை கலித்துறைக்கு ஒக்கும் எழுத்து எண்ணிப் பாடுவதால் இது இப்பெயர் பெற்றது என்பர். கட்டளை - அளவு

இதோ அச்செய்யுளடி சூத்திரம்

'மாச்சீர் முதல நாற்சீரடியே
நேர் பதினொன்றாய நிரை பன்னிரண்டாய்
எழுத்துடை யரையடி யிணைந்தடி நான்கு
கவினுரு வருவது கட்டளைக் கலியே'

ஆம். இவையெல்லாம் அவசியமா, தேவைதானா என்று தான் புதுக்கவிதையினர் வினவுகின்றனர். நாம் ஒன்றும் சொல்ல விரும்பவில்லை.

ஆனால், மரபு இலக்கணம் என்பதெல்லாம் ஒரு சடடம்: கட்டாயம் கடைப்பிடிக்க வேண்டுமெனில் கடைப்பிடியுங்கள். வேண்டாம் எனில் விட்டுத் தள்ளுங்கள்.-மீறுங்கள்.

இன்று வசன நடை இலக்கணத்திலும் மீறப்படுவதைத் தாராளமாய் காண்கிறோம். நாம் அவதானிக்கின்ற ஒன்று, எம் ஆங்கில வகுப்புக்கு வரும் மாணவர்கள், நூற்றுக்கு நூறு என்றே கூறலாம். 'நாளைக்கு வர்ரன்' என்று, நாளைக்கு வருகிறேன் என்ற கருத்தில் சொல்லுகின்றனர். எதிர்காலத்துடன் எப்படி நிகழ்காலம் வரும். எனவே, மரபை மீறவில்லையா? என்ற கேள்வி எழுகிறதில்லையா?

ஆக, பேச்சுத் தமிழுக்கும் புதியதோர் இலக்கணம் தேவைபோல் தெரிகிறது.

பழங்காலத்தில் செய்யுளாய் இருந்த பொழுதும், பிற்காலத்தில் கவிதையாய் இருந்த பொழுதும் - 'ஆசை' அடிநாதமாய் இருந்தது என்பது எமது தாழ்மையான எண்ணம். புதுக் கவிதைக்கு இது தேவையில்லை என்று எண்ணுவதுபோல் விளங்குகிறது.

ஆனால், புதுக்கவிதைக்கு இலக்கணம் எழுத எத்தனை ஆண்டுகள் கழிய வேண்டுமோ நாமறியோம்.

எது எவ்வாறிருப்பினும் 'இலக்கியம்' படையுங்கள். அது மக்களுக்காக அமையட்டும். ●



படிப்பகம்

www.padippakam.com

# தொண்ணூறுகளில் நாடகம்
## யாழ்ப்பாண அரங்கநிலை நீண்ட பார்வை

— பா. இரகுவரன்

தொண்ணூறுகளில் தீவிரப்பட்ட போரின் விளைவாக அரசியலில் ஏற்பட்ட தாக்கங்கள், மாற்றங்கள், மக்களின் அவலங்கள் என்பவற்றினூடாக நிஜத்தை எதிர்கொள்ளும் போக்கும், தமிழ்த் தேசியத்தின் அடிப்படையிலான பண்பாட்டுத் தேடுதலும் தொண்ணூறுகளின் அரங்கில் முனைப்பாக வெளிப்பட்டது.

போரையும் அதன் விளைவுகளையும் அதன் நிஜத் தன்மையுடன் எதிர் கொள்ள முற்பட்டபோது 80களில் இருந்ததைவிட தொண்ணூறுகளில் நாடகம் அதிக யதார்த்தத் தன்மையை நோக்கிச் செல்ல வேண்டியிருந்தது.

அதே வேளை, ஒடுக்கப்பட்ட மக்களின் உணர்வுகள் வெளிக்கிளம்பும்போது அட்டகாசமான முறையில் தான் வெளிப்படும் என்ற நிலைப்பாட்டிலும் அரங்கச் செயற்பாடுகள் தீவிரமாக நடந்தேறின.

உள்ளடக்கத்தைப் பொறுத்தவரையில் யதார்த்தமாகவே இருக்க உருவத்தைப் பொறுத்தவரையில் யதார்த்தத்திற்கும் மோடியுற்ற தன்மைக்கும் இடையில் ஊசலாடியும் நின்று இறுதியில் சீரமைக்கப்பட்ட யதார்த்த நாடகங்களாகப் பலரால் முன்னெடுக்கப்பட்டும் சென்றது.

80 களில் பிரதான நாடக ஆசிரியராக முகிழ்ந்த குழந்தை ம. சண்முகலிங்கமும், நெறியாளராகத் தடம் பதித்துக் கொண்ட க. சிதம்பரநாதனும் 80 களின் அரங்கை மிகைப்படுத்திய அசைவுகளை வேண்டி நிற்கும் மோடியுற்ற அரங்காக வளர்த்தெடுத்து நவீன நாடகத்தின் வடிவமாக்கியிருந்தனர். மேற்படி போக்கு 90 களில் இந்த இருவருக்குள்ளேயே இரு கிளைப்பட்டுச் சென்றமை முக்கியமானதொன்றாகும். குழந்தை.ம.சண்முகலிங்கம் உருவ ரீதியிலும் யதார்த்தத் தன்மையை நோக்கி நகரத் தொடங்க, க.சிதம்பரநாதன் மேலும் கூடுதலான உடல் அசைவுகள், குறியீட்டுத் தன்மைகள் என்பவற்றுடன் செயற்பட்டார்.

தொண்ணூறுகளின் முற்பகுதியில் சி.ஜெய்சங்கரின் நாடக முயற்சிகள், கடும் விமர்சனங்கள் என்பன யாழ்ப்பாண நாடகத்துறையை அழுத்தமான செயற்பாடுகளுக்குத் தள்ளிச் சென்றது.

தொண்ணூறுகளில் உருவான அரசியல் அரங்கப் போக்கு மக்களிடத்தில் அதிகளவு கொண்டு செல்லப்பட்டு புரிந்து கொள்ளப்பட வேண்டிய தேவையை வலியுறுத்தி எளிமையான யதார்த்த வடிவத்தின் அவசியம் பற்றிப் பேசிய சி.ஜெய்சங்கர் பல்கலைக்கழகத்தில்-கன்னீன்- நாடகம் மூலமாக தமது உருவ ரீதியான நிலைப்பாட்டை ஆற்றுகையாகச் செயற்படுத்திக் காட்டினார்.

குழந்தை.ம.சண்முகலிங்கம், க. சிதம்பரநாதன், சி.ஜெய்சங்கர் ஆகியோரின் மும்முனைப்பட்ட நாடகச் செயற்பாடுகள் பல்கலைக்கழகம், பாடசாலைகள், தனியார் நாடக நிறுவனங்கள் என விரிந்து நின்றன.

இவ்வேளை தொண்ணூறுகளின் முற்பாதியில் கலை பண்பாட்டுக் கழகத்தினரின் அரசியற் பிரச்சனைகளை முதன்மைப்படுத்திய நாடகங்கள் மக்கள் மத்தியில் அதிகளவு கொண்டு செல்லப்பட்டு பிரச்சார ரீதியாக அதிக அளவில் மக்களால் ஈர்க்கப்பட்டு இருந்தன.

80 களில் குழந்தை.ம. சண்முகலிங்கத்தின் பாடசாலை நாடகங்களையும், சிறுவர் நாடகங்களையும் மேடையேற்றிக் கொண்டிருந்த சி.ஜெய்சங்கரின் கருத்து நிலைமாற்றம் தொண்ணூறுகளில் ம. நிலாந்தனின் அகதிகளின் கதை, யுத்தத்தின் நாட்கள் போன்ற நாடகங்களை சீரமைக்கப்பட்ட யதார்த்தவகை நாடகமாக நெறியாள்கை செய்யத் தூண்டியது. அடுத்த கட்டமாக சி.ஜெய்சங்கரின் தீ சுமந்தோர் நாடகமும் சிறப்பான முறையில் அரசியல் மாற்றங்கள், இராணுவ ஒடுக்க முறைகள் என்பவற்றை ஒரு குடும்பத்தில் ஏற்படுத்தும் அவலம் மூலமாக சித்திரித்துக் காட்டினார்.

தென்கிழக்காசியச் சுற்றுப்பயணத்தை ஆசியாவின் ஓலம் என்ற நாடக அனுபவங்களுடன் முடித்துக் கொண்டு திரும்பிய க. சிதம்பரநாதன் அகஸ்தா லோலாவின் செல்வாக்குக்கு உட்பட்ட நிலையில் தீவிரமான நாடக செயற்பாடுகளில் ஈடுபட்டார். பெருங் காட்சிகள், படிமங்கள், குறியீடுகள், கூடமேகங்கள் என மிகைப்படுத்தப்பட்ட உடல் அசைவுகள், இசை என்பன அட்டகாசமான வெளிப்பாடுகள் நிறைந்த உயிர்த்த மனிதர் கூத்து, பொய்க்கால், மாற்றம் போன்ற முக்கிய நாடகங்களை நெறிப்படுத்தினார்.

க.சிதம்பரநாதன் படச்சட்ட மேடையை நிராகரிக்கும் பண்புடன், விவாத அரங்குக்கான ஆரம்ப நிலையுடன் தனது நாடகங்களூடாகப் பார்வையாளர்களுடன் கருத்துக்களைக் கதைத்துப் பரிமாறி வலிமையான தொடர்பை ஏற்படுத்த முயன்று கொண்டிருந்தார். எமக்குத் தேவைப்படும் அரங்கு இவரின் ஆய்வுப் பொருளாகியது.



படிப்பகம்

www.padippakam.com

இவரது நாடகங்கள் கலந்து பேசி நிகழ்த்திப் பார்த்து புத்தளிப்பு முறையில் உருவாக்கப்பட்டன. கவிஞர்.க.முருகையனால் நாடகம் பிரதி வடிவம் பெற்றது. க.சிதம்பரநாதன் 80 களிலும் சரி, தொண்ணூறுகளிலும் சரி எமது அரங்கிற்குப் புதிய அரங்க முயற்சிகளை தனது நெறியாள்கை மூலம் வழங்கியிருந்தார்.

இவ்வேளை குழந்தை.ம. சண்முகலிங்கத்தின் எந்தையும் தாயும் நாடகம் நாற்சார் வீட்டு அரங்காக மிகுந்த தாக்க வலிமையுடன் நிகழ்த்தப்பட்டது. தனித்து விடப்பட்ட வயதான பெற்றோர்களின் பாடுகளின் ஊடாக சமகாலப் பிரச்சனையை சித்திரித்தது. நாற்சார் வீட்டு அரங்க முயற்சி எமக்குப் புதியதொரு அனுபவமாக மட்டுமன்றி, நடிகர், பார்வையாளருக்கிடையிலான அன்னியோன்னியம் மிக வலுவாக இருந்தது. பிரான்சிஸ் ஜெனத்தின் அற்புதமான நடிப்பும் எந்தையும் தாயும் நாடக வெற்றிக்கு காரணமாக இருந்தது.

குழந்தை.ம. சண்முகலிங்கம் அன்னை இட்ட தீ என்ற நாடகத்தின் மூலம் பிணி நீக்கல் அரங்குக்கான ஆரம்ப முயற்சியினைத் தோற்றுவித்தார். யுத்த சூழ்நிலையால் மக்களுக்கு ஏற்படக் கூடிய உள நெருக்கீடுகளை இந்நாடகம் கலைத்துவத்துடன் பேசி விழிப்புணர்வையும் ஏற்படுத்தியது.

தொண்ணூறுகளில் க.சிதம்பரநாதனின் நாடகங்களினூடாக நல்ல நடிகனாக அறிமுகமான க.ரதிதரன், பின்னர் வித்தியாசமான நாடகங்களை தயாரித்து நெறிப்படுத்தினார்.

உயிர் இயந்திரம் (சைக்கிள்) நாடக மூலம் யாழ்ப்பாணத்தின் ஒடிந்து போன மக்களின் வாழ்வை அற்புதமாக வெளிப்படுத்தியிருந்தார்.

க.ரதிதரனின் அண்டவெளி என்னும் நாடகம் பெரு வெளி அரங்க முயற்சியாக யாழ் பல்கலைக்கழக மைதானத்தையும் கட்டிடங்களையும் அரங்காகக் கொண்டு நிகழ்த்தப்பட்ட புதிய முயற்சியாகும். முடிவிலா அண்ட வெளியில் மனிதனுக்கான இடம் மிகச் சிறு புள்ளி. அவனோ பெரிதாக நினைத்துத் தம்முள் முரண்படும் அவலத்தைச் சித்திரித்திருந்தார். இவரின் மலநீக்கம், பொங்கொலி நகர் நாடகங்களும் குறிப்பிடக் கூடியவை. மலநீக்கம் யாழ் பல்கலைக்கழகத்தால் தடை செய்யப்பட்ட நாடகமாகும். துண்டு துண்டான சிறு காட்சிகளூடாக நாடகத்தை முழுமையை நோக்கி நகர்த்தும் பாங்கு இவரிடம் அலாதியாக வெளிப்பட்டது.

இவ்வேளை திருமறைக் கலாமன்றத்தினரின் பல்வேறுபட்ட நாடக முயற்சிகளும் முக்கியத்துவம் பெற்றிருந்தன. கொழும்பு, ஐரோப்பிய நாடுகள் என பிற இடங்களிலும் இவர்களது நாடகங்கள், நாட்டுக்கூத்து, இசைநாடகம், நவீன நாடகங்களாக அரங்கேறின. இவர்கள் நடத்திய நாடக அரங்கியற் கண்காட்சி மிகவும் பயனுள்ள முயற்சியாகும். ஆற்றுகை என்ற நாடக சஞ்சிகையும் மிகக் காத்திரமாக வெளிக் கொணரப்படுகிறது.

கரும்புலி தின நாடகப் போட்டிகளினூடாக நாட்டுக்கூத்து, நவீன நாடகங்கள் என்பன புதிய உத்வேகம் பெற்றன. திருமறைக் கலாமன்றமும் நாட்டுக் கூத்துப் போட்டியை நிகழ்த்தியது.

மெற்றாஸ் மெயிலின் பாரம்பரிய நாடகப் போட்டிகளும், வேழம் படுத்த வீராங்கனை நாட்டுக் கூத்தும் குறிப்பிடப்பட வேண்டியதாகும். மேற்படி நாட்டுக் கூத்து பெண்ணின் வீரம் பற்றிப் பேச வேண்டிய கால சூழ்நிலையின் விளைவாக வெளிக் கொணரப்பட்டதாகும்.

யுத்த காலத்தில் சிறுவர்களது மனோநிலை பாதிக்கப்படாமல் இருக்கும் முயற்சிகளாக சிறுவர் நாடக முயற்சிகள் குடா நாடெங்கும் நடைபெற்றன. பல பாடசாலைகளில் சிறுவர் நாடக அரங்கு முக்கியத்துவம் பெற்றது.

கலாநிதி காரை சுந்தரம்பிள்ளையின் இசை நாடகம் தொடர்பான நூல்கள், க.சிதம்பரநாதனின் எமக்குத் தேவைப்படுமரங்கு, குழந்தை.ம.சண்முகலிங்கத்தின் நாடகங்கள் நூலுருவாக்கம் பெற்றமை என்பவற்றுடன் கல்வி சார் முயற்சிகளாக குழந்தை. சண்முகலிங்கத்தின் மன்னன் ஈடிபஸ் மொழிபெயர்ப்பு நூல் என்பன குறிப்பிடக் கூடியன.

தொண்ணூறுகளின் இறுதியில் குழந்தை.ம. சண்முகலிங்கத்தின் வேள்வித் தீ என்னும் நாடகம் இராணுவத்தினரால் பாலியல் வல்லுறவுக்குள்ளாக்கப்பட்ட பெண்ணொருத்தி எதிர்கொள்ளும் சிக்கல்களுக்கூடாக போர்க்கால அவலமொன்று கலைத்துவ ரீதியாக கற்பு பற்றிய கருத்து நிலையையும் அலச முற்பட்டது. 21ம் நூற்றாண்டு யாழ்ப்பாண அரங்கும் வேள்வித் தீயுடனே ஆரம்பமானது.

# வாழ்த்துகின்றோம்

மல்லிகையின் மீதும் மல்லிகை ஆசிரியர் மீதும் நீண்ட காலமாகப் பேரன்பு கொண்ட திரு. திருமதி கே. ஸி. லோகேஸ்வரன் தம்பதியின் மகள் சக்தி அவர்களுக்கும் திருமதி. தி. விஜயரட்ணம் அவர்களது மகன் கணேஷ்குமார் அவர்களுக்கும் சமீபத்தில் கொழும்பு புதிய கதிரேசன் மண்டபத்தில் திருமணம் வெகு சீரும் சிறப்புமாக நடந்தேறியது.

மண்டபம் நிறைந்திருந்தது கண்கொள்ளாக் காட்சியாக இருந்தது.

புதுமணத் தம்பதியினரை மல்லிகை நெஞ்சார வாழ்த்தி மகிழ்கின்றது.

- ஆசிரியர்



படிப்பகம்

www.padippakam.com


மல்லிகை

36வது ஆண்டு மலருக்கு
மனமார்ந்த வாழ்த்துக்கள்

APTECH
COMPUTER EDUCATION

WE CHANGE LIVES

IT LANKA ACADEMY (PVT) LTD
320-1/1, Galle Road,
Colombo-03

Tel: 075-519900/1 Fax: 577780


படிப்பகம்

www.padippakam.com

# இலக்கியப் பார்வையில் இப்சன் (Henrik Ibsen)

**ஆ. கந்தையா**

'சேக்ஸ்பியர்' காலத்தில் நாடகம் கண்ட பெருவளர்ச்சி, செழுமை, செறிவு கூடவே நாடகம் பார்ப்பவர்களிடம் .யல்பாகவே உள்ள நாடகம் பற்றிய அறிவு, தெளிவு, கற்பனை வளம், ஈடுபாடு என்பன அவரை அண்டிய காலப் பகுதிகளில் நலிந்தே காணப்படுகின்றன. 1642ம் ஆண்டு நாடக அரங்குகள் மூடப்பட்டவுடன் தொடங்கிய வீழ்ச்சி, அவை 1660ல் மீண்டும் திறக்கப் பட்ட பின்பும் ஓர் ஆரோக்கிய நிலையை அடைய முடியவில்லை. இக்காலங்களில் நாடக ஆசிரியர்கள் இல்லாமலோ. நாடகங்கள் மேடை ஏற்றப்படாமலோ இருந்ததோவெனில் அதுவும் இல்லை.

19ம் நூற்றாண்டைப் பார்ப்போமாயின் ஐரோப்பாவில் நாடகத்தின் நிலை பரிதாபகரமானதாகவே விளங்கியுள் ளது. இக்காலத்தில் மேடையேறிய நாடகங்கள் யாவும் உணர்ச்சிகளைத் தூண்டவல்ல நிகழ்வுகளையும், மிகைப படுத்தப்பட்ட பாத்திரங்களையும் கொண்டு இனிய முடிவு களை உடைய 'மெலோறாமா' (melodrama) வகையினதா கவே காணப்படுகின்றன. நாடகத்தைக் கட்டுப்படுத்திய கட்டுப்பாடுகள் 1842 இல் அகற்றப்பட்ட பின்பும் நாடகங் கள் மக்களிடையே காத்திரமான செல்வாக்கைச் செலுத்த முடியவில்லை.

'எலிசபெத்' காலத்துப் பார்வையாளர்கள் போன்று இக் கால அரங்கு செல்வோர் கற்பனைச் செறிவோ, நாட்டமோ இல்லாமலே இருந்தனர். புதினங்கள் வாசிப்பதில் காட்டிய ஈடுபாட்டை நாடகங்களில் காட்ட மறுத்தனர். காரணம், நாடகங்கள் கேவலமானவை என்றும், நடிப்போர் நடத்தை கெட்டவர்கள் என்றும் அவர்கள் எண்ணியதே ஆகும். அன்றியும் நாடகங்களை ஊக்குவிக்கும் மன்றங்களோ, சபைகளோ அல்லது ஆதரிப்பாளரோ இல்லாமையுமாகும். பழைய நாடகங்களை மேடையேற்றிய தயாரிப்பாளர்கள் புது முயற்சியில் ஈடுபட்டமைக்கான சான்றுகளும் அரிதா கவே காணப்படுகின்றன. ஒரு சில விமர்சகர்கள், 'சேக்ஸ் பியரது' ஒப்பற்ற உயர்ந்த, உலகளாவிய தன்மைக்கு நிகராக எழுதுவதென்பதே முடியாத காரியமென எண் ணியே நாடகங்களைப் பலர் எழுதப் பயந்தனர் என்றும் கூறுவர். இது மிகைப்படக் கூறிய கருத்தென்றாலும், இதில் உண்மை இல்லாமலும் இல்லை.

இவ்வாறான ஒரு காலகட்டத்திலே நோர்வேயின் எல்லை யைக் கிழித்துக் கொண்டு ஒரு குரல் ஓங்கி ஒலிக்கின்றது. இப்சன் என்னும் நாடக ஆசிரியனது குரலே அது. யதார் த்த நாடகத்தின் தந்தை எனப் பின்னால் புகழாரம் சூட் டப்பட்ட இப்சன் தனது நாடகங்களை அரங்கேற்றத் தொடங்குகிறார். ஐரோப்பாவின் பல பாகங்களிலும் இக்காலங்களில் மேடையேற்றப்பட்ட எந்தவொரு நாடகமும் அவரது நாடகங்களுக்கு ஈடு கொடுக்க முடி யாது திணறியது. இப்சனின் பல தரப்பட்ட நாடகங்களை மேடையேற்றுவதையே தயாரிப்பாளர்கள் இலாபகரமான தாகவும், கௌரவமானதாகவும் கருதினர். 'பேர்னாட் சோ' இப்சனின் நாடகங்கள் அனைத்தும் மேடையேற்றியபின் நாடகங்கள் இல்லாத குறையைப் போக்கக் கருதி "விதவைகள் இல்லங்கள்" எனும் நாடகத்தை எழுதியதன் மூலம் 20ம் நூற்றாண்டின் புகழ் பூத்த நாடக ஆசிரியராக மாறினார் என்பது இவ்விடத்தில் குறிப்படத்தக்கது.

ஐரோப்பாவில் இன்று திரையுலக நடிகர்களுக்கு மக்கள் அளிக்கும் அமோக வரவேற்பைவிடப் பல மடங்கு வரவேற்பை அன்று மக்கள் இப்சனுக்கு (நடிகனுக்கு அல்ல) அளித்தனர் எனில் அவரது புகழ், செல்வாக்கு, ஆற்றல் எவ்வாறு இருந்திருக்குமென நாம் எடை போட முடியும். 'லியோ ரோல்ஸ்டோய்' நாவல் இலக்கியத்தில் 19ம் நூற்றாண்டில் எவ்வளவு செல்வாக்கைப் பெற்றிருந் தாரோ அதே அளவு செல்வாக்கை இப்சன் நாடகத்தில் பெற்றிருந்தார். இதனாலேயே 'பேர்னாட் சோ' இவரைத் தனது குருவாகக் கொண்டார்.

## வாழ்க்கை வரலாறு

இப்சன் நோர்வேயின் ''ஸ்கீன்'' எனுமிடத்தில் 20.03.1828ல் பிறந்தார். இவரது தந்தை செல்வந்தரான ஒரு வர்த்தகர். பலரது கல்வி முன்னேற்றத்துக்குப் பண உதவி புரிந்தார். பிற்காலத்தில் வறுமை நிலைக்குத் தள்ளப்படுகின்றார். பலரது கல்விக்கு உதவியவரது மகன் தனது கல்வியைத் தொடர முடியாது ஒரு மருத்துவரின் கீழ்ப் பயிலுனராக வேலைக்கமருகின்றார். பொருத்த மில்லாத தொழிலில் ஏற்பட்ட அதிருப்தி, வறுமையின் தாக்கம், தனிமையின் கொடுமை, வாழ்வின் வறுமை என்பவை தந்த விரக்தி அவரைத் தன்னிலும் பத்து வயது மூத்த வேலைக்காரப் பெண்ணைத் திருமணம் செய்யத் தூண்டுகிறது. இவருக்கு ஒரு மகவும் உண்டு.

1851ம் ஆண்டு தொடக்கம் 1862ம் ஆண்டு வரையி லான 10வருட காலப்பகுதி இப்சன் எனும் உலக நாடக ஆசிரியன் களப்பயிற்சி பெற்ற காலப் பகுதியாகும். 1851-56 காலப் பகுதியில் 'பேர்கன் தியேட்டரில்' அரங்க முகாமையாளராகவும், நாடகக் கவிஞராகவும், 1857-62 வரையில் நோர்வீயன் தியேட்டர்' இயக்குனராகவும் கடமை புரிகின்றார்.

நாடகக் கலை என்பது செய்திறன் அதிகம் கொண்ட ஒன்றாகும். சிறப்பாக இது கட்புலன் சார்ந்த ஊடகமாகும். நாடகம் பற்றிய விசேட புலமையோ, நியாய வாதங்களோ, கோட்பாட்டுத் திறனோ நாடகத்தை வெற்றிகரமாக அரங்கேற்றப் போதுமானவை அல்ல. நடிகர்களுடன் தொடர்ச்சியான நெருக்கம், நாடகம் பார்ப்போரது நாளாந்த



படிப்பகம்

www.padippakam.com

பல்வேறுபட்ட உணர்ச்சிகளின் பிரதிபலிப்பைக் கணிப்பிடல், அரங்கச் செயற்பாட்டில் உள்ளார்ந்த ஈடுபாடு, ஒலி ஒளி விளைவு பற்றிய தொடர்ச்சியான திட்டமிடல் போன்றவையே நாடகங்களைச் சிறந்த முறையில் மேடையேற்ற உதவுகின்றன. இப்சன் பெற்ற 10 வருட தொடர்ச்சியான மேடை அனுபவம் அவரை பெரும் நாடக ஆசிரியராக மாற்றிவிடுவதுடன், புதுமைகளைப் புகுத்தும் நுட்பத் திறனையும் தந்து நிற்கின்றது. கூடவே அவரது மனதில் குமுறிக் கொணடிருந்த அநீதிக்கு எதிராகக் குரல் கொடுக்கும் திண்மை அவரைக் கருத்தாழம் மிக்க நாடகங்களை எழுதத் துணை போகின்றது.

இவரது இளமைப் பராயம் எதிர்கால இப்சனைப் புலப்படுத்தும் வகையில் அமையவில்லை. இளம் பெண்ணொருத்தி இவரது இளமையை இவ்வாறு நினைவு கூருகிறார். "ஒரு சிறிய கூச்சப்பட்ட அணில்". இவரது தந்தையார் கூட இவர் பிற்காலத்தில் மேதையாகப் போவதற்கான அறிகுறிகளைக் கண்டாரில்லை. ஆனால் யாவரும், "அகலத் திறந்த கண்களை உடையவன்" என்பதைக் குறிப்பிடுகின்றார்கள்.

இப்சனின் முதலாவது நாடகம் 'கற்றலீன்'. 1849ம் ஆண்டு வெளிவருகின்றது. ஆனால் அவரது தாக்கமான படைப்புக்கள் 1877ம் ஆண்டிற்குப் பின்னே மேடையேறுகின்றன. வருடமொரு நாடகம் என்ற வகையில் நாடகங்களை எழுதிய இவர் 1900ல் பாரிசவாத நோயினால் பீடிக்கப்பட்டு பின் 1906ம் ஆண்டு மே மாதம் 23ம் திகதி இறந்துவிடுகின்றார்.

இப்சன் இயல்பாகவே அமைதியான நிகரான போக்கை உடையவர். இருப்பினும் கொள்ளையிலிருந்து இம்மியளவும் விலகாதவர். "றோயல் தியேட்டரின்" அரங்க முகாமையாளர், "ஒரு சிறிய வாய் பேசாத விளிப்பான விரிந்த கண்களையுடைய நோர்வீயன்", என இவரைப் பற்றிக் குறிப்பிடுகின்றார். 'யோன் நோர்கம்' அவர்கள் "20ம் நூற்றாண்டின் பிரதான ஆக்க சக்தியாக வரப்போகும் மனிதன் தனது சமூகத்திலிருந்து தான் அந்நியப் படுத்தப்பட்ட தன்மையை உணரப்போகின்றான் என்பதைப் பற்றி 19ம் நூற்றாண்டிலேயே அவரால் உணர முடிந்தது" என்றும், "இவைகளைக் கூறுகையில் கூட அவ்வுணர்வு களை வெளிக் கொண்டு வந்தாரேயன்றி ஒரு பொழுதும் தனது தீர்ப்பை வழங்கினாரில்லை" என்றும் கூறுவார்.

**இப்சனின் நாடகங்கள்.**

இப்சனின் நாடகங்கள் நவீன நாடகங்கள் யாவற்றிற்கும் சிகரமாக விளங்குகின்றன. நடைமுறையிலுள்ள நெறி பிறழ்தல்கள், குறைபாடுகள் என்பவைகளை வெளிக்கொணர்வதையே அவர் தலையாய கடமையாகக் கொண்டிருந்தார். அரங்கம் என்பது அவரைப் பொறுத்தவரையில் உண்மையான ஓர் உலகம். அங்கு இரக்கமற்றுப் பகுப்பாய்வு நிகழ்த்த விரும்பினார். அரங்கில் மனித மனமும், ஆத்மாவும் நேர்மையுடன் வெளிக்காட்டப்படல் வேண்டும். அவர் யாரையும் திருப்திப்படுத்த விரும்பவில்லை. அவ்வாறே யாராலும் அவரைத் திருப்தியமைக்கவும் முடியவில்லை .

மேடையில் அவரது சில பாத்திரங்கள் பார்த்துச் சீரணிக்க முடியாமல் இருக்கும். சில பாத்திரங்கள் சகிக்க முடியாத தன்மையைக் கூடத் தந்து நிற்கும். (தனது உண்மையான உருவை எவன்தான் நேருக்கு நேர் சந்திக்க விரும்புவான்?) ஒரு சில விமர்சகர்கள் இவற்றைக் கருத்திற் கொண்டு அவரது நாடகங்கள் பிரதி வடிவில் இலக்கியச் செறிவுடையவை என்றும் அரங்கில் சுத்த அபத்தம் என்றும் குற்றம் சுமத்துவர். உண்மையில் இது இப்சனது தவறு அல்ல. நாடகத் தயாரிப்பாளர்களது அறியாமையினாலும், கவனயீனத்தாலும் ஏற்பட்ட தவறே ஆகும். இப்சன் ஒருபொழுதும் ஒரே பாணியிலான நாடகங்களை எழுதியதே இல்லை. யதார்த்தவாதியின் சுயதரிசனம் அவற்றைப் பார்க்கும் பக்குவமற்றவர்களுக்கும் விசனமாகவே படும்.

மேடைக்குகந்த பல நாடகப் பிரதிகள் புத்தக வடிவில் இலக்கியத் தன்மையைக் காட்டி நிற்பதில்லை. அபத்த நாடகப் பிரதிகளை உதாரணத்திற்கு நாம் கூற முடியும். இலக்கியத் தன்மை மிகுதியாக உள்ள நாடகப் பிரதிகள் மேடைக்குதவாதவை ஆகிவிடுவதும் உண்டு. ஆனால் 'இப்சன்', 'பிறெக்ட்', 'சேக்ஸ்பியர்' போன்றோரது பிரதிகள் மேடையிலும், புத்தக வடிவிலும் இலக்கியச் செழுமை கொண்டு விளங்குகின்றன.

இப்சன் சுமார் 24 நாடகங்களை எழுதி மேடையேற்றியுள்ளார். "காற்றிலைன்" அவரது முதலாவது நாடகம். "இறந்த நாம் விழித்தெழும்போது" அவரது கடைசி நாடகம். அவரது புகழ் பெற்ற நாடகங்களுள் "பாவை வீடு", "ஆவிகள்", "மக்கள் விரோதி", "றொர்மசோம்". "சமுதாயத் தூண்கள்" போன்றவை ஒரு சிலவாகும். அவருடைய கவிதை நாடகங்களுள் "பியர் கையினர்", "பிறான்ட்" போன்றவை மொழி பெயர்ப்பாளர்களைத் திணற வைத்துள்ளன. இவரது நாடகங்களை கவிதை நாடகங்கள், சமூக நாடகங்கள், உளவியல் நாடகங்கள், பெண்ணியல் நாடகங்கள், வரலாற்று நாடகங்கள் எனப் பொதுவாக வகைப்படுத்துவர். உண்மையில் அவரது நாடகங்கள் பலவும் அவரது பலதரப்பட்ட சமூகப் பார்வையை எனக்குப் புலப்படுத்துகின்றன.

இவரது ஆக்கங்களை மீண்டும் நாம் இரு கூறுகளாகக் கால எல்லைப் பிரகாரம் வகைப்படுத்திப் பார்க்க முடியும். "சமுதாயத் தூண்களுக்கு" முற்பட்டகால நாடகங்களை 1ம்பிரிவிலும் அதற்குப் பிற்பட்டகால நாடகங்களை 2ம் பிரிவிலும் அடக்க முடியும். முன்னைய நாடகங்களில் அவரது முதிர்ச்சியின்மை தெள்ளெனத் தெரியும். இவைகள் யாவும் வீரம் பற்றியே அதிகம் பேசும். அரங்கக் கவர்ச்சியை நோக்காகவைத்தே இவைகள் எழுதப்பட்டன.

இரண்டாம் பிரிவில் அடங்கும் நாடகங்கள் முதற்தரமான தனது அனுபவங்களை மையப் பொருளாகக் கொண்டவை. தான் வாழ்ந்து அனுபவித்தவையே நாடகமாகத் தமக்கு வெளிவந்தமையை அவரே குறிப்பிடுகின்றார். இதனாலேயே இம்முயற்சிகளில் புது நாடக பாணியிலான மாற்றங்களை அவரால் கொண்டு வரவேண்டியிருந்தது. அவரது கருத்துக்களைப் பிரதிபலிக்க வல்ல அரங்கை அவர் கண்டதும் இவற்றால்தான். இப்பிரிவு நாடகங்களில் சொற்களும் காட்சியும் சங்கமமாகும் அற்புதத்தை நாம் காண்கின்றோம்.

அவரது நாடகங்கள் பலவும் அவரது உயர்ந்த இலட்சியங்கள், எதிர்பார்ப்புக்கள் என்பவற்றையும் அநீதி கண்டு கொதித்தெழுந்த தன்மைகளையும் கொண்டிருக்கின்றன. அவரது அயரா உழைப்பு, உண்மையைக் காணும் முனைப்பு, ஆத்மாவின் குமுறல்கள் என்பவையே அவரது நாடகங்கள் யாவிலும் புரையோடிக் காணப்படுகின்றன.



படிப்பகம்

www.padippakam.com

**இப்சனின் யதார்த்தவாதம்**

'மோறாலிட்டி' (morality) நாடகங்களில் கூட யதார்த்தப பாணி இருப்பதைக் காணமுடிகின்றன. ஆதாமும் ஏவாளும் அம்மணக் கோலத்தை உணர்த்த வெள்ளை ஆடை அணிந்து வருவர். சேக்ஸ்பியர் கூட யதார்த்தத் தன்மையைத் தனது நாடகங்களில் காட்டியுள்ளார். இருப் பினும் இப்சனையே நாம் யதார்த்தநாடக ஆசிரியர் என அழைப்போம்.

இப்சன் காலத்தில் சில முக்கியமான நிகழ்வுகள் நடந்தேறுகின்றன. இவைகளால் அன்றைய மக்களின் வாழ்க்கைப் போக்கே மாறிவிடுவதுடன் வாழ்வில் பார்வை கூட வேறு திசைகளுக்குத் திரும்பி விடுகின்றன. 1832ல் கொண்டு வரப்பட்ட சீர்திருத்தச்சட்டம், 1960 களில் வெளியான 'டார்வினின்' பரிணாமக் கோட்பாட்டின் தாக்கம். 'கார்ல் மாக்ஸ்' அவர்களது 'தாஸ் கப்பிட்டல்' புத்தகம் ஏற்படுத்திய எதிர் விளைவுகள், 1864ல் வாக்குரிமைச் சட்டம் என்பவை குடும்பம் தவிர்ந்த முயற்சிகள் யாவிலும் மாற்றங்களைக் கொண்டு வருகின்றன. இதுகாறும் கடவுளே உலகின் மையமாக இருக்க, இப்பொழுது மனிதனே உலகின் மையமாக மாறத்தொடங்குகின்றான். 'கடவுள் மண்ணைப் படைத்தது என்னவோ உண்மை. ஆனால் கடவுளை மனிதனே படைத்தான்"எனக் கடவுளை மனிதனுக்கு அடுத்தபடியாக வைக்கும் நிலை ஏற்படுகி றது. இப்சனைப் போன்ற 'அகலத் திறந்த கண்களை' உடைய ஒருவன் இவைகளைப் பாராமல் இருக்க முடியாதல்லவா?

காலம் காலமாக நோர்வேயில் கடைப்பிடித்து வந்த கொள்கைகள், கோட்பாடுகள், நம்பிக்கைகள் என்பன உண்மையில் போலியானவை என்ற எண்ணம் இப்சனில் தோன்ற இம் முரண்பாடுகளால் ஏற்பட்ட மனக் குமுறல் கள், வேதனைகள், விரக்தி போன்றவை அவன் படைத்த ஆக்கங்களில் முகை வெடிக்கத் தோன்றின. இப்போலித் தனங்களைக் கண்டும், உணர்ந்தும் இருந்த 'அறிவுசால் மேல் மக்கள்' பலர் அவைகளைத் துணிந்து கூறுவதற்கு அஞ்சினர். சமூக விழுமியங்கள், சமய அங்கீகாரம் பெற்றி ருந்தமையால் அவைகளை விமர்சிப்பதற்குக் கூட இவர் கள் அஞ்சினர். ஆனால் இவைகளை அப்பட்டமாகத் துணிவுடன் மேடையில் காட்ட இப்சன் கையாண்ட உத் தியே பின் யதார்த்த நாடகங்கள் என்ற நாமத்தைப் பெறுகின்றது.

சமகால சமுதாயத்தின் உள்ளார்த்தங்கள் யாவும் காலத்திற்கொவ்வாத கருத்துக்களாலும், உளப் பாங்குகளாலும் அரண் போடப்பட்டிருந்தமையால், மக்களுடைய சிந்தனையில் தனது நாடகங்களினூடாக மாற்றங்களை ஏற்படுத்த இப்சன் விரும்பினார். "நான் எனக்கு உண்மையாக இருப்பது கூட ஒருவித யதார்த்தம்" என்று இதனாலேயே கூறினார்.

ஆகவே "கட்டமைக்கப்பட்ட நாடகத்தை" (well made play) இப்சன் அறிமுகப்படுத்தி அங்கே நான்காவது சுவரை நீக்கி விடுகின்றார். இந்த நான்காவது சுவரூடாக மக்கள் யாவற்றையும் பார்க்க விடுகின்றார். நாடகங்களில் வரும் கதாநாயகன், கதாநாயகி அசாதாரண மானிடர்களா கக் காட்டப்படுகின்றனர். இவர்களிடம் விசேட தன்மைகள் குடிகொண்டிருக்கும். அவர்களது எதிர்பார்ப்புக்கள் யாவும் கொள்கை பிடிப்புள்ளவையாக் இருக்கும். இவைகள் அவர்தம் உணர்வுகளைப் பிரதிபலித்து நிற்கும். இந்நிலை யில் அவர்களது சொந்த எதேச்சையான போக்கு, முரண் பாட்டுக்குள் அவர்களைத் தள்ளிவிடும். முடிவு இவர்கள் அச்சூழலின் எதார்த்த மாந்தராக மாறி விடுகின்றனர்.

இப்சன் தனது நாடகங்களில் மொழி யதார்த்தமாக இருக்க வேண்டும்:- உடை இயல்பாக, இயற்கையாக அமைய வேண்டும்:- நடிகன் களநிலையை அறிவதுடன் ஆத்மாவை அடகு வைக்காமல் இருக்க வேண்டும்:- சாதாரண நாடகம் பார்க்கச் செல்வோன்கூட பாத்திரங்க ளில் தானும் ஒருவன் என உணர வேண்டுமென எதிர்பார்கின்றார்.

இவ்வாறான யதார்த்த நாடகங்களை மேடையேற்றி வெற்றி பெற இவரால் மட்டும்தான் முடிந்தது. ஏனையோர் தோல்வியுற்றனர் எனக் கூறுவோரும் உளர். இவ்வாறே 'பிறெக்ட்' அவர்களால் புகுத்தப்பட்ட 'தனிமைப்படுத்தல்' உத்தியும் அவர் கைகளிலேயே வெற்றி கண்டது. அவர் தவிர்ந்த ஏனையோரால் இவற்றை அரங்குக்குக் கொண்டு வரமுடியவில்லை எனக் கூறுவதும் நாம் அறிந்ததே.

உண்மையில் இவர்களது உத்திகளின் வெற்றி அவர் களது எண்ணக் கருவாகிய நாடகப் பிரதிகளைச் சார்ந்த வையே. அத்துடன் நாடக ஆசிரியனது அகக் கண்ணின் காட்சிப் புலப்பாட்டை அவனொருவனால்தான் புரிந்து கொள்ள முடியும். மேடைக்குக் கொண்டு வரவும் முடியும். பிறிதொரு நாடக ஆசிரியனின் உணர்வுகள் இவர்களது உணர்வு போன்று இருக்க வேண்டுமென்பதில்லையே.

ஒரு இப்சனை ஒரு பிறெக்டை வாசிக்கும் போது ஏற்படும் தாக்கம் மற்றவர்களிடம் ஏற்படவில்லையெனில் அவர்களது நாடகங்களைவிட அவர் முன்வைத்த கருத்துக்கள் தாக்கமுடையனவாக அமைந்தமையே ஆகும். தாக்கமுடைய கருத்தாழம் கொண்ட நாடகங்கள் ஆளுமையுடைய நாடக ஆசிரியரால் ஏற்ற அரங்கில் மேடையேற்றும் போது அவை பிறிதொருவரால் செய்ய முடியாத செயலாகவே அமையும். "நோறா" கதவைச் சாத்திக் கொண்டு இருட்டில் வெளியேறியமை ஐரோப்பாவின் முகத்தில் விழுந்த அறை என நாம் கூறுகின்றோமெனில் அங்கே காட்சிப் புலனைவிட கருத்துக்களம் கனதியாக இருந்ததே ஆகும்.

இப்சனின் யதார்த்த நாடகங்கள் பற்றி 'கலீனி' மிகவும் அழகாகக் கூறுவார். 'அவர் (இப்சன்) ஒரு பெரிய ஓவியனை எவ்வகையில் யதார்த்த ஓவியன் என அழைக்கின்றோமோ அவ்வகை யதார்த்தவாதியாவான். அவர் 'நிழல் பாடல் கலை' என வர்ணிக்கப்படும் கருத்து டன் ஒத்துப் போவதில்லை. உதாரணமாக யதார்த்தவாதி என முத்திரையிடப்பட்ட "சோலா"வுடன் தன்னைச் சேர்த்துப் பார்ப்பதை அவர் வெறுத்தார். அவரைப்பற்றி (சோலா) அவர் (இப்சன்) கூறுவார்.

"சோலா" சாக்கடை நீரில் குளிக்கச் செல்வார். நானோ அதைத் துப்புரவு செய்யச் சொல்வேன்" இதனாலோ என்னவோ இப்சன் காட்சி அமைப்புக்கு மிக முக்கியத்துவம் கொடுப்பார். மேடை அமைப்புப் பற்றிய சிறிய விடயங்களைக் 4ட விரிவாகத் தனது நாடகப் பிரதிகளில் எழுதியும் வைத்துள்ளார்.

இப்சன் மறைந்து கிட்டத்தட்ட நூறு வருடங்கள் சென்றுவிட்டன. இன்றும் மேடை ஏற்றுபவர்களிடமும், நடிகர்களிடமும், பார்வையாளர்களிடமும், இன்னும் கூறப்போகின் இலக்கிய ஆய்வாளர்களிடமும் பெரும் தாக்கத்தை ஏற்படுத்திக் கொண்டே இருக்கிறார். ●



படிப்பகம்

www.padippakam.com


மல்லிகை

36ம் ஆண்டு மலருக்கு
எம் இதயம் கனிந்த
வாழ்த்துக்கள்

KALKISONS

IMPORTERS & DISTRIBUTERS OF MACHINERY & ELECTRICAL EQUIPMENTS

**BG Building**
102, Wolfendhal Street,
Colombo-13

Phone: 328729
332949-50

Fax : 94-1-439623
94-1-576273
E-mail : kalkison@slt.lk


படிப்பகம்

www.padippakam.com

# குற்றம் இன்றியும் குறை பெற்றவனுக்கு

ஸ்ரீ பிரசாந்தன்

'இருபதாம் நூற்றாண்டின் இணையற்ற
மனிதர் எவர்?'
என விருதை வைத்துக்கொண்டு
வினவுகிறது உலகு.

ஐன்ஸ்டீன், காந்தி என்ற
பிரபல முகங்களைப்
பிரேரிக்க முடியவில்லை.

தோற்சுருக்கம் ஒவ்வொன்றுள்ளும்
சோகங்களைச் சொருகி வைத்திருக்கும்
நாகசாகி நண்பனே!
பிரபல முகங்களை என்னால்
பிரேரிக்க முடியவில்லை.

உந்தையும் தாயும் மகிழ்ந்து குலாவிய
சொர்க்கம் ஒரே கணத்தில் சுடலையாயிற்று
சகோதரத்துவத்துக்கு அங்கே கட்டிய
சமாதி மேலே
இன்று துளிர்க்கிறாய் நீ.

மானுடத்தை மானுடமே கழுவேற்றிய
தூக்கு மரத்தில் தொங்கும்
அபாய அறிவிப்பாய்
அமைந்ததுன் வாழ்வு.

உடலே சிலுவையென உயிர் வளர்ப்போனே!
அமெரிக்க வல்லூறின் அணுகுண்டு எச்சம்
உன் பரம்பரைச் சட்டையைப் பாதித்துக்
கழுவினாற் போகாத கறையாயிற்று.

ஆணவம் போர்த்திய செயல்
நிர்வாணத்தை விடவும் வெட்கம் தந்தது.
சந்திரனை நோக்கிய விண்கலத்தில்
சாதனைகளை நிரப்பிய கரங்களே,
விமானத்தில்
உங்கட்கான சவப்பெட்டிகள் தந்தன.

விண்வெளி முட்ட வளர்ந்த விசுவரூபம்,
வழுக்கி உங்கள் வயலில் வீழ்ந்ததில்
பயிர்கள் மட்டுமா பாழாய்ப் போயின?
சந்ததி விதைகளும் சிதைவுற்றனவே!

நீ சிதைவுற்ற வித்தே எனினும்
சிரமப்பட்டு ... சிறுகச் சிறுக...
சகோதரத்துவத்துக்குச் சுவர்கள் கட்டிய
சமாதி மேலே துளிர்க்கிறாய் இன்று.

அணுகுண்டு கர்ப்பம் வளரவும்,
'மலடி நான்' என்று மார்தட்டி
நாடுகள் செய்யும் நடிப்புப் பார்த்தும்
'சமாதானத்துக்கான யுத்தம்' என்னும்
மனசை மறைக்கும் வார்த்தைகள் கேட்டும்...
இன்று நீ துளிர்த்துச் சிரிக்கிறாய்.

கருப்பைக்குள்ளே கந்தகம் குடித்து
இரும்பைத் துயர் மேல் ஆக்கிய நண்ப!
இருபதாம் நூற்றாண்டின் இணையற்ற மனிதனென
நின்னைத் தவிர வேறெவரையும்
நினைக்க முடியவில்லை.





படிப்பகம்

www.padippakam.com

ஓர் அறிமுகக் குறிப்பு

# தெணியானின் காத்திருப்பு நாவல்

மு. அநாதரட்சகன்

ஈழத்துத் தமிழ்ப் புனைகதை இலக்கியத்திற்கு வளம் சேர்த்தவர்களுள் தெணியானும் முதன்மையானவர். அவரது ஐந்தாவது நாவலாக அண்மையில் வெளிவந்திருப்பது "காத்திருப்பு" நாவலாகும்.

சமூகத்தின் போலி முகங்களைத் தோலுரித்துக் காட்டும் அவரது ஏனைய படைப்புக்களிலிருந்து வேறுபட்டு, இந்நாவல் வேறொரு தொனியில் பேசுகிறது. ஒரு பெண்ணின் பாலியல் பிறழ்வு நடத்தையால் குடும்பத்தவரிடம் எழும் அகப்புறச் சிக்கல்கள் பற்றி கதைப்புலம் விரிகின்றது.

பாலியல் உணர்வு என்பது அடிப்படையில் இயல்பான மனித உணர்வு. அத்தகைய உணர்வு பிறழ்வுறும் சமயத்தில் சம்பந்தப்பட்டவர்களுடன் நெருங்கிய உறவைப் பேணுபவர்களை அது எவ்வாறு பாதிக்கின்றது, அவர்களில் எத்தகைய மன உளைச்சலைக் கொடுக்கிறது. என்பதை மிக மென்மையான உணர்வு வெளிப்பாட்டுடன் இந்நாவலைத் தெணியான் சமநிலை நின்று எழுதியுள்ளார்.

கதையில் பல பாத்திரங்கள் தலை காட்டினாலும், துாக்கலாக நிற்பன சுப்பிரமணியம் - அநேக சந்தர்ப்பங்களில் 'பேய்ச்சுப்பு', அவனது அன்புக்குரிய மனைவி ஈசுவரி, குடும்பத்துடன் உறவு கொண்ட சங்கக்கடை மனேச்சர் நந்தகோபாலன். இம்மூவரின் தாபங்கள், ஏக்கங்கள், அகமனப் போராட்டங்கள் நாவலின் மூலவிசையாக நின்று நாவலை நகர்த்திச் செல்கின்றது.

சுப்பிரமணியம் - ஈசுவரி தம்பதியினரின் தாம்பத்தியத்தில் காணப்பட்ட சில போதாமைகள், இயலாமைகள் உறவில் திருப்தியின்மையை ஏற்படுத்துகிறது. இந்நிலையில் நந்தகோபாலனின் தொடர்பு சில தேவைகளை நிறைவு செய்கிறது. ஈசுவரி நந்தகோபாலனின் ஆளுகைக்குள் வசப்பட்டு விடுதல், அதனைக் கண்டும் காணாதவனாக தனக்குள் சிதைந்து கொண்டிருக்கும் கணவன். அதனைச் சாதகமாக்கிக் கொண்ட இருவரது பாலியல் பிறழ்வு நடத்தை உச்சநிலை அடைதல். இதனைச் சகிக்க முடியாமல் நோய் கண்டு - இறுதியில் இறந்து போகும் கணவன். பின்பு ஈசுவரி மனம் திருந்தியவளாக நந்தகோபாலனைத் துறந்து கணவனின் தூய நினைவுகளுடன் இறுதி வரை வாழச் சபதமெடுக்கிறாள். இதுவே கதைச்சுருக்கம்.

சுப்பிரமணியம் தன்னைச் சுற்றியுள்ள உறவுகளில் மாறா அன்பு கொண்டவன். குறிப்பாக மனைவி ஈசுவரியிடம் காட்டும் அன்பு கோபுரம் போல உயர்ந்தது. புனிதமானது. அதுவே சுப்புவின் பலவீனமாகவும் நிலைத்து அவனது அகப்புறச் சிதைவுக்கும் ஏதுவாகிவிடும் சோகத்தை மிக நேர்த்தியாக கலைத்துவத்துடன் ஆசிரியர் காட்டியுள்ளார்.

சிறு வயதிலேயே பெற்றோரை இழந்துவிட்ட சுப்பிரமணியத்துக்கு அன்பு, அரவணைப்பு, கணிப்பு போன்ற உளவளத் தேவைகள் பூரணமாகக் கிடைக்காமை அவனது ஆளுகையில் எத்தகைய பாதிப்பினை ஏற்படுத்தியுள்ளது என்பதை உளவியல் நோக்கில் வெளிப்படுத்தப்பட்டுள்ளது.

இளமையில் பேய்ச்சுப்புவாக இருந்து வாலிபத்தில் சுப்பிரமணியமாக உயர்ந்து, தாம்பத்திய வாழ்வில் மீண்டும் பேய்ச்சுப்புவாக தாழ்ந்துவிட்டவனின் நிலை இயல்பாகப் படைக்கப்பட்டிருப்பது தெணியானின் முதிர்ச்சியைக் காட்டுகிறது. கதையில் ஈசுவரியும் தான் வாழும் வாழ்விலிருந்து தன்னளவில் தார்மீக நியாயத்தைக் கொண்டவளாகவே படைக்கப்பட்டிருக்கிறாள். சம்பிரதாய ஒழுக்க நெறிகளை மீறித் தன் போக்கில் ஒரு வாழ்வை அமைத்துக் கொண்டு வாழும் ஈசுவரிக்கு சமூகத்தில் தன் வாழ்முறை குறித்துச் மனச்சங்கடங்கள் எழாமலில்லை. இது பூடகமாக வெளிப்படுத்தப்பட்டுள்ளது. இறுதியில் அவள் எடுத்திருக்கும் முடிவில் அவளிடம் உள்ளுறைந்திருந்த மேலான குணாம்சம் வெளிப்படுகின்றது. இது கதையில் மென்மையாக, ஆனால் அதிர்வூட்டும் கோட்டுச் சித்திரங்களாக உருப்பெற்று நாவலுக்கு வலுச் சேர்த்துள்ளது.

இந்நாவல், பாலியல் சார்ந்த பிரச்சனையை விரசமில்லாமல் நாகரிகமாகவும் சொல்லலாம் என்பதற்கு ஒரு வகை மாதிரியாக வெளிவந்துள்ளமை இதன் சிறப்பாகும். அவ்வகையில் 'காத்திருப்பு' நாவல் ஆண்பெண் உறவுகளை விரசமில்லாமல் கலைத்துவத்துடன் படைத்து வெற்றி கண்ட கு.ப.ரா, கி.ஜானகிராமன் போன்றோரின் படைப்புக்களை நினைவூட்டுவதாக உள்ளது.

இந்நாவல் சமூகப் பரிமாணத்தில் இன்னொரு உண்மையையும் கோடிட்டுக் காட்டுகிறது. பொருளாதார ரீதியில் நலிவுற்ற குடும்பத்துக்கு பொருளுதவிகள் செய்வதன் வாயிலாக, அக்குடும்பத்தின் ஆத்மார்த்தமான - அந்தரங்கமான - உணர்வுகள் இன்னொருவனால் சுரண்டப்படும் அவலம் நன்றாக வெளிப்படுத்தப்பட்டுள்ளது. அத்துடன் கதை விரிவில் ஆங்காங்கே வரும் குறியீடுகள் ஆசிரியரின் ஆக்க வெளிப்பாட்டு நுட்பத்திற்குச் சான்றாக உள்ளன. மாற்றானுடன் மனைவி இன்பம் சுகிப்பதைப் பொறுக்கமுடியாத கணவன் சுப்பு, அவனின் சைக்கிள் காற்றைத் திறந்துவிடுவது சுப்புவின் இயலாமையின் குறியீடாகக் காட்டப்பட்டுள்ளமை சிறப்பான ஓர் உத்தியாகும்.



படிப்பகம்

www.padippakam.com

நாவலின் கதை நகர்வில் வரும் வாடகைச் சைக்கிள் கடை,பருத்தித்துறைத் தோசை, கூப்பன் கடை, நல்ல தண்ணீர் கிணறு, வைரவர் கோயில் சூழல், கிராமத்துப் பனங்கூடல்கள், இயற்கை வனப்புக்கள் போன்ற இன்றைய இளைய தலைமுறையினரின் அனுபவத்தில் கைய்க்கப்படாத விடயங்கள் ஆவணப்படுத்தப்பட்டுள்ளன. அத்துடன் கிராமிய வாழ்வின் ஆதாரங்களாக நிலைத்துவிட்ட சடங்காசாரங்கள், ஐதீகங்கள், கற்பிதங்கள், கட்டுப்பெட்டித்தனங்கள் என்பவை அவற்றின் பலத்துடனும், பலவீனத்துடனும் மேற்கிளம்புவதை இயல்பானநடையிற் சந்தடியில்லாமல் ஆசிரியர் எழுதியுள்ளார்.

இந்நாவலில் தெணியான் வாசகனுக்கு நிறையவே சுதந்திரத்தை வழங்கி அவசியமற்ற தலையீட்டைத் தவிர்த்துள்ளார். இத்தகைய போக்கு தெணியானின் அண்மைய படைப்புக்களில் காணப்படும் சிறப்பம்சமாகும்.இது அவர் எடுத்துக் கொண்ட விடயத்தில் அவருக்கிருக்கும் கலாபூர்வமான ஈடுபாட்டையே காட்டுகிறது.

பெண்ணின் கற்பு நிலை பற்றி பல்வேறு கருத்து நிலைகள் இன்று எழுந்துள்ள போதிலும், கணவனுக்கு உண்மையானவளாக உடலாலும், உள்ளத்தாலும் இறுதிவரை வாழுதல் மனைவியின் கடப்பாடாக ஏற்றுக் கொள்ளப்பட்டுள்ளது.

நாவலைப் படித்து முடித்தபோது பெண்ணின் கற்புநிலை மீதும், அது சார்ந்த மதிப்பீடுகள் மீதும் சில கேள்விகள் எழுவதைத் தவிர்க்க முடியவில்லை.

பூபாலசிங்கம் புத்தகசாலையின் வெளியீடாக வந்திருக்கும் இந்நாவல் புனைகதை இலக்கியப்பரப்பில் தெணியான் உறுதியாகப் பதித்திருக்கும் இன்னொரு தடமாகும். ●

# கல்லறையிலிருந்து

– அரபி



இரவுகளின் வர்ணமே
அர்த்தநாரீஸ்வர முகவரியே
உன்னால் ஒடிந்து போன கரும்புவில்
இறந்துபோய்

அடிக்களைப்பதற்குள்
தாளம் தப்பிப்போன
சலங்கை மனது
முகாரியில் சுகம் தேடுகிறது

செல்மாவின் நினைவுகளில்
ஜிப்ரானாகிறேன்
ஒரு திருத்தம்
நான் ஏமாற்றப்பட்டவன்

காதலியே
என் கல்லறையில்
பறவைகள் எச்சமிடும் முன்
ஒரு பூ வைப்பாயா

உனக்குப் பிடித்த
அரசியல்வாதியின் சடலத்திற்கு
மலர் வளையம் வைப்பதாய்
என் கல்லறையில் பூ எறி.

காமதேவனின்
நிழலைக் கண்டு பயந்த
நம் நந்தவனம்
உன் ஓணான் மனதால்
வேலியே மேய்ந்து போனது.

சிவந்த இதழில் எந்தப் பகுதியில்
சைனைடை விதைத்திருந்தாய்
பொய்
நீ அதில் விளைந்திருந்தால்

கார்த்திகைக்காய் தவமிருந்து
கல்லறைக்கு
உரமானேன்.

உன் விரல்களும்
சுடுநீர் ஊற்று எனத்தெரியாது
ஈச்சச் செடியை நட்டுவைத்தேன்.

கடைசியாய்
என் ஆத்மா சாந்தியடைய
கல்லறையிலேனும் பூ எறி.



படிப்பகம்

www.padippakam.com


இந்த 2001ம் ஆண்டில் மலரும் மல்லிகையின் 36 – வது ஆண்டு
மலருக்கு எமது மனங்கனிந்த வாழ்த்துக்கள்

மல்லிகை

# Devi Jewellers

131

Buyers & Sellers of Bullion
(Gold, Silver Platinum & Palladium)
Diamonds, Gems & Cubic Zirconium
Authorised Money Changer - Custom Made Jewellery.

131, SEA STREET,
COLOMBO-11,
SRI LANKA.

TEL: 432502
FAX: 327101
E-Mail: devi131@visual.lk


படிப்பகம்

www.padippakam.com

மாலைக் கருக்கலில் சுந்தரம் அச்சந்தியை வந்தடைந்திருந்தான். சனசந்தடி குறைந்து மயான அமைதியினுள் சந்தி புதையுண்டு கிடந்தது. சந்திக்குச் சற்று அப்பால் அமைந்திருந்த இராணுவச் சென்றியும் வீதிக்குக் குறுக்கே இழுத்து விடப்பட்டிருந்த முட்கம்பிச் சுருளும் முடக்கப்பட்ட யாழ்ப்பாணத்து மக்களின் அவல வாழ்வின் அம்சமொன்றைச் சுட்டி நின்றன.

மனதில் தயக்கம். உடல் சற்றுப் பதற்றப்பட்டது. கொழும்பிலிருந்து ஆறு ஆண்டுகளுக்குப் பிறகு யாழ்ப்பாணம் வருகிறான். கொட்டு மழையில், இருளுள், பாதை தடவி நிகழ்ந்த பெரும் இடப்பெயர்வோடு வன்னியூடாகக் கொழும்புக்கு ஓடிப் போனவன். ஓடிப் போனபோது இருந்த ஊருக்கும், இன்றைய ஊருக்குமிடையில் பெருத்த வேறுபாடு. அனுமான் எரித்த பூமியாக, சிதைந்த கட்டிட இடிபாடுகள் கண்ணில் பட்டன.

வீதிகளின் சந்திகளெங்கும் நிலை கொண்டுள்ள காப்பரண்களும், குறுக்கு வீதிகளும், ஒழுங்கைகளும் அடைக்கப்பட்ட நிலையில் சிரசைச் சுற்றி நாசியைப் பிடிப்பது போன்ற சுற்று வழிப் பயண நிலைமையை அவன் புரிந்து கொண்டான்.

மனமும் இதயமும் கனத்துக் கனன்றன. அவன் தனது பயணப்பையைச் சுமந்தபடி, சென்றியில் தயங்கி நிற்க, இராணுவ வீரனொருவன் துப்பாக்கியை நீட்டியபடி அவனை நோக்கி அவதானமாக நடந்து வந்தான்.

"கேபியூ நேரம். றோட்டு மூடியாகிவிட்டது, ஏன் இப்ப வந்தது?"

"கொழும்பால வாறன்... பஸ் லேற்..."

"ஐ.சி யை தா..."

அவன் தனது அடையாள அட்டையை எடுத்து நீட்டினான். அதனைத் திருப்பித் திருப்பி ஆராய்ந்தபடி, "கொழும்பில என்ன செய்யிறது?" என்று வினவினான்.

"ஒரு கொம்மியூனிகேசன் சென்ரரில வேலை செய்கிறன்."

"கொழும்பில எங்க இருக்கிறது?"

"லில்லி அவென்யூ..."

"அது எங்க?"

"வெள்ளவத்தை..."

"லான்ட் சைட்டா, சீ சைட்டா?"

சுந்தரத்துக்கு இப்பொழுது விளங்கிவிட்டது. அவன் கொழும்பிலிருந்துதான் வருகிறான் என்பதை உறுதிப்படுத்த அந்த இராணுவ வீரன் விழைகிறான்.

"கொழும்பில பதிஞ்ச இருப்பிட பாஸ் இருக்குது..."

அவன் ஒரு கடிதத்தை எடுத்து நீட்டினான். கொழும்பில் வசித்தமையை உறுதிப்படுத்தும் பொலீஸ் பதிவு அது. இராணுவ வீரன் முகத்தில் திருப்தி பரவியது.

"இப்ப எங்கை போறது?"

"என்ர வீட்டுக்கு... ஸ்கூலுக்குப் பக்கத்து ஒழுங்கை... என்ர மருமகளுக்குக் கலியாணம். அதுக்காகத்தான் யாழ்ப்பாணம் வந்தன்..."

"சரி கெதியாப் போ... கேபியூ நேரம்..."

வீதிக்குக் குறுக்கே இழுத்து விடப்பட்டிருந்த முட்கம்பிச் சுருளைச் சற்று விலக்கி, சுந்தரத்தைப் போக அனுமதித்தான்.

"போகோமஸ் துதி..." (நன்றி)

அவன் வீதியில் நடக்கும் போது, அவனை அனுமதித்த இராணுவ வீரனை, இன்னொரு இராணுவ வீரன் சிங்களத்தில் ஏசுவது கேட்கிறது. "கேபியூ நேரம் வந்திருக்கிறான். கொட்டியாவா இருப்பான். விட்டு விட்டாயே?"

சாட்டையாக அவன் வார்த்தைகள் தாக்க அவன் வேகமாக நடந்து, பாடசாலை ஒழுங்கையில் திரும்பி, சிறிய ஓட்டத்துடன் தன் வீட்டிற்குள் நுழைந்து






படிப்பகம்

www.padippakam.com

கொண்டான். அக்கா சுமதி அவனை வியப்புடன் பார்த்தாள்.

"இந்த நேரம் வந்திருக்கிறாயே, தம்பி".

அவன் சிரித்தான். பயம் நீங்கிய சிரிப்பு.

"அக்கா... தனுசா எங்கை?"

அக்காவின் முகத்தில் கலவரம்.

"சுன்னாகத்திற்குச் சினேகிதியின் திருமண வீட்ட போனவள். இன்னும் வரவில்லை. சிலநேரம் அங்க தங்கி விட்டாளோ?"

"கல்யாணப் பெண்ணை...? என்ன அக்கா?"

அவள் சந்தியை அடைந்தபோது இருட்டிவிட்டது. சைக்கிள் பஞ்சராகிவிட்டதால், ஒரு கிலோ மீற்றர் வரை உருட்டிவர வேண்டி ஏற்பட்டுவிட்டது. எப்பொழுதும் இப்படி நடந்ததில்லை. சினேகிதியின் கலியாணத்திற்கு எப்படிப் போகாமலிருப்பது? உயிருக்குயிரான நண்பி.

நீரில் நனைந்த கோழிக் குஞ்சாக அவள் தேகம் படபடத்தது. வீதியின் சன நெருக்கடியற்ற அமைதி அவளைப் பயமுறுத்தியது. வேகமாக நடந்தாள். இதயம் அடித்துக் கொள்வது தெளிவாக அவளுக்குக் கேட்கிறது. இராணுவச் சோற்றிற்குத் தம்மை இழந்துவிட்டு வீதியில் படுத்திருந்த நாய்கள் அவளைப் பார்த்துக் குரைத்தன.

அடுத்த முகட்டில் திரும்பினால் வீட்டிற்குரிய ஒழுங்கையில் இறங்கிவிடலாம்.

இருந்தாற்போல கனத்த சப்பாத்துச் சத்தம் அவள் பின்னால் எழுகிறது. பதறிப்போய்த் திரும்பிப் பார்க்கிறாள். நெடிய தடித்த உருவமொன்று அவளை நோக்கி வேகமாக வருவது தெரிகிறது. இராணுவச் சீருடையின் சரசரப்பும், சப்பாத்துக் கால்களின் கனத்த ஒலியும், தலையில் அணிந்திருந்த தலைப்பாகையும் அவனை அடையாளம் காட்டின.

அவனை அவள் சென்றியில் கண்டிருக்கிறாள். ஒருநாள் அவளுடைய அடையாள அட்டையைப் பரிசோதித்தான். அடையாள அட்டையிலிருந்த சிங்களமும் தமிழும் அவனுக்குப் புரியவில்லை.

"நம்பர்... நம்பர்..."

அவள் தனது அடையாள அட்டையின் ஒன்பது இலக்கங்களையும் அதிலுள்ள ஆங்கில எழுத்துக் குறியையும் சரியாகச் சொன்னாள்.

"...ம்..." என்றபடி அவளை ஆழமாக ஏறிட்டுப் பார்த்தான்.

அந்த நெடிய உருவம் இப்போது அவளைப் பின் தொடர்கிறது. மங்கலிருட்டில் தொடரும் அந்த மனிதனின் நோக்கத்தை அவள் புரிந்து கொண்டாள்.

சயிக்கிலை வேகமாக உருட்டிக் கொண்டு விரை நடை நடந்தவள், ஒரு கட்டத்தில் சயிக்கிலை அப்படியே வீதியோரத்தில் எறிந்துவிட்டு ஓடத் தொடங்கினாள்.

அவளை அவன் துரத்த ஆரம்பித்தான்.

மூச்சு நின்றுவிடும் போல உணர்வு. அடிவயிற்றிலிருந்து உச்சியை நோக்கி ஏதோ எழுந்து, நெஞ்சுக் குழியை அடைக்கிறது.

"ஏய்...ஏய்..." அவன் தொடர்ந்து கூறியவை அவளுக்குப் புரியவில்லை.

இனி அவளால் ஓடித் தப்ப முடியாது.

சுந்தரம் தமக்கையை மெல்லிய சினத்துடன் ஏறிட்டான்.

"என்ன வேலை செய்யிறியள், அக்கா. இன்னும் ஆறு நாளில தனுசாவுக்குக் கலியாணம். அவளை இப்ப போய், சினேகிதியின் கலியாணத்துக்கு அனுப்பி வைச்சிருக்கிறியள்."

"நான் என்னடா தம்பி செய்யிறது? சிறு வயசிலிருந்து தனுவோடு படிச்சவள். நல்ல பிரண்ட்ஸ்..."

"இப்ப ஊரில நடக்கிறதெல்லாம் உங்களுக்குத் தெரியாதே? வயது வந்த பொம்பிளைப் பிள்ளைகளைத் தனிய அனுப்பலாமே? என்னவோ...ஏதோ?..."

சுந்தரம் தலையில் அடித்துக் கொண்டான்.

"அப்படியொன்றும் ஆகாதடா.அவள் நேரம் சென்றதென்றால் சினேகிதி வீட்டிலேயே தங்கியிருப்பாள்... அதுகள் நல்ல சனம்..."

இவ்வாறு தம்பிக்குச் சுமதி ஆறுதல் கூறிய போதிலும், அவளது கலக்கம் தீரவில்லை. தனது கலக்கத்தை அவள் வெளிக்காட்டிக் கொள்ளவில்லை. கலவரமடையக் கூடாது.

" நான் போய்ப் பார்த்து வரவே, அக்கா?"

சுமதி துடித்துப் போனாள்.

"உனக்கென்ன விசரே? இப்ப வெளியில போக முடியாது. ஊரடங்குச் சட்டம் இருக்குது. நீ வந்ததே பெரிய காரியம்..."

"அவள் அங்கிருந்து வெளிக்கிட்டிருந்தால்..."

"அவளுக்குக் குறுக்கு வழியள் தெரியும். வந்திடுவாள்... அவள் அப்படிப் புத்தியில்லாத பொடிச்சியல்ல. அங்கைதான் நிற்பாள்..." இருள் மெதுவாகக் கவியத் தொடங்கியது.

மூச்சிரைக்கின்றது. நெஞ்சு அடைப்பது போன்ற உணர்வு. வாயால் பெரிதாகச் சுவாசித்தாள். இனி ஓடினால் நிலத்தில் விழுந்துவிடுவாள்.

அவன் அவளை நெருங்கிவிட்டான்.

எட்டி அவள் கரத்தை வெறியோடு பற்றிக் கொண்டான்.

"ஐயோ... அம்மா..." என்று அவள் பெருங் குரலில் வீறிட்டுக் கத்தினாள்.

முடக்கில் திடீரென ஒரு மோட்டார் சயிக்கில் ஒளி பாய்ச்சியபடி ஏறியது. மிக வேகமாக அவர்கள் அருகில் வந்து நின்றது. மோட்டார் சயிக்கில் ஹெட் லயிற் ஒளி அவர்களை ஊடுருவியது.

"சரத்சிங்... அவளை விடு..."

மோட்டார் சயிக்கிலிலிருந்து வந்த கம்பீரமான குரல் அவனைப் பதற வைத்தது. அவளது கரத்தைப் படக்கென விட்டான். பாம்பின் கௌவலிலிருந்து விடுபட்ட



படிப்பகம்

www.padippakam.com

தவளையாக அவள் நடுநடுங்கியபடி நின்றிருந்தாள். சரத்சிங்கின் உடலும் நடுங்கத் தொடங்கியது.

அவனது இராணுவ மேலதிகாரியிடம் கையும் களவுமாகப் பிடிபட்டுவிட்டான்.

''பயப்படாதை பெண்ணே... உனக்கு ஒன்றும் நடக்காது...'' என்று தமிழில் கூறியவன், ஹிந்தியில் சரமாரியாக ஏச, சரத்சிங் திரும்பி ஓடத் தொடங்கினான்.

''நன்றி ஐயா... என்னைக் காப்பாற்றினீர்கள்...''

''பயப்படாதே... என் பெயர் கேணல் உமாசங்கர்... பின்னால் ஏறிக்கொள்... பயப்படாதே... நான் உன் தந்தை போல...''

அவள் ஏறி அமர்ந்தாள். இன்னமும் பயம் குறையவில்லை.

இரவு அவர்களால் உணவருந்த முடியவில்லை. தமக்கை தந்த தேனீரைப் பருகிவிட்டு, சாப்பாடு எதுவும் வேண்டாமென்று சுந்தரம் கூறிவிட்டான்.

தனுசாவைக் குழந்தையிலிருந்தே தூக்கி வளர்த்தவன் அவன். அவளது மழலை மொழியை மனதார ரசித்தவன். அவளது வளர்ச்சியில் கண்ணுங் கருத்துமாக இருந்தவன்.

அவளுக்குத் திருமணம் பேசி முற்றாக்கியவன் சுந்தரம்தான். ஜனார்த்தன், தனுசாவுக்கு ஏற்ற கணவன். தனுசாவின் மெலிந்த, உயர்ந்த, சிவந்த அழகிற்கு அவன் தோற்றம் சோடை போனதன்று.

''கலியாணமாகப் போகிற ஒரு பெண். பிறத்தியார் வீட்டில ஓரிரவு தங்கினாள் என்பது மாப்பிள்ளை வீட்டாருக்குத் தெரிந்தால் என்ன நினைப்பினம், அக்கா...''

சுமதி, கோபத்தோடு தம்பியை ஏறிட்டாள். வார்த்தைகள் சூடாக வெளிவந்தன.

''என்ன நினைக்கிறது?''

''எங்கட ஆக்கள் அப்படி, அக்கா...''

''மனதுக்கு வந்ததெல்லாம் சொல்லிவிடலாமோ? மனச்சாட்சிக்குத்தான் பயப்படுவன், தம்பி. நரம்பில்லாத நாக்கால ஆரும் நாக்குவளைப்பினம்?

''அதில எங்கட ஆக்களுக்கு ஒரு சுகம், அக்கா.''

''அதைவிடு தம்பி!''

''சமூகத்தை விட்டு எப்பிடி அக்கா, வாழுகிறது?''

சுமதி சுந்தரத்தை ஆழமாக ஊடுருவிப் பார்த்தாள்.

''என்ர பிள்ளையை எனக்குத் தெரியும், இந்தச் சமூகத்திலும் பார்க்க. அவள் நெருப்பு...''

கதிரையில் அமர்ந்திருந்தபடியே அவள் உறங்க முயன்றாள். முடியவில்லை. விழிகள் மூடும் போது, அவன் அவளைத் துரத்திக் கரம் பிடித்த பயங்கரக் காட்சி விரிந்தது.

''பயப்படாதே, பெண்ணே. உனக்கு ஒன்றும் ஆகாது...'' என்றார் கேணல் உமாசங்கர். ''இராணுவத்தில் மட்டுமா இப்படிக் கயவர்கள் உள்ளனர்? எல்லாவிடமும்தான்...''

''என்னை இப்பவே வீட்டில கொண்டு போய் விட்டிடுங்கோ சேர்...'' அவள் கரம் கூப்பிக் கேட்டாள்.

உமாசங்கர் வேதனையோடு சிரிக்கிறார்.

''அது சரியல்ல அம்மா...''

''ஏன்?'' அவளைப் பயம் பற்றிக் கொண்டது.

'' உன்னைக் கொண்டு போய் இராணுவத்தினர் உன் வீட்டு வாசலில் இப்போது இறக்கிவிட்டால், அதைக் காண்பவர்கள் என்ன பேசுவார்கள் தெரியுமா? உன் எதிர்கால வாழ்க்கையே சரியம்மா...''

'' நீங்கள் உங்கள் மோட்டார் சயிக்கிலில் கொண்டு போய் விடுங்கோ...''

உமாசங்கர் புன்னகைத்தார்.

''நானும் இராணுவ வீரன்தான்... இதோ பார் பெண்ணே... விடிந்ததும் உன் சயிக்கிலையும் எடுத்துக் கொண்டு, இயல்பாக வீட்டிற்குப் போ... சினேகிதி வீட்டில் இரவு தங்கியதாகக் கூறு.... இங்கு காம்பில் இரவு தங்கியதாக எவருக்கும், உன் அம்மாவுக்கும் கூட மறந்தும் சொல்லிவிடாதே. அது உன் வாழ்வைப் பாதிக்கும். உன் பெயரைக்கூட நான் கேட்கவில்லை. அது கூட எனக்குத் தெரிய வேண்டாம். நடந்தவற்றை நீயே மறந்துவிடு''

கேணல் உமாசங்கரின் வார்த்தைகள் அவள் மனதில் தெளிவாகப் படிந்தன. கதிரையில் பயமின்றி அப்படியே கண்ணயர்ந்தாள். ஒரு பெட்சீற்றால் அவளுக்குக் குளிராதிருக்க உமாசங்கர் போர்த்துவிட்டமை, அவளுக்குக் காலை விழித்த போதுதான் தெரிந்தது.

அவர்களும் அன்று உறங்கவில்லை. தனுஷாவுக்கு என்ன நடந்ததோ? அதிகாலை புலரத் தொடங்கிய வேளையில் சுந்தரம் கூறினான்.:

''எனக்கு ஏனோ பயமாகவிருக்கிறது., அக்கா... தனுசாவை இன்னமும் காணவில்லை. கேள்விப்பட்டவை கலக்கத்தைக் கொடுக்குது. உவங்கள் நம்பிக்கை ஆனவங்களில்லை.''

''மனிதாபிமானம் ஒரு போதும் செத்துப் போனதில்லை. தம்பி...'' சுமதி நீண்டதொரு பெருமூச்சு விட்டாள். பின் தொடர்ந்தாள்: '' இவ்வளவு காலமும் ஒருவருக்கும் சொல் லாத விசயத்தை இப்ப உனக்குச் சொல்லுறன். ஒருநாள் மாலைக் கருக்கலில்... அப்ப இந்திய இராணுவம் இங்க இருந்தது... ஐபிகேஃவ்... ஓர் இராணுவ வீரனிடம் அகப்பட்டுக் கொண்டேன். அவன் என்னைத் துரத்தி என் கரத்தை வெறியோடு பற்றிக் கொண்டான்...''

''அக்கா...?''

''அப்ப கடவுள் போல கேணல் உமாசங்கர் வந்து என்னைக் காப்பாற்றினார். என்னைத் தனது காம்பில் வைத்திருந்து பாதுகாத்து காலையில் அனுப்பி வைத்தார்.எனது மானத்தைக் காப்பாற்றிய கடவுள் அவர். ஆனால்... தம்பி...''

சுமதியின் விழிகள் கலங்கி நீரை வடிய விட்டன.

''அக்கா...?''

'' அவர் என்ன சொன்னார் தெரியுமா? அந்தச் சம்பவத்தையும், இரவு இராணுவ காம்பில் தங்க நேர்ந்தமையையும் அம்மாவிற்குக் கூட கூறவேண்டாம் என்றார்...''

சுமதி விழிகளைத் துடைத்துக் கொண்டாள்.

சயிக்கிலிலிருந்து இறங்கிய தனுசா படலையைத் தள்ளித் திறந்தபடி உள்ளே வருவதை இருவரும் நிம்மதியாக நோக்கினர்.



படிப்பகம்

www.padippakam.com


# Wahls
## Shopping Centre

**Dealers in T. V, Radio, Video, Cassettes, Audio cassettes, Calculators, Luxury & Fancy Goods.**

152, Bankshall Street,
Colombo-11.

Tel : 446028, 441982
Fax: 381050

# LEELA
## Enterprises

Fancy Stationery & Saloon Items

**தலை நகரில் சலூன்களுக்குத் தேவையான சாமான்கள் யாவும் சகாய விலையில் பெற்றுக் கொள்ளும் இடம்**

24, SRI KATHIRESAN STREET,
COLOMBO-13.
TEL: 439412

www.padippakam.com

# ஆயுள் தண்டனை

திக்குவல்லை கமால்

"ரெண்டு புள்ளப் பெத்த பொம்புள"

இப்படிச் சொன்னால் எவருமே நம்பமாட்டார்கள். ஒல்லியான உடம்பு. அச்சொட்டான அங்கங்கள். புன்னகை பூக்கும் கீற்று உதடுகள். துடிக்கும் கண்கள். உண்மையில் இருபது வயதைக் கூட அவள் இன்னும் தாண்டவில்லைத்தான்.

அவளது வாழ்க்கையில் எல்லாமே அவசர அவசரமாக நடந்து முடிந்துவிடுவது போல...

நேற்றைய சம்பவம் அவளை வெகுவாகப் பாதித்து விட்டது.

பிள்ளைகள் இருவரும் நித்திரையாகி விட்டார்கள். மூன்றரை வயதில் ஒன்றும் இரண்டரை வயதில் இன்னொன்றுமாக இரண்டிருந்தால் இனிக் கேட்கவா வேண்டும்.

ரீவியைத் தட்டிவிட்டு அமர்ந்த போதுதான் முன் வாசலில் அந்த பெல் சத்தம் கேட்டது.

"ஆ...ரஸ்மின்... இந்தப் பொக்கத்துக்கு வர நெனச்சீக்கி"

அவன் சைக்கிளை விட்டு இறங்காமலே காலைக் குத்திக் கொண்டு நின்றான்.

"சும்மா வந்த...மச்சனில்லையா?"

"வெளன போனது இன்னேம் வரல்ல"

"சாச்சி காயிதமனுப்பினா?"

அவன் ஃபர்ஸானாவின் பெரியம்மாவின் மகன். இவளுக்கு ஆண் சகோதரர்களென்று எவருமே கிடையாது.

"உம்ம இப்ப காயிதமனுப்பியல்லேன்"

"அதெனா?" அவன் ஆச்சரியத்தோடு கேட்டான்.

"அடுத்தூட்டுக்கு ஃபோன் வந்தாப் பொறகு அடக்கெட உம்ம பேசிய"

"சரிசரி அப்ப லேசிதானே"

அதற்குமேல் பேசக் கிடைக்கவில்லை. மோட்டபைக் வந்து நின்றது.

"மச்சன் இப்பவா வார" - ரஸ்மின் முந்திக்கொண்டு கேட்டான்.

"ம்..." என்றவன் அதே வீச்சில் உள்ளே போய்விட்டான்.

"நான் பொறகு வாரன் ஃபர்ஸானா" ஒன்றும் காட்டிக் கொள்ளாமல் அவன் புறப்பட்டான்.

அவளுக்கு மாப்பிள்ளை மீது அடங்காத கோபம் பொங்கியது.

"பேசி முடிஞ்சா... இனம் கொஞ்சம் பேசேலேன்"

உள்ளே சென்றவன் காலடிச் சத்தம் கேட்டுத் திரும்பி நின்று இப்படிக் கேட்டான். முகத்திலே கருமை அப்பிக் கிடந்தது.

"மனிசத் தனமில்லாத மூதேவியொண்டு" அவள் சபித்துக் கொண்டாள்.

"புள்ள ரெண்டும் கட்டில்ல... அங்கலே ரீவியப் போட்டு வெச்சீக்கி... வெக்கம் கெட்ட பேச்சிக்கு மட்டும் கொறச்சலில்ல" வார்த்தைகள் தடிப்பாக விழுந்தன.

"எனக்கு நானாமாரோடையாலும் கொஞ்சம் பேசவழில்ல இந்த மனிசனால" கோபம் பொத்துக் கொண்டு பாய்ந்தது.

"ம்...நானாமாருதான்"

அதை அங்கீகரிக்கத் தயாரில்லாத பாங்கு அவனது வார்த்தைகளில்.

"ஏன்ட தல நஸீபு"

கைகளால் தலையில் அடித்துக் கொண்டு, அடக்க முடியாத அழுகையோடு காம்பராவுக்குள் புகுந்தாள். கதவைப் படாரென அடித்துப் பூட்டினாள்.

அவனுக்கு இது பழகிப் போன சங்கதி.

எப்படியாவது மனைவியைக் கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வரவேண்டுமென்ற கடுமையான முயற்சியில் இப்பொழுதெல்லாம் அவன் முழுமையாகவே இறங்கி விட்டான்.

ஃபர்ஸானாவால் தாங்கிக் கொள்ள முடியவில்லை. சென்ற வெள்ளிக் கிழமையும் இப்படித்தான்.

"ஃபர்ஸானா தாத்தா கோல்"

பக்கத்து வீட்டுச் சிறுவன் கத்தினான்.

"உம்மவாயீக்கும்... ஓடிவாரன்"

அவள் அனுமதி கேட்டுக் கொண்டு நிற்கவில்லை. பத்து நிமிடமாக உரையாடல் தொடர்ந்தது.

"எனத்தியன்...ஃபர்ஸானா உம்ம செல்லிய?"

"வரோணுமாம்"

"கொமரு குடுக்கவா...? இல்லாட்டி ஊடுகெட்டவாமா...? இன்னம் ரெண்டு வருஷத்து நின்டிட்டே வரச்செல்லு"

இப்படிக் கதை ஆரம்பித்துவிட்டது. கோல் வரும் நேரமெல்லாம் முகம் கோணாமல் கூப்பிட்டு உதவும் அவர்களோடு இணக்கமாக நடந்து கொள்ள



படிப்பகம்

www.padippakam.com

வேண்டுமென்பதில் அவள் கவனமாக இருந்தாள்.

"ம் இவளவு நேரமும் கோல்ல கதக்கியத்துக்கு ஒங்கடும்ம சவுதீல ராஜாத்தியா"

அவளது சுணக்கத்துக்கு வேறு அர்த்தம் கற்பித்துக் கொண்ட கணவனின் நக்கல் அவளுக்குப் பிடிக்கவில்லை.

"ஒங்களுக்கு எனத்த புடிச்சீக்கோ தெரிய. எனக்கு வேல ஒத்தனொத்தனோட பேசித்திரீததுதான்"

"ஹிஹ்ஹி" - சிரிப்பு

"ஒங்களோட அந்த டைமில கதச்சதுக்கு சிரிச்சதுக்கு எல்லாரோடேம் எனக்குக் கதக்கத் தேவில்ல. இந்தமட்டு கெட்டதனம் ஒங்கிட்டிக்குமெண்டு நான் மனாவிலயாலும் நம்பல்ல..."

"ம்... கோவம் மட்டும் வார.. போன கதயலால வேலில்ல... இதுப்பொறகாலும் நான் சொல்லியத்த கேட்டு நடந்துக்கோ"

"ம்... கேக்காம நடக்கிய மாதிரியேன் நீங்க செல்லிய"

நினைத்து நினைத்துக் கவலைப்பட இப்படி ஓரிரண்டு சந்தர்ப்பங்களா என்ன?

ஃபர்ஸானாவுக்கு இரண்டு மூத்த சகோதரிகள். வாப்பாவினால் மூன்று குமர்களையும் கரை சேர்க்க முடியாதென்பது உறுதியாகத் தெரிந்ததால் அவளது உம்மா சவூதிக்குப் புறப்பட்டுப் போய் முழுசாக ஆறு ஆண்டுகள்.

இரண்டு வருடத்துக்கொரு முறை வந்து இரண்டு சகோதரிகளைக் கரை சேர்த்துவிட்டாள்.

ஃபர்ஸானாவுக்காகத்தான் மீண்டும் பயணப்பட்டாள்.

ஃபர்ஸானாவின் மூத்த சகோதரியின் உறவினர்தான் அவளது கணவன் அஸாம் தாத்தா வீட்டுக்கு வந்துபோன பழக்கத்தில் இருவருக்குமிடையே உறவேற்பட்டுவிட்டது. சுறுசுறுப்பாக தொழில் வேறு செய்து கொண்டிருந்தான் அப்போது.

"இந்தக் கூத்து சரிவாரல்ல. விஷயத்த முடிச்சி வெக்கியதுதான் நல்லம். .. பாத்துப் பாத்திந்து வேலில்ல"

அவளுக்கு வயசு போதவேன். இப்பதானே பதினாறு. இன்னம் ரெண்டு வருஷமாலும் பொகோணும்"

"ரெண்டு வருஷம் போறதுக்கெடேல எனத்தெனத்த நடக்குமோ தெரிய"

"உம்மக்கு காயிதம் போட்டிட்டு எல்லாரும் சேந்து விஷயத்தச் செய்யோண்டியதுதான்... குடுக்கல் வாங்கலப் பொறகு பாத்துக்கொளேலும்"

குடும்ப அனுபவசாலிகள் .பர்ஸானா விடயமாக தங்களுக்குள் கலந்துரையாடி இறுதி முடிவுக்கு வந்துவிட்டார்கள்.

இரண்டொரு கிழமைக்கு மேல் நீடிக்கவில்லை. ஃபர்ஸானா - அஸாம் திருமணம் இனிதே நடந்தேறியது.

உல்லாச வாழ்க்கைதான். இளைய மகளின் காரியம் லேசாக நடந்துவிட்ட மகிழ்ச்சியில் உம்மாவும் அனுப்பிக் கொண்டிருந்தாள்.

மூன்றே வருடத்தில் இரண்டு பிள்ளைகளையும் பெற்றுப் போட்டுவிட்டார்கள்.

"அஸாமுக்கென்டா நல்ல சான்ஸொண்டு பட்ட... மெலிஞ்ச கடுவன்... நல்லோரு துண்டப் போட்டுக்கொண்டம். தெம்பிலி கொலேல காக்க நின்ட மாதிரி"

அவனது நண்பர்கள் அவனைப் பகிடி பண்ணும்போது தான் பெரும் அதிர்ஷ்டசாலியென்று பூரித்துப் போவான் அஸாம்.

ஒருநாள் கடற்கரையில் கூடிக் கதைத்துக் கொண்டிருந்த போது 'அழகிய மனைவியும் பொருத்தமற்ற கணவனும்' என்ற தலைப்பில் ஒரு கருத்தரங்காகவே அது பரிணாம மடைந்துவிட்டது. எத்தனையோ அழகிகளின் கதை அங்கே அலசப்பட்டது.

அன்றுமுதல் அவள் அழகுக்குத் தான் பொருத்தம் தானா என்ற விஷச்செடி அவனுக்குள் சடைத்து வளரத் தொடங்கிவிட்டது.

"இவனோட இனி வாழ்ந்து வேலில்ல" இப்படிப் புலம்பின படியே கட்டிலில் எழுந்தமர்ந்து கொண்டாள் ஃபர்ஸானா.

சற்று நேரத்துக்கு முன்புதான் கதவு பூட்டும் சத்தமும் வெளியே பைக் சத்தமும் கேட்டது. கூட்டாளிமாரோடு கூத்தாடிவிட்டு வழமைபோல் பதினொரு மணிக்குத்தான் அஸாம் வருவான்.

லைற்றைப் போட்டு குழந்தைகள் இரண்டையும் ஒழுங்கமைத்துப் படுக்க வைத்தாள். அந்தப் பிஞ்சு முகங்களை உடுருவிப் பார்த்தாள்.

"ஒன்டாலும் என்னப் போலில்ல.. சபட மொகம்...கறுப்பு"

திரும்பிப் பார்த்தாள். அலுமாரியின் பக்கக் கண்ணாடியில் அவள் விம்பம் தெரிந்தது.

அந்த சோகத்துக்குள்ளும் அவள் என்ன மாதிரி அழகாகத் தோற்றமளித்தாள்.

"ம்... எனக்கு இப்பதான் இருவது வருஷம்... நான் இன்னேம் பஸிந்துதான்... என்னைக் கலியாணமுடிக்க இனி ஒருத்தரும் புரியப்படாட்டீம் காரியமில்ல... எனக்கு இந்தக் கத்தம் பொறப்பான வாண... எனக்கொன்டும் வெளங்காத வயஸில அநியாயமா மாட்டிக் கொண்ட"

தாய்ப்பாசம் புயலாய்ச் சுழன்றடிக்க... கண்ணீரோடும் கவலையோடும் அவள் ஒரு முடிவுக்கு வந்துவிட்டாளா?

"நடந்தது நடந்திட்டு... மாப்புள பொணாட்டிக்கெடேல சண்ட தக்கம் வாரதானே...சமாளிச்சிக் கொளோணும்... உட்டுப்போட்டு நெனக்கீயதே பாவம்"

இப்படி உபதேசம் பண்ண எத்தனையோ பேர் வரத் தான் போகிறார்கள். இந்த அபத்த வாழ்க்கையிலிருந்து அவளை மீட்டெடுக்க எவரும் வரப் போவதில்லையே!

யோசித்தாள். முன் வாசலில் வந்தமர்ந்து கொண்டு யோசித்தாள். விளையாட்டுத் தனமான ஆசைகளின் விளைவுகளிலிருந்து அவள் தன்னை விடுவித்துக் கொள்ள முனைந்துவிட்டாளா?

வெளியே பைக் சத்தம் கேட்டது.

நேரம் பதினொரு மணி.

கதவைத் திறந்த அஸாம் திடுக்கிட்டான். ஃபர்ஸானா இப்படியொரு கோலத்தில் அமர்ந்திருப்பாளென்று அவன் எதிர்பார்க்கவில்லை. அவளது முகபாவம் ஆரோக்கியமாக அவனுக்குப் படவில்லை.

"ஃபர்ஸானா பதினொரு மணியாகீட்டேன்... வாங்க படுக்கோம்"

இதமாக ஒலித்தது அவன் குரல். இரவு நகரும்போது என்ன பிரச்சினையிருந்தாலும் ஆண் குரல்களெல்லாம் இப்படித்தான் ஒலிக்குமோ!

"ம்...படுக்க...படுத்தது போதும்"

இறுதி முடிவாகத்தான் அவள் சொல்கிறாளென்பது அவனுக்கு இன்னும் புரியவேயில்லை. ●



படிப்பகம்

www.padippakam.com

# எங்களுக்காக வேண்டிக்கொள்ளும்

தெளிவத்தை ஜோசப்

"செக் பொயின்டுகளில் மாட்டிக் கொள்ளாமல் போய்விட்டால் நல்லது. நேரத்துக்குப் போய்விடலாம்"

ஆட்டோவின் அலறலொலியுடன் மனைவியின் மெலிதான குரல் காதுவழி புகுந்து மனதைக் குடைந்தது.

இப்போது ஐந்தரை ஆகிறது. ஆறரை மணிக்கு 'நொவினா'

வத்தளையிலிருந்து 'கும்பனித்தெரு' என்று தமிழால் பிரசித்தம் பெறத் தயங்கிவிட்ட ஸ்லேவ் ஐலன்ட் குழந்தை யேசுவின் கோவிலுக்குப் போக வேண்டும்.

ஒரு மணிநேரம் இருக்கிறது. நல்ல நாட்களில் என்றால் ஒரு மணி நேரம் என்பது மிகத் தாராளம். நாற்பது நிமிடம் இருந்தாலே போதும்.

இன்றைய நாட்களில் எதையும் நிச்சயிக்க முடியாது. இடையில் மாட்டிக் கொண்டோமென்றால் தொலைந்தது.

கோவிலாவது: குழந்தை யேசுவாவது! பிரார்த்தனையாவது!

வெள்ளிக்கிழமை விடாமல் தொடர்ந்து குழந்தை ஏசு கோவிலுக்கு நாங்கள் போகத் தொடங்கிய ஆரம்பத்தில் நண்பர் ஒருவர் எங்களை இப்படிக் கிண்டல் செய்தார்.

'வளர்ந்த ஏசுவாலேயே ஒன்றும் செய்துகொள்ள முடியவில்லை. சிலுவையில் அறையப்பட்டு வருந்தி வருந்திச் செத்தார். குழந்தை ஏசு என்னத்தைச் செய்துவிடுவார்'

ஆண்டவர்களை யார் வேண்டுமானாலும் கிண்டல் செய்யலாம். ஆள்பவர்களைத்தான் ஒன்றும் சொல்ல முடிவதில்லை என்று அவருக்கு நான் கூறினேன்.

ஒவ்வொரு வெள்ளியும் மாலை ஆறரை மணி நவநாள் வழிபாட்டுக்குத் தவறாமல் செல்வதை ஒரு மரபாகக் கொண்டிருக்கின்றேன். அதுவும் மனைவி மக்களுடன் குடும்பமாக.

இன்று மாதத்தின் முதல் வெள்ளி.

அதுதான் 'ஒரு மணி நேரம் போதுமா' என்னும் மனைவியின் ஆதங்கம்.

வத்தளையில் இருந்து எத்தனை செக் பொயின்ற்கள். மனம் கணனியாகிப் படர்கிறது.

ஹெந்தலைச் சந்தியைத் தாண்டியதுமே ஒன்று. ஏழெட்டு பேர் போல் நிற்பார்கள். அதில் மாட்டாமல் தப்பிக்கவே முடியாது. அடுத்தது, ஓவியமுல்லை. இதுவரை எங்களை நிறுத்தியதில்லை. இன்றைக்கு எப்படியோ!

பிறகு பேலியகொடையைத் தாண்டி கொழும்புக்குள் பிரவேசிக்கு முன் விக்டோரியா பாலத்திடம் ஒன்று.

பாலத்துறைப் பக்கம் திரும்பாமல் நேராகப் போய் கண்டி வழியாக கொழும்புக்குள் நுழைந்துவிடலாம் என்றால் புதுப்பாலத்திடமும் பெரியதாக ஒன்று. மணல் மூட்டைகளும் பீப்பாய்களுமாக... கையை நீட்டாமல் விடவே மாட்டார்கள்.

சுகததாச ஸ்டேடியத்தைத் தாண்டியதும் ஸ்போர்ட்ஸ் ஹோட்டலுக்கு முன்பதாக ஆமர் வீதி முகப்பில் ஒன்று.

ஆமர் வீதியில் விழுந்து கொச்சிக்கடை வழியாகப் போய்விடலாம் என்றால் மீன் மார்க்கட்டை எட்டுமுன் ஒன்று. துறைமுகவாயில் சுற்று வட்டத்திடம் ஒன்று. லேக் ஹவுஸ் றவுண்ட் எபவுட்டிடம், ரீகலுக்கு முன்பாக ஒன்று.

அத்தனையும் தாண்டி அந்தா இந்தா என்று கோவிலை அடையும்போது கொம்பனித்தெரு போலீஸ் ஸ்டேசனிடம் ஒன்று.

கொச்சிக்கடை வழி வேண்டாம். கூடுதலான சோதனைச் சாவடிகள்! மருதானையால் போய்விடலாம் என்றால் கெப்பிட்டலுக்கும் டவர் மாளிகைக்கும் இடையில் ஒன்று. அதைத் தாண்டி நிம்மதியாக ஓடி அதோ தெரிகிறது கோவில் என்னும் தூரத்துக்கு வந்துவிட்டதும் யூனியன் பிளேசில் காப்புறுதிக் கூட்டுத்தாபனத்தை எட்டுமுன் ஒன்று. பாதையின் குறுக்கே போடப்பட்ட கம்பித் தடைகளும் தாங்களுமாய்.

அப்பாடா! ஒரு மணிநேரம் எப்படிப் போதும்.

ஆபீஸ் முடிந்ததும் வீட்டுக்கோடி தெரிந்த ஒரு ஆட்டோவைப் பிடித்து வீட்டுப் பெண்களுடன் கோவிலுக்குப் போவதே வழக்கம்.

ஏதாவது ஒரு காரணத்தின் நிமித்தம் ஒரு வெள்ளிக் கிழமை போகமுடியவில்லை என்றால் அதுவே ஒரு பெருங்குறையாக விஸ்வரூபம் கொண்டு மனதை அழுத்திக் கொண்டிருக்கும்.



படிப்பகம்

www.padippakam.com

ஆகவே சந்தர்ப்பங்களுக்கு ஏற்றாற்போல் சில மாறுதல்களைச் செய்து கொள்வோம்.

ஒரு தடவை எனக்கு ஆபீஸ் தாமதமாகும் போல் தெரிந்தது. வழமையான ஆட்டோவை ஏற்பாடு செய்துகொண்டு மனைவியையும் மகளையும் கிளம்பி வரச் சொல்லிவிட்டு நான் ஆபீசடியில் நின்றேன். எங்கள் ஆபீசைத் தாண்டித்தான் கோவிலுக்குப் போக வேண்டும்.

ஐந்துக்கெல்லாம் வெளியேறி வழிமேல் விழி வைத்து ஓடிவரும் ஓட்டோக்களை எல்லாம் உற்று உற்றுப் பார்த்துகண் பூத்துவிட்டது.

"நாலு மணிக்கெல்லாம் கிளம்பி வரச் சொன்னேனே. இன்னும் என்ன... வழியில் ஏதாவது...?" என்று மருகி நிற்கையில் ஆறு மணிபோல் ஆட்டோ வந்து நின்றது.

"என்னப்பா" என்றவாறு ஏறிக் கொண்டேன்.

"என்னவா... அதை ஏன் கேட்கிறீர்கள்...?" என்று ஆரம்பித்தாள் மனைவி.

மகளைப் பார்த்தேன். முகங்கள் பொலிவாக இல்லை இருவருக்கும்.

"விக்டோரியா பாலமுனையில் ஆட்டோ நிறுத்தப்பட்டதாம். உள்ளே இரண்டு பெண்கள் மட்டுமே! பிறகு கேட்பானேன்.

பெண்ணென்றால் பேயும் இரங்கும் என்பது தமிழ்ப் பழமொழி. ஆனால் இவர்களுக்குத் தமிழ்ப் பெண்களைக் கண்டுவிட்டால் பேயைக் கண்டது போலத்தான். 'பயின்ட' வைத் தொடர்ந்து இருவரும் இறங்கிக் கொண்டனர்.

"கோவிலுக்கு என்னும் பதிலுடன் அடையாள அட்டை நீட்டப்படுகிறது."

'மேயா கவுத' தாயிடம் கேள்வி.

'எனது மகள்' மனைவியின் பதில்.

அடையாள அட்டைகளை நீண்ட நேரம் திருப்பித் திருப் பிப் பார்த்தவன் 'எதைக் கொண்டு நான் அதை ஏற்றுக் கொள்ள முடியும். பிறந்த இடமும் வசிக்கும் இடமும் கொழும்பு என்று இருக்கிறது உங்களுக்கு. இந்தப் பெண் ணுக்கு தெல்பெத்தைப் பதுளை என்றிருக்கிறது. இப்படி ஓரமாக நில்லுங்கள்' என்றவன் பெரியவனிடம் நடந்தான்.

அவனுடைய கேள்வி மிகவும் அசட்டுத்தனமாகப் பட்டிருக்கிறது மனைவிக்கு.

திரும்பி வந்தவனிடம் ' என்னுடைய பெயருடன் இணைந்திருக்கும் பெயர் எனது கணவருடையது. இதில் என் மகளின் பெயருடன் இணைந்திருக்கும் அதே பெயர் அவளது தந்தையினுடையது...'

அவள் என்னுடைய மகள் என்பதற்கு அதுதான் இப்போதைய அத்தாட்சி...

நான் பதுளைக்குப் போயிருந்தபோது இவள் பிறந்தாள். அதனால்தான் பிறந்த இடம் பதுளை என்றிருக்கிறது. இதில் என்ன கேள்வி வேண்டியிருக்கிறது... அதுவும் போக எனக்கும் அடையாள அட்டை இருக்கிறது... அவளுக்கும் இருக்கிறது... பிறகு அவள் எனது மகளாக இருந்தால் என்ன இல்லாவிட்டால் என்ன...'

மனைவியின் சிங்களம் அவனை மருள வைக்கிறது. இருந்தாலும் சமாளிக்கின்றான்.

'நீங்கள்தானே மகள் என்று சொன்னீர்கள். அதனால் தான் உறுதி செய்து கொள்ள கேட்க வேண்டி வந்தது' என்றவன் மெதுவாகக் கேட்கின்றான் 'தெலிபெத்தை' எங்கிருக்கிறது... யாப்பாணநெவே நே...'

மனைவி விளங்கப்படுத்தி இருக்கின்றாள்.

'பதுளையில் இருந்து பசறை போகும் பாதையில் இரண்டாவது மைலில் இருக்கிறது தெல்பத்தை என்னும் தேயிலைத் தோட்டம்' என்று.

தெளிவத்தை என்பதன் ஆங்கிலப் பதம் அது. அதைத் தான் சிங்களத்தில் அப்படியே எழுதி இருக்கின்றார்கள்.

அதைக் கண்டுதான் அவனும் மிரண்டிருக்கின்றான். ஏதோ தெல்லிப்பழை மாதிரி ஒலிக்கின்றதே என்று.

'யாழ்ப்பாணப் பக்கம் இல்லையே' என்னும் அவனு டைய வினாவின் தொனியும் அதுதான்.

யாழ்ப்பாணத்தை விடமாட்டோம் என்றவர்களும் இவர் கள்தான். யாழ்ப்பாணம் என்றதும் வெருள்கிறவர்களும் இவர்கள்தான்.

அடையாள அட்டைகளைத் திருப்பித் தந்து 'போங்கள்' என்றான்.

கிட்டத்தட்ட ஒன்றரை மணிநேர அலைக்கழிப்பு. தனியாக வெளியே சென்று பழகியிராத இவர்களுக்குப் பயமாகவும் வெறுப்பாகவும் போய்விட்டது.

'வேண்டாம்னு போயிறிச்சீங்க... ஏண்டா கோயிலுக்குக் கௌம்புனோம்னு... நடு ரோட்டுல நிப்பாட்டி வச்சுக்கிட்டு... என்னமோ அவனோட சொத்தை கொள்ளையடிக்க வந்த மாதிரி... போறவாறவன்லாம் பாத்துப் பாத்துக்கிட்டு போறா னுக... ஸுவுல வேடிக்கை பாக்குறாப்புல'. சிறுமைப்படு த்தப்பட்ட சீற்றத்திலிருந்து அவள் இன்னும் மீளவில்லை.

அடையாள அட்டைகள் தமிழில் எழுதப்பட்டிருப்பதால் தான் நடுப்பாதையில் நிறுத்தி வைக்கின்றார்கள்.

அரச அலுவலகங்களில் தமிழ் எழுதுகின்றார்களா? இல்லை. ஆஸ்பத்திரிகளில் பொது இடங்களில், போக்கு வரத்துச் செய்யும் ரயில்களில், பஸ்களில்... இடங்களைக் கூறும் பெயர்ப்பலகைகளில்... இல்லை.

அரசு அனுப்பும் சுற்று நிருபங்கள், படிவங்கள், பத்திரங்கள் அவ்வளவு ஏன் அரசு நடத்தும் தமிழ் விழா போன்றவைகளின் அழைப்பிதழ்களில்... இல்லை.

ஆனால் ஆட்களைக் காட்டும் அடையாள அட்டைகளில் தமிழ் இருக்கிறது. அது ஏன்?

இது போன்ற செக் பொயின்டுகளில் இருப்பவர்களுக்கு 'இவன் தமிழன் சந்தேகமற, பரிபூரணமாகச் சோதனை செய்துகொள்' என்று அறிவுறுத்தத்தான். அதைத்தான் இவர்களும் செய்கிறார்கள். இதில் கொதிக் கவோ கோபிக்கவோ என்ன இருக்கிறது?அவர்களின் சந்தேகங் களை நிவர்த்தி செய்ய வேண்டியது நமது பொறுப்பு'.

இந்த 'செக்கிங்' நிலைமைகள் வருவதற்கு முன் வழங்கப்பட்ட அடையாள அட்டைகளில் தமிழ் எழுதப் பட்டிருக்கவில்லையே!

காரணத்துடன்தான் காரியங்கள் நடக்கின்றன.

கோவிலுக்குப் போவதற்குக்கூட நாங்கள் அனுபவிக் கும் இன்னல்கள்... சோதனைகள்...

யாருக்குப் புரிகின்றன இவைகள்.

இன்னல்களிலிருந்து விடுபடத்தான் கோவிலுக்கே செல்கின்றோம்.

இன்றும் அப்படி யாராவது ஒரு அதிகப் பிரசங்கியிடம் அகப்பட்டுக் கொண்டால் தொலைந்தது. வழிபாடு முடிந்த



படிப்பகம்

www.padippakam.com

பிறகுதான் கோவிலை அடைய முடியும்.

'தடங்கல்கள் ஏதுமின்றி, நேரத்துடன் கோவிலை அடையவேண்டும். நவநாள் வழிபாட்டில் முழுதாகப் பங்கேற்க வேண்டும்' என்று மன்றாடியபடியே ஆட்டோ பயணம் தொடர்கிறது.

வத்தளையில் இருந்து லேக்ஹவுஸ் சுற்றுவட்டம் வரை ஒரு இடத்திலும் சிக்கிக் கொள்ளாமல் அந்த நாள்போல் ஜிவ்வென்று வந்து ரீகலையும் தாண்டியாகி விட்டது.

ஒவ்வொரு பொயின்ட்களையும் தாண்டும் போது மனம் லேசாக அடித்துக் கொள்ளும்.. முன்னால் போன வாகனத்தை நிறுத்திவிட்டார்கள். நம்மை நிறுத்த மாட்டார்கள் என்னும் போலியான மகிழ்ச்சி வேறு.

அந்தா இந்தா என்று கோவிலை அடையும் நேரம் படுபாவி 'ஸ்டொப்' கார்டைத் தூக்கிப் பிடித்தானே...

ஆட்டோக்காரன் ஓரத்திலடித்து நிறுத்தினான். டக்கென இறங்கி நின்று லைசன்ஸ் இத்தியாதிகளை நீட்டினான்.

நானும் இறங்கி, மனைவிக்கு இறங்க வழி விடுகையில் ஆமிக்காரன் அருகே வந்தான்.

தோளில் தட்டி என்னை ஒதுக்கிவிட்டு உள்ளே பார்த்தான். பெண்கள்.

'பயின்ட ஒன நே...' என்று மெதுவாகக் கூறியபடி இறங்கத் தேவையில்லை என்று சமிக்ஞை செய்தான்.

அதற்குள்ளாக டிரைவரின் லைசன்ஸ் இத்தியாதிகளையும். எங்களுடைய அடையாள அட்டைகளையும் சோதனையிட்ட மற்றவன் 'டமில் கட்டிய நே' என்றவாறு 'இவர்களைத் தெரியுமா'? என்று சாரதியிடம் வினவினான்.

'நன்றாகத் தெரியும்' என்று சாரதி சர்டிபிகேட் வழங்கினான்.

மனைவியின் முகம் திடீரென மாறியது. 'நாங்கள் தமிழர்கள் என்பதால் ஒரு ஆட்டோ சாரதி எங்களுக்கு நற்சாட்சிப் பத்திரம் வழங்க வேண்டி இருக்கிறது' என்பதே அந்தத் திடீர் முகமாற்றத்துக்கான காரணம்.

இவன் அவனைப் பார்த்தான்.

'ஆட்டோ சாரதியின் விலாசமும் உங்கள் விலாசமும் ஒரே இடத்தைக் குறிப்பதால் தான் கேட்டேன்' என்றான் அவன்.

எங்களின் உணர்வுகளைப் புரிந்து கொள்கிறவர்களாக அவர்கள் இருந்தது மகிழ்ச்சியைத் தந்தது.

'எங்கே போகின்றீர்கள்'

'இன்று முதல் வெள்ளி வரை இன்ஃபன்ட் ஜீஸஸ் கோவில் நொவீனாவுக்குப் போகின்றோம். ஆறரை மணிக்கு நொவீனா...' மனைவி கடகடத்தாள்.

'ஓ இன்று வெள்ளிக்கிழமை... அதுவும் மாதத்தின் முதல் வெள்ளி. எங்களுக்கு அதெல்லாம் ஒன்றும் தெரிவதில்லை. நாள் கிழமை... கோவில்... திருவிழா... எதுவும் தெரிவதில்லை... நேரமும் இல்லை...இரவு பகல் வெயில் மழை என்று இப்படி எங்காவது நிற்போம். டியூட்டி முடியும் வரை உயிருடனிருந்தால் கேம்ப்... பிறகு டியூட்டி... நீங்கள் செல்லுங்கள்' என்றவன் ஒரு ஏக்கத்துடன் கூறினான் 'கோவிலில் பூசையின்போது எங்கள் நினைவும் வருமானால் எங்களுக்காகவும் வேண்டிக் கொள்ளுங்கள்'

'பாவமாறுக்குங்க' என்றாள் மனைவி.

நொவினா தொடங்க இன்னும் நேரமிருக்கின்றது. ஆலயத்தில் பிரார்த்தனை நடைபெறுகின்றது. தேவ அன்னை மரியாளையும் சகல புனிதர்களையும் எங்களுக்காக வேண்டிக் கொள்ளும் என்னும் மன்றாட்டுப் பிரார்த்தனை.

'எங்களுக்காக வேண்டிக் கொள்ளும்' குரல்கள் ஒலிக்க ஒலிக்க அந்த இரண்டு ஆமிக்காரர்களின் முகங்களே எங்கள் மனம் முழுக்க வியாபித்து நிற்கின்றன.

'எங்களுக்காகவும் வேண்டிக் கொள்ளுங்கள்' என்னும் அவர்களின் குரல் எங்கள் காதுகளில் ஒலித்துக் கொண்டே இருக்கிறது.

இன்றைய நவநாள் பிரார்த்தனையை அவர்களுக்கு ஒப்புக் கொடுத்து அவர்களுக்காக வேண்டிக் கொள்வோம் என்று தீர்மானித்துக் கொண்டோம்.

மணி ஆறரை.

THERE SHALL BE SHOWERS OF BLESSINGS
THIS IS THE PROMISE OF LOVE

என்னும் ஆரம்ப கீதத்துடன் வழிபாடு தொடங்குகிறது.

குருவானவர் சீடர்களுடன் பீடத்தில் ஏறுகின்றார்.

கோவில் கொள்ளாத சனம்.

தங்களைச் சுற்றி நடக்கின்ற சகல விதமான புற நிகழ்வுகளையும் மறந்து இறைவனுடன் ஒரு மணிநேரம் ஒன்றிவிடும் அற்புதம் ஒரு சிலருக்கு எப்படியோ சித்தித்து விடுகிறது.

நவநாள் வழிபாடு நடந்து முடிவதற்கடையாளமாக இறுதிக் கீதம் ஒலிக்கத் தொடங்குகிறது.

கோவிலில் அத்தனை கூட்டமும் ஒன்றித்து அக்கீதத்தில் இணைகிறது.

இசையும் கீதமும் உச்சத்தில் ஒலித்துக் கொண்டிருக்கையில் திடீரென ஆலயம் அதிர்கிறது. பூகம்பம் வந்தது போல் அமர்ந்திருந்தவர்கள் ஆடி விழுந்து எழுகின்றனர்.

அத்தனை பெரிய சப்தத்தை இதற்குமுன் நாங்கள் கேட்டதே இல்லை.

ஒரு வினாடி ஆலயம் ஸ்தம்பித்துவிட்டது.

குண்டுதான் வெடித்திருக்கிறது!

கோவிலுக்குள்ளா... தெரியவில்லை. அத்தனை கூட்டமும் விதிர் விதிர்த்துப் போய் நிற்கிறது.

குண்டு கோவிலுக்குள் வெடிக்கவில்லை என்பதை உணர்ந்து கொள்ள ஒரு சில வினாடிகள் பிடித்தன.

'அமைதியாக இருங்கள்... சிரம் தாழ்த்தி மன்றாடுங்கள்..." பீடத்தில் இருந்து வந்த குருவானவரின் நம்பிக்கைக் குரலுடன் இறுதி கீதம் தொடர்கிறது.

நாவுலர்ந்து போன வாய்களில் இருந்து கீதம் எழ மறுக்கிறது.

ஒரு வினாடிதான்! பிறகு தொடர்கிறது.

WHEN MY LIFE IS ALMOST GONE
HEAR MY CRY HEAR MY CALL
HOLD MY HAND LEST I FALL

நொவினா முடிந்துவிட்டது.

பாதைக்கிறங்கப் பயந்து போய் கோயிலில் நின்ற கூட்டம் வெளியேற வெகு நேரம் பிடித்தது.

மெது மெதுவாகச் செய்தி வருகிறது.

சோதனைச் சாவடியில்தான் வெடித்திருக்கிறது குண்டு. சோதனையில் ஈடுபட்டிருந்த இரண்டு ஆமிக்காரர்களும் உடல் சிதறி...

டியூட்டி முடியும் வரை உயிருடன் இருந்தால்... என்ற அந்த இரட்டைமுகங்கள் எங்கள் இதயத்தின் ஆழத்தில்...



படிப்பகம்

www.padippakam.com

# மலையகத்தில் காமன் கூத்து

## சில அவதானிப்புகள்

லெனின் மதிவானம்

மலையகத்தில் வாழும் தோட்டத் தொழிலாளர்களிடையே காமன் கூத்து, அருச்சுனன் தபசு, பொன்னர் சங்கரர் போன்ற பாரம்பரிய கூத்துகள் காணப்படுகின்றன. மலையகத்தில் காமன் கூத்தே ஏனைய கூத்துக்களை விடச் செல்வாக்கு மிக்கதாகவும் பிரபல்யம் அடைந்ததாகவும் காணப்படுகிறது. இக்கூத்து பற்றியப் பல ஆய்வு முயற்சிகள் வெளிவந்துள்ளன. அவை பெரும்பாலும் கூத்துத் தொடர்பான கலையம்சத்தை விபரிப்பனவாகவும், சடங்கு முறைகள் தொடர்பான அறிமுகத்தை வழங்குவன வாகவுமே காணப்படுகின்றன.

இக்கூத்துத் தொடர்பாக கள ஆய்வில் பெற்ற சில தகவல்களை மலையக வரலாற்றுப் பின்னணியில் வைத்துத் தர முற்படுவதாக இக்குறிப்பு அமைகின்றது. அவ்வகையில் இத்துறையில் ஆய்வினை மேற்கொண்டுள்ளோருக்கான சில தகவல்களைத் தர முற்படுவது இதன் சாராம்சம் என்பதனையும் கூற விழைகின்றேன்.

பத்தொன்பதாம் நூற்றாண்டின் இறுதியிலும், இருபதாம் நூற்றாண்டின் தொடக்கத்திலும் பெருந்தோட்டப் பயிர்ச் செய்கைக்காக ஒப்பந்தப் பிணைப்புச் செய்து கொண்டு இங்கு கொண்டு வரப்பட்ட தொழிலாளர்கள், அவர்களின் வழக்காறுகள், சடங்குமுறைகள் என்பவற்றினையும் கொண்டு வந்தனர். அவை பெரும்பாலும் இலங்கையில் தமிழர்களின் கலாச்சார பண்பாடுகளிலிருந்து கணிசமான அளவு வேறுபட்டிருந்தது. இவர்கள் தமிழகத்தில் எந்தக் கிராமத்தில் இருந்து வந்தனரோ! எந்த சாதியைச் சேர்ந்தவர்களாகக் காணப்பட்டனரோ அவற்றிற்கு உரித்தான வாழ்க்கை முறையின் பாதிப்புக் காணப்பட்ட அதே சமயம், இலங்கையில் பெருந்தோட்டப் பயிர்ச் செய்கையின் உற்கத்தி உறவுகளுக்கும் ஏற்ற வகையில் புதிய பரிணாமம் அடைந்தனர். அவ்வகையில் தான் இவர்களது கலைகளும் புதிய வடிவம் பெற்று இம்மக்களிடையே செல்வாக்கு பெற்றுவிளங்குகின்றன. மலையகத்தில் காமன் கூத்துப் பற்றி நோக்குவதற்குப் பண்டைய புராண இதிகாச காவியங்களில் "காமன்" பற்றிய செய்திகளை வேண்டியுள்ளது.

சிலப்பதிகாரத்தில் கண்ணகி காமவேள் கோட்டம் சென்று வழிபடுமாறு கூறியதாகக் கதையுண்டு. சுரமஞ்சரி என்பவள் சீவகனே கணவனாக வரவேண்டுமென்று காமனை வழிபட்டதாகச் சீவக சிந்தாமணி கூறுகின்றது. நாச்சியார் திருமொழியில் காமன் பண்டிகை கொண்டாடப் படும் மாதம், திகதி என்பன கூறப்பட்டுள்ளதைக் காணலாம். கலித்தொகையில் பெண்டிர் பால் கொண்டு சென்று காமன் கோயிலில் வழிபட்ட செய்திகளை அறியக்கூடியதாக உள்ளது. சிலப்பதிகாரத்தில் கண்ணகி 'கணவனை விடுத்து காமனை வணங்குவது பீடன்று' என உரைப்பதன் மூலம் பெண்கள் காமனை வழிபாடு செய்திருப்பதனைக் காணக்கூடியதாக உள்ளது. ஆண்டாள் திருமாலைக் கணவனாகப் பெற காமன்நோன்பு நோற்றிருக்கின்றாள். பெண்கள் காமவேள் கோட்டம் புகுமுன்னர் சோமகுண்டம், சூரியகுண்டம் என்ற இத்துறைகளில் வழிபாடு செய்தனர். (மாத்தானை வடிவேலன் 1993) இவ்வாறான இலக்கியச் செய்திகள் ஒருபுறமிருக்க கந்தபுராணத்தில்தான் காமனது வரலாறு, கதை என்பன மிகவும் விரிவாகப் பாடப்பட்டுள்ளது. அதன் உற்பத்திக் காண்டத்தில் காமன் தகனம் பற்றியும் பேசப்படுகிறது. நாட்டார் இலக்கியங்களில் காணப்படுகின்ற காமன் பற்றிய கதை மரபானது பெரும்பாலும் கந்தபுராணக் கதையுடனே மிக நெருங்கிய தொடர்பினைக் கொண்டுள்ளது. மலையக மக்களிடையேயும் காணப்படுகின்ற காமன்கூத்தானது கந்தபுராணத்தின் வழி வந்தது எனக் கூறின் அது தவறாகாது.

இக்கூத்தானது சடங்காகவும், தோட்ட மக்களது வழிபாட்டு முறையாகவும் விளங்குகின்றது. காமன்கூத்தினை நடாத்துவதால் தோட்டம் சிறப்படைவதுடன் பெண்கள் தாம் விரும்பிய கணவனை அடையலாம், குடும்ப வாழ்வு செழிக்கும் என்ற நம்பிக்கையும் காணப்படுகின்றன.

மலையகத்தில் மாசி மாதம் அமாவாசை கழிந்த மூன்றாம் பிறையில் கம்பம் ஊன்றி கரகம் பாலித்தல் என்ற நிகழ்ச்சியுடன் ஆரம்பமாகும். இக்கூத்தானது கம்பம் ஊன்றி மூன்றாம் அல்லது ஐந்தாம் நாளில் காமன் ஆட்டம் தொடங்குகிறது. பின்னர் தோட்டங்கள், கடை வீதிகள் தோறும் ஆடப்பட்டு நிதி சேகரிக்கப்படும். இறுதியாக முப்பதாவது நாளில் இறுதி நாள் நிகழ்ச்சி நடைபெறும். இறுதி நாள் நிகழ்வு காமன் கம்பம் ஊன்றி



படிப்பகம்

www.padippakam.com

உள்ள பொட்டலில் ஒரு திறந்த வெளியரங்கில் (Open Theartre) ஆடப்படும். இன்றைய நாளில் மன்மதனுக்கும், ரதிக்கும் தேவர்கள் கூடிய சபையில் திருமணம் செய்து வைக்கப்படுவதுடன், பின்னர் காமன் தகனம் வரையிலான நிகழ்வுகள் விடிய விடிய நடைபெறும்.

இக்கூத்துத் தொடர்பான கள ஆய்வின்போது பின் வரும் விடயங்களை அம்சங்களாகக் (தோட்டங்களுக்குத் தோட்டம் வேறுபாடு இருப்பினும்)காணக்கூடியதாக இருந்தன.

1. இக்கூத்துப் பெரும்பாலும் படிக்காத பாமர மக்களாலேயே ஆடப்படுகின்றன.

2. இக்கூத்தில் பங்கு கொள்ளும் கலைஞர்கள், காமன், வாத்தியார், பார்வையாளர்கள் என்போர் பெரும்பாலும் தோட்டத் தொழிலாளர்களாகவே காணப்படுகின்றனர்.

3. சாதாரணத் தொழிலாளர்கள் பங்கு கொள்வதனால் இக்கூத்தின் பாடல், ஆடல், உடை, நடிப்பு என்பவற்றில் ஓர் ஒழுங்கமைப்பு பேணப்படாதிருக்கின்றது.

4. நகர்ப்புறங்களில் இக்கூத்து ஆடப்படாமல் தோட்டப்புறங்களிலேயே ஆடப்படுகின்றது. இதற்கு மறுபுறமாக நகர்ப்புறங்களில் செந்தமிழ் வழக்கிலான இலக்கிய நாடகங்கள் இடம் பெற்றன.

5. இக்கூத்து இனம், மதம், மொழி, சாதி என்ற பேதங்களைக் கடந்து உழைக்கும் மக்கள் என்ற நிலையில் போற்றிப் பாதுகாக்கப்பட்டு வருகின்றது.

6. இக்கூத்தின்போது தப்பு அதனுடன் இணைந்த டோலக்கு, ஜசுல், கஞ்சிரா முதலிய வாத்தியக் கருவிகளே இசைக்கப்படுகின்றன.

7. இக்கூத்துக்கான பாடல்கள் (பெரும்பாலும் குப்புசாமி ஆச்சாரியார் முதலானோரால் பாடப்பட்டு அச்சுப் பதிவு செய்த புத்தகப் பாடல்கள்) நாட்டாரியல் இசையிலான லாவணி தாளத்திலேயே பாடப்படுகின்றன. மிக அண்மைக் காலங்களில் தமிழ்த் திரைப்படத்தின் தாக்கம் காரணமாக இவற்றில் சில மாற்றங்கள் ஏற்பட்டுள்ளன.

8. மதம் ரதிக்கான திருமண நிகழ்வைத் தவிர ஏனைய நிகழ்வுகள் யாவும் திறந்த வெளியரங்கிலேயே இடம் பெறுகின்றன. இறுதிநாள் நிகழ்ச்சி மட்டும் இதற்காக ஒதுக்கப்பட்ட களத்தில் நடைபெறும்.

9. காமன் கூத்தில் ஆட்ட அசைவு முறையானது பாத்திரங்களுக்கு ஏற்ப அமைந்திருக்கும். எடுத்துக் காட்டாக மதன், ரதி ஆட்டம் என்பன ஒரு விதமாக அமையத் தூதன், இயமன் முதலானோரின் ஆட்டங்கள் வேறுவகையாக அமைந்திருக்கும்.

10. காமன்கூத்தில் வெட்டியான், வெட்டிச்சி என்ற பாத்திரங்கள் முக்கியமாக இடம் பெறுகின்றது. இவை ரதி மன்மதன் பாத்திரங்களுக்கு உதவியாக அமைகின்றன. மிக அண்மைக் காலங்களில் இப்பாத்திரங்களின் வெளிப்படுத்துகையானது தொழிலாளர்களின் பிரச்சனைகளை வெளிப்படுத்துவதாக அமைந்து காணப்படுகின்றன.

இவ்விடத்தில் சில விடயங்கள் குறித்து நோக்க வேண்டியுள்ளது. தென்னிந்திய நிலப்பிரபுத்துவ சமூக அமைப்பின் சாதிய அடக்கு முறைகளுக்கும் ஒடுக்கு முறைக்கும் உட்பட்டிருந்த இம்மக்கள் இலங்கையில் ஒரு பெருந்தோட்ட உற்பத்தியின் கீழ் பரந்துபட்ட தொழிலாள வர்க்கமாக மாற்றப்பட்டதுடன் வர்க்க ரீதியாக அடக்குமுறைக்கும் உட்பட்டனர். இங்கு மூலதனக்காரர்களுக்கும், உழைப்பை விற்பவர்களுக்கான பாட்டாளிகளுக்கும் இடையில் நிலவுகின்ற உற்பத்தி உறவே மலையக சமூக மனித ஊடாட்டத்தின் அடிப்படையாகும். அதனடியாக எழும் வர்க்கப் போராட்டமே அதற்கான தீர்வாக அமைந்திருந்ததனால் மலையக தொழிலாளர்களிடையே காணப்பட்ட வழிபாடுகள், கலைகள் என்பனவும் அவற்றைப் பிரதிபலிப்பதாக அமைந்து காணப்படுகின்றன.

மலையக சமூக அமைப்பின் குணாதிசயம் காரணமாக வடகிழக்குப் பகுதியில் காணப்பட்ட தென்மோடி, வடமோடி கூத்துக்கள், பறைமேளக்கூத்து, மகுடிக்கூத்து போன்றன போன்று சாதியத்தை பிரதான முரண்பாடாக கொண்டிருக்கவில்லை. அத்துடன் இதற்காக பாவிக்கப்பட்ட கருவியும் "தப்பாகும்". தப்பு என்பது அடிநிலை மக்களை துயில் எழுப்பவும் (அம்மக்களின் வாழ்வுடன் கூடிய கருவியைக் கொண்டே அவர்களைச் சுரண்ட முற்படல்) பயன்படுத்தப்பட்டது. இன்று "பறைமேளம்" என்பது சாதிய அடையாளத்துடன் குறிப்பிடப்பட மலையகத்தில் 'தப்பு' என்னும் பதம் அத்தகைய இறுக்கத்திலிருந்து விடுபட்டு நிற்பதனைக் காணலாம்.

இதைத் தவிர பெருந்தோட்ட உற்பத்தியுடன் இணைந்து வாழ்ந்த சிங்களவர்,முஸ்லிம், கிறிஸ்தவர்கள் போன்றோரும் இக்கூத்தில் பங்கு கொள்வதினை அவதானிக்க முடிகிறது. உதாரணமாக அட்டன் கார்பெக்ஸ் தோட்டத்தில் நுனாப் எனும் முஸ்லிம் இளைஞன் ரதி வேடம் தாங்கி ஆடி வருவதையும், அட்டன் ஒஸ்போன் தோட்டத்தில் யூசுப் என்பவர் தூதன் பாத்திரம் தாங்கி கூத்து ஆடிவருவதையும் காணலாம். இவ்வாறு சிங்கள இளைஞர் சிலரும் பங்கேற்ற அவதாரங்கள் (பாத்திரப் படைப்புக்கள்) என்பன தோட்டத்திற்குத் தோட்டம் வேறுபடுவதையும் காணலாம். காமன் திருமாலின் மகன் என்றும் கிருஷ்ணரின் மகன் என்றும் பிரம்மனின் மகன் என்றும் பல்வேறு கருத்துக்கள் கூறப்படுகின்றன. எனினும் மதனை மாயவன் மகனாகவும் ரதியை சிவனின் மகளாகவும் கொள்ளப்படுகின்ற மரபே முதன்மை பெற்றுள்ளது. அத்துடன் அவர்களின் பிறப்புப் பற்றிய செய்திகளும் மாறுபட்டே காணப்படுகின்றன. இதற்கு தென்னிந்தியாவில் இம்மக்கள் வாழ்ந்து வந்த சூழலும் இங்கு இடம்பெற்ற கதைகளுமே முக்கிய காரணங்களாகும்.



படிப்பகம்

www.padippakam.com

இக்கூத்தினைச் சற்றே நிதானித்து நோக்கும்போது சைவ, வைணவ மதங்களுக்கு இடையிலான மோதலைச் சித்திரிப்பதாகவும் அமைவதைக் காணலாம். உழைக்கும் மக்கள் மீதான ஒடுக்கு முறைகள் இவ்விரு மத முகாம்களிலிருந்து வெளிப்பட்டிருப்பினும் கொடூரமானதாக அமைந்தது. அத்துடன் மதமுகாம் சிறு நிலக்கிழார்களை பிரதிபலிப்பதாக அமைந்ததுடன் கடவுள் என்பவர் மக்களுடன் வாழ்ந்து அவர்களின் துன்பங்களைப் போக்குபவராக காட்சியளித்தார். (அவதாரகோட்பாடுகள்) சிறப்பாகப் போற்றியதுடன் சிவனை ஓர் உயர்வர்க்க கடவுளாகக் கண்டனர். அதன் விளைவாகவே சிவன் பற்றிய வெறுப்பும் மலையக தொழிலாளர்களிடையே விரவியிருந்தது.

காமன் கூத்தில் சிவனுக்கு எதிரான கலகக் குரலைக் காணலாம். அத்துடன் சிவனை எதிர்க்கின்ற மதம் என்ற பாத்திரமே இம் மக்களைப் பெரிதும் கவர்ந்திருக்கிறது.

இக்கூத்தில் மலையக மக்களின் வாழ்க்கை பிரதி பலிக்கப்படவில்லை என்றபோதிலும் அவற்றில் இழை யோடியுள்ள சில மீறல்களும், அடக்கு முறைக்கு எதிரான போர்க்குணமும் இம் மக்களின் வாழ்க்கை முறையுடன் இணைந்து காணப்பட்டமையால் அவை அம்மக்களை வெகுவாகக் கவர்ந்து நிலைபெறத் தொடங்கியது. இவ்வாறான கூத்துக்கள் பக்தியுணர்வுடன் ஆடப்பட்ட போதிலும் இவற்றில் இடம் பெற்ற மீறல் உணர்விற்குரிய பாத்திரங்கள் இம்மக்களைக் கவரக்கூடியதாக இருந்தன. இவ்வகையில் நோக்குகின்றபோது காமன் கூத்தில் இடம் பெறுகின்ற முரண்பாடுகளும், போராட்டங்களும் ஆதிக்க சக்திகளுக்கும், அவற்றுக்கெதிரான சக்திகளுக்கும் இடை யிலான முரண்பாடாகவே அமைந்து காணப்படுகின்றது.

சமூக முரண்பாடுகளின் அடிப்படையில் எழும் மோதல்களையும், சகல உணர்வுகளையும் பார்க்கின்ற நாம் அதில் சைவ மேலாதிக்கத் தன்மையுடன் இடம் பெறுகின்ற சமரசப் போக்கினையும் கவனத்தில் எடுத்தல் அவசியமானதொன்றாகின்றது. அதாவது கூத்தின் இறுதியில் சிவனை யாராலும் வெல்ல முடியாது என்ற கருத்து நிலை நிறுத்தப்படுகின்றது. பேராசிரியர் கா. சிவத்தம்பி "மூன்றாம் உலக நாடுகளின் சமூக உளவியல் அடித்தளத்தை அறிந்து கொள்வதற்கு நாட்டார் வழக்கு அத்தியாவசியமானவை" என்கின்றார்.

உழைக்கும் மக்களின் சமூக மாற்றப் பணிகளில் ஈடுபடுவோர் இவ்வம்சத்தினைக் கருத்தில் கொள்ளல் அவசியமானதாகும். அவ்வகையில் கூத்தில் இடம் பெறு கின்ற கலகக் குரல்களையும்,சமரச போக்குகளையும் உணர்ந்து கொள்ளல் வேண்டும். போர்க்குணத்தை மட் டும் கவனத்தில் கொள்வது பின்னடைவிற்கும் சமரசத் தினை மட்டும் எடுத்துக் கொள்வது விரக்திக்கும் வழிவகுக்கும்.

கிராமியக் கூத்துக்களை மேடைக்கு ஏற்றவகையில் மாற்றியமைத்து மக்கள் மத்தியில் கொண்டு சென்றதில் பேராசிரியர்.சு.வித்தியானந்தனுக்கு முக்கிய இடமுண்டு.

இவ்வகையில் மலையகக் கூத்துக்களையும் மேடைக்கேற்ற வகையில் அமைப்பதற்கான முயற்சிகள் ஆங்காங்கே இடம்பெற்று வந்துள்ளன. 1970களில் இருந்து திருச்செந்தூரன் அவர்களாலும், இன்று சில கலைஞர்களும் இம் முயற்சியில் ஈடுபட்டு வந்துள்ளனர். 1990களின் ஆரம்பத்தில் பாடசாலை மட்டத் தமிழ்த் தினப் போட்டியில் இக்கூத்துச் சேர்க்கப்பட்டிருந்தமையால் இத்துறையில் ஓரளவு புலமைத்துவம் பெற்ற ஆசிரியர்கள் சிலர் இம்முயற்சிகளை மேற்கொண்டனர்.

அம்பகமுவ கல்வி வலயத்தைச் சார்ந்த ஜே.எப். ஹெலன், மூ.மூவேந்தன், என்.சாம்பசிவமூர்த்தி, முதலா னோரின் முயற்சிகள் குறிப்பிடத்தக்கன. அவசியமான பாத்திரங்கள், கதையோட்டத்திற்கு அவசியமில்லாத பாடல்கள், ஒன்றுக்கு மேற்பட்ட காப்பு விருத்தங்கள் என்பவற்றினை நீக்கி அரை அல்லது ஒரு மணித்தியாலத் துக்கு ஏற்ற வகையில் ஒழுங்கமைத்திருந்தனர். இம்முயற்சி இன்னும் திட்டமிட்ட வகையில் ஒழுங்கமைக் கப்படல் வேண்டும்.

சமூக மாற்றப் பணிகளில் ஈடுபட்டுள்ள அறிஞர்கள் சிலர் இக்கூத்து மரபுகளைப் பயன்படுத்தி நவீன உள்ளடக்கம் கொண்ட நாடகங்களை ஆக்கியிருந்தனர். இலங்கையில் பேராசிரியர் சிவத்தம்பி, சி.மௌனகுரு முதலியோரின் முயற்சிகள் விதந்துரைக்கத்தக்கது. அத்தகைய முயற்சிகளுக்கான சாத்தியக் கூறுகள் மலையகத்தில் தென்படுகின்றன. இவ்வாறான சூழலில் இக்கூத்துக்களில் சமய உணர்வினை விட சமுதாய உணர்வே முனைப்புற்று வருவதைக் காணக்கூடியதாக உள்ளது.

தகவல்:

பெருமாள் கம்பளையார் பொன்னையா (காமன் வாத்தியார் காசல்றி தோட்டம் - ஹட்டன்)

எஸ்.எல்லன் (கா.வா. கார்பெக்ஸ் தோட்டம் - ஹட்டன்)

எம்.வடிவேல் (கா.வா. ஒஸபோன் தோட்டம் - ஹட்டன்)

எஸ்.சாம்பசிவமூர்த்தி (உப அதிபர் - டங்கல்ட் த.வி. டிக்கோயா)

குழந்தை.வே.பாலா (ஆசிரியர் - டயகம)

ஆர்.எஸ்.முத்துக்குமார் (ஆசிரியர் - பதுளை)

பயன்பட்ட நூல்கள்:

மௌனகுரு.சி. பழையதும் புதியதும் (1992) மட்டக்களப்பு

கேசவன்.கோ. "கதைப்பாடல்களும் சமூகமும்" (1975) தோழமை வெளியீட்டகம் - கும்பகோணம்.

மாத்தளை வடிவேலன் (கட்டுரையாசிரியர்) "தமிழ் நாட்டார் வழக்காற்றியல்" (1995) இந்து கலாசார சபை கொழும்பு

லெனின் மதிவானம் (கட்டுரையாசிரியர்) "மலையக பரிசுக் கட்டுரைகள்" (2000) சிவலிங்கம் ஞாபகார்த்தக் குழு கொழும்பு.

Velupillai C.V Born to Labour (1970) M.D.Gunasena Colombo.



படிப்பகம்

www.padippakam.com

# உள்ளும் புறமும் பேய்கள்



**கெகிறாவ ஸஹானா**

குறிப்பிட்ட இருபது நோயாளிகளையும் பரிசோதித்தாயிற்று. போகலாம் என்று எழுந்தபோது வாசலில் நின்ற தாதி பவ்யமாகக் குனிந்து சொன்னாள்,

“Sir. இன்னொரு பேஷன்ட் வெளியே நெடுநேரமாக நிற்கிறார்...”

நேரத்தைப் பார்த்தான். இருபது நிமிடங்கள் மீதமிருந்தன.

“சரி, வரச்சொல்.”

வெளிநாட்டு உயர்ரக நறுமணம் கமகமக்க ஒரு பெண் வந்து அமர்ந்தாள்.

“ளுசை, எனக்கு வயது முப்பது. ஒரு மகன் இருக்கிறான். ஒரு வயது. இப்போ நான் மீண்டும் கன்சீவ் பண்ணியிருக்'கேன். இரண்டு மாசம்...”

“நல்லது”

“இந்தப் பிள்ளையை யடிழசவ பண்ணனும் ளசை”

டாக்டர் நஸ்ருதீன் மெதுவாகப் புன்னகைத்தான். மேஜையில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்த தனது பெயர்ப் பலகையைத் திருப்பி அவள் பார்வையில் படும்படியாக வைத்தான்.

“ஐ ஆம் டொக்டர் நஸ்ருதீன் எம்.பி.பி.எஸ், எம்.எஸ்.ஓ.ஜி, எம.சீ.ஓ.ஜி, வி.ஓ.ஜி ஒன்லி. ஐடோன்ட் டு எபோஷன்ஸ்.”

கண்கள் லேசாகப் பனிக்கத் தலையைக் குனிந்து கொண்டாள். உதட்டைக் கடித்து ஒரு நிமிடம் மௌனம் காத்தாள்.

“நா இந்த ஊருக்குப் புதுசு ளசை, எங்கே போறது... யாரைக் கேப்பது... ஒண்ணுமே புரியல்ல. அதனாலதான் உங்களைக் கேட்டா நல்லதுன்னு வந்தேன்.”

அவன் இதுவரை இப்படி ஒரு கேசை சந்தித்த தில்லை. வழக்கமாக சட்டென்று சிடுசிடுக்கும் நஸ்ருதீன் ஏனோ மென்மையாகப் புன்னகைத்தபடி தலையை ஆட்டினான். அவளை நம்புகிறேன் என்கிறாற்போல்.

“வட்ஸ் த ரீஸன்...?”

“என் மகன் ஒரு அப்நோமல் கேஸ் sir, அவனோட ரொம்பவும் இன்வோல்டா இருந்தாதான் அவன in future நோர்மல் நிலைக்குக் கொண்டு வரலாம்னு கன்சல்டன்ட் சொல்றார். அதுதான்...”

தொடர்ந்து அவளோடு பத்து நிமிடங்கள் வரை உரையாடிக் கொண்டிருந்தான். ஈற்றில் அவள் கூறிய காரணங்கள் யாவும் நியாயமானவை என்பதன் காரணமாகவோ, அல்லது அவள் மீது இயல்பாகவே சுரந்த அனுதாபம் கலந்த ஈர்ப்புக் காரணமாகவோ தனக்குத் தெரிந்த ஒரு டாக்டரின் பெயரைக் குறிப்பிட்டு அவரிடம் போகும்படி சொன்னான்.

★ ★ ★

ஏறத்தாழப் பத்து நாட்கள் கழிந்துவிட்டன. அன்றிரவு தனது குவாட்டர்ஸில் அமர்ந்து தனியே டி.வி. பார்த்துக் கொண்டிருந்தபோது டெலிபோன் கிணுகிணுத்தது. மறுமுனையில் ஷர்மிளா.

“லொட் ஒஃப் தேங்க்ஸ் சேர், உங்க உதவியால எல்லாம் நல்லபடியா முடிஞ்சிட்டுது...”

உற்சாகம் கொப்புளிக்க நஸ்ருதீன் கேட்டான்.

“ஓ ஹவ் நைஸ். என் நம்பர் எப்படி. உங்களுக்கு..?”

“டிரக்டரியை ரிஃபர் பண்ணினேன் சேர்.”

“ஓ! வெரி க்ளெவர் ஒஃப் யூ...”

காரணமின்றி பலத்த குரலில் சிரித்தான்.

தொடர்ந்து பல நிமிடங்களாக அவர்கள் உரையாடிக் கொண்டிருந்தனர்.

★ ★ ★

ஷர்மிளாவின் சொந்த ஊர் குருணாகலுக்குப் பக்கத்தில் பொத்துஹர. கணவனின் ஊர்தான் கெகிறாவ. கல்யாணமாகி மூன்று வருடங்களில் ஒரு ஆண் குழந்தை.

அவள் ரொம்பவும் திறமையாகப் படித்தவள். மருத்துவத்துறை அனுமதியை நாலு புள்ளிகளில் கோட்டை விட்டவள். எனினும் மனம் தளராமல் ஃபார்மஸி கோர்ஸ் செய்து முடித்துச் சிறிய ஃபார்மஸி ஒன்றை ஊரில் நடாத்தி வந்தாள்.

நயீம் அனுராதபுரத்தில் எஸ் - லோன் நிறுவனத்தில் ரீஜனல் மெனேஜர் வேலை பார்த்து வந்தான். தூரத்துச் சொந்தமும் கூட. எனினும் பெற்றோர் பார்த்துப் பேசிய திருமணம்தான். திருமணத்திற்குப் பிறகு குருணாகலுக்கும் அனுராதபுரத்துக்கும் பிரயாணிப்பது அவனுக்குச் சிரமமாக இருந்தது. எனவே அவளை கெகிறாவைக்கு அழைத்து



படிப்பகம்

www.padippakam.com

வந்துவிட்டான். சிறிய கடை ஒன்றை வாடகைக்கு எடுத்துக் குடியமர்த்தினான். கடையின் முன்புறம் ஃபார்மஸியும், மாடியில் வீடும் இருந்தன.

அவளிடம் ஆரம்ப முதலே காணப்பட்ட இயல்பூக்கமும். சுறுசுறுப்பும் அவனுக்கு ரொம்பப் பிடித்தன. அவனைப் பொறுத்தவரை பெண் என்பவள் படித்தவளாகவும். விவேகியாகவும் இருக்க வேண்டும். அந்த எதிர்பார்ப்பை அவள் இலகுவாகப் பூர்த்தி செய்தாள். இப்போது அனுராதபுரத்திலிருந்து கெக்கிறாவைக்குத் தினமும் பயணம் செய்வது அவனுக்கு வெகு எளிதாக இருந்தது.

குழந்தையையும் கவனித்துக் கொண்டு ஃபார்மஸியையும் நடத்துவது அவளுக்கு ஒரு பொருட்டாக இல்லை. எனினும், எதிர்பாராத விதமாக மீண்டும் கர்ப்பமுற்றபோது அவள் கலங்கிப் போனாள். அவனுடன் கலந்தாலோசித்தாள். கருவைக் கலைப்பதே நலம் என்று இருவரும் தீர்மானித்தனர்.

அதற்கொரு காரணமும் இருந்தது. மிகவும் சூட்டிகையான ஷர்மிளா - நஸீம் தம்பதியினருக்குப் பிறந்த செல்வன் ஏனோ குறை வளர்ச்சியைக் கொண்டிருந்தான். பல மாதங்களாகத் தொடர்ச்சியாகச் சிகிச்சையளிக்கப்பட்ட பின்பே அவனைப் பெரும் பாடுபட்டுக் காப்பாற்ற முடிந்தது. இந்நிலையில் டாக்டர்கள் இன்னொரு குழந்தையைப் பெற்றுக் கொள்ள இப்போதே அவசரப்பட வேணடாம் என்று ஆலோசனை கூறியிருந்தனர். எப்படியோ நடந்த தவறினால் மீண்டும் கர்ப்பமானாள் ஷர்மிளா.

நஸ்ருதீன் இனிய முப்பதுகளைக் கடந்தவன். இரண்டு குழந்தைகளுக்குத் தந்தை. பொலனறுவையில் பிறந்தவன். வசதியான, செல்வாக்கான குடும்பத்தைச் சேர்ந்தவன். மாத்தளையில் மணமுடித்து குடித்தனமாக இருந்தான். வார இறுதியில் மட்டும் வீட்டுக்குச் சென்று வருவான்.

எத்தனை சம்பத்துகள் இருந்தபோதும் வாட்டசாட்டமான தேகக்கட்டும், தேஜஸான முகவாக்கும் அவனிடம் இல்லை. எனவேதானோ என்னவோ பெண்கள் என்றால் அவனுக்கு அலர்ஜி. தூர நின்றே பேசுவான். அவனது தொழிலும் அதற்கு ஏற்றாற்போலவே அமைந்திருந்ததால் அவனால் இந்தப் பலவீனத்தை இலேசில் உதறித் தள்ள முடியவில்லை.

பெண் என்றால் வெறும் சதைப்பிண்டம் என்கிறாற்போல் அவனிடம் ஒரு கணிப்பு உண்டு. தாதிமாரிடமும், உதவியாளர்களிடமும் அனேகமாக சிடுசிடுவென்று பேசுவான். காரணமின்றி எரிந்து விழுவான்.

வார இறுதியில் மனைவியிடம் செல்லும்போது தான் ஒரு மகப்பேற்று நிபுணன் என்பதை வலிந்து மறக்க முயற்சிப்பான். அப்படி மறந்தால் மட்டுமே அவனால் இயல்பாக இருக்க முடியும். குழந்தைகளிடம் பிரியமாக இருப்பினும் சடாரென்று மூட் மாறிவிடுவான். மனைவியும், குழந்தைகளும் அவனுக்கு ஏற்ற விதத்தில் நடந்து கொண்டதன் காரணமாக குடும்ப வாழ்க்கை பிரச்சனையின்றி கழிந்து வந்தது. எனினும், அவன் வீட்டில் தங்கிச் செல்கின்ற இரண்டு நாட்களிலும் கத்தியின் மீது நடப்பது போன்ற கவனத்துடன் அவனது மனைவி நடந்து கொண்டால்தான் உண்டு. கொஞ்சம் இசகு பிசகானால் கூடப் போதும், பேய்த் தாண்டவமாடுவான் நஸ்ருதீன்.

நேரம் ஒன்பதரையைத் தாண்டி இருந்தது. எதிர்வீட்டு மாமி கொண்டுவந்த உணவை வேண்டா வெறுப்பாகச் சாப்பிட்டுவிட்டு மீண்டும் டி.வி. முன்னால் அமர்ந்தான் நஸ்ருதீன்.

திடீரென்று தலை கிறுகிறுத்து மரத்துப் போனாற்போலிருந்தது. ஷர்மிளாவின் வனப்பு மிகு தோற்றமும், எழிலார்ந்த முகமும், கண்கள் எதிரே சுழல்வது போல் ஒரு பிரமை. அவளது மெல்லிய குரல் காதுகளில் கிசுகிசுக்கிறாற்போல்...

எத்தனையோ பெண்களுக்கு மருத்துவம் பார்த்த மகப்பேற்று நிபுணன் அவன். பெண்களைக் கண்டு சிறிதும் சலனமடையாதவன். மெல்லிய ஆடையுடன் வந்து களைப்பும் தளர்ச்சியுமாக மல்லாக்கப் படுத்திருக்கும் பெண்களை அவன் மிகக் கவனமாகப் பரிசோதிப்பான். அவர்களது சகல உடல் உறுப்புக்களையும் தொட்டுப் பரிசோதிக்கும் எக்கணத்திலும் அவன் கீழ்த்தரமான எந்த உணர்ச்சிகளுக்கும் அடிமையானதில்லை. முகத்தை நேராகப் பார்ப்பதே போன்று பரிசோதனைகளை முடித்து விடுவான். பெண்களின் இடுப்பு வளைவுகளோ, அந்தரங்க மச்சங்களோ அவனை எப்போதும் எதுவுமே செய்ததில்லை. தாய்மையை அடைவதற்குத் தவிக்கின்ற பெண்களைத் தக்கவாறு தயார்படுத்தி, எளிதாக வழிதிறக்கச் செய்ய முயலும்போது அந்தப் பெண்கள் படும் பாடு கண்டு எப்போதுமே அவனுள் ஓர் அனுதாப உணர்வு மேலோங்கி நிற்கும்.

பொதுவாக பயத்துடனும், நோயின் வாட்டத்துடனும் வரும் பெண்களே அனேகம். சில வேளைகளில் வழமைக்கு மாறாகச் சிரித்துப் பேசும் வேற்று மதப் பெண்களை எதிர்கொண்டிருக்கிறான். "totally Prostitutes" என்று எடுத்த எடுப்பில் முடிவு கட்டி, அவர்களிடம் கவனம் திரும்புவதைத் தவிர்த்துமிருக்கிறான்.

எனினும், இத்தனை வருட காலத் தொழில் அனுபவத்தல் சென்ட் மணக்க, தனியே வந்த abortion பற்றிப் பேசிய, மிக நியாயமான காரணங்களை எடுத்துக்கூறி மகப்பேற்று நிபுணனான தன்னையே கருச்சிதைவை ஆமோதிக்கச் செய்து, வெற்றிகரமாக அதை முடித்து, இப்போது phone இல் நன்றியும் சொல்கின்ற இந்தப் பெண்ணை - ஷர்மிளாவை - அவனால் ஜீரணிக்கவே முடியவில்லை. புரிந்து கொள்ளவும் முடியவில்லை.

டி.வி.யை அணைத்துவிட்டு வெறுமனே இருளில் அமர்ந்திருந்தான். இந்த உணர்ச்சி என்ன? காதலா? காமமா? வேட்கையா? அன்பா...?

நெஞ்சு வரண்டு வாய் காய்ந்து போயிற்று. கல்யாணமாகிக் குழந்தை குட்டிகள் கண்ட மகப்பேற்று நிபுணன் நஸ்ருதீன் - தகித்துப் போய் சிலையாய் உட்கார்ந்திருந்தான் நெடுநேரமாக.

இனியும் தாமதிக்க முடியாது போலிருந்தது. கதவை அறைந்து மூடிவிட்டு, கராஜில் நிறுத்தியிருந்த காரை நோக்கிச் சென்றான். விரைந்து இயக்கினான்.

நகரின் மையப் பகுதியில் பிரதான வியாபார நிலையங்களுக்கு அருகில் இருந்தது ஷர்மிளா ஃபார்மஸி தூரத்தே காரை நிறுத்தினான். உள்ளிருந்தபடியே போர்டைக் கூர்ந்து பார்த்தான். தொலைபேசி இலக்கங்களை மனதில் பதித்துக் கொண்டான்.போர்ட்டருகே பளிச்



படிப்பகம்

www.padippakam.com

சென்று பரவியிருந்த நியோன் விளக்கொளி உதவிற்று.

நேரம் பத்து இருபது. கடைகள் யாவும் மூடப் பட்டிருந்தன. சற்றுத் தொலைவில் நைட் ஹோட்டல் ஒன்று விழித்துக் கிடந்தது. ஒன்றிரண்டு பிச்சைக்காரர்கள் கடைத் திண்ணையில் சுருண்டு படுத்திருந்தனர்.

அவளது மாடி வராண்டாவில் பூச்சாடிகளில் அழகாகப் பூக்கள் படர்ந்து வெளியே தொங்கிக் கொண்டிருந்தன. கதவுகள் மூடியிருந்தபோதும் உள்ளே மெல்லிய விளக் கொளி. எவ்வளவு நேரம் அவ்வாறே காத்திருந்தானோ?

திடீரென்று கனவா என்று தெரியாத ஒரு நிகழ்வு. அவள் மெல்லிய நைட் கவுனுடன் ஜன்னலருகே வந்து நின்று திரைச்சீலையை விலக்கி வெளியே பார்த்தாள். தோளில் மகனைச் சாய்த்துத் தட்டிக் கொடுத்தவாறே ஜன்னலைத் திறந்து வைத்துச் சிறிது நேரம் நின்றிருந்தாள். காற்று வாங்குகிறாளோ என்னவோ?

உடலெங்கும் அனல் பொறிகள் பறக்க நஸ்ருதீன் அவசரமாகக் கார்க் கதவைத் திறந்தான். அதற்குள் மறைந்துவிட்டாள். திரைச்சீலைகள் பழையபடி அகலமாக இழுத்து விடப்பட்டன.

பொங்கிய பால் வடிந்து போனாற்போலிருந்தது. அவளது கணவன் வந்திருக்கிறானா? எவ்வளவு பேசியிருக்கிறேன்... இதைக் கேட்க மறந்துவிட்டேனே...! தனது முட்டாள்தனத்தை நொந்துகொண்டான்.

ஷர்மிளாவுடன் இரண்டு உரையாடல்களின் போதும் தன்னையறியாமலேயே அதிகளவு சகஜமாகவும், ஆர்வத் துடனும் தான் அவளைப் பற்றிய பல விபரங்களைச் சேகரித்ததை உணர்ந்து தனக்குள்ளாகவே அதிசயித்துக் கொண்டான் நஸ்ருதீன். அவளும் அவன் எதிர்பாராத அளவுக்கு மிக வெளிப்படையாக தன்னைப் பற்றிய எல்லாச் செய்திகளையும் ஒளிவு மறைவின்றி வெளியிட் டமை அவனுள் பெரும் பிரமிப்பை ஏற்படுத்திவிட்டது.

எல்லாவற்றுக்கும் மேலாக நேற்றிரவு மங்கிய விளக் கொளியில் மறைந்தும், மறையாமலும் அவள் காட்டிய அழகுக்கோலம் அவன் மனத்துள் தெள்ளிய சித்திரமாய்ப் பதிந்து அடிக்கடி மேலெழுந்து கொண்டிருந்தது.

அடிக்கடி தனக்குள் சிரித்துக் கொண்டான். வார இறுதியில் வீட்டுக்கு வரமுடியாது என்பதை மனைவிக்கு ஃபோனில் தெரிவித்தான். இந்த வார முழுதும் அனுராத புர ஜி.எச்.இல் ஒரு தொடர் கருத்தரங்கில் கலந்து கொள்ளவிருப்பதாக காரணம் சொன்னான்.

'டு ஐ லவ் ஷர்மிளா?' என்று அடிக்கடி உள்மனம் கேட்ட கேள்வியை ஏதோ சாக்குப் போக்குக் காட்டி அடக்கி வைத்தான்.

இரவு பதினொரு மணி தாண்டியிருந்தது. லேசான தூக்கத்தில் புரண்டு படுத்தவனை டெலிஃபோன் ஒலி எழுப்பிற்று. மருத்துவமனையிலிருந்து தாதி பேசினாள். வயிற்றினுள் எடை கூடிய குழந்தையொன்றைத் தாங்கிய இளம் தாயொருத்திக்குப் பிரசவ வேதனை அதிகரித்திருப் பதாகவும், அவசர உதவி தேவைப்படுவதாகவும் சொன்னாள். உடன் விரைந்து சென்றான்.

காரியங்கள் முடிந்து வருகையில் மணி பன்னிரண் டரை ஆகிவிட்டிருந்தது. தூக்கம் வராமல் கட்டிலில் மல்லாக்கப் படுத்து விட்டத்தை வெறுமனே பார்த்துக் கொண்டிருந்தான்.

மீண்டும் ஷர்மிளாவின் முகம். அழகு சூழ்ந்த வெளி நாட்டு உயர்ரக நறுமணம். தலை சிறிது சிறிதாக விறைக்கிறாற்போல்...

சடாரென்று எழுந்து ஃபோனை நோக்கிச் சென்றான். இலக்கங்களைச் சுழற்றினான். அதிக நேரம் மணி ஒலிக்கவில்லை. ஷர்மிளா பேசினாள். குரல் தெளிவாக இருந்தது. என்னைப் போலவே அவளும் இன்னும் தூங்கலையோ?

"இன்னும் தூங்கல்லியா?"

"இல்ல Sir, ஸ்டோரி புக் படிக்கிறேன்..."

மீண்டும் பிரமிப்பு தட்டிற்று. என்ன பெண் இவள்? சாதாரண மானிடப் பெண்ணில்லையா இவள்?

"என்ன Sir இவ்வளவு அவசரம்...?

என்ன சொல்வதென்று தெரியாமல் ஒரு கணம் திகைத்து யோசித்தான். சட்டென்று ஒரு பொய்.

"ஐ நீட் களோமிஃபீம் என்ட் ப்ரொவிரொன் ஃபொ மை டிஸ்பென்சரி. எச்.சீ.ஜீ. ஓல்சோ..."

"ஓ யெஸ். நாளைக்கு அனுப்பி வைக்கவா?"

"இல்ல நானே வந்து எடுக்கிறேன்..."

"தேங்க்யூ சேர். வைக்கவா? குட்நைட்..."

பேச்சை முடிக்க மனமில்லாவிடினும் "ஸ்வீட் ட்ரீம்ஸ்" சொல்லி வைத்தான். மீண்டும் விட்டத்தை வெறிக்கத் தொடங்கினான்.

மறுநாள் மாலைவரை ஷர்மிளா அவனை எதிர்பார்த் துக் காத்திருந்தாள். அவன் வரவில்லை.

ஆறு மணிக்கு மேலே அவனது குவார்ட்டர்ஸ் பக்க மாக ஏதோ வேறு வேலையாக என்று திரும்பி வரும் போது அவனது ஞாபகம் வரவே திடீரென்று அவன் எதிரே போய் நின்றாள். அவன் சற்றும் எதிர்பார்க்க வில்லை. ஏதோ எழுதிக் கொண்டிருந்தவன் பரபரவென்று ஓடிவந்தான்.

"ஐம் சொறி. மறந்துட்டேன்..."

"டோண்ட் மைன்ட் சேர். எவ்வளவு தேவைன்னு சொல்லுங்க. சேர்வன்ட் கிட்ட அனுப்பி வைக்கிறேன்."

அவன் புரிந்து கொள்ளவே முடியாத ஓர் அதிசயமாகவே மீண்டும் அவள் மலர்ந்து நின்றாள்.

எதிர்வீட்டு மாமி உடன் டீ கொண்டு வந்து வைத்தாள்.வலிந்து வலிந்து உபசரித்தாள்.

அவன் எதிரே சாவகாசமாக அமர்ந்து எவ்வித சங்கோஜமும் இன்றி கலகலப்பாகப் பேசினாள். இளம் ரோஸ் நிற சல்வார் கமீஸில் முக்காடிட்ட அழகு நிலாத் தேவதையே போன்று காட்சியளித்தாள்.

நஸ்ருதீன் இமைக்க மறந்து போனான். தான் வெறும் பனியனும் சாரமுமாக இருந்ததையும் மறந்தான்.

அவள் பேச்சுவாக்கில் தனது கணவருக்கு அனுராத புரத்திலிருந்து மாத்தறைக்கு உத்தியோக மாற்றம் வந்திருப்பதைத் தெரிவித்தாள்.

"மாத்தறை ஒஃபீஸ் ரொம்ப கஷ்டமா இருக்கும் போலிருக்கு Sir... அவருக்கு அங்க யாரையுமே தெரியாது. பிஸினஸ்ஸ டெவலப் பண்றதுக்கும் கொஞ்ச நாளாகும் போல தோணுது..."

"ஸோ, ஹீ கான்ட் ட்ரவல் டெய்லி...?"



படிப்பகம்

www.padippakam.com

"அது வேற பெரிய ப்ரொப்ளம் சேர். எப்படி தனிய காலம் தள்ளுறதுன்னு தெரியல்ல. வன்ஸ் இன் அ ஃ போர்ட்நைட் வந்து போறேன்னு சொல்றார்..."

உள்ளூர மகிழ்ச்சி பிரவாகித்தது. காட்டிக் கொள்ளாமல் சொன்னான்.

"டெல் ஹிம் டு கிவ் அப் ஹிஸ் ஜொப். உங்களோடவே தங்கி ஃபார்மஸிய பாத்துக்கலாமே..."

"இட்ஸ் இம்பொசிபிள் சேர், ஹி லவ் ஹிஸ் ஜொப் வெரி மச் ..."

மெல்லிய கீறலாய் ஒரு பொறி தட்டிற்று.

"யூ டோன்ட் வொரி. என் ஃப்ரென்ட் ஒருத்தன் மாத்தறையில இருக்கான். ஃபேமஸ் கன்ட்ராக்டர். அவன இன்ட்ரட்யூஸ் பண்ணி வைக்கிறேன்..."

கண்களைப் படபடத்து மூடினாள்.

"ஸோ குட் ஒஃப் யூ ..." என்று கூறி எழுந்து சென்றாள்.

மாத்தறை எஸ் - லோன் கம்பனி ரீஜனல் மெனேஜராக நயீம் பொறுப்பேற்றுக் கொண்டுவிட்டான் என்பதை உறுதியாகத் தெரிந்து கொண்ட பின்னர் தினமும் ஷர்மிளா ஃபார்மஸிக்கு சென்று வரத் தொடங்கினான் நஸ்ருனாதீன்.

தூக்கமின்றித் தவித்த பொழுதுகள் கூட்டெரித்தன. அப்போதெல்லாம் இரவு ஒரு மணிக்குக் கூட ஷர்மிளாவுடன் தொலைபேசியில் பேசுவான். தூக்கக் கலக்கத்தில் இருந்தாலும் அவள் சிடுசிடுக்காமல் பேசி முடிப்பாள்.

அடுத்த ஒரு வாரத்திற்குள் தனது நண்பனான ராஃபியை ஷர்மிளா - நயீம் தம்பதியினருக்கு அறிமுகப்படுத்தி வைத்தான். ராஃபியை அவர்களுக்கு நிரம்பவும் பிடித்தது. ராஃபியின் உதவி ஒத்தாசைகளால் மாத்தறையில் தயக்கமின்றி கம்பனி வேலைகளைத் தொடர முடிந்தது. குறுகிய காலத்துக்குள் அதிக விற்பனை லாபமும் கிடைத்தது.

ராஃபி ஷர்மிளா தம்பதியினருக்கு மிகவும் நெருக்கமானவன் ஆனான்.

ஷர்மிளா வித்தியாசமான பெண். எந்த ஆணைக்கண்டும் அவள் மிரண்டோடியது கிடையாது. மருகி ஒளிந்து கொண்டது கிடையாது.

அவளது கணவனின் பார்வையில் அவள் எப்போதும் வெரி ஸ்மார்ட் என்ட் சின்சியர். தனது கணவன் மேல் கொண்ட அன்பைப் போலவே தனது வாடிக்கையாளர்களிடத்தும், நண்பர்களிடத்தும் அவள் மரியாதை கலந்த நட்புணர்வையும், அன்பையும் பேணி வந்தாள். தனது கணவனைப் போலவே அனைத்து ஆண்களும் ரொம்ப எளிமையானவர்கள் என்று நினைத்திருந்தாளோ என்னவோ?

நஸ்ருதீனுடன் பிரியம் கொண்டது போலவே ராஃபியுடனும் அவள் பிரியத்துடன் பழகினாள். வேலைப் பழுவின் நடுவிலும் அவர்களிருவரையும் அவள் நன்றியுடன் நினைத்துக் கொள்வாள்.

வவுனியாவுக்கு சென்று வரும் வழியில் இடையில் தனது ஃபார்மஸிக்கு வந்த ராஃபியை குளிர்பானம் வழங்கி உபசரித்து பேசிக் கொண்டிருந்தாள். இடையில் அவன் கேட்டான்.

'நஸ்ருதீன் இங்க வர்றதில்லயா....?'

'மிச்ச நாளா அவரைக் காணல்ல. ஃபோனும் வரல்ல..' சுற்றும் முற்றும் பார்த்து மெல்லிய குரலில் சொன்னான்.

'நோ. ஹீஸ் லிட்டில் மென்ட்டல். பி கேர்ஃபுள்...'

'ஓ...!' அவள் அதிர்ந்து போனாள். அவன் விடைபெற்றுச் செல்லும் வரை மௌனமே உருவானாள்.

அவளால் நஸ்ருதீன் ஒரு மன நோயாளி என்பதை நம்பவே முடியவில்லை. எவ்வளவு பெரிய அறிவாளி...! அவருக்கெப்படி...?

ஏன்தான் ராஃபியைச் சந்தித்தோமோ என்று கூடத் தோன்றிற்று. இந்த உண்மை தெரியாமலேயே இருந்திருந்தால் எவ்வளவு நல்லது!

நஸ்ருதீனைச் சந்தித்துப் பேச வேண்டும் போலிருந்தது. வேலைகள் முடிந்த பின்னர் மகனைப் பணிப்பெண்ணிடம் கொடுத்துவிட்டு அவனைப் பார்க்கச் சென்றாள்.

அவன் வழக்கம் போலப் பேசினான். இந்நாட்களில் அதிகளவு எமர்ஜன்ஸி கேஸ்களைக் கையாளவேண்டி வந்ததாகச் சொன்னான். வார இறுதியில் வீட்டுக்குப் போய் வந்ததாகவும் கூறினான்.

ஏனோ வழக்கம்போல அவனுடன் கலகலப்பாக பேச முடியவில்லை. திடுமென திரை விழுந்தாற்போலிருந்தது.

ராஃபி அடிக்கடி வந்து போவது பற்றியும், அவனைத் தன் கணவருக்கு ரொம்பப் பிடித்திருப்பது பற்றியும் அவள் பேச்சு வாக்கில் குறிப்பிட்டாள்.

சிறிது நேரம் பேசிக்கொண்டிருந்து விட்டு விடைபெற்றுச் சென்றான்.

★ ★ ★

இரவு பதினொரு மணி தாண்டியிருந்தது. நஸ்ருதீன் உறக்கமின்றி படுக்கையில் புரண்டு கொண்டிருந்தான்.

மாலையில் திடீரென நிகழ்ந்த ஷர்மிளாவின் வரவும், அதைத் தொடர்ந்து நிகழ்ந்த சம்பாஷணையும் மனதுள் திரும்ப ஓடிக் கொண்டிருந்தன.

ராஃபியை தங்களுக்கு ரொம்பவும் பிடித்திருக்கிறது என்று ஷர்மிளா சொன்ன சேதி வதைத்தது.

எழுந்து டெலிஃபோன் அருகே சென்றான். மாத்தறையில் விடுதியில் தங்கியிருக்கும் நயீமின் கையடக்கத் தொலைபேசியின் இலக்கங்களைச் சுழற்றினான்.

மறுமுனையில் ஆழ்ந்த உறக்கத்திலிருந்த நயீம் கரகரத்த குரலில் 'ஹலோ' சொன்னான்.

நஸ்ருதீன் கைக்குட்டையால் சிறிது வாயைப் பொத்தி, குரலை மாற்றிக் கடுமையாக்கிக் கொண்டான்.

'ஐம் ராஃபி. கலாவெவ ரெஸ்ட் ஹவுஸிலிருந்து பேசுறேன்...'

நயீமுக்கு ஒன்றும் புரியவில்லை. அது ராஃபியின் குரல் அல்ல என்பது மட்டும் புரிந்தது.

'என்ன விஷயம்?' ஒப்புக்குக் கேட்டான்.

'யூ சீ... ஐம் ஷேரிங் மை பெட் வித் ஷர்மிளா... யுவ வைஃப்...!'

வெகு நாகரிகமாக ஆங்கிலத்தில் சொல்லி தொடர்பைத் துண்டித்தான்.



படிப்பகம்

www.padippakam.com

# ஒரு கிராமம் அழுகிறது

எஸ்.முத்துமீரான்

இரவு, விடியச்சாமத்தோடு ஜீவ மரணப் போராட்டமிட்டுக் கொண்டிருக்கும் போது, எங்கள் கிராமம் வேதனையால் வெந்துருகி அழுது கொண்டிருக்கிறது. இரவெல்லாம் இடைவிடாது பெய்து கொண்டிருந்த மார்கழி மாதப் பனியில், கொடுகிக் கிடந்த நாய்களும், காகம், குருவிகளெல்லாம் அழுது கொண்டிருக்கும் எங்கள் கிராமத்தின் துயரத்தைத் தாங்க முடியாமல், கண் விழித்துக் கத்திக் கொண்டிருக்க, தூரத்தில் ஆட்காட்டிப் பட்சியொன்று பரபரப்போடு கத்திக் கொண்டிருக்கிறது. 'என்ர ரகுமானே, எங்கிட ஊருக்கு நடந்த கொடும, என்ன வாப்பா...? ஒண்டுமறியாத எங்கிட மக்களுக்கு இந்தக்கெதி என்னத்திக்கு வரணும், அல்லாஹ்..? அண்டைக்கண்டைக்கே கனாயத்த போக்கிறத்திக்கு கூட வழியில்லாமக் கயித்தப்பார். இந்த ஏழ எளிய சனங்களுக்கு, ஏனல்லாஹ் இந்தக் கயித்தம் வரணும்...? பால்குடி மாறாத இந்தப் பாலா பரதேசிகளை எல்லாம் மாடுகளை அறுக்கிறாப் போல, படுத்த பாயோட அறுத்துப் போட்டுப் போன, இந்தக் கொலகாரப் பாவிகளையெல்லாம், எங்கிட கிராமத்து மக்கள்ள வயிறு எரியிறாப் போல எரிச்சிப் போடு... நாசமத்துப் போன சண்டாளப் பாவிகள், எவ்வளவு அழகா இரிந்த எங்கிட ஊரக் குப்பயக் கூட்டிப் பத்தவெக்கிற மாதிரி, பத்தவெச்சிப் போட்டு போயிரானுகளே...இவனுகளெல்லாம் மனிசங்களே இல்ல... ஈவிரக்கமில்லாத பண்டிகள்தான்... இல்லாட்டி, கதைக்கத் தெரியாத குஞ்சு குருமானையெல்லாம், நித்திரயில வந்து, பதறப்பதற வெட்டி அரிஞ்சி போட்டுப் போவானுகளா...? எத்தின கயித்தப்பட்டு வெச்ச குடில்கள்...அதுகளுக்கும் நெருப்பு வெச்சிப் போட்டு பெயித்தானுகளே...! றப்பே ரகுமானே...! இந்தக் கொடுமைக்கெல்லாம் நீதான் செரியான தண்டன கொடுக்கணும்... எங்கிட ஊர்மக்கள்ள குடியெல்லாம் பொசுங்கினாய் போல, இந்தப் பாவிகளும் பொசுங்கிரணும்...'

சுபஹுத் தொழுகையை தொழுது விட்டு வந்த, எங்கள் கிராமத்து பெரிய பள்ளிவாசல் மோதினார், அமைதியின் உருவாக இருந்த எங்கள் கிராமத்திற்கு நேர்ந்த சோகத்தை, எரிந்து போய் அலங்கோலமாய்க் கிடக்கும் குடிசையொன்றின் முன்னால் நின்று, வேதனை தாங்க முடியாமல் அழுது கொண்டிருக்கிறார். இருளில் நடந்த இக் கொடூரத்தை, வெளிச்சத்தில் வந்த எங்கள் கிராமம் பார்த்துப் பார்த்து, விம்மி விம்மி அழுது கொண்டிருக்கிறது. இயற்கையின் எழிலரசியாக இப்பகுதியில் ஆட்சி செலுத்திக் கொண்டிருந்த, எங்கள் கிராமத்தில் வேதனையும், விக்கலும், அழுகையும் ஆட்சி செலுத்திக் கொண்டிருக்கின்றன. மணப்பெண்ணைப் போலிருந்த எங்கள் கிராமம், பொட்டிழந்து பொலிவிழந்து விதவையைப் போல் இருப்பதைப் பார்க்க முடியாமல், விடியச் சாமம் விரைவாக ஓடிக் கொண்டிருக்கிறது. கிராமத்தை மூடியிருந்த பனிமூட்டம் மெதுவாகக் கரைகிறது.





படிப்பகம்

www.padippakam.com

'என்ர மகனே, நீ என்ன உட்டுப் போட்டுப் போயிற்றியா..? இனி இந்தக் கிழவிய ஆருவய்யா பாக்கப் போறாங்க? இந்த ஒலகத்தில இனி ஆருவய்யா தொண... எனக்கு...? விடியச் சாமத்துக்கு முன்னயே, வட்டைக்க போகணுமெண்டு செல்லிக்கு படுத்த நீ, இப்ப மையத்தாக் கிடக்கியே. என்ர கல்பெல்லாம் பத்தி எரியிதே மகனே...! லாவுதானே மகனே, ஒன்ட கவியாணத்தப் பத்தி ஒங்கு மாமா வந்து பேசிப்போட்டுப் போனாரு... விடியிறத்துக்குள்ள நீ, மையத்தாப் போனியே, ராசா. இது என்ன கொடும, அல்லாஹ்! என்ர மகனே! ஒனக்கு இப்பிடியொரு மகுத்து வருமெண்டு ஆருக்கு வாப்பா தெரியும்? ஒண்டுமே அறியாத எங்களப் போல ஏழையளுக்கு ஏனல்லாஹ்! இந்தச் சதிமானம் வரணும்...? மகனே! இனி நீ இல்லாமல் இந்தக் கிழவி இருந்துதான் என்ன பயன்? எங்கிட நெருப்பு, இந்தக் கொலைகாரப் பாவிகளைச் சும்மா உடமாட்டா.... மகனே..' படுத்த படுக்கையிலேயே பரிதாபமாகக் கொலை செய்யப்பட்ட தன் மகனின் உடலைப் பார்த்துப் பார்த்து அலிமாக் கிழவி தலையிலடித்து அழுது கொண்டிருக்கிறாள். அலிமாவின் வேதனையைப் பார்த்து வானமும் அழுகிறது. வானத்தின் கண்ணீரைக் கண்டு, இரவெல்லாம் தூங்கிக் கொண்டிருந்த சூரியனும் எங்கள் கிராமத்தின் துயரத்தைக் காண விரும்பாமல், மூடிய நேத்திரங்களைத் திறக்காமல், கார் கால மேகக் கூட்டங்களுக்கிடையில் மறைந்து தூங்கிக் கொண்டிருக்கிறான்.

இயற்கையின் இனிய தாலாட்டில் தூங்கி, இளந்தென்றலின் ஊடலில் இன்பங்கண்டு கோலோச்சிக் கொண்டிருந்த எங்கள் கிராமம் இன்று இனவெறிபிடித்த அயோக்கியர்களால் அழிக்கப்பட்டு பிணக்காடாகிக் கிடக்கிறது. இருளின் அமைதியைச் சாதகமாக்கிய இதயமில்லாக் கொடியவர்கள், எங்கள் கிராமம் உறங்கிக் கொண்டிருந்த வேளை உட்புகுந்து அப்பாவி மக்களையும், அவர்களின் பால்குடி மாறாப் பச்சிளங் குழந்தைகளையும் கத்திகளால் வெட்டித் துண்டுகளாக்கி விட்டு, அவர்களின் வானம் தெரியும் ஓலைக் குடிசைகளுக்கும் தீயிட்டுக் கொழுத்திவிட்டு இருளோடு இருளாகப் போய் விட்டார்கள். எங்கள் கிராமத்தை மூடியிருந்த பனிமூட்டம் முற்றாக மறைந்து விட்டது.

'மகளே!... என்ர தங்க மகளே...! நீ புள்ளத்தாச்சியெண்டு பாராமலே, இந்தக் கொடியவனுகள் ஒன்னக் கொல செஞ்சி போட்டானுகளே... நீ, தலைப்புள்ளத்தாச்சி எண்டு, நான் எவ்வளவு கரிசனயோடு பாத்து வந்தன்... ஒன்ட புள்ளய ஒருதரம் கொஞ்சிப் பாக்க எனக்கு, நசிபில்லாமப் போச்சே மகளே...! என்ர மனசி தாங்குதில்லியே...! நெருப்புழுந்து போவானுகள், என்ர ரெண்டு சீவனையிம் ஒண்டாக் கொல செஞ்சி போட்டானுகளே... என்ர மகளே! இனி ஒன்ன எப்ப நான் பாக்கப் போறன்...?'

கர்ப்பிணி மகளைப் பறிகொடுத்து, துயரம் தாங்கமால் கத்திக் கொண்டிருக்கும் கதிஜாவின் கதறலைக் கேட்டு, தூறிக் கொண்டிருந்த வானம், மழையைச் 'சோ' வென்று கொட்டிக் கொண்டிருக்கிறது.

பால்குடி மாறாப் பச்சிளம் பாலகர்களும், கர்ப்பிணித் தாய்மார்களும், அப்பாவி ஏழை மக்களும் கொடிய இனவெறி அரக்கனால் கொல்லப்பட்டுத் தலையில்லாமலும், கை, கால்கள் இல்லாத முண்டங்களாகவும், கிடப்பதைப் பார்த்து, எங்கள் கிராமத்தில் உயிர்த் துடிப்போடு வாழ்ந்து கொண்டிருந்த மானிட நேசம், ஒன்றுமே செய்ய முடியாத ஊமையாகி கிராமத்தோடு சேர்ந்து அழுது கொண்டிருக்கிறது.

கொட்டும் மழையிலும் எங்கள் கிராமத்து மக்களோடு சோர்ந்து நிற்கும் கிராமசேவகர் தன் கையில் கட்டி இருக்கும் மணிக்கூட்டைப் பார்த்து, எட்டு மணியென்று அலுத்துக் கொள்கிறார். அப்பொழுது, இரவெல்லாம் கவலை மறந்து தூங்கிக் கடந்த பொலிசாரும் படையின





படிப்பகம்

www.padippakam.com

ரும் ஜீப் வண்டிகளில் வேகமுடன், எங்கள் கிராமத்தை நோக்கி வந்து கொண்டிருக்கிறார்கள். அலுத்து நின்ற கிராமசேவகர் போய் பொலிசாரையும் படையினரையும் அழைத்து வந்து கொலையுண்ட உடல்களை ஒவ்வொன் றாகக் காட்டிக் கொண்டிருக்கிறார். இப் பஞ்சமா பாவத் தைச் செய்து விட்டு, இருளோடு இருளாகச் சென்றுவிட்ட, இரக்கமற்ற இனவெறியர்களைக் கண்டு பிடித்து தண் டனை அளிக்க முடியாத அரசின் காவலர்கள் உயிரற்ற உடல்களை, எங்கள் ஊர் மக்களின் உதவியோடு மிசின் பெட்டிகளில் ஏற்றிக் கொண்டிருக்கின்றனர். அழிந்துவிட்ட உடல்களிலிருந்து அவையின் ஆத்மாக்கள் எப்படிப் பிரிந்து சென்றன என்பது பற்றி, பகுப்பாய்வு செய்து, மரண விசாரணை செய்வதற்காக எங்கள் கிராமத்து வைத்தியசாலைக்கு அவைகளைக் கொண்டு செல்வத ற்கு யந்திரம் போல் பொலிசாரும் படையினரும் இயங்கிக் கொண்டிருக்கின்றனர். வானம், ஏங்கி ஏங்கிக் கண்ணீர் விட்டுக் கொண்டிருக்கிறது. இன்னும், பொழுது விழிக்கவே இல்லை.

அப்பொழுது சோறு கிடைக்கும் இடத்தையெல்லாம் சொந்தமாக்கி நடைப்பிணமாக உயிர் வாழ்ந்து கொண்டிருக்கும் சாவல். தொடை வரையில் கிழிந்து தொங்கும் தன் காடை நிறச் சாறனால் கழுத்துவரை போர்த்திக் கொண்டு கார் விட்டு வருகிறான்.

'ப்பூ...! பீப்பீப்...!! பீப்...!!!'

கார் வருகிறது. தள்ளுங்க, தள்ளுங்க...!

கிஸ்சராக் கோண்...

தம்மோளி வாப்பா...

பீப்பீப்....! பீப்...!!'

மழையில் பொதும்பிக் கிடக்கும் கிறவல் றோட்டில், சாவலின் கார், புதைந்து வருகிறது. எங்கள் கிராமத்தில் சாவல், மனைவி மக்களோடு மிகவும் கௌரவமாக செல்வச் செழிப்போடு வாழ்ந்தவன்தான். தோட்டம், தொரவு, தொடுகையுடன் மாடுகன்று வீடுவளவு எல்லாம் அவனுக்கு இருந்தன. ஆனால், இனவெறியின் அகோரப் பசிக்கு இவனும் தன் மனைவி மக்களையெல்லாம் இரவோடு இரவாகப் பறிகொடுத்துவிட்டு, "கிஸ்சராக் கோண்" "தம்மோளிவாப்பா" என்னும் இரு அர்த்தமற்ற சொற்களை மட்டும் தன் வாழ்க்கைக்குத் துணையாக வைத்துக் கொண்டு, இன்று எங்கள் கிராமத்தைச் சுற்றி சதா கார் விட்டுக் கொண்டிருக்கிறான்.

பாவம்! சுமார் பத்து வருடங்களுக்கு முன் தன் உணர்வுகளையும், உள்உறுத்தல்களையும், சுய அறிவையும் ஒரே நாளில், அவன் மனைவி மக்களை அடக்கம் செய்த மண்ணறைகளில் சேர்த்துப் புதைத்துவிட்டு, கார் விட்டுத் திரியும் சாவலுக்கு வயது ஐம்பது. எங்களூர் சாவலுக்கும் சொந்த ஊர்தான். எங்கள் கிராமத்து மண்ணில்தான், அவனும் தன் இளவயதில் இயற்கையின் இனிய ராகத்தை மீட்டிக் களித்தான். இக்கிராமத்தின் பசுமை நிறைந்த வயல் வெளிகளிலும், ஓங்கி உயர்ந்து நிற்கும் தென்னந் தோப்புகளிலும், பளிங்கு போல் சலசலத்தோடும் நீரோடைகளிலும்தான் அவன், ஆடிப்பாடி மகிழ்ந்து திரிந்தான். எங்கள் கிராமத்தின் இளந் தென்றல்தான் அவனுக்குத் தாலாட்டுப் பாடியது. அப்படியெல்லாம் அவன் உயிருக்குயிராக நேசித்த இக்கிராமம், பிணக்காடாகிக் கிடப்பதைக் கிஞ்சித்தும் பாராமல், கவலையின்றிக் காரோட்டித் திரிகிறான். மானிட நேசம் அவனைக் கண்டு அழும் போதெல்லாம், அவன் அழுவதுமில்லை, சிரிப்பதுமில்லை. ஓய்வின்றி ஓட்டிக் கொண்டிருக்கும் அவன் காருக்கு இருட்டும் ஒன்றுதான் பகலும் ஒன்றுதான். அமைதியும் அழகும் ஆட்சி செலுத்திக் கொண்டிருந்த அவன் இல்லறவாழ்வு இரக்கமற்ற இனவெறி அரக்கனால் பறிக்கப்பட்ட பின், அவ்வெறி பிடித்த அரக்கனைத் தேடிப் பிடித்து அவனைக் கொலை செய்ய வேண்டுமென்ற எண்ணத்தில்தான், சாவல் எங்கள் கிராமத்தைச் சுற்றிச் சுற்றி அவனைத் தேடிக் கொண்டிருக்கிறான்.

"ப்பூ...! பீப்பீப்...!! பீப்...!!!"

கார் வருகிறது வெலகிங்க...விலகிங்க...

கிஸ்சராக்கோண்...

தம்போளி வாப்பா...

ப்பூ...பீப்...!

உலகில் சொந்தமென்று சொல்வதற்கு யாருமே இல்லாத அப்பாவி அனாதையாகி எலும்பும் தோலுமாய்ச் சதா, கார் விட்டுத் திரியும் அந்தச் சாவலையும் சேர்த்துத்தான், எங்கள் கிராமம் அழுகிறது.

எங்கள் கிராமத்தின் இயற்கையோடு பின்னிப் பிணைந்து அதன் சுகத்தோடு இரண்டறக் கலந்து, அமைதியோடு வாழ்ந்து அநியாயமாக அழிந்துவிட்ட அப்பாவி ஆத்மாக்களின், உயிரற்ற முண்டங்களையும் அவைகளின் உறுப்புக்களையும் ஏற்றிக் கொண்டு, படைவீரர்கள் புடைசூழ, உழவு யந்திரங்கள் வைத்தியசாலையை நோக்கிச் செல்லுகின்றன. அவைகளைப் பின் தொடர்ந்து எங்கள் கிராமமே சென்று கொண்டிருக்கின்றது.

ஆனால், சாவல் மட்டும், இனவெறியைக் கொல்ல முடியாமல், நேத்திரங்களை மூடி, நிஷ்டையில் தேங்கிக் கிடக்கும், ஈசனைத் தேடிக் கொல்வதற்கு வெறி பிடித்து ஓடுகிறான்...

இன்று, சதா குயிலோசையும் குருவிகளின் சப்தமும் கேட்டுக் கொண்டிருந்த எங்கள் கிராமத்தில், அடக்கமுடியாத அழுகைக் குரல்களும், வேதனையின் விசும்பல்களும், பேய்களின் பயங்கர அலறல்களும் கேட்டுக் கொண்டே இருக்கின்றன. இளநிலாவும், இனிய தென்றலும் எங்கள் கிராமத்துக்கு வருவதே இல்லை. ஏனென்றால் இப்பொழுதெல்லாம் எங்கள் கிராமத்து மக்கள் இரவில் ஆறு மணியோடு தங்கள் வீடுகளிலிருந்து வெளியில் வருவதே இல்லை... ●



படிப்பகம்

www.padippakam.com

எஸ்.எம்.ஜே. பைஸ்தீன்

# வடமேற்கில் ஒரு கருக்கு

வடமேற்கின் கரையோரத்தில்ஆரம்பமாகும் அலுவலக ரயில், மேற்கின் மாநகருக்கு முந்திய மாநகரத்து ரயில் நிலையத்தில் நின்ற போது வழமைபோல் சிங்களம் பேசுவோ ரால் நிறைந்த பெட்டிகளுள் ஒன்றில் நின்றிருந்த ஓர் யுவதி, என் கையிலிருந்த 'கருக்கைக்' கண்டு அதனைச் சற்றே பார்த்துவிட்டுத் தரக் கேட்ட போது எனக்கு உண்மையில் பெருமிதமே ஏற்பட்டது. வாசிக்கும் ஆர்முள்ளவர்கள் அவரைப் போன்று நிறையவே உள்ளனர். ஆனால் விலை கொடுத்து வாங்கும் சக்தி மட்டுமின்றி, தரமான நூல்கள் கரமெட்டும் தன்மையும் அரிதாகவே இருக்கிறது. இரண்டாவது பதிப்பைக் கண்டிருந்த 'கருக்கு' என்ற நூலைப் பெறுவது அதற்குரிய வாய்ப்பும் வசதியும் கொண்ட எனக்கே சிரமமாயின் மேற்குறித்த யுவதி போன்றவர்களைப் பற்றி அதிகம் விளக்கத் தேவையில்லை. ஏனெனில் இந்நூலும் தற்செயலாகவே வாங்கப்பட முடிந்தது.

கருக்கு ரம்பம் போன்றது. எனினும் அது இருபுறத்தாலும் அறுத்துக் கிழித்து ரணங்களை ஏற்படுத்தக் கூடியது. இதுபோல் சமூக ரீதியிலும் தற்போதய சூழலிலும் இதன் காயங்களுக்கு உட்பட்டிருக்கக் கூடிய ஒருவர் என்ற முறையிலேயே அந்த யுவதிக்குக் 'கருக்கு' உடனடியாக உறுத்தியிருக்க வேண்டும்.

கருக்குப் பனை, கருக்கு (வ - சிங்கள வடிவத்தில்) முதலாக பனையடி போன்ற பனை சார்ந்த கிராமங்கள் வடமேற்கில் நிறைய உண்டெனினும் இங்கு சமூக ஏற்றத் தாழ்வுகள், செல்வத்தின் உண்மை இன்மையையே பொறுத்துள்ளன. செல்வத்தைத் திரட்டிக் கொள்ளக் கூடிய ஒருவர் சமூகத்தின் உயர் வர்க்கத்திற் கரைந்துவிட முடியும்.

தலித் பெண் எழுத்தாளரான பாமாவினால் தலித் இலக்கியத்துக்க வழங்கப்பட்ட உன்னதமான போதம் என்று கருக்கு எடுத்துக் காட்டப்படுகிறது. சாதியத்துக்கு எதிரான தலித்தியம், அதனோடு சேர்ந்து பெண்ணியம் (அல்லது பெண்ணிலை வாதம்) போன்ற தொடர்கள் தமிழ் நாட்டில் வெகுவாகப் புழக்கத்துக்கு வரத் தொடங்கியுள்ளன. இவற்றை ஓர் அரசியல் சக்தியாக முன்னெடுக்க முனையும் நோக்கமும் தெளிவாகப் புலப்படுகிறது.

கருக்கு போன்ற நூல்களுக்கு அதீத சிறப்புத் தர முற்படும்போது, குருதிப்புனல், பஞ்சமர் போன்றவற்றைப் புறந்தள்ள முற்படும் நிலை ஏற்படுமோ என்ற ஐயம் கூட ஏற்படுகிறது.

தாழ்த்தப்பட்ட, ஒடுக்கப்பட்ட மக்களைப் பற்றிய இலக்கியம் தான் தலித் இலக்கியம் எனில் இத்தகைய இலக்கியத்தை நாம் இழிசனர் இலக்கியமாக இலங்கையில் முன்பே கண்டுள்ளோம். இவ் இலக்கியத்துக்கு அடிநாதமானோர் தாழ்த்தப்பட்டவர்கள், ஒடுக்கப்பட்டவர்கள், இழிசனர்கள், கீழ் சாதிகள் என்ற பெயர்களால் காயப்படுத்தப்பட்டுள்ளனர். வட பகுதியிலும், குறிப்பாக யாழ்ப்பாணத்திலும் எழுந்த ஆக்க இலக்கியங்கள் இத்தகையோரைக் கதா மாந்தர்களாகக் கொண்டன. எனவே கருக்கை வாசிக்கும் போது இவற்றையெல்லாம் தேடி வாசிக்கும் ஆர்வம் தான் மேலோங்குகிறது.

கருக்கு ஒரு கிராமத்தின் சரித்திரம்: சுயசரிதை: நாவல் என்று பல பரிமாணங்களில் நோக்கப்படுகிறது. யதார்த்த வாழ்க்கைக்கும் யதார்த்த இலக்கியத்துக்கும் உள்ள நெருங்கிய தொடர்பையே இந்நோக்குகள் காட்டுகின்றன.

எழுத்து நடை இந்நூலின் துணிச்சலான மற்றுமோர் அம்சமாகும். தலைமைக் கதாபாத்திரத்தின் பேச்சு வழக்கிலேயே முழுநூலும் அமைந்துள்ளது. இதன் ஆரம்ப வரிகளே இதற்கு எடுத்துக்காட்டு.

"எங்க ஊரு ரொம்ப அழகான ஊரு. ரொம்பப் பெரிய முன்னேத்தமோ, எதுவுமோ இல்லேன்னாக்கூட அதோட அழக வச்சுத்தான் எனக்கு அத ரொம்பப் புடிக்கும். சின்ன ஊருதானாலும் இங்க பல சாதி மக்க குடியிருக்காக. சாதி சனத்தப் பத்திச் சொல்றதுக்கு முன்ன ஊரப்பத்தி நெறய்ய சொல்ல வேண்டியது இருக்குது.

ஊரச் சுத்தி வருசையா மலைகளா இருக்குது. பாக்குறதுக்கு அழகா இருக்கும். அத மேக்குத் தொடர்ச்சி மலன்னு சொல்றாக..."

இத்தகைய ஒரு நடைக்கு இலங்கையில் இலக்கிய அந்தஸ்தைப் பெற்றுக் கொடுக்க நீண்ட காலம் எடுத்திருந்தது.

கருக்கு இயக்க ரீதியான உணர்வுகளின் வெளிப்பாடாகவே அமைந்தது. யாழ் குடாநாட்டில் ஐம்பதாண்டுகளுக்கு மேல் இத்தகைய வெளிப்பாடுகள் இருந்து வந்த போதும் உரிய பிரசித்தத்தை இன்னும் பெறவில்லை. எனவே கருக்கு போன்ற நூல்களின் பின்னணியில் இவற்றைத் தகுந்த மதிப்பீட்டுக்கு உள்ளாக்கத் தற்போதைய சூழல் நல்ல ஒரு சந்தர்ப்பத்தைத் தரமுடியும்.



படிப்பகம்

www.padippakam.com

# நான் கண்ட இரசிகமணி

**பொன். பாலகுமார்**

'இரசிகமணி' என்றும் 'இலக்கியச் செல்வர்' என்றும் இலக்கிய நெஞ்சங்களால் அழைக்கப்படும் கனக. செந்திநாதன் என்ற படைப்பாளியை, விமர்சகனை, வரலாற்று ஆசிரியனை அவனது இலக்கியப் பற்றை, இலக்கிய நேர்மையை, அவனது படைப் பாளுமைகளை, பலவீனங்களை இலக்கிய உலகம் நன்கறியும். இதற்கு இவர் தொடர்பாக வெளியான கட்டுரைகள், நூல்கள் என்பனவே தக்க சான்று. இவ்வாறு நாட ளாவிய ரீதியில் அறியப்பட்ட இரசிகமணி தமது பிறந்த மண்ணிலே இலக்கியப் பாரம்பரியம் ஒன்று தொடர வகித்த பங்களிப்பைத் தருவதே இக்கட்டுரையின் நோக்கம். இதன் மூலம் கலை இலக்கியத் துறையினர் இரசிகமணி பற்றிய சில புதிய தகவல்களைத் தரிசித்தல் கூடும்.

இரசிகமணி தினமும் காலையில் தனது ஒன்றுவிட்ட சகோதரியான திருமதி. செல்லம் சபாரத்தினம் வீட்டிற்குச் செல்வது வழக்கம். (முன்னாள் சுன்னாகம் திருமகள் அழுத்தகம், தனலக்குமி புத்தகசாலை முதல்வர் வீடு) அங்கு தினமும் காலை ஆறரை மணி முதல் ஏழரை மணி வரை ஒரு 'பேச்சுக் கச்சேரி' நடக்கும். கலை இலக்கிய நண்பர்கள், சன்மார்க்க சபை அன்பர்கள், அச்சகத் தொழிலாளர் எனப் பத்து முதல் பதினைந்து பேர் வரை கூடுவர். "கலாகேசரி" தம்பித்துரை, 'கவிமணி' கந்தவனம், கலைப்பேரரசு ஏ.ரி. பொன்னுத்துரை, "வெற்றிமணி" ஆசிரியர் மு.க. சுப்பிரமணியம், குழந்தைக் கவிஞர் "இதம்", அன்பர் இரத்தினம், சன்மார்க்கசபை பொதுச் செயலாளர் த. இராசரத்தினம், விதானையார் செல்லத்துரை, அச்சகத் தொழிலாளர் முத்தையா, கண்ணப்பசாமி என ஒரு பட்டியல் தொடரும். இப் 'பேச்சுக் கச்சேரி' ஒரு மாதமோ, இரு மாதமோ, அன்றி ஒரு வருடமோ இரு வருடமோ நடந்ததல்ல. பதினைந்து வருடங்களாகத் தொடர்ந்து நடந்தது. மழையாலோ, பனியாலோ, புயலாலோ கூட இப்பேச்சுக் கச்சேரியைத் தடுக்க முடியவில்லை. கந்தபுராணத்தில் தொடங்கி கம்பன் கவி நயத்திலும் இளங்கோவின் சிலம்பிலும் தாவி நவீன இலக்கியப் படைப்புக்கள் முதல் நாள் யாழ்ப்பாணத்தின் எங்கோவோர் முன்னிலையில் நடந்த இலக்கியக் கூட்டம், இரசிகமணி கடைசியாகப் பார்த்த ஆங்கிலப்படம். கடைசியாக வந்த தமிழ்நூல் எனச் சுவாரசியமாகச் சென்று சரியாக ஏழு முப்பதிற்கு திருமகள் அழுத்தக வண்டி சுன்னாகம் புறப்படுவதோடு முடிவடையும்.

குரும்பசிட்டிக் கல்விப் பாரம்பரியத்தினதும் இலக்கியப் பாரம்பரியத் தந்தை பொன். பரமானந்தர் காட்டிய சைவ மரபில் ஊறித் திளைத்தவர்களையும், தமிழாசிரியர்களையும், பண்டிதர்களையும் கொண்ட ஒரு கிராமத்தில் அதுவும் யாழ் மாவட்டத்திலுள்ள மிகப் பின் தங்கிய கிராமத்தில் நவீன இலக்கியப் பரிச்சயத்தையும், அதனை நயக்கவும், நலன் பாராட்டவும் ஓர் ஆர்வத்தை உந்தலை இப்பேச்சுக்கச்சேரி ஆரம்பித்தது. இதன் தளகர்த்தராக இருந்தவர் இரசிகமணி என்பது இங்கு மனங் கொள்ளப் பட வேண்டும். இதன் விளைவாக அறுபதுகளிலிருந்து ஈழத்தின் பல பாகங்களிலிருந்தும் கலை இலக்கியப் படைப்பாளிகளும், தமிழகத்திலிருந்து யாழ் வரும் கருத்தாளர்களும் குரும்பசிட்டி என்ற கிராமத்துக்குவரத் தவறுவதில்லை. அதேவேளை யாழ்ப்பாணத்தில் நடக்கின்ற கலை இலக்கிய நிகழ்வுகளிலும் குரும்பசிட்டியைச் சார்ந்த குறைந்தது பத்துப் பேராவது பங்கு பற்றத் தவறுவதுமில்லை. இத்தகைய ஓர் இலக்கிய ஊடாட்டத்தின் உறவுப் பாலம் ஏற்படவும் இப்பேச்சுக் கச்சேரி மூலம் இரசிகமணி வழி கோலினார்.

காலையில் முடிந்த பேச்சுக் கச்சேரி மீண்டும் இரவு எட்டு முப்பதிற்கு ஆரம்பிக்கும். இப்பொழுது களம் குரும்பசிட்டி சன்மார்க்க சபையாக மாறியிருக்கும். சன்மார்க்க சபையில் தினமும் காலை எட்டு மணிமுதல் இரவு எட்டு மணிவரை ஒரு வாசிகசாலை நடைபெறும். இதில் தமிழ், ஆங்கிலத் தினசரிகள், சமய, கலை இலக்கிய, அறிவியல் ஏடுகள் வாசிக்க இருக்கும். அரச, கூட்டுத்தாபன, தனியார் துறைகளில் கடமை புரியும் சபை உறுப்பினர்கள் மாலை ஏழு மணி முதல் அங்கே கூடுவர். வாசிகசாலை முடிவுற்றதும் அங்கே கூடுவோர் சமகாலப் புதினங்கள், அரசியல் அலசல்கள் எனப் பலவற்றைப் பற்றியும் கருத்துப் பரிவர்த்தனை செய்வர். வெள்ளிக் கிழமைகளில் அந்தப் பேச்சுக் கச்சேரியில் ஒரு விசேட அம்சம் இடம் பெறும். எமதுமண்ணின் சாந்தி பீடமாக விளங்கும் குரும்பசிட்டி முத்துமாரி அம்மன் ஆலயத்தில் வெள்ளிக் கிழமைகளில் இரவு ஏழு மணிக்கு விசேட பூசையும், கூட்டுப் பிரார்த்தனையும் இடம் பெறும். இது முடிவுற்றதும் சன்மார்க்க சபையில் கூடும் அன்பர்கள் தங்கள் பிள்ளைகளுடன் சன்மார்க்க சபைக்கு வருவர். அன்று இரசிகமணியின் பங்கு முக்கியமானது. அன்று அவர் நவீன கலை இலக்கியங்கள் பற்றிக் குறிப்பிடுவார். குறிப்பாக ஈழத்துத் தமிழ் எழுத்தாளர்கள், அவர்களது படைப்புக்கள், அக்காலத்தில் வெளியாகும் ஈழத்துச் சிற்றிலக்கிய ஏடுகள் பற்றிக் குறிப்பிடுவார். சிறுகதைகளையும், கவிதைகளையும் வாசித்து விமர்சிப்பார். இது அன்று சிறுவர்களாகவும் இளைஞர்களாகவும்



படிப்பகம்

www.padippakam.com

இருந்தவர்களிடையே நவீன இலக்கியம் பற்றிய அடிப்படைகளையும் தகவல்களையும் வழங்கியதோடு எம்மவர் பலரிடையே படைப்பார்வத்தையும், இலக்கியத் தேடலையும் உருவாக்கிய பெருமைக்குரியவராகவும் இரசிகமணி திகழ்கின்றார். இவை மூலம் குரும்பசிட்டியில் தோற்றுவிக்கப்பட்ட ஓர் இலக்கிய பாரம்பரியத்தின் உரமாக திகழ்ந்தார்.

இரசிகமணியிடம் காணப்பட்ட மேன்மையான குணங்களில் ஒன்று அவரது இலக்கிய நேர்மையாகும். இதனை அண்மையில் பேராசிரியர்.அ. சிவராசாவினால் எழுதி வெளியிடப்பட்ட இரசிகமணியும் தமிழ் மரபு விமர்சனமும் என்ற நூலில் டொமினிக்.ஜீவா, மு.தளையசிங்கம் போன்றோரின் கருத்துக்கள் மூலம் வலியுறுத்தப்பட்டிருந்தது. பண்டிதர். க. சச்சியையும், க.சி.குலரத்தினத்தையும் எந்த உளப்பாங்கோடு நேசித்தாரோ அதே உளப்பாங்கோடு எஸ்.பொ.வையும், இளம்பிறை ரகுமானையும், ஜீவாவையும், டானியலையும் அன்றைய இளைஞர்களான செம்பியனையும், செங்கையாழியானையும் நேசித்தார். ஒட்டு மொத்தத்தில் சகல படைப்பாளிகளையும் இதய சுத்தியுடன் அவர் நேசிக்கத் தவறவில்லை.

இப்பணபு கிராமிய மட்டத்திலும் அவரிடம் பளிச்சிட்டது. கிராமிய உள்ளூர் அரசியலில் தன்னுடன் முற்றிலும் மாறுபாடான கருத்தைக் கொண்டவரான மு.திருநாவுக்கரசு அக்காலத்தில் பல சிறுகதைகளை எழுதியிருந்தார். இக்கதைகள் சகல தமிழ் வார இதழ்களிலும் வெளியாகின. இரசிகமணி அவரை ஊக்கத் தவறியதில்லை. அவரின் சிறுகதைகள் நூலாக வெளிவரவேண்டியதன் அவசியத்தை வலியுறுத்தினார். இந்த நன்றியறிதலைத் தனது சிறுகதைத் தொகுதியான 'இவர்களும் மனிதர்கள்' என்ற நூலை வெளியிட்டபோது இரசிகமணியிடம் முன்னுரை பெற்றுக் கௌரவித்தார். இச் சிறுகதைத் தொகுப்பின் மூலம் மு.திருநாவுக்கரசு குரும்பசிட்டியின் முதல் சாகித்திய மண்டலப் பரிசு பெற்ற எழுத்தாளர் என்ற பெருமையைப் பெற்றார்.

குரும்பசிட்டியின் இளம் எழுத்தாளர்களை மட்டுமன்றிக் கிராமத்தில் எழுத்துத் தாகம் மிக்கவர்களையும் ஊக்கி நின்றார். குரும்பசிட்டி எம்.கே.எஸ். சிவகுமாரன், அ. பார்த்திபன் போன்றோர் இவ்வாறு உருவாக்கப்பட்டவர்களாவர்.

இறுதியாக திரு.ஏ.ஜே. கனகரட்ணா குறிப்பிடுவது போல் மரபிற்கும் நவீனத்திற்கும் ஒரு பாலமாகத் திகழும் இரசிகமணி பழமையிலே ஊறி நின்ற ஒரு கிராமத்தின் நவீன இலக்கியம் பற்றிய பரிச்சயத்தை ஏற்படுத்தி அங்கு இன்றுவரை ஒரு இலக்கியப் பாரம்பரியம் தொடரவும் சிலவற்றின் மூலம் ஈழத்துப் படைப்பாளிகளின் கவனத்தையும், அன்பையும் அக்கிராமத்தின் மீது பதிய வைத்த மாமனிதனாகத் திகழ்கின்றார்.

●

# என் இனிய ஊர் விட்டு




**நெடுந்தீவு லஷ்மன்**

புரியாத புதிராக உள்ளம்
புண்ணாகி வலிக்கிறது
விதியின் விளையாட்டோ
வேதனையின் வடுதானோ?
ஏன் வந்தேன்...
என் கிராமம் விடுத்திங்கே...

போர் அங்கு அதனால்
போவென்று மனம் சொன்னதல்ல
ஊருக்குள் அகதியென
உலவியதில் வருத்தமில்லை ...
வேரோடு உறவெல்லாம்
வெளியேறிப் பறந்ததினால்
ஊரின்மேல் உள்ள காதல்
உறுதி சிதறவில்லை...
ஏன் வந்தேன்
என் இனிய கிராமம் விடுத்திங்கு ...

அல்லி மலர் நிலவில்
அன்று நான் நடந்த மணல்
முள்ளாகக் குத்தியதில்
மனம் நொந்து போனேனோ?
பச்சைப் பசேலென்ற
பட்டாடை போர்த்த மேனி
உச்சிக் கருக்கலினால்
உருக்குலைந்த சோகத்தினால் ...
அஞ்சி அடிமைகளாய்
அடங்கி இருப்பவர் முன்
என் கருத்து ஏறாது
என்று புரிந்ததிலா...
ஏன் வந்தேன்
எந்தன் கிராமம் விடுத்திங்கு...

நெஞ்சில் நடம் புரியும்
உன்னுருவில் ... நினைவுகளில் ...
வஞ்சியவள் தமிழ் இளமை
அழகை ரசித்தவன் நான்
அன்று சுதந்திரமாய்த்
தவழ்ந்த இளந் தென்றலுன்னை
வந்த புயலொன்று
வதைத்து அடிமை கொள்ள
ஊமையாய் வாய் புதைத்து
உட்கார்ந்து இருப்பதிலும்
'நாம் யார்க்கும் குடியல்லோம்'...
மொழிக்கமைய வந்தேன் ...
ஏன் வந்தேன் இங்கே
என் இனிய ஊர் விட்டு.





படிப்பகம்

www.padippakam.com



செ. யோகநாதன்

# பயம்

எல்லாமே அவனுக்கு ஆச்சரியமாக இருந்தது. விட்டு விட்டு வீசுகின்ற காற்றிலே கூட இயக்கம் செறிந்திருப்பதாக உணர்ந்தான். நிமிர்ந்த போது எதிரேயுள்ள மரம் அசைவற்று நின்றது. காகம் ஒற்றையாக மிரட்சியோடு எங்கோ பார்த்து விட்டுப் பறந்தது. தூரத்திலே தலையில் மூட்டையொன்றுடனே தள்ளாடித் தள்ளாடி நடந்து வந்து கொண்டிருந்த கிழவர் ஒருவரை வேகமாகத் தாண்டியவாறு பஸ்வண்டி வந்தது. நேரத்தைப் பார்த்தான் சிவசாமி. ஏழு மணி பத்து நிமிஷம். அந்த நேரத்திலே சந்தேகப்படத் தேவையில்லை. சுவிற்சலாந்தின் பிரபல்யம் வாய்ந்த மணிக்கூட்டுத் தயாரிப்பு நிறுவனத்தில் ஆறுமாதங்களின் முன்னர்தான் அந்தக் கைக்கடிகாரத்தினை அவன் வாங்கியிருந்தான். விமானத்தில் இருந்து இறங்கியதும் இலங்கை நேரத்திற்கு சரியாக, கடிகார நேரத்தினை மாற்றிக் கொண்டான். விமானத்திலிருந்து இறங்கி வெளியே வந்து, கனகேஸ்வரன் கூட்டி வந்த 'வானி'ல் ஏறிய போதே உஷ்ணத்தகிப்பை உணர்ந்தான். வழிவழியே பல இடங்களில் இராணுவத்தாராலும், பொலிசாராலும் நிறுத்தப்பட்டுச் சோதனை என்ற பெயரில் குறுக்கு விசாரணை செய்யப்பட்ட போது மனதினுள்ளே எரிச்சலும் கவலையும் வெறுப்பும் உண்டாயிற்று. கனகேஸ்வரன், முதலிலேயே சோதனைச் சாவடிகளில் வாதப் பிரதிவாதம் செய்தால் வீணாக சிக்கல்களில் மாட்ட வேண்டி வரும் என்று ஒன்றுக்கு மூன்று முறை சொன்னதால் தன்னை அடக்கிக் கொண்டு மௌனமாயிருந்தான்.

சுவிற்சலாந்திலிருந்து வந்து ஏழு நாட்கள்.

இருபது ஆண்டுகள் இடைவெளியில் பல மாற்றங்களைக் காண வேண்டி வரும் என்று நினைத்திருந்தான். மாற்றங்களுக்குப் பதிலாக சிதைவுகளும் மங்கலும் இனந் தெரியாத அச்சமும் நிறைந்திருப்பதைக் கண்டான். முன்பு மிகவும் சாதாரணமாகப் போய் வந்த இடங்களிலெல்லாம் மஞ்சள் கறுப்பு நிறத்தடுப்பு வேலிகள். அதனருகே இறுகிப் போன முகத்தோடும் துப்பாக்கிகளோடும் நிற்கும் பொலிசாரும் சிப்பாய்களும்.



படிப்பகம்

www.padippakam.com

சுவிற்சலாந்துக்கு வந்த ஒருவரிடம் இலங்கை ஆங்கிலத் தினசரி ஒன்றினைச் சென்ற வருடம் தற்செயலாக வாங்கிப் பார்த்தான். அதில் அமைச்சர் ஒருவர் ஆணித்தரமாகக் கூறிய கருத்தொன்றினைப் படித்தான். வியப்பும் கேள்விகளும் மனதினுள்ளே ஒன்றாய்ப் பத்தாகப் பெருகின. கடந்த காலங்களை விட இப்போது இலங்கையில் வேலையில்லாத் திண்டாட்டம் குறைந்திருப்பதாக விகிதாசாரத் தொகையோடு அவர் விளக்கியிருந்தார். அதை அப்போது அவன் அரசியல்வாதிக்குரிய பொய் வார்த்தையென நினைத்தான். இப்போது நேருக்கு நேராகப் பார்க்கிறபோது. சந்திக்குச் சந்தி காணப்படுகிற சாவடிகளையும். மீசையே அரும்பிடாத இளமுகங்களையும் பார்க்கிறபோது அது, அந்த அமைச்சரின் வாக்கு மூலம் உண்மையென்றே கொள்ளத் தோன்றுகிறது. இனந்தெரியாத கவலையோடு மனதினுள் உதிர்ந்தது சிரிப்பு.

'அண்ணா...'

யோசனை கலைந்தான்.

எதிரே உதயன்.

'என்ன?'

புன்னகையோடு கேட்டான்.

'வீட்டுக்காரனோடு பொலிசில் பதியப் போவது தள்ளிப் போகிறது. திடீர் திடீரென்று சோதனை நடக்கிறது... அந்த ஆள் வந்ததும் செய்ய வேணும்...' உதயன் நிதானமாக அவனைப் பார்த்தான்.

'உதயா, நான் ஏற்கனவே சொல்லி விட்டேன். நான் இந்த நாட்டுப் பிரஜை அல்ல. சுவிற்சலாந்துப் பிரஜை. இந்த நாட்டுப் பிரஜைகளுக்காக கொண்டு வரப்பட்ட சட்டம் என்னை எப்படிக் கட்டுப்படுத்த முடியும்?'

உதயனின் முகத்தில் புன்னகை. அறியாமை நிறையப் பெற்ற ஒருவனுக்காக வெளிப்படும் புன்னகை. இரக்கமான அபிப்பிராயம். அவனை உதயனின் பார்வை மேலுங்கீழுமாக அளந்தது.

'ஆனால்...' இழுத்தான்.

'சொல்லும்?' சிவசாமியின் குரலில் கனிவு.

'ஆனால் நீங்கள் ஒரு தமிழன்'

'யாராக இருந்தாலுமென்ன சட்டம். சட்டந்தானே...'

அழுத்தமாகக் கேட்டான் சிவசாமி.

'நீங்கள் நன்றாகப் படித்தவர் தானே... நானா இதை உங்களுக்குச் சொல்ல வேணும்...'

'இல்லை .. சொல்லும் ..' கூறி முடிக்கவில்லை அவன்.

அவர்கள் சென்ற வாகனம் தடுத்து நிறுத்தப்பட்டது.

சோதனைச் சாவடி.

'இறங்குங்க...' சிங்களத்தில் சொன்னான் சிப்பாய் தடித்த குரலில். இன்னொருவன் துப்பாக்கியைப் போல அஃறிணையாகத் தெரிந்தான். 'பாஸ்போர்ட்' நீட்டியவனை மேலுங்கீழுமாகப் பார்த்தான் சிப்பாய். அடையாள அட்டையை நீட்டிய இன்னொரு ஆளை, அதைப் பார்க்காமலே சைகை காட்டி சிங்களத்திலே ஏதோ கூறி அவனைப் போக விட்டான். இவனைப் பார்த்து 'ஐசி' என்றான். சிப்பாயைப் பார்த்து ஆங்கிலத்திலே தனக்கு அடையாள அட்டை தேவையில்லை. நான் சுவிற்சலாந்துப் பிரஜை என்று கூறினான். சிப்பாய் கோபத்தோடு அவனை ஏறிட்டான். 'மட்ட ஜாதிக ஹந்தனும் பத்த சகா பொலிஸ் வார்த்தாவ. வென்வன்ன வெனுவா. நத்னங் ஏக்க நீதியிங் வறதா'

இவனுக்கு அருகே நின்ற வயதான ஒருவர், சிங்களவராக இருக்க வேண்டும். ஆங்கிலத்தில் சொன்னார்.

'உங்களுடைய அடையாள அட்டையையும் பொலிஸ் பதிவையும் காட்டச் சொல்கிறான். அவை இல்லாவிட்டால் அது தண்டனைக்குரிய குற்றமாம்...'

வயதானவருக்கு தன்னை அறிமுகப்படுத்திய சிவசாமி, தனது நிலை பற்றி சிங்களத்தில் சிப்பாய்க்கு கூறுமாறு அவரிடம் கேட்டான். அவரது முகம் சுருங்கிற்று. சட்டென்று அங்கிருந்து போய் விட்டார். போகும் போது அவர் முணுமுணுத்தது அவனது காதோடு கேட்டது, 'நான் இப்படியான சிக்கலுள் மாட்டிக் கொள்ள விரும்பவில்லை...'

அப்போது அங்கே இன்னொருவன் வந்தான். அதிகாரியாய் இருக்க வேண்டும், சிப்பாய் அவனிடம் ஏதோ சொன்னான். அதிகாரி ஆங்கிலத்திலே சிவசாமியிடம் கேட்டான்:

'என்ன விஷயம்?'

சிவசாமி யாவற்றையும் விளக்கமாகச் சொன்னான். அதிகாரி கவனமாக எல்லாவற்றையும் கேட்டுவிட்டு கண்களைச் சுருக்கியவாறு அவனைப் பார்த்தான்.

'ஆனால் நீ ஒரு தமிழன் தானே...'

சிவசாமிக்கு எரிச்சல் பெருகிற்று.

'..ம் ம் ம்.. ஆனால் இந்த நாட்டுப் பிரஜை இல்லை...'

'பிறகு எதற்காக இங்கு வரவேண்டும்?'

நையாண்டியாக அதிகாரி அவனைப் பார்த்தான்.

'எனது உறவினர்களைப் பார்க்க வந்தேன்...'

அதிகாரி எரிச்சலூட்டும் விதத்திலே சிரித்தான். சிவசாமியின் மனதுள் ஆத்திரம் கொழுந்து விட்டெரிந்தது. உடம்பே எகிறுவதை உணர்ந்தான். முகத்தில் ஆத்திரம் சிவந்தது.

"இந்த நாட்டுப் பிரஜை இல்லை என்கிறாய். பிறகு உனக்கு எப்படி இங்கே உறவினர்கள் இருக்க முடியும்..."

ஆத்திரம் எல்லை கடந்து போயிற்று அவனுக்கு.

'இப்போ நான் என்ன செய்ய வேண்டும்?'

அதிகாரி தலையைச் சொறிந்து கொண்டான்.

'உன்னைப் பற்றி யாரிடம் விசாரிக்கலாம்?'

சட்டென்று சொன்னான் சிவசாமி.: 'சுவிற்றலாந்து 'எம்பசி'யில் விசாரிக்கலாம். நானே அவர்களோடு வேண்டுமானால் தொலைபேசியில் பேசுவேன்...'

அதிகாரியின் முகம் மாற்றங் கண்டது. சிவசாமியை உறுத்துப் பார்த்தான். பின்பு அவனுடைய 'பாஸ்போர்ட்'டை வாங்கிப் பார்த்து விட்டுத் திருப்பிக் கொடுத்தான்.



படிப்பகம்

www.padippakam.com

'நீ போகலாம். தங்கியிருக்கும் முகவரியைத் தர வேண்டும்...'

அவன் தங்கியிருந்த வீட்டுச் சொந்தக்காரன் திசநாயக்கா நல்ல மனிதன். தனது வீட்டிலே ஆறு ஆண்டுகளாகக் குடியிருக்கும் தியாகராசா, மாதம் பிறந்த மூன்றாம் நாளே வாடகைப் பணம் கொடுத்து வருவதால் அவர் மீது மிகுந்த மரியாதை வைத்திருந்தான். அங்கே இன்னொருவரான சிவசாமியை தியாகராசா தங்க வைப்ப தாகச் சொல்லி அதற்காக இன்னும் ஐந்நூறு ரூபா அதிகமாகத் தருவதாகக் கூறியதும் அதற்கு சந்தோஷ மாக ஒப்புக் கொண்டான். ஆனால் பொலிஸ் பதிவு அவசியமென்றான். மறுநாட்காலையில் காலியிலுள்ள திசநாயக்காவின் அண்ணன் காலமானதும் அவசர அவசர மாகக் காலிக்குப் புறப்பட்டுச் சென்று ஏழு நாட்களின் பின் இரவு பதினொரு மணிக்கு வீடு திரும்பினான். களைப்பை ஆற்ற தேநீர் குடித்துக் கொண்டிருந்த போது சடசடவென்ற சத்தத்துடன் உள்ளே நுழைந்தனர் சிப்பாய்கள்.

திசநாயக்காவின் உடல் வெட வெடவென்று நடுங்கிற்று. அப்போது சிவசாமி வெளியே வந்தான். திசநாயக்காவைப் பார்க்கவே பரிதாபமாக இருந்தது.

'ஏன் பயப்படுகிறீர்கள்?' என்றான்.

இராணுவ அதிகாரி சத்தமிட்டான்.

'ஐ.சி காட்டுறதுங்...'

சிப்பாய் ஒருவன் சிவசாமியைக் கேள்வியோடு பார்த்தான். சிவசாமி அறையினுள்ளே ஃபோய் தனது 'பாஸ்போர்ட்'டை எடுத்து வந்து அதிகாரியிடம் கொடுத்தான். அதைப் பார்த்து விட்டுத் திருப்பிச் சேர்த்த அதிகாரி சாதாரணமாகக் கூறினான்:

'நீங்கள் பொலிசிலும் பதியவேண்டும்...'

அவர்கள் போனதும் திகைத்துப் போயிருந்த திசநாயக்காவை பரிவோடு நோக்கினான் சிவசாமி.

'எதற்கு இப்படிப் பயந்தீர்கள்...'

'இல்லை... இவர்கள் கூட்டிச் சென்றால்... அது நரகம், ஒருமுறை பொலிஸ் ஸ்டேஷனுக்கு நான் முறைப்பாடு செய்யச் சென்றேன். வீட்டுக்குத் திரும்பி வந்து ஒரு கிழமையாகக் காய்ச்சலில் படுத்திருந்தேன்...'

'ஏன் இப்படிப் பயப்படுகிறீர்கள்?'

திசநாயக்கா யோசித்தார். பிறகு தனக்குத் தானே கூறுவது போலச் சொன்னார்.

'சின்ன வயதில் நடுச்சாமத்திலை நானும் காமினியும் பந்தயம் கட்டி சுடுகாட்டிலை எத்தனையோ தரம்போய் இருந்திருக்கிறோம். காமினி அரசியலுக்குப் போனான். ஒரு நாள் களனியிலை அழுகிய பிரேதமாய் மிதந்தான். தெரியேல்லை. ஏன் இப்படி நான் ஆகிப் போனேன் என்று தெரியேல்லை...'

ஆங்கிலம் கொச்சை தட்டிற்று.

'நல்ல காலம். வந்த அதிகாரி நல்ல ஆள். அல்லாவிட்டால் நாங்கள் இருவரும் ஏதாவது ஒரு பொலிஸ் நிலையத்துக்கு கூட்டிப் போகப் பட்டிருப்போம். நாளை காலை முதல் வேலையாகப் பொலிஸில் பதிய வேண்டும்' மனதினுள்ளே சிரித்துக் கொண்டான் சிவசாமி.

கண்டி என்ற அழகிய கனவின் மீது தூசியும் அழுக்கும் படிந்துள்ளது போல சிவசாமிக்கு உணர்வு தட்டிற்று. பேராதனைப் பல்கலைக்கழகத்தில் படிக்கின்ற போது நெஞ்சைப் பறித்தெடுக்கும் நீல மலைகளையும், வளைந்து ஓடும் மகாவலியையும், வண்ணங்களைத் தூவி நிற்கும் செடிக் கூட்டங்களையும், மலைகளைச் சுற்றி மெல்லவே புரளும் சோம்பல் மேகத்திரளையும், சிலிர்த்துச் சிதறும் மழைத் துமியலையும் பார்த்து உணர்ந்து பரவசமெய்திய நாட்களெல்லாம் இப்போது பழங்கனவாகி விட்டாற் போல உணர்ந்தான் சிவசாமி. மனதுள் வெறுமை பரவிற்று. வீதிகளின் நெருக்கத்தில், ஆளை ஆள் பார்க்கையில் நம்பிக்கையீனம் ஒளிவின்றித் தொனித்தது.

கொழும்பு பஸ்ஸில் ஏறினான்.

அருகே இருந்தவனோடு மெல்ல அறிமுகம் உண்டாயிற்று. பொன்னையா மலைநாட்டு இளைஞன். மெல்லிய குரலிலே கதைத்தான். பஸ் கண்டக்டர் டிக்கட் கொடுக்க வந்தான். பொன்னையா ஐந்நூறு ரூபாவைக் கொடுத்தான். மிகுதியை டிக்கட் கொடுத்து முடிந்ததும் தருவதாகச் சொன்னான் கண்டக்டர். பொன்னையா மௌனமானான்.

அரைமணி நேரம் போயிற்று. கண்டக்டர் திரும்பவும் அருகே வந்தான். பொன்னையா அவனைக் கேள்வியோடு பார்த்தான். பிறகு தருவேன் என்று சைகையால் கூறிவிட்டு பின்பக்கமாகப் போனான் கண்டக்டர். பொன்னையாவின் முகம் சோர்ந்து சுருங்கிற்று.

பஸ் போகையில் ஓரமாகப் பார்த்தான் சிவசாமி. முன்பு பழங்களும் பச்சைக் காய்கறிகளும் நிறைந்திருந்த இடங்களில் இப்போது தண்ணீர்ப் போத்தல்களும், வண்ண வண்ணப் 'பக்கெற்று' களில் கொறிப்புத் தீனிகளும் தொங்கின. சில எருமைகள் நிலத்தில் சிதறியிருந்த கொறிப்புத் தீனியின் வெறும் பைகளை அதக்கி அதக்கித் தின்று கொண்டிருந்தன.

திடீரென்று அருகே கேட்ட சத்தம் சிவசாமியைத் திரும்ப வைத்தது. திரும்பினான்.

பொன்னையாவின் சட்டையைப் பிடித்து உலுப்பிக் கொண்டிருந்தான் கண்டக்டர்.

அதிர்ந்து போனான் சிவசாமி. எழுந்து பிடித்துத் தனியாக்கினான்.

கண்டக்டர் சிங்களத்தில் கத்தினான்.

பஸ்ஸில் இருந்த அனைவரும் மௌனமாயிருந்தனர். இந்த விஷயங்களில் எதிலுமே சம்பந்தமில்லாமல், தாங்கள் வேறெங்கோ இருப்பது போல அமர்ந்திருந்தனர்.

பொன்னைய கவலையோடு சொன்னான்:

'ஐயா, நான் பஸ்டிக்கற்றுக்குரிய பணத்தை மட்டுந்தான் கொடுத்தேனென்று...

கண்டக்டர் சொல்லுகிறார்...'

'என்ன?'

அதிர்ந்தது சிவசாமியின் குரல்.

'நான் உனக்கு சாட்சியென்று அவனிடம் சொல்லு...'

பொன்னையா அதைச் சொன்ன மறுகணமே,



படிப்பகம்

www.padippakam.com

கண்டக்டர் அவனுடைய கன்னத்தில் ஓங்கி அறைந்தான். பிறகு விறுவிறுவென்று டிரைவரின் அருகே சென்று சத்தமாகக் கத்தினான்.

பஸ்ஸில் இருந்த அனைவரும் மௌனமாயிருந்தனர். ஒருவரை ஒருவர் பார்க்காமல் பேசாமல் மெழுகுச் சிலைகளாக.

கொஞ்ச நேரத்தில் பஸ், பொலிஸ் நிலையமொன்றினுள் வந்து நின்றது.

டிரைவரும் கண்டக்டரும் உள்ளே போய் இரண்டு பொலிசாருடன் அங்கே வந்தனர். பொன்னையாவை கண்டக்டர் அடையாளம் காட்ட, ஒரு பொலிஸ்காரன் அவனை இழுத்துக் கீழே இறக்கினான். ஏளனமாக அவனைப் பார்த்த கண்டக்டர் சிவசாமியை வெறுப்போடு ஏறிட்டான்.

சிவசாமிக்கு தன் மீது அடங்காத வெறுப்பு வந்தது. பொன்னையா இப்போது எப்படி இருப்பான், என்ன நடந்திருக்கும் என்ற கேள்விகள் மனதினைக் குடைந்து வேதனைப்படுத்தின. வேதனை மெல்லவே கேள்விகளை எழுப்பிற்று. பொன்னையா இறக்கப்பட்ட போது தானும் இறங்கி பொலிஸ் ஸ்டேஷனில் சாட்சி சொல்லி அவனை விடுவித்திருக்க வேண்டும். அதைச் செய்யாதது பெரிய தவறல்லவா என்று மனதினுள்ளிருந்து சத்தம் கேட்டது. ஏன் அப்படிச் செய்யவில்லை... குரல் பெருகிற்று. அவற்றிடையே திசநாயக்காவின் மெலிந்த சத்தமும் கேட்டது. திசநாயக்காவைத் தான் கேட்ட கேள்விகளெல்லாம் ஒவ்வொன்றாகத் தன்னைச் சுற்றிச் சுற்றிக் குரலிடுவதாக சிவசாமிக்கு உணர்வு தட்டிற்று. நெற்றியைக் கைகளால் அழுத்திக் கொண்டான். ஆனாலும் குரல்கள் ஓயவேயில்லை. இப்போது கனகேஸ்வரனின் வார்த்தைகளையும் அக்குரல்களிலே சிவசாமி அடையாளம் கண்டு கொண்டான்.

## கதைக்க ஆட்கள் தேவை

முல்லையூரான்

வரப்புயர மழைபொழிய
காற்றாட்ட காடாட
வன்னிமையின் இமையொப்பும் வயல்களிலும் மீன்துள்ள
வன்னிமையும் வாழ்ந்ததையா வந்தார்கள்
முன்னோர்கள் சேர்த்து வைத்த கொம்பறை விதை நெல்லிரிய
காண்டாவனம் விரட்ட
வந்தாரை வரவேற்கும் வற்றாப்பளை விலக்கி
கனதூரம் ஓடி வந்தேன்

எனதருகே நடந்திருந்த கடல்நந்திவற்றியதாய் வாடி நான் மனம் நொந்து
புலம்பெயர்ந்த இவ்வடவுருவப்புல்வெளியில்
யாரோ இருவர்
எதிரெதிரே இருந்துரைக்க அருகருகே இருக்கை செய்தேன்.

யாரொருவர் இல்லோன் நான்
எதிரெதிரே இருந்துரைக்க அருகருகே இருக்கை செய்தேன்.

இப்புலம் பெயர்ந்த புல்வெளியில்
மரநிழலொன்றில் கிடந்து உயிரறும்பசுவொன்று
இரை மீட்டு அசை போடல்போல்
இக்குளிரிடை குந்தியிருந்து குமுறும்
இப்பழம் பசு நினைவசைத்தல் போலும்
என்மனம் போடுமசையால் நெஞ்சுநோவேன்.

என் கவினுறுநாடே
'நீ இழந்ததோ என்னை மட்டும்தான் போ
நானிழந்ததோ பல்கோடி உன் மணிகளன்றோ'

யாரொருவர் இல்லோன் நான் கடல்நந்தி வற்றியதாய்
இப்புலம் பெயர்ந்த புல்வெளியில்
எதிரெதிரே இருந்துரைக்க இப்புவியில் ஏனோதான் இருக்கை செய்தேன்.
ஏனோதான் இருக்கை செய்தேன்.
நிர்வாணமாய் கருவறையில் இருந்ததொப்ப
வாழ்விலும் நிர்வாணமே பெரிதென்க தோழர்காள்.



படிப்பகம்

www.padippakam.com

# மொழி பண்பாடு பற்றிய ஒரு கண்ணோட்டம்

## 1961 முதல் 2000 வரையிலும்

*– சாரல்நாடன் –*

1960ஆம் ஆண்டு தினகரன் பத்திரிகை தமிழ் விழா ஒன்றை நடாத்தியது. அவ்வேளையில் வெளிவந்த தமிழ் விழாமலரில் 'இலக்கியமும் மலைநாட்டு மக்களும்' என்ற கட்டுரையில், தற்போதைக்குக் குறிப்பிட்டுக் கூறுவதற்கு ஒன்றுமில்லை, எதிர்காலம் நம்பிக்கையூட்டுவதாக இருக்கிறது என்ற கருத்துத் தெரிவிக்கப்பட்டது. இந்த நம்பிக்கையூட்டுவது பொதுவாக கூறப்பட்டதுதான் என்று ஒதுக்கப்பட முடியாது என்பதற்கு இந்தக் கருத்தைச் சொன்னவர் மக்கள் கவிமணி ஸி.வி. வேலுப்பிள்ளை என்பவராவார் என்பதாகும்.

1960 வரையிலும், தன்னுடைய குடும்பப் பின்னணியிலும், இதற்கும் மேலாக தனது 'தனிப்பட்ட மொழி ஆற்றுமையாலும்' இலக்கிய உலகில் ஓரிடத்தைச் சொந்தமாக்கி வைத்திருந்தவர் ஸி.வி. வேலுப்பிள்ளை யாவர். அந்தக் காலக் கட்டத்துக்குள் தன்னுடைய 'வாழ்வற்ற வாழ்வு' எனும் தொடர் நவீனத்தை ஆங்கிலத்திலும், தமிழிலும் பத்திகை வாயிலாகத் தொடர் நவீனமாகத் தந்திருந்தவர் அவராவர். இப்படி ஒரு தொடர் நவீனத்தை இரண்டு பாகங்களாக, முதற்பாகம் 11 அத்தியாயம், இரண்டாம் பாகம் 19 அத்தியாயம் எழுதும் அளவுக்கு அவரது மலையகப் பரிச்சயம் இருந்தது.

இலக்கிய உலகில் புதியவராக அறியப்பட்டவர்களும் அவரது இலக்கிய அறிவுக்கு உரிய மதிப்பளித்தனர். க. கைலாசபதி, சில்லையூர் செல்வராஜன், சு. வித்தியா னந்தன், கா. சிவத்தம்பி என்பவர்களுடன் இர. சிவலிங்கம், எஸ்.எம். கார்மேகம், இரா. நாகலிங்கம் என்ற மலையக இலக்கிய முன்னோடிகளும் அவரை மலையகத்தின் சிரேஷ்ட கவிஞராகவும், இலக்கிய கர்த்தாவாகவும் முன் னிறுத்தினர். கூடவே அவரை ஒரு தொழிற்சங்கவாதி யாகவும் ஏற்றுக் கொண்டிருந்தனர்.

ஆரம்பத்தில் இலங்கை தொழிலாளர் காங்கிரஸ்ஸிலும், பின்னர் ஜனநாயக தொழிலாளர் காங்கிரஸ்ஸிலும் பணியாற்றிய அவர் தன் நண்பர் வெள்ளையனையும் இணைத்துக் கொண்டு தொழிலாளர் தேசிய சங்கத்தைத் தோற்றுவித்து சாகும் பரியந்தம் அதன் வெற்றிக்காக உழைத்தார். இதனால் அவரது வாழ்க்கை மலையக மக்களின் வாழ்க்கையோடு பின்னிப்பிணைந்து வந்ததாக இருந்தது. தோட்டப்புற மக்களைப்பற்றிய ஆங்கில ஆய்வு நூல்களில் கோ. நடேசய்யர், ஸி.வி. வேலுப்பிள்ளை என்ற இரண்டு பேரின் நூல்களே உதாரணங் காட்டப்பட்டு வந்துள்ளன என்பதும் கவனிக்கத்தக்கது.

மலையகத் தொழிலாளியின் பலம் அவர்களின் ஒழுங்கமைக்கப்பட்ட தொழிற்சங்க பலமாகும். அந்தப் பலத்தை இ.தொ.கா. முறையாகப் பயன்படுத்தியதா,? என்பதில் அபிப்பிராய பேதங்களிருக்கின்றன. அந்தப் பலத்தை அப்படியே வளரவிடக் கூடாதென்பதில் இனவாதிகள் பலரும் அக்கறை காட்டியே வந்திருக் கின்றனர். அவர்களின் அகம் மகிழத்தக்க விதத்தில் 1964 இல் கைச்சாத்திடப்பட்ட சிறிமா சாஸ்திரி ஒப்பந்தம் அமைந்தது.

1964ல் நிறைவேற்றப்பட்ட பிரஜாவுரிமைச் சட்டத்தால் இந்த மக்கள் அரசியல் பலத்தை இழந்து போனார்கள்.

1964ல் நிறைவேற்றப்பட்ட சிறிமா - சாஸ்திரி ஒப்பந்தத் தால் இந்த மக்களின் குடிசனத் தொகையில் ஐந்தரை லட்சம் பேர் இல்லாது போனார்கள். இந்த ஒப்பந்தம் இ.தொ.கா வின் கலந்தாலோசிப்பின்றியே நடைபெற்றது. எனினும், இதை எதிர்க்கும் எவ்வித முயற்சிகளும் செய் யப்படவில்லை. புத்திஜீவிகளின் எதிர்ப்பு இதற்கு வெகு பலமாக இருந்தது. மாலைமுரசு, செய்தி ஏடுகள் கட்டுரை களையும் கவிதையையுந் தாங்கி வெளிவந்தன.

மலைநாட்டு வாலிபர் சங்கம் (1960) இவர்களின் பாசறையாயிற்று. இர. சிவலிங்கம் இவர்களின் தளபதி யானார்.

"கேட்டார்ப் பிணிக்கும் தகைஅவாய்க் கேளாரும்

வேட்ப மொழிவதாம் சொல்" என்ற குறளுக்கு விளக்கமாய் அமைந்திட்ட பேச்சாளன். தொண்டமானை எதிர்த்தும், ஒப்பந்தத்தை எதிர்த்தும் மூலைமுடுக் கெல்லாம் அவரின் குரல் எதிரொலிக்கத் தொடங்கியது. தோட்டங்கள் தோறும்மன்றங்கள் தோன்ற ஆரம்பித்தன. படிப்பகங்கள் தோற்றுவிக்கப்பட்டன. நூல்நிலையம் தோற்றுவிக்க அனுமதி கிடையாது என்ற 'துரைமார் சங்கத்'தினரின் கட்டளையை மீற முடியாத இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ் கையை பிசைந்து கொண்டு நின்றது. மலையக இளைஞர் முன்னணி, (1970) மலையக மக்கள் இயக்கம் (1974), மலையக வெகுஜன இயக்கம் (1978) என்ற இயக்கங்கள் பரவலாகத் தோன்ற ஆரம்பித்தன.

தோட்ட லயக் காம்பிராக்களிலும், நகர்ப்புற சலூன்களிலும் தொங்கிய நேதாஜி, நேருஜி,



படிப்பகம்

www.padippakam.com

மகாத்மா காந்தி படங்கள் மறைய ஆரம்பித்தன. இந்தியத் தலைவர் களை மறக்க ஆரம்பித்த அவர்களுக்கு இயக்கத் தலைவராக ஒருவர் மாற்றீடாகக் கிடைக்கவில்லை.

1972ல் தோட்டங்கள் தேசியமயமாக்கப்பட்டன. தேசிய மயமாக்கல் என்ற போர்வையில் 'சிங்களமயமாக்கல்' இடம் பெற்றது. அடிமட்ட உழைப்பாளர்களைத் தவிர்த்து ஏனைய மட்டங்களில் இந்தக் கொள்கையே நடை முறைப்படுத்தப்பட்டது.

அடிமட்டத் தொழிலாளர்களும் கூட, அளவுமீறிய தேசியமய 'கண்டர்களால்' அவ்வப்போது தாக்கப்பட்டனர்.

ஜனவசம, அரசபெருந்தோட்டயாக்கம் என்ற இரண்டு நிறுவனங்களுக்குக் கீழ் வந்த தொழிலாளர்கள் ஓரளவு க்கு நியாயமாக நடத்தப்பட்டனர். இவர்கள் பெரு வாரியாகச் சார்ந்திருந்த இ.தொ.கா இயக்கத்தின் தலைவர் அரசாங்கத்தில் மந்திரியாகவும் இருந்தமையால் தொழிலாளர்களின் தொழிற்சங்க உரிமையும், அவர்களின் நலன் பேணும் கருமங்களும் பாதுகாக்கப்பட்டன.

இந்த இயல்பான போக்கை மாற்றியமைக்கும் விதத்தில் 1983 ஆடி கலவரம் நிகழ்ந்தது. ஆடிக்கலவர நிகழ்வுதான், முழு இலங்கையிலும் திட்டமிட்ட விதத்தில் தமிழினத்துக்கெதிராக நடைபெற்ற நிகழ்ச்சியாகும். இன சங்காரமே நடைபெற்றது.

மலையகத்து இளைஞர்களை முன்னின்று வழி நடாத்திய பலர் இந்தியாவில் தஞ்சம் புகுந்தனர். எஞ்சி இருந்தவர்கள் எப்படி இந்த நாட்டில் வாழ்வது என்ற வினாவுக்கு விடை தேடலாயினர். எந்த ஒரு செயலுக்கும் எதிர் விளைவுண்டு.

தலைமன்னாருக்கும் இராமேஸ்வரத்துக்கும் ஓடிக் கொண்டிருந்த 'ராமானுஜம்' கப்பல் சேவையை 1984ல் இடைநிறுத்தம் செய்ய வேண்டிய நிர்ப்பந்தம் இலங்கை அரசுக்கு ஏற்பட்டது. அதை நம்பிக் கொண்டு தமது நாட்களை எண்ணிக் கொண்டு வாழ்ந்த 'இந்திய பாஸ்போர்ட்'டாளர்களும் இந்த நாட்டிலேயே தொடர்ந்து வாழ வேண்டிய நிலை உண்டாயிற்று.

இலங்கையில்தான் இருந்தாக வேண்டும் என்ற சூழல் தோன்றியபோது, இலங்கையிலேயே தம்மை நிலை நிறுத்தும் பணிகளை மேற்கொள்ளத் தொடங்கினர். கால த்துக்குக் காலம் ஏற்படும் வன்செயல்கள் தொடர்ந்த வண்ணம்தான் இருக்கும்.

கரை மேவும் அலைகளென இதற்கு மத்தியில் தான் தமது வாழ்வு அமைய வேண்டும் என்பதை இளைஞர்கள் உணர்ந்தனர். தாக்குதலே, தற்பாதுகாப்புக்கான ஒரே வழி என்பதை தலைவர்களும் உணர ஆரம்பித்தனர்.

1988ல் நாட்டில் ஏற்பட்ட அரசியல் நிலவரங்களால் தமிழர்களின் கணிசமான வாக்குகளைப் பெறுபவர்களே அதிகாரத்துக்கு வரும் நிலைமை ஏற்பட்டது. இந்த நிலைமையை மறைந்த தொண்டமான் நன்கு பயன்படுத்தி, நாற்பது வருடங்களின் பின்னர் மலையக மக்களின் இழந்த வாக்குரிமையை பெறும் வழிவகை களை மேற்கொண்டார். அவரது தலைமையில் மலையக மக்களுக்கு கிடைத்த இந்த வாக்குரிமையை ஒரு பெரும் வெற்றியாகவே கொள்ள வேண்டும். தேசிய நீரோட்டத்தில் கலப்பதற்கு மலையக மக்களுக்கு இருந்த தளை அகற்றப்பட்டது.

அறுபதுகளின் பின்னால் இலக்கிய உலகில் ஒரு புதிய மாறுதல் தோன்றினாலும், 1965ல் அவர்கள் மலை நாட்டு எழுத்தாளர் மன்றம் ஒன்றை அமைத்தாலும் அதன் இயக்க ரீதியான செயற்பாடு 1971ல் 'கதைக் கனிகள்' என்ற தொகுதியினால்தான் வெளியே தெரிய ஆரம்பித்தது. அதன் பின்னால் 1979ல் தான் 'தோட்டக் காட்டினிலே' என்ற இன்னொரு சிறுகதைத் தொகுதி வெளிவந்தது. தங்களது சமூகத்தின் செயற்பாடுகளை ஆவணமாக்கித் தருவதில் மலையக சமூகம் இவ்வளவு காலத்துக்குப் பின்னரும் பின்தங்கியேதான் இருக்கிறது என்ற குற்றவுணர்வு சிலரைச் செயற்படத் தூண்டியது. தமது சமூக மேம்பாட்டுக்காக உழைத்தவர்களை கனம் பண்ணத் தொடங்கினர். ஆவணக் காப்பகத்தைப் பயன்படுத்தி சான்றுகளை வெளிக் கொணர்ந்தனர்: இலக்கிய கர்த்தாக்களைக் கனம் பண்ணி அவர்களின் நூல்களை ஆதரிக்கத் தொடங்கினர்.

1986ல் அமைச்சர் ராசதுரையைக் கொண்டு ஏழு இலக்கிய கர்த்தாக்களையும் 1996ல் பதினைந்து கலைஞர்களையும் கௌரவம் செய்தனர். 1991ல் கண்டி திரித்துவக் கல்லூரியில் இந்து பண்பாட்டமைச்சு 'தமிழ்விழா' ஒன்றை நடாத்தியது. இந்த மலையகத்துப் புத்தெழுச்சியை ஊக்குவித்து உற்சாகப்படுத்தும் நிகழ்வாக ஐரோப்பிய தமிழ் மாநாடு ஒன்று 1991ல் ஜெர்மனியில் நடைபெற்றது. மலையகத்து ஆய்வாளர் மு. நித்தியானந்தன் இதை முன்னின்று நடாத்தினார்.

எண்பதுகளின் பின்னர் கடல் கடந்த நாடுகளில் மலையகப் பணிகள் ஆதரிக்கப்பட்டதும் அங்கீகரிக்கப் பட்டதும் கவனத்தில் கொள்ளப்பட வேண்டிய ஒரு நிகழ்வாகும்.

மலையக மக்களின் வழக்காறு பற்றிய, மலையகத் தமிழ் ஆராய்ச்சி பற்றிய இலக்கிய விழாக்களும் கொண்டாடப்பட்டு வருவது உயிர்த்துடிப்போடு அவர்கள் இயங்குவதைத் தெரியப்படுத்துகிறது.

1998ல் இரத்தினபுரி வேவல்வத்தையில் ஏற்பட்ட அழிவை இந்த மக்கள் எதிர்கொண்டனர். இதற்கு முன்புபோல் ஓடவோ, ஒளிந்து கொள்ளவோ முனைய வில்லை. ஐந்து தசாப்தங்களுக்கு மேலாக இவர் களுக்குத் தலைமை நல்கிய தொண்டமானின் மறைவு, இவர்களுக்கு ஒரு புதிய தலைமை வரவேண்டிய தேவையைக் கொடுத்திருக்கிறது.

புதிய தலைமையை, வலிய தலைமையை மலையகம் 2000த் தொடரில் பெறும். - நிச்சயம் நம்பலாம்.



படிப்பகம்

www.padippakam.com

# அவுஸ்திரேலியாவில் நடைபெற்ற எழுத்தாளர் விழா. - 2001

**தி.ஞானசேகரன்.**

படைப்பாளிகளும் கலைஞர்களும் சுதந்திரமானவர்கள். அவர்களின் சுதந்திரத்தில் தலையிடாமல், நிபந்தனைகள் விதிக்காமல், குற்றங் குறைகளைத் தேடிக் கண்டுபிடிக்காமல், மனித நேயத்தை மேம்படுத்தி, ஆயிரம் பூக்கள் மலரும் நந்தவனத்தில் உலாவப் போகும் உணர்வுடன், ஆயிரம் சிந்தனைகள் கொண்டவர்களிடமிருந்து கருத்துக்களைப் பகிர்ந்து கொள்ளும் ஆரோக்கியமான சூழலை உருவாக்கும் எண்ணத்துடன், ஜனவரி 6, 7 ம் திகதிகளில் அவுஸ்திரேலிய மெல்பேர்ண் நகரில் ஏற்பாடு செய்யப்பட்ட எழுத்தாளர் விழா - 2001 எழுத்தாளர்களுக்கும்,கலைஞர்களுக்கும் ஓர் எழுச்சி விழாவாக அமைந்தது. புலம் பெயர்ந்த மண்ணிலே தமிழ் இனத்தை அடையாளப்படுத்தி பேணிக் காத்துக் கொள்வதற்கான முயற்சியே இந்த எழுத்தாளர் விழா.

கண்காட்சி, கருத்தரங்கு, கவியரங்கு, கலந்துரையாடல், இசை நிகழ்ச்சிகள், நாடக அரங்கு எனப் பல்சுவை நிகழ்வுகளும் விழாவின் நிகழ்ச்சி நிரலிலே இடம் பெற்றன.

கண்காட்சியில், மறைந்த தமிழறிஞர், படைப்பாளிகள், கலையிலக்கியத்திற்குப் பணிபுரிந்தவர்கள் ஆகியோரது உருவப் படங்கள் வைக்கப்பட்டிருந்தன. கம்பர். வள்ளுவர், இளங்கோ, பாரதி, வீரமாமுனிவர் முதல் இன்று யாழ்ப்பாணத்தில் மறைந்த பத்திரிகையாளர் நிமலராஜனின் உருவப்படம் வரை இக்கண்காட்சியில் இடம் பெற்றன.

ஓவியக் கண்காட்சியில் பாரம்பரிய வகை ஓவியங்களும், நவீனப்படுத்தப்பட்ட ஓவியங்களும் இடம் பெற்றன. அவற்றில் புலம் பெயர்ந்த தமிழர்களின் பிறந்து வளர்ந்த மண்ணின் ஏக்கங்களை வெளிப்படுத்தின.

புத்தகக் கண்காட்சியில் அவுஸ்திரேலியாவில் வாழும் தமிழ் எழுத்தாளர்களின் படைப்புக்கள், இலங்கை எழுத் தாளர்களின் படைப்புக்கள், ஏனைய நாடுகளில் வாழும் புலம் பெயர்ந்த எழுத்தாளர்களின் படைப்புக்கள் ஆகியவற்றிற்குத் தனித்தனியான பிரிவுகள் இருந்தன. பல நூற்றுக்கணக்கான அரிய நூல்களை இக் கண்காட்சியிலே காணக்கூடியதாக இருந்தது.

கருத்தரங்கு முதல் நாள் விழாவில் முக்கியமான நிகழ்வாக அமைந்தது. 8 அமர்வுகளில் கலையிலக்கியம் சம்பந்தமான பல்வேறு விடயங்கள் இக்கருத்தரங்குகளில் இடம் பெற்றன. இக்கருத்தரங்குகளுக்குத் திருமதி. பாலம் லக்ஷ்மணன், மாவை நித்தியானந்தன், பேராசிரியர் பொன். பூலோகசிங்கம், டாக்டர் தி. ஞானசேகரன், திரு அம்பி, சட்டத்தரணி த.நா. ஜெகராஜசிங்கம், அ. சந்திரகாசன், சட்டத்தரணி செ. ரவீந்திரன் ஆகியோர் தலைமை வகித்தனர். ஒவ்வொரு அமர்வுகளிலும் மூவர் என்ற கணக்கில் கருத்துரைகள் வழங்கினர். இவர்களில் லெ. முருகபூபதி, டாக்டர் பொன். சத்தியநாதன், நட்சத்திரன் செவ்விந்தியன், திருமதி ஞானம் ஞானசேகரன், திருமதி அருண் விஜயராணி, செல்வி பாமதி சோமசேகரம், த. கலாமணி, செ. பாஸ்கரன், சட்டத்தரணி செ. ஸ்ரீஸ்கந்த ராஜா ஆகியோர் உட்படப் பலர் கருத்துரைகள் வழங்கினர்.

மாலை நிகழ்ச்சிகள், மல்லிகை அவுஸ்திரேலிய சிறப்பு மலர் வெளியீட்டுடன் ஆரம்பமாகின. வெளியீட்டுரையை தி. ஞானசேகரன் நிகழ்த்தினார். அவர் தனது உரையில் மல்லிகை சஞ்சிகையின் பணிகளை விளக்கி, ஈழத்து இதய இலக்கியமாக மல்லிகை திகழ்கிறது என்றார்.

அடுத்து இளம் இசைக் கலைஞர்களின் வாத்திய விருந்து, வீணைக் கச்சேரி, தாளக் கச்சேரி ஆகியன இடம் பெற்றன. தொடர்ந்து த. கலாமணியின் "பூதத்தம்பி" இசை நாடகம், திருமதி புவனா ராஜரட்ணம் தயாரித்த 'வால்மீகி' சிறுவர் வில்லிசை நாடகம், சிட்னி தமிழ் அரங்கக் கலைகள் சக இலக்கியப் பவர் மன்றத்தினரின் 'ஒரு பொல்லாப்புமில்லை' நவீன நாடகம் ஆகியன இடம் பெற்றன. இசை, நாடக நிகழ்ச்சிகள் மிகவும் உயர்ந்த தரத்தில் அமைந்திருந்தன.

எழுத்தாளர் விழாவில் இரண்டாவது நாள் நிகழ்ச்சிகள் மெல்பேர்ண் திறந்த வெளிப் பூங்காவில் இடம் பெற்றன. கவிஞர் அம்பியின் தலைமையில் கவியரங்கு அன்றைய சிறப்பு நிகழ்ச்சியாக இடம் பெற்றது. தொடர்ந்து யாழ்ப்பாணம் ஒடியற் கூழ் கலை இலக்கியவாதிகளுக்கு வழங்கப்பட்டது. நிறைவு நிகழ்ச்சியாக, எழுத்தாளர் கலைஞர்களின் கலந்துரையாடல் இடம் பெற்றது. அடுத்த வருடம் சிட்னியில் நடைபெற இருக்கும் எழுத்தாளர் விழா 2002 இற்கான ஒழுங்குகள் பற்றிய ஆலோசனைகள் இக்கலந்துரையாடலில் தெரிவிக்கப்பட்டன. விழாவின் அமைப்பாளர் லெ.முருகபூபதி எழுத்தாளர் விழா சிறப்பாக அமைய உதவிய யாவருக்கும் நன்றி தெரிவித்தார்.



படிப்பகம்

www.padippakam.com

# அவுஸ்திரேலியாவிலிருந்து இலக்கிய மடல்

முதல் தடவையாக அவுஸ்திரேலியாவில் விக்ரோறியா மாநிலத்தில் தமிழ் எழுத்தாளர் விழா வெகு சிறப்பாக ஜனவரி 6ஆம் 7ஆம் திகதிகளில் நடைபெற்றது. Preston நகர மண்டபத்தில் முதல் நாள் விழா காலை 9 மணி முதல் இரவு 11 மணி வரையில் நடந்தது. மறைந்த தமிழ் படைப்பாளிகள், பத்திரிகையாளர்கள், கவிஞர்களின் புகைப்படக் கண்காட்சியும், தமிழக புலம் பெயர்ந்த நாடுகளில் வெளியாகும் இதழ்கள், மலர்கள் நூல் கண்காட்சியும் மல்லிகைப் பந்தல் வெளியீடுகளுடன் நடைபெற்றன. இக் கண்காட்சிகளை பேராசிரியர் பொன் பூலோகசிங்கம் சம்பிரதாயபூர்வமாக நாடா வெட்டித் திறந்து வைத்தார். விக்ரோறியா மாநிலத் தில் வதியும் இளம் தலைமுறைகளின் ஓவியக் கண் காட்சியும் ஓவியர் தனசிங்கத்தின் (எழுத்தாளர் சுதாராஜின் சகோதரர்) ஓவியக் கண்காட்சியும் நடைபெற்றது. காலை 10 மணிக்கு ஆரம்பமான இலக்கியக் கருத்தரங்கு மாலை 6 மணி வரையில் தொடர்ந்தது. எட்டு அமர்வுகளில் மொத்தம் 24 கட்டுரைகள் சமர்ப்பிக்கப்பட்டன. இலங்கையிலிருந்து தெளிவத்தை ஜோசப்பும், லண்டனிலிருந்து யமுனா ராஜேந்திரனும் கட்டுரைகளை அனுப்பி வைத்திருந்தனர். சகல கட்டுரைகளும் கணனியில் பதிவு செய்யப்பட்டு, தனித்தனி கோவைகளாக எழுத்தாளர் பிரதிநிதிகளுக்கு வழங்கப்பட்டது. மாலை 7 மணிக்கு இரவு நிகழ்ச்சிகள் ஆரம்பமாகின. விக்ரோறியா மாநில வெகுஜன அமைப்புகளின் தலைவர்கள் வாழ்த்துரை வழங்கினர். இலங்கையிலிருந்து வருகை தந்திருந்த Dr.தி. ஞானசேகரன் மல்லிகை அவுஸ்திரேலிய மலரை வெளியிட்டு வைத்து உரையாற்றினார். மல்லிகையின் நீண்ட கால அபிமானியும், வாசகருமான Dr. த. வாம தேவன், ஆசுகவி வேலுப்பிள்ளையின் (கல்லடிவேலன்) பேத்தி திருமதி ராணி தங்கராஜா, இலக்கிய அன்பர் திரு. ஆர். சிவநாதன், ஜெயானி ஜுவெல்லர்ஸ் உரிமையாளர் திரு. பிரபாகரன் ஆகியோர் முதல் பிரதியைப் பெற்றுக் கொண்டனர். சிட்னி கலைஞர்களின் "பூதத்தம்பி", "ஒரு பொல்லாப்புமில்லை', மெல்பன் இளம் கலைஞர்களின் வால்மீகி முதலான நாடகங்களும், இசைகளின் சங்கமமென்ற வாத்திய விருந்து நிகழ்ச்சியும் நடைபெற்றன. இரண்டாம் நாள் BANDOORA PARK இல் திறந்த வெளிப் பூங்காவில் கவிஞர் அம்பி தலைமையில் கவியரங்கும் கலந்துரையாடலும் நடைபெற்றன. மெல்பேண், சிட்னி, கன்பரா முதலான நாடுகளிலிருந்து பலர் வந்து கலந்து கொண்டனர்.

ஒடியல்கூழ் விருந்தும் நடைபெற்றது குறிப்பிடத் தக்கது.

– முருகபூபதி



படிப்பகம்

www.padippakam.com

தெணியான்

# இன்னொரு புதிய கோணம்



எனக்கு அடையாளம் கண்டு கொள்ள முடியவில்லை அந்த வீட்டை. ஒரு மாத காலத்துக்கு முன்னர் இந்த ஒழுங்கையில் சயிக்கிளில் நான் போயிருக்கின்றேன். பனையோலை வேலிக்கும் கிடுகுப் படலைக்கும் உள்ளே வெடிப்பும் உடைவும், அரையும் குறையுமாக அழுக்காகக் கிடந்த வீடு. இப்போது வெளிமதில், 'கேற்' றோடு எல்லாம் தடித்த, மெல்லிய சொக்கிலேற் வண்ணங்களில் மனசைத் தொடும் வண்ணம் ரம்மியமாக அது காட்சி அளிக்கிறது.

அழைப்பிதழ் ஒன்று வரும்போது கையோடு கொண்டு வந்து அவள் எனக்குத் தந்திருக்கின்றாள். விருந்தினர்களுக்கு மாத்திரமல்லாது, மற்றவர்களுக்குச் சும்மா கொடுக்கக்கூடிய அழைப்பிதழ் அல்ல அது. அந்த அழைப்பிதழின் பெறுமதி இருபத்தைந்து ரூபாவுக்குக் குறையாமல் இருக்கும். தன் பெருமைகளுக்குச் சான்றாக இந்த அழைப்பிதழ் இருக்க வேண்டுமென்று அவள் எண்ணியிருக்கக் கூடும்.

அவள் அழைப்பிற்குரிய விருந்தாளி அல்ல நான்.

ஐந்து மணிக்கு விருந்துக் கொண்டாட்டம். ஆனால் இரண்டு மணிக்கே என்னை வரச் சொல்லி இருக்கிறாள். எனக்கு ஆச்சரியம். மூன்று மணி நேரம் முன்னதாக அல்லவா வரச் சொல்லுகின்றாள். அழைத்த நேரத்துக்குப் போய்ச் சேர்ந்து விட வேண்டும். தாமதித்தால் என்னையும் இங்குள்ள குடிமகன் வரிசையில் வைத்து 'படம் பிடிக்கிறவனைக் காணயில்லை' என்று இளக்காரமாக எடுத்தெறிந்து பேசுவார்கள். அந்த வார்த்தைகள் காதில் பட்டுவிட்டால் நாக்கைப் பிடுங்கிக் கொண்டு சாக வேண்டும் போல அப்போது மனசில் தோன்றும்.

கமராவைத் தோளில் தொங்க போட்டுக் கொண்டு இந்த வெயிலில் சயிக்கிளில் கிளம்பி விட்டேன்.

எதிர்பார்த்து அவள் காத்து நின்றிருக்க வேண்டும். தூரத்தில் என் உருவம் கண்ணில் பட்டதும் வெளிக் 'கேற்' றைத் திறந்து ஓடி வருகின்றாள்.

அவளைக் கண்டு ஒரு கணம் நான் திகைத்துப் போகிறேன்.

அவளா, இவள்?

இனம் கண்டு கொள்வதற்கு இயலாத தடுமாற்றம் எனக்கு.



படிப்பகம்

www.padippakam.com

மெல்லிய இளம் பச்சை வண்ணப் பஞ்சாப்பியில் பட்டாம் பூச்சியாகச் சிறகடித்து நிற்கின்றாள். அவள் வயதில் ஐந்து ஆண்டுகளை அந்த ஆடை அலங்காரம் அப்படியே விழுங்கி விட்டிருக்கிறது.

'வாங்கோ... வாங்கோ...

அவளுக்கு முகம் கொள்ளா மகிழ்ச்சி. மனங் கொள்ளாக் குதூகலம்.

அவள் சொன்ன நேரம் தவறாமல் நான் வந்து சேர்ந்து விட்டேனல்லவா! நான் வராமல் இருந்து விடுவேனோ! என்று அவள் அச்சங் கொண்டிருக்க நியாயமில்லை. சிலசமயம் தாமதமாக வரக்கூடும் என்ற ஐயம் மனசில் இருந்திருக்க வேண்டும். எனக்கும் இன்று இடையூறு ஏதும் இருக்க மாட்டாது. வீடியோக்காரர் வந்தால் சபை முழுவதும் நிறைத்துக் கொண்டு நிற்பார்கள். நான் எங்காவது ஒரு மூலை பிடித்து ஒதுங்கி நின்று, வேமாகப் படங்களை அடித்துக் கொண்டு நிற்க வேண்டும். அப்படியொரு கேவலநிலை இன்றைக்கு இல்லை. ஆனால் மூன்று மணி நேரம் முன்னதாக வரச் சொல்லி இருக்கின் றாளே! அது ஏனென்றுதான் எனக்கு விளங்கவில்லை.

என்னைக் கனம் பண்ணி அவள் வரவேற்ற பாங்கு எனக்குச் சிரிப்பு மூட்டுகிறது. தன்னில் மூத்தவன் அல்லது தன் வயதுக்காரனாக அவள் என்னைப் பாவனை பண்ணுகின்றாள். தான் ஓர் இளையகுமரியென என்முன் னால் நின்று பவ்வியமாக நாணிக் கோணி நளினம் பண்ணுகின்றாள்.

வெளிக் 'கேற்'றில் இருந்து வீட்டு வாசல் வரை வரிசையாக இரு பக்கங்களிலும் சீமெந்துப் பூச்சாடிகளில் குளுகுளுவென வளர்ந்து நிற்கும் குறோட்டன்கள், பூமரங்கள்.

இரண்டு அறைகளோடு இணைந்து குறுகிக் கிடந்த திறந்த விறாந்தை அகலித்து சுவரெழுப்பி மூடிக்கட்டி கதவு யன்னல்கள் போட்டு வீடு நவீனிக்கிறது. கதவுகள், யன்னல்கள் எங்கும் தொங்கும் வண்ணச் சேலைகள், நெளி நெளித்து பளபளக்கும் வண்ண வண்ண ஈயத்தாள் கள், ஊதிப்பருத்த பல வண்ண பலூன்களால் அந்தச் சிறிய கூடம் அலங்கரித்து நிற்கிறது. உள்ளே வரிசையாகக் கதிரைகள், கண்ணைக் கவரும் வெளி நாட்டு வெல்வெற் கம்பளம் மூடிக்கிடக்கும் ஒரு மேசை நடுவில் கதிரை ஒன்றில் என்னை அமரவைத்துவிட்டு அவசரமாக அவள் ஒரு அறைக்குள் நுழைகின்றாள்.

அவள் தங்கை குளிர்பானத்தை வெள்ளி ரேயில் வைத்து எடுத்து வந்து கனிவாக எனக்குத் தருகின்றாள். 'நன்றி' நான் கையில் கிளாசை எடுத்துக் கொள்ளு கின்றேன். இந்த வெப்பத்துக்கு இந்தக் குளிர்பானம் இப்போது எனக்குத் தேவைப்படுகின்றது. ஸ்ரோவை வாயில் வைத்து மெல்ல மெல்லப் பருகுகின்றேன். ஐஸ்போட்ட குளிர்பானம், ஆகா! அருமையாக இருக்கிறது. அனுபவித்துச் சுவைக்கின்றேன். குளிர்பானம் தந்து உபசரித்தவளுக்கு அடுத்து இன்னொரு தங்கை. கடைக்குட்டியாக ஒரு தம்பி. அவர்கள் இருவரும் எங்கே போனார்கள்? வெளியே தேவையாக அவர்களை அவள் அனுப்பி வைத்திருப்பாள். கொண்டாட்டம் ஆரம்பிப்பதற்கு இன்னும் மூன்று மணி நேரம் இருக்கிறது. அதுவரை என்ன செய்யப் போகிறேன்! மனசு சலித்துக் கொள்ளுகிறது.

"தம்பி!" அழைத்துக் கொண்டு அவள் அம்மா அடுக் களைப் பக்கத்தில் இருந்து வருகின்றாள். அவளுக்குப் பின்னே அவள் அப்பா.

"வாங்கம்மா! என்னைத் தெரியுதா?" மனசில் எழுந்த ஆச்சரியம் கேள்வியாக எழுகிறது.

"சம்பந்தனோடை படிச்ச நீங்கள். இரண்டொரு தடவை இஞ்சை வந்திருக்கிறியள்"

அம்மாவுக்கு நல்ல ஞாபக சக்தி.

"தம்பியை எனக்குச் சின்னனிலே தெரியும். உங்கட வீடு கட்டக்கை மேசனோடை நான் கூலி ஆளாக நிண்டனான். அப்ப தம்பி கோமணம் கட்டாத சின்னப்பிள்ளை. எங்கடை சம்பந்தன் அளவு. நான் ஆசையில தூக்கிறனான். தம்பி இப்ப மறந்திருக்கும்." அவள் அப்பா என்னோடு இன்னும் நெருக்கமாக வந்துவிடுகின்றார்.

இந்த நெருக்கம் இன்று இந்த மண்ணுக்கு ஒரு புதுமையல்ல. பிள்ளைகளைப் பிரிந்து அவர்களை எண்ணி ஏங்கிக் கொண்டிருக்கும் பெற்றவர்கள், தங்கள் பிள்ளைகளை ஒத்தவர்களிடம் தம்மை மறந்து ஒன்றிப் போகின்றார்கள். அந்த ஒன்றுதல்தான் இந்த அம்மா அப்பாவிடம். இவர்களுக்கு நான் இப்போது சம்பந்தன்... ஞானசம்பந்தன். பெயருக்கேற்ப, சிறுவயதில் ஞானம் பெற்ற சம்பந்தன் அவன். படிப்பில் வெகு சுட்டி. குடும்பப் பொறுப்புணர்ந்து, உழைத்துப் பொருள் தேட வெளிநாடு போய்விட்டான்.

"வீடு வாசலெல்லாம் திருத்தி இருக்கிறியள்"

"அவசர அவசரமாக நேத்துத்தான் வேலை முடிஞ்சது தம்பி"

"அக்காவுக்குக் கலியாணமா?"

"அந்தக் கூத்தை ஏன் கேக்கிறாய் தம்பி"

"என்ன விஷயம்?"

"அது ..."

எதையோ சொல்வதற்கு அம்மா தயங்குகிறாள். தலையைத் திருப்பி எச்சரிக்கையாக வீட்டு அறையை நோக்குகின்றாள். மகள் இன்னும் வெளியே வரவில்லை என்பதை உறுதிப்படுத்திக் கொண்டு குரலைத் தாழ்த்தி இரகசியம் போலச் சொல்லுகின்றாள்.

"தம்பி, நீங்க எங்கட பிள்ளை போல. உங்களுக்கு எப்பிடி மறைக்கிறது! இந்த வீடு வளவை ஈடு வைச்சு, இவையவையிட்ட கைமாத்தா மாறித்தான் சம்பந்தனைச் சுவிஸ்"க்கு அனுப்பின நாங்கள். இன்னுங் கடன் தனி தீரயில்லை. வீடு வளவு மீளயில்லை."

"கடனைப் பாத்தா அவவுக்கு வயதேறிவிடும்"

"கலியாணம் எண்டா நாங்கள் கவலைப்படுவமே!"

"அவவுக்கொரு பேத்டே கொண்டாட்டம்" அப்பா பொறுமை இழந்து முணுமுணுக்கின்றார்.

இதுவரை அறுபதெழுபதாயிரம் சிலவழிஞ்சிருக்கும்"

"காசையேன் குடுக்கிறியள்?"

"நாங்கள் ஆர் தம்பி குடுக்கிறது.! எங்களுக்குப் படிப்பறிவு இல்லையெண்டு எல்லாம் தன்ரை பேரிலைதானே காரியம் பாக்கிறாள்"



படிப்பகம்

www.padippakam.com


பாரிஸ் மாநகரில் புதிய நிறுவனம்

# அறிவாலயம்

## புத்தக சாலை

**இலங்கை - இந்திய - புலம் பெயர்ந்த தமிழ் எழுத்தாளர்களின் படைப்புகள்**

பூபாலசிங்கம் புத்தகசாலை (இலங்கை) - விடியல் பதிப்பகம் (கோவை)
தாமரைச்செல்வி பதிப்பகம் (சென்னை) - காந்தளகம் பதிப்பகம் (சென்னை)
காவ்யா பதிப்பகம் (பெங்களூர்)
மற்றும்
அன்னம் - க்ரியா - கீழைக்காற்று - அலைகள் - வேர்கள் இலக்கிய இயக்கம் - சென்னை புக்ஸ் நியூ செஞ்சரி - காலச்சுவடு- மணிமேகலை போன்ற மிகப் பெரிய புத்தக நிறுவனங்களால் வெளியிடப்பட்ட தரமான நூல்கள்

டானியல்-டொமினிக் ஜீவா - அந்தனி ஜீவா - செங்கை ஆழியான்- செ. கணேசலிங்கன் - சாரல் நாடன் - பெனடிக்ற் பாலன் - தெளிவத்தை யோசப் - அனுராதா ரமணன் - சுஜாதா - பாலகுமாரன் - அகிலன் - கண்ணதாசன் - கைலாசபதி - சிவத்தம்பி - எம். ஏ. நுஃமான் - சண்முகதாஸ் போன்றவர்களின் இலக்கிய ஆய்வு நூல்கள்

பெண்ணியம் - தலித்தியம் - மாக்சியம் - பின் நவீனத்துவம் - பெரியாரியம் தொடர்பான வெளியீடுகள் நவீன சினிமா தொடர்பான ஆய்வுகள் இலங்கை - இந்திய தமிழ் கவிஞர்களின் கவிதைத் தொகுப்புகள் இலங்கை - இந்திய பத்திரிகைகள் - சஞ்சிகைகள் மற்றும் நவீன வாசிப்புப்புக்கான அனைத்து வெளியீடுகள்





பாடசாலை - அலுவலகத் தேவைக்கான உபகரணங்கள்
அனைத்துத் தொலைபேசி அட்டைகள்

**இவை அனைத்துக்கும்**

**PARIS ARIVALLAYAM**
7 Rue Perdonnet, 75010 Paris, France.
(M°: La Chapelle/Gare du Nord)
Tel: 01 44 72 03 34 / Fax: 01 44 72 03 35
E-Mail : arivaalayam@37.com

அனைத்தும் தபால் மூலமும் அனுப்பி வைக்கப்படும்.


படிப்பகம்

www.padippakam.com

"இந்த டாம்பீகங்களைப் பாத்து, கடன் தந்தவை வந்து எங்களைத்தானே நெருக்கப் போகினம். என்ன செய்யப் போறமோ!" அப்பாவுக்குக் குரல் கம்மி, கண்கள் கலங்குகின்றன.

"என்ரை பாலன் எந்தக் குளிரிலை பனியிலை கிடந்து கையடிச்சு உழைச்ச காசை..." தொடர்ந்து பேச இயலாது அம்மாவின் விழிகள் பனிக்கின்றன.

"என்னவாம் உதுகள்?"

குரல் வந்த திசையில் திரும்பிப் பார்க்கிறேன்.

அவள் மறுபடியும் ஒப்பனை செய்து முடித்துக் கொண்டு, அறையிலிருந்து வெளியே வந்து என் எதிரில் கதிரையில் வந்து அமருகின்றாள்.

அவள் வருகை கண்டு அம்மாவும் அப்பாவும் முகத்தைத் தொங்கப் போட்டுக் கொண்டு எழுந்து போகின்றார்கள்.

அவளுக்கு எரிச்சலாக இருக்கின்றது.

"என்னவாம்?" மீண்டும் கேட்கிறாள்.

"சும்மா கதைச்சவை"

"இதுகளுக்குப் படிப்பறிவில்லை.நாகரிகந் தெரியாது. பேத்டே எண்டால் என்னெண்டு தெரியாது. என்ரை பேத்டே கொண்டாட எனக்கு விருப்பமில்லை. ஆனால் சிறப்பாகக் கொண்டாடச் சொல்லி பிறதர் அறிவிச்சிருக்கிறா"

பிறதர், ஆங்கிலம் அக்காவுக்குக் கை கொடுக்கிறது.

பிறதர் என்றால் இவளுக்கு அண்ணனா? தம்பியா?

அக்கா மகா கெட்டிக்காரி.

"சரி அக்கா! நான் இப்ப என்ன செய்ய வேணும்?" வேண்டுமென்றே அக்கா என்ற வார்த்தைக்குச் சற்று அழுத்தங் கொடுக்கின்றேன்.

அவளுக்கு முகம் பட்டென்று கறுத்துப் போகிறது. அடுத்த கணம் அவள் தன்னைச் சுதாகரித்துக் கொண்டு, "பேத்டே கொண்டாட்டம் ஆரம்பிக்கிறதுக்கு முதல், இருபத்து நாலு புதுப்புதுக் கோணங்களிலே என்னை நீங்கள் படம் பிடிக்க வேணும்"

"ஏன் இருபத்திநாலு?"

"இருபத்தி நாலாவது பேத்டே"

ஓ ... எனக்கு உள்ளூரச் சிரிப்பு வெடிக்கிறது. எனக்கு வயது இருபத்தைஞ்சு. சம்பந்தனுக்கும் அதுதான் வயது.சம்பந்தனுக்கு இரண்டு அல்லது மூன்று வயது மூத்தவளுக்கு இருபத்தி நான்கு. நல்ல கதை இது.

"சரி எடுப்பம்."

'பிறதரின்ரை ஆசையை நான் நிறைவேற்ற வேணும். அவர் தன்ரை பிறன்ஸிக்குக் காட்ட வேணுமாம் அதிலே தான் அவற்ரை மதிப்பிருக்கு. உங்கடை கலை நுட்பம் எல்லாம் இந்தப் படங்களிலே வெளிப்பட வேணும்'

'ஒக்கே! நீங்க ரெடியா?', கமராவைக் கையில் தூக்கிக் கொண்டு நான் எழும்புகின்றேன்.

பஞ்சாப்பி, கவுண் சட்டை, ஜீன்ஸ் சேட் சோட், ரீசேட், நைற்றி, காவ் சாறி, சேலை என்று உடைகளை மாற்றி மாற்றி அவள் வந்து கொண்டிருக்கிறாள். பூஞ்செடி, புற்றரை, வீட்டுவாசல், கதிரை, முகம் பார்க்கும் முழுக் கண்ணாடி, படுக்கை அறை பின்னணிகளுக்கு அவளே என்னை அழைத்துப் போகின்றாள். நின்று, இருந்து, சரிந்து, கால்மேல் கால் போட்டு, படுக்கை அறைக் கட்டிலில் அமர்ந்து, குப்புறப்படுத்து கால்களை மடக்கி மேலே உயர்த்தி, நேரில், பக்கவாட்டில், பின்புறத்தில்.... எனக்கு வெட்கமாக இருக்கிறது. ஒரு ஆடவனுக்கு முன்னால் இப்படி எல்லாம் ஒரு பெண் காட்டலாமா? இந்தக் காட்சிகள் எல்லாம் படங்களாக யார் யாரோ மோகித்துப் பார்க்கப் போகிறார்கள். உடன் பிறந்த தம்பியும் அல்லவா பார்க்கப் போகின்றான். அவள் தான் பார்த்த சினிமாவில் ஆணும் பெண்ணும் நெருக்கமாக இணைந்து நிற்கும் காட்சிகளை மனசில் பதித்து, ஓர் ஆடவனோடு தான் அவ்வாறு சங்கமமாக இருப்பதான உணர்வில் எடுத்துக் கொண்ட படங்கள் சில. ஏனைய படங்களை எனது இஷ்டத்துக்கு எனது கோணங்களில் எடுத்து முடிக்கின்றேன்.

இருபத்து நான்கு படங்களும் ஒருவாறு எடுத்து முடித்து விட்டேன். இப்போது ஒருவர் இருவராக அவள் அழைத்த விருந்தினர்கள் வந்து கொண்டிருக்கிறார்கள். பெரும்பாலும் அவள் வட்டங்கள். உறவினர்கள் என்று ஒரு சிலர். எல்லோரையும் அவளே முன் நின்று வரவேற்கின்றாள்.

பிறந்த நாள் கொண்டாட்டம் ஆரம்பிக்கிறது.

கேக் வெட்டி அம்மா அப்பாவுக்கு அவள் ஊட்டுகின்றாள். அவர்கள் முகங்களில் கொண்டாட்டமில்லை. அவள் பலவந்தப்படுத்தி அவர்களை இழுத்து வந்து நிறுத்தி இருக்கின்றாள். நண்பர்கள், நண்பிகள் அன்பளிப்புகள் வழங்கி அவளை வாழ்த்துகின்றனர். சிலர் அவளைக் கட்டியணைத்துத் தங்கள் நட்பின் நெருக்கத்தைப் பலர் அறியக் காட்டுகின்றனர்.

அந்தக் காட்சிகள் யாவும் நான் கமராவுக்குள் அடக்கிக் கொண்டு நிற்கின்றேன்.

பொழுது மறைந்து முற்றாக இருள் வந்து இன்னும் சூழவில்லை. அதற்குள் மின்விளக்குகள் 'பளிச்' சென்று ஒளிருகின்றன.

எனக்கு வேலைகள் பெருமளவு முடிந்து போய் விட்டன. நான் நன்றாகக் களைத்துப் போய் விட்டேன். கதிரை ஒன்றில் அமர்ந்து கைக்குட்டையை எடுத்து முகம், கழுத்து, கைகள் என்று எல்லாவற்றையும் அழுத்தி அழுத்தித் துடைக்கின்றேன்.

தேநீர், சிற்றுண்டிகள் அவளே எடுத்து வந்து எனக்கு முன் வைத்து உபசரிக்கின்றாள்.

நான் தேநீரை மாத்திரம் மெல்லப் பருகிவிட்டு, கதிரையிலிருந்து எழுகின்றேன். கமராவைக் கையில் எடுத்துக் கொண்டு 'வாறன்' என்று அவளிடம் விடைபெற்று வெளியே நடக்கின்றேன்.

அவள் என்னைத் தொடர்ந்து பின்னால் வருகின்றாள். நான் சயிக்கிளைக் கையில் எடுக்க அவள் 'கேற்'றைத் திறந்து வழிவிட்டு வெளியே வருகின்றாள்.

'சரிபோவிட்டு வாங்கோ. படங்கள் நல்லா இருக்க வேணும். சுவிஸ்க்கு அனுப்பிறது. அடுத்த பேத்டேக்கும் நீங்கள் தான் வந்து படமெடுக்க வேணும்' அவள் சொல்லுகின்றாள்.

'நல்லது வாறன்' நான் சயிக்கிளில் புறப்படுகின்றேன்.

எனக்குள் இப்பொழுது இன்னொரு புதிய பிரச்சினை.

அடுத்த ஆண்டு இன்னொரு புதிய கோணம் நான் கண்டு பிடிக்க வேண்டுமல்லவா!



படிப்பகம்

www.padippakam.com

# சேவல்

கே. விஜயன்

வான்வெளியின் பரந்த மார்பினடியில் வெண் துகிலென மழைத்தூறலின் வருஷிப்பு.

நிலம் பார்த்து, குடையாக விரிந்து மண லைத் தொடு வதற்கு நெம்பும், வாழை இலையின் பசுமையான மேனியில் 'சரவர' வென மெலிதான சந்தடியுடன் மோதல் கொடுத்து நீர்க் கோடுகள் என மழைத் துளிகள் வழிகின்றன.

கறுவல் மேனி, நதி மீது தெப்பமாக ஈரத்துடன் பளபளக்கச் சூரிய வெளிச்சத்தில் கண்மன் கூசி, இமைகள் சுருங்கி, தவக்கோலச் சாமி போல் கல்லாகிவிட்டிருக் கிறான் பழனி.

வாழை மரம் அருகாக சண்முகம், தட தட'வென ஓடினான். காமாட்சிப் பாட்டியின் பேரன், தோட்டத்திலே பொல்லாத வாண்டுப் பயல் அவன்.

'நரிக்கும் மழைக்கும் கல்யாணம்

நரிக்கும் மழைக்கும் கல்யாணம்'

ஆட்டமும் பாட்டமுமாய் கும்மாளித்து ஆடி 'பட பட' வென பேரிரைச்சலுடன் நிலம் அதிர ஓடுகிறான். ஆனாலும் பழனியின் தவக்கோலம் கலையவில்லை.

சூரிய சக்கரப் பிழம்பு நடுப்பகலைத் தாண்டி கண்மூடித்தனமாக ஓடிக் கொண்டிருக்கிறது. அசுர வேகம்.

கல்லும் முள்ளும் பற்றையுமான மணற்தரையில் அமர்ந்து, முதுகை வாழைத் தருவில் சாய்த்து, நிமிர்ந்த முகத்தில் சூரிய கதிரும், மழை வருஷிப்பும் போட்டியிட கடும் யோசனைக் கடலில் சூழ்ந்து போயுள்ளான் பழனி.

அவன் காலடிக்குள் ஒடுங்கிக் கிடக்கும் கோழி, கக் கக் கக், கென கொக்கரிக்கிறது.

'இந்த அணைப்பிற்காகவே இவ்வளவு காலம் காத்திருந்தேன்' எனினும் உளக் கிளர்ச்சியிலிருந்து பீறிடும் பாசத்தின் செல்ல முனங்கலாக கோழியின் கொக்கரிப்பு அலைகள்.

முட்டையிட்டு, பலமுறை அடைகாத்து குஞ்சு பொரித்து, பழனியின் அன்பிற்கும் அரவணைப்பிற்கும் சொந்தமாகிப் போன கோழி அவன் வாழ்வினோடு உறைந்து போனதோர் இரண்டறக் கலப்பான ஜீவன்.

இந்தக் காட்சியை -

நெஞ்சு படபடக்க உடல் முழுவதும் பதற கதவின் இடுக்கு வழியாக பார்த்துக் கொண்டிருக்கிறாள் தெய்வானை - பழனியின் அம்மா.

'மவன - பொலிஸ் பயலுவ நல்லாகவே மொந் திட்டாங்க போல, வலி தாங்க முடியலியாக்கும்...' அவள் மனசிற்குள் வேதனையின் நெருடல்.

' ஊட்லேயிருந்து தரதரவென்று இழுத்துக்கிட்டு போவக்குள்ளேயே ஒடம்புச் சதையை கன்னா பின்னான்னு செதைச்சுட்டாங்கள்லே' நெஞ்சு வேதனையுடன் கதறுகிறது.

வழக்கமாக இரவு தான் வீடு வந்தான். அகோர பசியோடிருந்தான். தெய்வானை கொடுத்த இரண்டு ரொட்டிகளுக்கும் பசி அடங்கவில்லை.

பிளேன் டீயை, நமுக் நமுக், கென தொண்டை க்குழாய்க்குள் இறக்கி விட்டு சாய்ந்தவன்தான். ஒரு நொடிக்குள்...

'யப்பா, என்ன தூக்கம் தூங்குகிறான்' என்று தெய்வானை அசந்து நின்ற வேளையில் பொலிஸ் ஜீப் உறுமலுடன் வந்து வாசலில் நிற்கிறது.

குப்பி லாம்புடன் தெய்வானையின் கழுத்து வெளியில் எட்டிப் பார்க்கிறது.

நான்கு கிங்கரர்கள் ஜீப்பிலிருந்து தாவிக்குதித்து இறங்குகிறார்கள்.

'ஹோ யக்கோவ் அத பல்லா!'

'எங்கே பிசாசே அந்த நாய்'

தடித்த பருப்பமான சப்பை முகத்தையுடைய கன்னங் கரேலான பொலிஸ்காரன் கடித்துக் குதறுவதுபோல் கர்ஜித்தான்.

'மகன் மறுபடியும் ஏதாச்சும் பொல்லாப்பு பண்ணிப்பிட்டு வந்துட்டானோ?'

மனத்தில் பதற்றம் கப்பென ஒட்டிக் கொள்கிறது.

கரும்புகை கக்கிக் கொண்டிருக்கும் குப்பிலாம்பு நடுங்குகிறது.



படிப்பகம்

www.padippakam.com

லயக்காம்பராவின் சுவர்களில் அவன் துவம்சம் செய்யப்படுவதின் நிழலாட்டம் போடுகிறது.

குடலே அறுந்து விழுந்தாப்போல் அலறுகிறாள்.

லயக் காம்பராக் கதவுகள் அறுபடும் சேவல்களாக முழு லயனே துடித்தெழுந்து பீதியுடன் பார்க்கத் திறபடு கின்றன. பழனியைக் குண்டுக் கட்டாகத் தூக்கி ஜீப்பினுள் எறிவது தரிசனமாகிறது. தனியொருவனை பந்தாடுவதில 'இந்த பொலிசார்தான் எவ்வளவு மூர்க்கமாகப் பாய்ந்து குதிக்கிறார்கள்.

ஒரே மகன், வளர்ந்து ஆளாகும் வயதில் தகப்பன் முருகண்ணன் கசிப்புக்கு உடலைத் தாரை வார்த்து விட்ட தியாகசீலனாக குடல் நாறி, வயிறு வீங்கி தேயிலைச் செடிகளுக்குப் பசளையாகிப் போனான்.

அப்பனுக்குத் தப்பாமல் பிறந்தவன் பழனி. வீட்டிற்கும், ஊருக்கும் அடங்காப் பிடாறி. சண்டை, குத்துவெட்டு, பெண்பித்து, போதைப் பொருள் இப்படியே சேற்றெரு மையாகக் காலத்தை உழக்கி கரைசலாக்குபவன்.

✳ ✳ ✳

தேயிலை பிடுங்கல் மட்டுமல்ல மந்திரி ஐயா வீட்டிலும் தெய்வானை எடுபிடி வேலைகள் செய்வாள். அவர் உதவியால் ஸ்டேசன் போய் மகனைப் பிணையில் விடுவித்து வந்தாள்.

மணல் வீதியில் நடந்து வந்தபோது அவமானம் பிடுங்கித் தின்கிறது. வாரம் ஒன்று ஓடிவிட்டபோதும் வீதியில் எதிர்கொண்ட கண்கள், 'அடப்பாவி என்ன காரியம் பண்ணிப்பிட்டடா' என அங்கலாப்புடன் அசிங்கப்படுத்தின.

'சே' என்ன கேடு கெட்ட காரியம் செஞ்சுட்டான்.'

அம்மாவின் மனம் ஓ! வென அழுகை ஒப்பாரி வைக்கிறது.

ராஜநடை பழனிக்குச் சொந்தமானது. இன்று மெல்ல மெல்ல நொண்டி, நொண்டி அவன் நடக்கிறான்.

செமத்தடியின் வேதனை முறிவுகள் இன்னும் தீரலையோ?

லயக்காம்பராக்களிலிருந்து எட்டிப் பார்க்கப் பெண் களின் 'கண்கள்' பிரலாபிக்கின்றன.

வாழை மரத்தின் நிழலிலுள்ள கோழிக் கூட்டின் மீது பழனியின் கண்கள் பதிகின்றன.

அடைக்கோழி அவனைக் கண்டு விடுகிறது. உயிரே போனாப்போல் 'படபட' வென சிறகை அடித்துக் கொண்டு பாய்ந்தும் பறந்தும் பழனியின் கைகளுக்குள் வந்து அடக்கமாகிறது.

பழனிக்கும் பாசம் உண்டா என்ன? அடடா எதுவித பாச உணர்வுகளும் இல்லாத அவன் கண்களில் பிரிவின் துயர நீர்த்துளிகள் பிரவாகமெடுக்கின்றனவே!

ஒரு குழந்தையை அணைத்துக் கொள்வது போல கோழியைத் தழுவிக் கொள்கிறான்.

ஆ! என்ன இது, ஒடம்பெல்லாம் பூச்சு ஓடுறமாதிரி இருக்கே? மனம் பதறிய போதும் கோழியை உதறி யெறியாமல் நெஞ்சிலிருந்து தூக்கிப் பார்க்கிறான்.

கோழியின் உடம்பெங்கும் மணற்குவியலாக குறுமணி பூச்சுக்கள் படர்ந்து விட்டிருக்கின்றன.

ஐய்யய்யோ!

பொலிசார் அவனை கொண்டு போன நாளிலிருந்து அம்மா பொம்புள கூட்டை கவனிக்கவே இல்லை.

மனத்தில் 'தீ'' யென கேள்வி எழுகிறது.

அம்மா தெய்வானையை அக்கினிக் கண்களால் எரித்தான்.

வீட்டிற்குள் போகவில்லை.

அங்கே குந்திச் சுள்ளிகளைப் பொறுக்கி நெருப்பினை மூட்டி 'சடசட' வென எழுந் தீய்க்கு மேலாக கோழியை ரோஸ்ட் செய்வதுபோல் உருட்டி பூச்சுக்களையெல்லாம்





படிப்பகம்

www.padippakam.com

பொல பொலவென நெருப்பின் மீது விழுந்து கருகச் செய்தான்.

கோழிக்கு சுகமாகவிருக்கிறது.

ஆனந்தமாக சிறகடிக்கும் அது செல்லமாக கொக்கரிக்கிறது.

இருண்டு கிடக்கும் கோழிக் கூட்டின் மூலை முடுக்கெல்லாம் தீப்பிடித்துத் துப்புரவப்படுத்திப் புதுமணல் கொட்டி அடைமுட்டைகளை ஆடாமல் அசையாமல்...

கடினமாக வேலை செய்வதில் பழனி அசகாய சூரன்.

இவ்வளவு வேலைகளை மனம் ஒண்டி முடித்து மணற் தரையில் குந்தி வாழைக்கருகில் முதுகைச் சாய்த் தவன்தான். ஏதேதோ நினைவுகளில் சமாதிநிலை அடைகிறான்.

'இவனையா ஊரும்உலகமும் கெட்டவன் என்கிறது?' தெய்வானையால் ஜீரணிக்க முடியவில்லை.

❊ ❊ ❊

அன்னையின் நினைப்புப்போல் அவன் மனத்தில் பொலிஸ் அடிப்பின் வேதனைகள் இல்லை.

மலைக் காற்றின் ஈரலிப்பு உடலைத் தழுவி விதிர் விதிர்க்கச் செய்ய, கஞ்சாப் புகையின் ஸ்பரிசக் கிறக் கத்தில் அவன் உடல் வேட்கை தணித்த வேகத்தில் சுமணா என்ற பிச்சைக்காரி துடிதுடித்தாளே அந்த இன்ப நினைப்பின் மயக்கத்தில் பழனி நிஷ்டையாகி விட்டிருந்தான்.

பொல்லாத ரசனை மனம் அவனுக்கு, மீண்டும் மீண்டும் அந்த இரவுச் சம்பவத்தை அசை போடுவதில் தான் எத்தனை இன்பம், இன்பம். இடியும், மின்னலும் கைகலப்பில் கலந்து விட்டிருந்த அந்த இரவு காலம்.

மனத்திரையில் மீண்டும் நினைவுக் கோலங்கள் கருக்கட்டத் தொடங்கியபோது...

'ஏலே! பழனி மழ நின்னிருச்சி உள்ளே வந்து ரொட்டி சுட்டிருக்கேன் சாப்பிடு...' தெய்வானையின் குரல் அழைக்கிறது. நினைவு மேகம் சிதறிட, கண்ணிமைகள் மயில் சிறகென சட்டென விரிகின்றன.

அப்பொழுது...!

முட்டைகளின் மீது சயனித்துக் கொண்டிருந்த அடைக்கோழி மெல்ல எழுந்து, சிறகுகளை சடசடத்து, மெதுவாக அவனைச் சுற்றி வந்தது.

சிறகுகள் புடைத்து விரிந்து, முகம் பாரித்து, உடலெங்கும் வேதனை பூரிப்பில் பச்சை உடம்புக் காரியாக அதன் கொள்ளை அழகு அவனை கிறங்கச் செய்துவிட, பழனி பூரிப்பில் ஆழ்ந்து விழி பிதுங்கி அதற்கு செல்லமாக முத்தமிடுகிறான்.

பழனியின் உதடுகளில் புன்னகையொன்று மலர்ந்து விரிகிறது. தெய்வானையின் மனத்தில் நிம்மதிப் பெருமூச்சு வெளியாகிறது. தெய்வீகமான சிரிப்பு, இவனையா? கெட்டவன் என்கிறார்கள்! அவளால் நம்பமுடியவில்லை.

சட்டென ஒரு சம்பவம் நடக்கிறது.

'கொக்கரக்கோ'

சேவலொன்றின் ராஜகம்பீரக் கூவல், கழுகுபோல் சிறகுகளை அடித்து விரித்துக் கொய்யா மரத்திலிருந்து தாவிக்குதித்து 'குடுகுடு' வென வேகமாக ஓடி வந்து, கோழியின் மீது தாவி அமர்ந்து, அதன் தலையை சளுக்கெனக் கௌவி, ஓர் அசுரப்போர் தொடுக்கிறது.

வெட வெடக்கும் கொக் கென விக்கித்தாப் கொக் கரித்தது. சடக் கென தாவி பழனியின் காலடியில் விழுந்து துடித்தது. அவ்வளவுதான் அதன் பின்னர் கோழி எழும்பவில்லை. கண்கள், கால்கள், உடல் விறைத்து முழுவதும் சடலமாகிவிட்டது.

'அம்மா'

பழனியின் அலறல் கோழியின் சடலத்தை நடுக்க முடன் பார்க்கும் அவனுடைய கண்மணிகளினூடே துடிதுடிக்கும் அவன் இதயம் தெரிகிறது.

பழனியின் அம்மா வென்ற அழைப்போசை தெய் வானையின் கண்களிலிருந்து ஆனந்த பிரவாகத்தை அணையுடைக்கிறது. அப்படி அவன் கூப்பிட்டு எவ்வளவு காலமாகிறது.

மகனே!

தாயுள்ளத்தின் பாச நலம், நெஞ்சின் துடிதுடிப்பா கிறது.

'எலெ பிச்சு ஒனக்கு வெவரம் தெரியுமா? இந்த பய பழனி புள்ள பெத்து ஒருநாள் கூட ஆவாத பிச்சக்காரி சுமணாவ வெறித்தனமா கெடுத்துப்புட்டான். பாவம் பச்ச ஒடம்புக்காரி மரக்கட்டையாயிட்டா..'

'அடப்பாவி'

தேயிலைக் கூடைகளுடன் இரு பெண்கள் இவ்வாறு பேசிக் கொண்டு மலை இறங்கிக் கொண்டிருந்தார்கள்.

மலை முகடுகளில் பதுங்க முனையும் சிகப்புச் சூரியனை நோக்கி பெண்களின் கருத்த நிழல்கள் விரைந்து கொண்டிருக்கின்றன.

'ஐயய்யோ' படுபாவி என்ன காரியம் பண்ணிப்புட்டான்...'

மலையடிவாரத்திலிருந்து ஒரு கதறல் அசுர கானமாக மேலெழும்பி வருகிறது.

செல்லாயி கிழவி தான் அழுது புலம்பிக் கொண்டு ஓடி வருகிறாள்.

'என்னாத்தா ஏன் இப்படி கத்திக்கிட்டு ஓடி வார...'

'என்னா சொல்வேன், எப்படி சொல்வேன்'

'என் சேவல அடிச்சி கொன்னுட்டானே'

'யாரு?'

'அந்த படுபாவி பழனி'

'அவன எழவு புடிக்க, இப்ப சேவல் அடிச்சித் தின்ன வாரம்பிச்சிட்டானா'

'இல்ல அவனுடைய அடைக் கோழியே என் சேவல் மிதிச்சிட்டாம்.'

'அட கொல்லயிலே போவ' பெண் நிழல்கள் நாடியில் கை வைக்கின்றன.



படிப்பகம்

www.padippakam.com

குஜராத் பூகம்பம் பற்றிய என் வலிகள் இவை...
கவிதை வரிகள் என்றும் கலைத்துவம் தரமுடியா...
எழுத்து விழிகளின் வார்த்தைக் கண்ணீர் இது...
இதை இதய இதழ்களின் புலம்பல் சொற்கள்
என்பதே பொருந்தும்... இருந்தும்...

ஸ்ரீதர் பிச்சையப்பா

# தாண்டவம்

ஏய்... மண்ணே...!
என்னே கொடுமை...
செய்தாய் சொல்...

தாய் மண் என்று...
சந்தோஷமாய்...
வாழ்ந்த பிள்ளைகளை...

மடியில் போட்டுக்...
கொள்ள வேண்டிய நீ....
மடியில் போட்டு...
கொல்லலாமா... சொல்?

தாலாட்டுப் பாடாமல்...
போனாலும் பரவாயில்லை...
ஒப்பாரி பாடலைத்தாயே
காதகீ.

மிதித்து நடந்தாலும்...
பூமாதேவி என்று...
மதித்து நடந்தோமே...
காலடி மண்தனை....
தலையில் தூக்கிப் போட்டாயே...
சண்டாளி...

பஞ்ச பூதங்களில் ஒன்று....?
இப்படியா
உடல்களைத் திங்கும்
வஞ்சப் பூதங்களில்
ஒன்றாவது.

பூமியே உனக்கென்றாயிற்று...
சுற்றி சுற்றி....
சுற்றியதால் உனக்கு...

தலைச்சுற்றா... சரி... நீ...
ஓய்வெடுத்துக் கொள்வதற்கு
உடல்களின் பாடையா கேள்பது?
எங்களின் கண்ணீர்
குடித்தா ... உன்
தாகம்தனைத் தீர்ப்பது...?
எங்கள் மனிதப் பிணங்கள்
எரித்தா நீ....
குளிர் காய்வது...?
பூமியே உனக்கென்னாயிற்று...?

படைத்தவனே கொஞ்சம்
இந்த ஊர்தனைப் பார்...
முன்பு... முன்பு...
இது தெருக்கள்,
இது வீடுகள்,





படிப்பகம்

www.padippakam.com

இது கட்டிடம்,
இது வெற்றிடம்,
இது அவ்விடம்,
இது இவ்விடம்... என்று...

இனம் கண்டோம்... இன்று
எல்லாம் கற்குவியலாகி...
பிணம் கண்டோம்...
படைத்தவனே கொஞ்சம்
இந்தப்பார்தனை
வந்துப் பார்

கோலம் போட்டுப்
பார்த்த இடங்கள்
எங்கும்...
காலன் நடந்த
காலடித் தடங்கள்
ஏனப்பா...?

பூக்கள் மலர்ந்த
பூமி எங்கும்
கால், கை, தலைகள்
எதற்கப்பா...?

இறந்து போனபின்...
மண்ணுக்குள் போவது
பரவாயில்லை...
அது... உலக வழமை
மண்ணுக்குள் போனதால்
இறந்து போவது
உலகிலிது என்ன
கொடுமை...
பார்...
பூமியில் புதைகுழி...
உண்டு...
பூமியே புதைகுழி
ஆனது இன்று...
பார்...

அன்னையே ... ஆம்...
இத்தனை காலம்...
மண்ணையே, உன்னையே
அன்னையே என்று...
அழைத்தோமே...

இன்று... தாய் உனக்கு...
என்ன நிகழ்ந்ததடி...?

குளிக்க நதிகள்...
தந்தாய்!
இனிக்கப் பழங்கள்...
தந்தாய்!
விதைக்க வயல்கள்
தந்தாய்!
ரசிக்க இயற்கை
தந்தாய்...

இன்று தாய் உனக்கு
என்ன நிகழ்ந்ததடி.
தாய் உனக்கு...
பேய் பிடித்ததா...?

ஏய்... பெண்ணே...!
எங்கள் பெண்கள்
கேட்கிறார்கள்
உன் இலைத்தலைகளிடை
பூக்கள்....
மலர்த்திப் பார்த்தோமே...
எங்கள் பூக்களை
நீ பறிக்கவா? என்று...
எங்கள் ஆண்கள்
கேட்கிறார்கள்
மண் உனைப்
பொன் செய்து
மாற்றிப் பார்த்தோமே
எங்கள்
புன்னகையை
நீ அழிக்கவா என்று



படிப்பகம்

www.padippakam.com

என்ன பதில்
உன் வசம்?

பஞ்ச பூதங்களே...
பெயர் சரிதான்...
நெருப்பாய் வருகையில்...
கருகி எரிக்கிறாய்,
காற்றாய் வருகையில்...
பிடுங்கி எறிகிறாய்...
நீராய் வருகையில்....
நிறைக்கிறாய், மூழ்கவைக்கிறாய்...
மண்ணாய் வருகையில்!
இப்படி... தகர்க்கிறாய்...
சரிக்கிறாய், சுழிக்கிறாய்,
பஞ்ச ஷபூதங்கள்'
என்று
பெயர் வைத்தது
சரிதான்
வானம்...?
வானம் மட்டுமென்ன
இப்படி ரூபங்கள்
பலவாய் நீ...
கவர்ந்த உயிர்களை
சேமிக்கும் கஜானாவே
வானம் ஆனது...
என்கிற... நம்பிக்கையை
இதை எழுதும்
இந்த நேரத்தில்...
நானும் நம்பித்
தொலைக்க வேண்டியிருக்கிறதே

பொறுமை நீ
பொங்கியெழுந்து
பூகம்பமாகி
முடிந்தாய்...
எனக்குள் எழும்
பூகம்பத்துக்குத்தான்
பொறுக்க முடியவில்லை.

எனக்குத் தெரியும்...
எழுதும் கவியில்...
இதற்கு ஏதும்...
லாபமில்லை...
இனிமையிமேலும்...
இதுபோல் கவிதை...
எழாதிருக்கட்டும்...
இறுதியாய்...
ஒன்று கேட்கிறேன்.

அடிப் பூமாதேவி...
இனி உனை...
எப்படிப் பூஜிப்பது...?
இழுத்து எடுத்த...
பிணங்களையா உன்
கழுத்து மாலையென
அணிவிக்க..?
அழுது கதறும்....
குரல்தனையா உன்
மந்திர ஒலியென
தெரிவிக்க...
சொல்லடி... பூமாதேவி...
சொல்...
இனி உனை....
எப்படி பூஜிக்க...?

"உலக இயற்கையில் நடைபெறுகிற ஆக்கம் அழிவுகளைக் காண்கிற ஒருவருடைய ஒரு நாளைய வாழ்க்கையானது. அவைகளைக் காணாத ஒருவருடைய நூறு ஆண்டு வாழ்க்கையை விட மேலானது".

ஸவரஸ்ஸ - வக்கோ என்கிற தம்மபதத்து பாலி மொழிப் பாடலின் தமிழ்ப் பெயர்ப்பான ஆயிர வர்க்கம் என்கிற எட்டாம் பகுதியின் பதின்நான்காம் பாடல் வரிகள்.



படிப்பகம்

www.padippakam.com

சமீபத்தில் மல்லிகைப் பந்தல் ஆதரவில் கொழும்பில் செங்கை ஆழியானுக்குப் பேராசிரியர் சோ. சந்திரசேகரம் தலைமையில் மணிவிழா நடைபெற்றது. அந்த விழாவில் அவரைப் பாராட்டி மேமன்கவி வாசித்த வாழ்த்துப் பா.

எங்கள் மகா எழுத்தாளனே!
எங்கள் மெகா எழுத்தாளனே!
மணிவிழா கண்டுவிட்ட
தனித்துவப் படைப்பாளியே
எழுத்து நமக்கு வேள்வியானது
அதனால்
உனக்கான என் வாழ்த்து
சாத்தியமானது.

இது கவிதை ஆகுமோ
ஆகாதோ
நான் அறியேன்
ஆனால் இது
என் ஆத்மாவின் சந்தோஷமானது
உன்னை வாழ்த்த வந்தமையால்.

செங்கை ஆழியானே!
எழுதிக் குவிப்பதில்
ஆழியானவனே!

காட்டாறு போல்
பாய்ந்து வந்த
உன் எழுத்து வெள்ளத்தில்
அரைக் காற்சட்டை போட்ட காலத்திலே
அடியேன் படித்து
சந்தோஷித்தவன்.

நானா உன்னை
வாழ்த்துவது?
என்ன செய்வது?
நான் வளர்ந்து வந்த
பண்ணை அப்படி

ஜீவிதத்தைச் செலவு செய்து
எழுத்துக் காவியத்தை
படைக்கும் எல்லோரையும்
பாராட்டும் குணம் பிடித்த
ஜீவாவின் சீராட்டில்
வளர்ந்தவன்
என்பதால்
வாழ்த்த வந்துள்ளேன்.
பிடித்த எழுத்தாளர்



யார் என்று கேட்டபோது
அன்று நம் நாட்டில் பொழுது
போக்காய்ப் புத்தகம்
படித்தவர்களை முதல்முதலாய்
ஈழத்து எழுத்தாளன்
பேரை சொல்ல வைத்தவன் நீ
ஷெல் அடிகள் விழுந்த
வண்ணம் இருக்கையிலே
போரின் பயத்தால்
செல்லரித்துப் போன
மக்கள் மத்தியில் இருந்து
எழுத்து யாகம் நீ
வளர்ப்பதனால்தானே
உன்னை வாழ்த்த எங்களுக்குச்
சொல்லே வந்தது.

அகதிகளாய்
எமக்காய் புலம்பல் கண்ணீர்
வடிக்க
புலம் பெயர்ந்து பலர்
புறப்பட்டு போன பின்னும்
புண்பட்ட உன் மண்
விட்டு வராமல்

நீ எழுதிய எழுத்துக்கள்
பொன் எழுத்துக்கள்
என்று சொன்னால்
அது பொய் இல்லை
என்பேன்.

மூன்று வரி ஹைக்கூ எழுதவே

மூச்சு திணறுதையா எனக்கு
முகடு முட்ட
எழுதிவிட்ட
உன்னைக் காணும் வேளை
ஆச்சரியத்தால்
பேச்சே வருகுது இல்லை ஐயா.
செங்கை ஆழியானே
எம் முன்னோடிகளான
ஈழகேசரிதனையும்
மறுமலர்ச்சிதனையும்
சுதந்திரன்தனையும்
மறுபடியும் கண்டுபிடித்து
கனதியான புத்தகங்களாய்த் தந்த
இலக்கியக் கலாநிதி நீ

உன் எழுத்துகளில்
முரண் கண்டவர்கள் கூட
நீ எழுதிக் குவித்ததை கண்டு
சரண் அடைந்தார்கள்.

உன் எழுத்துக்களில்
கோஷம் இல்லை
ஆனால்
எரியும் நம்
தேசம் இருந்தது.

உன் எழுத்துக்கள்
கூலிக்காரன் முதற்கொண்டு
திறனாய்வு கொள்கைகளை
கூவி நிற்கும் மனிதர்கள் வரை
கூடி நின்று ஆராயும் உன்
எழுத்துக்கள்தானே
இன்று இங்கு கூடி நின்று
உன்னை வாழ்த்தச் சொன்னது.

நீ இடமா! வலமா!
அதனை உன் எழுத்தை
பார்ப்பவர்கள் நிற்கும்
திசையே தீர்மானிக்கட்டும்.

ஆனால்
உன் எழுத்துக்கள் தரித்து
இருக்கும் ஓர்
இடம் தனை
நாங்கள் அறிவோம்
அதுதான்
மானுடம்.

புவியியல்தனை
எளிமையாய்
புதுமையாய்
கற்றுத் தந்த குணராசாவே ~ இன்று
நம் புவியியலே
போரின் சீதோஷ்ணநிலையில்
கரைந்து போவதைக் கண்டு
நீ எழுதிய எழுத்துக்கள்
நம் வாழ்வின் சின்னங்களாகி
நிற்பதை நாங்கள் அறிவோம்.

உலக வரைபடத்தைத் தமிழாக்கி
தந்த எங்கள் மெகா எழுத்தாளனே
இன்று நம் நாட்டு வரைபடமே
அழிவின் சிறைக்குள்
சிக்கித் தவிக்கையில்
உன் படைப்புக்கள்
நம் உரிமைகளுக்கு
உயிர் சேர்ப்பதை
நாங்கள் உணர்கிறோம்.

மணிவிழா கண்ட
தனித்துவ எழுத்தாளனே
வயதில் மட்டுமல்ல
படைப்பிலும்
நீ கண்ட மணிவிழாவுக்காய்
நாங்கள் கண்ட இவ்விழாவில்
உனக்கொரு வேண்டுகோள்
வைப்பேன்.

எரியும் இந்த தேசத்தில்
ஒவ்வொரு மனிதனும்
அமைதி தரித்து நிற்க
எழுது நீ
எழுது.
எங்கள் மகா எழுத்தாளனே
எங்கள் மெகா எழுத்தாளனே.

அன்னியமாய் இந்தப் பூமியில்
எந்தவொரு
அகால மரணம்
காணாத வரை எழுது.

புதை குழிகள் புனையப்பட்டு
எம் உயிரின் கதைகள்
சாவின் நிழல்கள்
காணும் அவலம்
காணாமல் போகும் வரை
உன் கதை விழிகளைத் திறந்து
நீ எழுது.

செங்கை ஆழியானே
எழுதி எழுதி
சிவந்த உன் செங்கையால்
உன் மூச்சு மை தீரும் வரை
எழுது நீ
எழுது.

www.padippakam.com

# வாழ்வை அர்த்தமுள்ளதாக்குவது வாசிப்பு!

**– மா. பாலசிங்கம்**

வாசிப்பு வளத்தைப் பரம்பல் செய்யும் கருதுகோளோடு கல்வி அமைச்சினால் பெருவாரியான புத்தகங்களைக் கொள்வனவு செய்யும் அதிமதுரமான செயல்பாடொன்று அண்மையில் செயலூக்கம் கண்டது. இதே முனைப்போடு தினக்குரல் பத்திரிகையும் நடமாடும் நூலக சேவையொன்றைத் தொடக்கி இருப்பது, கல்வி, இலக்கியம் சார் சமூகத்திற்குக் கற்கண்டான சகுனமாகும். போரை அரவணைத்து அதன் அசுர விருத்திக்காகக் கோடிக்கணக்கான நிதியை அள்ளி இறைத்துக் கொண்டிருக்கும் இக்கால கட்டத்தில், இத்தகைய தூறல்கள் விழுவது மானிட வர்க்கத்தில் இன்னமும் மூளை வறட்சி முனைப்புக் கொள்ளவில்லையென்பதைத் துலங்க வைக்கின்றதெனலாம்.

கல்வி அமைச்சின் இப்பிரமாண்டமான கொள்வனவு, பாடசாலைகளில் இயங்கிக் கொண்டிருக்கும் நூலகங்களைப் புத்தகமயப்படுத்துவதற்கும், புதிய நூலகங்களை உண்டாக்குவதற்குமெனக் கூறப்படுகிறது. இன்றைய சமுதாயத்தை அறிவு மயப்படுத்தும் பொழுது, முழு மனுக்குலமுமே பாமரத்தனத்திலிருந்து மீட்கப் படுவது யதார்த்தமானதே! இந்த அறிவூட்டமானது நிச்சயமாக மூடத்தனங்களைக் கெல்லி எறியும் சம்மட்டி யாகப் பயன்படும்.

'நூலளவே ஆகுமாம் நுண்ணறிவு' காலங்காலமாக எம்மோடு பயணித்துக் கொண்டிருக்கும் பேருண்மை இது. இது மறக்கப்படும் பொழுது தான் சாத்தானின் கரங்கள் வீரியம் பெறுகின்றன.

Reading Maketh a full Man வாசிப்பின் மகா சக்தியை இப்படிச் சிலாகித்துக் கூறுகின்றனர். எனவே, தமது பிள்ளைகளுக்குப் போஷாக்கான உணவுப் பண்டங்களைத் தேடி அலையும் பெற்றோர் அவர்களது அறிவைக் கூர்மைப்படுத்தும் அரிய நூல்களையும் பெற்றுக் கொடுப்பதில் தயங்கக் கூடாது.

சுட்டப்பட்ட பாரிய நூல் கொள்வனவு மூலம் மாணவ சமுதாயத்தின் முன் அவர்கள் மலைக்கும்படியாக ஏராளமான புத்தகங்கள் குவிக்கப்படவிருக்கின்றன. அருமையான இலக்கொன்றைக் காவி நிற்கும் இத்திட்டம் தேக்க நிலைப்படுத்தப்படாது துரித நடைமுறையைக் காண வேண்டுமென்பதே அனைவரதும் எதிர்பாப்பு. களஞ்சியங்களில் புகலிடம் பெற்றுள்ள கறையான்களுக்கு இந்நூல்கள் விருந்தாக இருக்காதென்பதைச் சம்பந்தப்பட்டவர்களின் துரித செயல்பாடுகள் நிரூபிக்க வேண்டும்.

ஈழத்துப் புத்தகச் சந்தை வாசகர்களுக்கு ஓரளவு திருப்தியைத் தந்து கொண்டுதானிருக்கின்றது. வெளியீட்டகங்கள் அதிகரித்துக் கொண்டும் துரிதமாக இயங்கிக் கொண்டுமிருக்கின்றன. அவைகளிடமிருந்து நல்ல 'உருப்படிகள்' அணிவகுத்து வருகின்றன. நூல் வெளியீட்டு விழாக்கள்களை கட்டுகின்றன. இதுகாறும் தாம் படைத்தவைகளைத் தொகுப்புக்களாகப் பார்க்கும் பேறு கிடைக்குமோவென அங்கலாய்த்துக் கொண்டிருந்த படைப்பாளிகளின் தொகுப்புக்கள் வெளிவந்து கொண்டிருக்கின்றன. வாசகனது மனதை விட்டகன்று அமரர்களாகி விட்ட எழுத்தாளர்களது உன்னத படைப்புக்கள் புழக்கத்திற்கு வருவதற்கான ஏற்பாடுகள் நடைபெறுகின்றன. காலத்தால் மூத்த படைப்புக்கள் இனங்காணப்பட்டு மறு பதிப்புகள் பெற்று இன்றைய தலைமுறையால் வாசிக்கப்படுகிறது. எனவே இக்கால கட்டத்தை ஈழத்து இலக்கியத்தின் மறுமலர்ச்சியுகமெனில் அது வெறும் பூச்சுற்றலாகாது.

இப்பிரமாண்டமான புத்தகக் கொள்வனவு ஈழத்துப் படைப்பாளிகளின் கனதியையும் வீச்சையும் வாசகனுக்குக் கொண்டு செல்கின்றது. இதில் வித்தியாசமான - பல்சுவையைத் தரும் நூல்கள் அடங்குகின்றன. காலத்தால் மூத்ததான ஈழகேசரிச் சிறுகதைகள் - ஒரு முழுமை பெறாத நாவலென்ற கணிப்பை உள்ளடக்கிய சுய வரலாற்று நூலான எழுதப்படாத கவிதைக்கு வரையப்படாத சித்திரம் - ஈழத்து நாவல் வளர்ச்சியின் மைற் கல்லாகத் திகழும் மரணங்கள் - மலிந்த பூமி, மனநதியின் சிறு அலைகள் - காற்றுப்புகாத இருட்டுக்குள்ளும் கவிதை புகுந்து வரும் சிறப்பம்சங்களைக் கொண்ட நான் எனும் நீ, மீண்டும் வசிப்பதற்காக - நேர் காணல்களின் கருத்துக் கோவையான சந்திப்பும் சிந்திப்பும் - ஒரு பிரதேசத்தின் சிறுகதை விழுமியங்களை அக்கறையோடு பேசும் மலையகச் சிறுகதை வரலாறு - வித்தியாசமான மனிதக் கோலங்களைச் சித்திரிக்கும் தோட்டத்துக் கதா நாயகர்கள் - தமிழ் இலக்கியத்தைப் பகுப்பாய்வுக்கு உட்படுத்தும், பின் நவீனத்துவமும் அழகியலும், ஆங்கிலச் சிறுகதைகளின் தமிழ் மொழி பெயர்ப்பில் நீதிபதியின் மகன் - வெகுஜன விருப்பைப் பெற்ற சினிமா சம்பந்தமான பொன்விழாக் கண்ட சிங்கள சினிமா - இப்படித்தான் சினிமாப்படம் இருக்க வேண்டுமெனத் துணிவோடு சுட்டும் தணியாத தாகம் - உருவகக் கதைகள் அடங்கிய இயற்கை, மணற்கோயில் - அரசியல் சட்டம் சம்பந்தமான இலங்கையில் அரசியல் - கலை உலகப் பயணத்தை அழகியல்படுத்தி ரசனையோடு தரும் ஒரு சருகிலிருந்து கசிந்த ஈரம் - மூத்த எழுத்தாளரது காலத்தால் சாகாத எழுத்தின் வாலிப வீச்சை இளைய தலைமுறைக்கு அறிமுகப்படுத்தும்



படிப்பகம்

www.padippakam.com

குமாரி ரஞ்சிதம் - நகைச் சுவைப் பங்களிப்பான கவியாணம் முடித்துப் பார் - கிரிக்கட் விளையாட்டின் மேன்மையைப் புலப்படுத்தும் அஸ்கிரியாவிலிருந்து லக்னோ வரை - ஆரோக்கியமான சமுதாயத்தை உருவாக்கத் தூண்டும் நீங்கள் நலமா - சின்னஞ்சிறுவர்கள் சுவைப்பதற்கான சண்டியன் ஓநாய், சிறுவர் உலகம் - வெவ்வேறு கருத்துப் படையலாக விளங்கும் இந்தப் புத்தகப் புனத்துள் புகுந்து கொள்ளும் வாசகனுக்கு எந்தப் புத்தகத்தை எடுப்பது எதைத் தள்ளிவிடுவதென்ற சலன ஊற்று இயல்பாகவே பெருக்கெடுக்கும். எந்தவொரு விஷயத்திலும் முதல் திருப்திதான் கடைசி வரை நீடிக்கும். இது புத்தக வாசிப்புக்கும் பொருந்தும். பொழுதைப் போக்கும் பொருட்டோ அல்லது அறிவைப் பெருக்கும் எண்ணத் தோடோ வாசிக்க எத்தனிக்கும் மாணவனுக்கோ அல்லது வயது வந்த ஒருவருக்கோ அவரது கன்னி வாசிப்பு ஆத்ம திருப்தியைக் கொடுக்காவிட்டால் அவர் வாசிப்பைத் தொடர்வது துர்லபம். கால் மாறி இந்த நேரத்தை வேறெதிலும் செலவிடவும் தூண்டப்படுவர். இது சினிமாவாகவோ அல்லது விளையாட்டாகவோ இருக்கலாம். அல்லது அவப் பொழுதைப் போக்கிச் சோம்பேறியாகவும் மாறலாம்.இது சமுதாயத்துக்கு மிகவும் துரதிருஷ்டமான விளைவாகும். இந்த விபத்திலிருந்து மீட்டு ஒருவரை சிறந்த வாசகனாக்குவது சான்றோரது கடமையாக இருக்க வேண்டும்.!

ஈழமொரு வளர்முக நாடு! சொகுசு வாழ்க்கையை ஆராதிப்பவர்கள் இந்த மண்ணை மறந்தவர்கள். எனவே ஈழப் படைப்பாளிகள் மிகுந்த அர்ப்பணிப்போடு தமது எழுத்தூழியத்தைச் செய்கின்றனர்.

போக்கிடம் தெரியாது பயணித்துக் கொண்டிருந்த ஈழத்து இலக்கியத்தைச் சரியான தடத்தில் மிதக்க வைத்தவர்கள் முற்போக்கு எழுத்தாளர்கள்.இவர்களது பிரவேசத்திற்குப் பின்னர்தான் எமது இலக்கியத்திற்குச் சர்வதேசக் கவனம் கிடைக்கப் பெற்றது. இவர்களது விதைப்புகளிலிருந்து வெடித்துச் சிதறிப் பெரு விருட்சமாக ஓங்கி நிற்பதுதான் எமது இன்றைய இலக்கியம். தேசிய இலக்கியத்தை முன்வைத்த முற்போக்காளர்கள் சாதியம், பெண்ணியம், வறுமை, தொழிலாளர் பிரச்சினை இவைகளுக்கு முக்கியத்துவம் கொடுத்தனர். எழுத்தில் யதார்த்தத்தை வற்புறுத்தினர். இதனால், எமது படைப்புக்கள் போலிக் கற்பனைகளுள் அகப்பட்டுத் தரத்தை இழக்காமல் தப்பியது. மென்மையான உணர்வுளைக் கிள்ளிவிடும் சினிமாத் தன்மை கொண்ட படைப்புகள் எம்மவரால் ஆக்கப்பட வில்லை. இருந்தும் எமது ஆக்கங்களைப் வெம்பல், வெதும்பலெனச் சிறுமைப்படுத்துவது பின்னுக்கு வந்த கொம்பு மறைக்கப் போகிறதென்ற ஓரவஞ்சனையான - ஒரு தலைப்பட்சமான வக்கரிப்பேயாகும்.

சமூக அக்கறையோடு சிந்திக்கும் கருவறைகளில் சூல் கொண்ட நூல்கள், நூலகங்களின் ராக்கைகளில் ஆரோகணிக்கப் போகின்றன. வாழ்க்கையின் ஆரம்பப் படிகளில் நிற்பவர்கள் மாணவர்கள், அவர்களுக்குச் செப்பமான வழியைக் காட்டக் கூடிய ஆலோசனைகள், புத்திமதிகள் தேவை. அவர்களது வாசிப்பு இதற் கமைவாக இருக்க வேண்டும். அல்லாவிடில் புத்தக மேந்தும் அவர்களது கை வேறெதையும் ஏந்த ஏவப்படும்.!

வாசிப்பதற்கென ஒரு புத்தகத்தை தேர்ந்தெடுப்பது எப்படி? நூலின் தலைப்பு, அட்டைப்படம் ஆகியன ஒரு வாசகனுக்கு வலை விரிக்கும் வல்லமையைக் கொண்டவையா? ஈழத்துப் புத்தகங்கள் சினிமாக் கவர்ச்சி கொண்டவையாக ஆக்கப்படுவதில்லை. சிறுவர் நூல்களுக்கான அட்டைகள் சிறுவர் நூலாக்கத்தில் பெரும் பங்கைப் பெறுகின்றன. இதன் சூட்சுமம் சிறுவர்களை மயங்க வைப்பதே. படைப்புக்கு தலைப்பிடும் பொழுது கருத்தாழம் கொண்டதாக அமைய வேண்டுமெனப் படைப்பாளிகள் விரும்புகின்றனர். புத்தகத்தின் இந்தப் புறத் தோற்றத்தால் நல்லதொரு வாசகன் கவர்ந்திழுக்கப்படமாட்டான். நூலின் உட்புறப் பயன்பாடே வாசகரின் இச்சையை உருவாக்குகிறது. எழுத்தாளர் சிலர் தமது படைப்புக்களின் மேம்பாட்டால் வாசகனின் இதயத்தில் நிரந்தரமான இடத்தைப் பெற்றுவிடுகின்றனர். அவர்களது பெயரைப் பார்த்தவுடன் அதை வாசகர்கள் படிக்க முனைவர். பெரிய பாப்பாக்கள் கூடச் சின்னப் பாப்பாக்களின் நூல்களைப் படிப்பதுண்டு. இது பழக்க தோஷமாகவும் இருக்கலாம். சிறுவர் நூல்களில் - கதைகளில் கதைத் தன்மை, திருப்பங்கள் ஏராளமாக வருவதுண்டு. இதனால் பெரிய பாப்பாக்களுக்கு சிறுவர் நூல்களைப் படிக்க வேண்டும் என்ற ஆவல் ஏற்படுவதுண்டு. நூல்களை வாசிப்பதற்குப் பற்பல காரணங்கள் கூறப்படுகின்றன. மொழித் தேர்ச்சியைத் தக்க வைப்பதற்கு வாசிப்பு உதவும். எழுத்தாளர்களும் பத்திரிகையாளர்களும் பார்த்த நேரமெல்லாம் புத்தகமும் கையுமாகத் தோன்றுவது இதன் நிமித்தமே. கற்றதைக் கால நீட்டம் அள்ளிக் கொண்டு போகாமல் இருப்பதற்கு வாசிப்புக் கைகொடுக்கும். வாசிப்புத் தகவல் சேகரிப்பிற்கும் தோள் கொடுக்கிறது. நாவல்கள், சிறுகதைகள் வாசிப்பது தற்பொழுது வேகமாக அதிகரித்துவிட்டது. இதற்குக் காரணம் இவைகள் வாசகருக்கு ஆசிரியர்களாகவும், ஆலோசகர்களாகவும், நீதிபதிகளாகவும் சிலநேரங்களில் பொலிஸ் உத்தியோகத்தர்களாகவும் சேவிக்கின்றன. பொழுது போக்கைக் கருதி இவைகள் வாசிக்கப்படு வதாகச் சில குறுகிய வட்டங்கள் எல்லைப்படுத்து கின்றன. இருந்தும், ஒருவனது மனதை ஒருநிலைப் படுத்தும் மகாசக்தியைப் புத்தகங்கள் தம்பால் கொண்டிருக்கும் உண்மையை எவரும் மறுக்க முடியாது. வாசகனின் மனத்தைப் புத்தகங்கள் உழுகின்றன. மன இயல்பே ஒருவனது வாசிப்பைத் தீர்மானிக்கின்றது. எனவே அவன் பெற்றுள்ள அறிவும் இதைத் தீர்மானிக்கும். ஒரு பொம்மைக் கடைக்குள் விடப்பட்ட சிறுவனாக வாசகனொருவன் புத்தகக் கடைக்குள் நின்று முழுசுவான். விற்பனையாளன் புத்தகங்களைக் காட்டு வான். எடுத்துப் படித்துப் பார்க்கும்படியும் விற்பனை யாளன் கூறக்கூடும். இந்தச் சொற்ப நேர வாசிப்புக்கூட சிலருக்கு நல்ல புத்தகங்களைத் தெரிவதற்கு உதவு கின்றது. கவிஞர் மேமன்கவி அடிக்கடி சொல்வதுண்டு. அறப்படித்தவர்கள் பேசிக் கொண்டு நிற்கும் பொழுது தான் மெதுவாக அந்த இடத்திற்குச் சென்றுவிடுவாராம். பேசிக்கொண்டு இருக்கும்பொழுது சொல்லப்படும் புத்தகங்களை ஞாபகத்தில் வைத்து அவைகளை



படிப்பகம்

www.padippakam.com

வாங்கிப் படிப்பாராம். இத்தகைய பரம பிரயத்தனங்களும் நல்ல புத்தகங்களை வாசிக்க உதவுகின்றன. சிறந்த வாசகர்களாக நண்பர்கள் இருந்தால்இது பெரும் பேறு. கதையோடு கதையாக விஷயத்தைப் பிடுங்கலாம். கதைச்சுருக்கத்தைக் கூடச் சொல்லி வாசிக்கத் தூண்டுவார்கள். பத்திரிகைகள் புத்தக அறிமுகங்களைச் செய்கின்றன. சிலர் ஓரவஞ்சகப்படுத்தியும் எழுதுகின்றனர். நேர்மையோடு உண்மையை வாசகனுக்குத் தருவதுமுண்டு. இப்படியும் புத்தகங்கள் இனங் காட்டப்படுகின்றன. இந்த விஷயத்தில் வாசகன் பசும்பாலைக் கண்டுபிடிக்கும் அன்னமாகச் செயல்பட வேண்டும்.

இன்றைய தலைமுறை பெரும்பாலும் தென்னிந்திய எழுத்தாளர்களினது வாசகராக இருப்பது வெட்கக்கேடான உண்மை. ஈழத்து இலக்கியத்தின் நாணயக் கயிற்றை முற்போக்காளர்கள் இழுத்துப் பிடித்து வழிப்படுத்தியும் அது இன்னமும் வேர்களைத் தேடி நிற்பது இலக்கிய நேசர்களுக்கு ஆதங்கமே! புத்தக விற்பனையாளரொருவர் ரமணி சந்திரனின் புத்தகத்தைத்தான் கேட்கிறார்களென ஒப்புக் கொண்டுள்ளார். இந்நாட்டில் நிலவும் துர்ப்பாக்கிய நிலையை கருத்திற்கெடுக்கும் பொழுது இப்படியொரு மிலேச்சத்தனமான போக்கு வாசகர் மத்தியில் இருப்பது வயிற்றை எரிய வைக்கிறது. இருந்தும் தற்போதுள்ள வாசகத் தரம் இலக்கிய வாசிப்புக்கு நிச்சயம் மாறும். அது இப்பாரிய கொள்வனவில் அடங்கும் புத்தகங்களால் சாத்தியப்படுத்தப்படும். இப்படியாக இலக்கிய வாசிப்புக்கு வாசகன் பரிணாமம் பெறும் பொழுது அவனுக்கு வாசிப்புப் பசியை அடக்க சில புத்தகங்கள் தேவைப்படும். அப்பொழுது தன் இரசனைத் தளத்திற்கு ஏற்றாற்போல் அவன் சில புத்தகங்களைக் கேட்பான். வெளியீட்டாளர்களை அதிசயிக்க வைப்பான்.

இலங்கை சாகித்திய மண்டலத்தின் தமிழ் சிறுகதைக்கான முதலாவது பரிசைத் தட்டிக் கொண்ட டொமினிக் ஜீவாவின் " தண்ணீரும் கண்ணீரும்" இன்று எத்தனை நூலகங்களில் உண்டு? விற்பனையாளர்களிடம் தான் உண்டா? அதேபோல் ஒரேயொரு நாவலை மட்டும் படைத்து, தமிழ் நாவல் உலகில் அழியாத இடத்தைப் பிடித்த பாலமனோகரனின் "நிலக்கிளி"யை இன்றைய இளம் வாசகன் பார்த்திருப்பானா? கே.டானியலின் "பஞ்சமரை" தெணியானின் "பொற்சிறையில்வாடும் புனிதர்", எஸ்.பொ.வின் 'வீ' இவைகள் வாசகர்களால் தேடப்படும் காலம் கனிந்து கொண்டிருக்கிறது. இதைக் கண்டு புத்தக விற்பனையாளர்கள், வெளியீட்டாளர்கள் புளகாங்கிதமடையப் போகின்றனர். இதன் நாற்றங்காலாக - இந்தப் பாரிய புத்தகக் கொள்வனவு விடிவெள்ளியாகப் பூத்திருக்கின்றது. எதிர்காலத்திலும் இது நீடிக்க வேண்டுமென இலக்கியவாதிகள் விரும்புகின்றனர்!

தட்டிக் கொடுப்பது தன்மானத்திற்கு என்றுமே பங்கமாகாது! ●






படிப்பகம்

www.padippakam.com

வருகின்றன என்பது பேராசிரியர்கள் க. கைலாசபதியினதும், கா. சிவத்தம்பியினதும் உறுதியான நிலைப்பாடாகும். தமிழில், தொன்றுதொட்டு விளங்கிவரும் 'கதாகாலாட்சேப மரபு' இன்றைய விமர்சனத்துறையையும் தொடர்ந்து வருவதாக கா. சிவத்தம்பி குறிப்பிடுவர். பேராசிரியர் கைலாசபதி 'திறனாய்வு, கலை இலக்கியத்துக்கு மட்டும் வேண்டப்படுவதன்று. அது நவீன கல்வித்துறைகள் அனைத்துக்கும் பொருந்துவது' எனக் கூறுகின்றார். 'நமது முன்னோர் கலை இலக்கியங்களை விவரிக்கையில், அவற்றின் இலட்சியப் பண்புகளாகச் சத்தியம், சிவம், சுந்தரம் என்பவற்றைக் கூறினர். உண்மை, நன்மை, அழகு என்பனவே இம்மூன்றுமாம். இவை இன்றும் போற்றக்கூடியன என்பதில் ஐயமில்லை' எனக் கைலாசபதி குறிப்பிடுகின்றார். பேராசிரியர் கா. சிவத்தம்பி கலை, இலக்கியம், விமரிசனம் ஆகியவற்றில் 'மார்க்ஸீய' அழகியலின் இன்றியமையாமையை வற்புறுத்தி வருகின்றார். (க. கைலாசபதி திறனாய்வு என்ற சொல்லையும், CRITICISM என்ற ஆங்கிலப் பதத்தின் தமிழ் வடிவமாகப் பயன்படுத்தி வருகின்றார்.)

திறனாய்வு / விமரிசனம் பற்றிய மேற்குறித்த வாதப் பிரதிவாதங்கள் சில உண்மைகளை உணர்த்துகின்றன. திறனாய்வு பற்றிய வரைவிலக்கணம், எக்காலத்தும் ஒரே தன்மை கொண்டதாயிருக்கவில்லை. அது காலத்துக்குக் காலம், மாற்றம் பெற்று வந்துள்ளது, வளர்ச்சியடைந்து வந்துள்ளது என்பது தெளிவாக உணர்த்தப்பட்டுள்ளது.

திறனாய்வு / விமரிசனம் பற்றிய முழுமையான ஒரு வரைவிலக்கணம் இதுகாலவரை முன் வைக்கப்படவில்லை என்பது இன்னொரு முக்கியமான விடயம். இவைபற்றி சம்பூரணமான ஒரு வரைவிலக்கணத்தை எக்காலத்தும் வகுத்துவிடமுடியாது என்பது இவற்றின் மூலம் உறுதிப்படுத்தப்பட்டுள்ளது. இதுகாலை இலக்கியத்திற்கும் பொருத்தமானது. கலை இலக்கியத்திற்கும் சம்பூரணமான ஒரு வரைவிலக்கணம் இதுகாலவரை வகுக்கப்படவில்லை. காலத்துக்குக் காலம் வகுக்கப்படும் வரைவிலக்கணங்களை உடைத்துக் கொண்டு புத்தம் புதிய இலக்கியங்கள் பிறக்கின்றன. படைப்புத்துறையில் ஒன்று போல மற்றொன்று என்றுமே இருந்ததில்லை. ஒவ்வொன்றும் மற்றதிலிருந்து ஏதோ ஒரு வகையில் வேறுபட்டே நிற்கின்றது. திறனாய்வுத் துறைக்கும் அது பொருந்துவதே. ஒரு இலக்கியத்தைப் பகுத்தாராய்வதும், மதிப்பிடுவதும், தீர்ப்புக் கூறுவதும் விளக்குவதும் ஆகிய அனைத்து செயற்பாடுகளும் திறனாய்வின்பாற்படும் என்றாலும், ஒவ்வொரு காலத்தில் ஒவ்வோர் அணுகுமுறை ஆதிக்கஞ் செலுத்துவதாக இருக்கும் என்பதே யதார்த்த பூர்வமானதாகும்.





படிப்பகம்

www.padippakam.com

# தி.க.சி யும் முகமூடி அணிந்த ஜெயமோகனும்

தாமரை - மகேந்திரன்

முதுபெரும் எழுத்தாளர் தி.க.சி. அவர்களுக்கு, இந்த ஆண்டுக்கான சாகித்ய அகாதமியின் விருது கிடைத்துள்ளதைப் பற்றிச் சில விமர்சனங்கள் வெளிவந்துள்ளன. இதில் விண்நாயகன் இதழில் வெளியான ஜெயமோகன் விமர்சனம் தி.க.சி. க்கு அநீதி இழைக்கும் நோக்கத்துடன் எழுதப்பட்டதாக வாசித்தவுடன் நான் உணர்ந்து கொண்டேன். தி.க.சி. 75 ஆண்டுகள் வாழ்ந்து நிறைவு பெற்றவர். இந்த முதிர்ந்த வயதிலும், தி.க.சி. யின் உணர்வுகளை புண்படுத்த வேண்டும் என்ற மனநிலை ஜெயமோகனுக்கு ஏன் வந்தது என்பது என்னை யோசிக்க வைத்தது.

தி.க.சி. க்கு வழங்கப்பட்டது முதியோருக்கு வழங்கப்பட்ட பென்சன் போன்றதுதான். விருதுக்கான தகுதியாகக் கொள்ள இயலாது என்பதில் ஜெயமோகன் விமர்சனம் அமைக்கப்பட்டுள்ளது. நேர்மையான எழுத்தாளராக இதுநாள் வரை வாழக் கூடிய தி.க.சி.யின் மனதை எந்த அளவிற்கு இது வேதனைப்படுத்தியிருக்கும்? இதைப் போன்ற மோசமான போக்குகள் தமிழில் ஏன் வருகின்றன என்று நினைத்துப் பார்க்கத் தோன்றுகிறது.

எந்தவொரு படைப்பைப் பற்றியும் விமர்சனம் செய்வது ஆரோக்கியத்திற்கு வழிவகுக்கக் கூடியதுதான். இது படைப்பாளியின் மீது தனிப்பட்ட தாக்குதலாக வரும் போதுதான் ஆபத்து ஏற்பட்டு விடுகிறது. ஜெயமோகனின் விமர்சனத்தில் 'வயதானவர்' என்பது இலக்கிய அளவுகோலின் முக்கிய அடிப்படையாக எடுத்துக் கொள்ளப்பட்டது. தி.க.சி வயதானவர் என்பதைக் கிண்டலடித்துத்தான் தனது இலக்கிய விமர்சனத்தைத் தொடங்கியிருக்கிறார். இது ஜெயமோகனின் வீழ்ச்சியைக் காட்டுகிறது. வயதானவர்களைக் கிண்டலடித்து, அவமதிப்பது பாசிசத்தின் ஆரம்பநிலை. வயதானவர்களைக் கொலை செய்வது பாசிசத்தின் முதிர்ந்த நிலை. ஹிட்லர் வயதானவர்களால் நாட்டுக்கு எந்த பயனும் இல்லை. வெறும் சுமைதான் என்று கொலை செய்ய உத்தரவிட்டான்.

முதியோர்களை வழிபடுவது நமது மரபு. அவர்களது உயிர்ப்புள்ள அனுபவம், புதிய வாழ்க்கைக்கு வழிகாட்டுகிறது. இது தமிழ் நெடும் பரப்பில் ஆழமாகவே உணர்த்தப்பட்டே வந்துள்ளது. இந்தப் பாதையை ஜெயமோகன் இழிவுபடுத்த விரும்புகிறார். இதைத்தான் தி.க.சி. யின் அர்ப்பணிப்பு மிக்க எழுத்தின் மீதான கேள்வியாக்கியுள்ளார். இந்த கேள்வி, தி.க.சி. படைப்பாக்க அர்ப்பணிப்புக்குச் சம்பந்தமில்லாத வெறும் வயதானவர் மட்டும் தானா? என்ற எதிர்கேள்வியை உருவாக்குகிறது.

தி.க.சி. எழுத்தாளராகும் உந்துதலில் தான் பணியாற்றிய பொருளாதாரத்தில் மதிப்பு மிக்கதாகக் கருதப்பட்ட வங்கி ஊழியத்தை உதறித் தள்ளி விட்டு எழுத்தாளராக மாறியவர். இதைப் போலத்தான் வல்லிக்கண்ணன் அவர்களும், எழுத்தாளராகப் பிரகடனப்படுத்தி, தனது அரசாங்கப் பணியைத் துறந்தவர். வேலையை விட்டு வெளியேறியவர். முழுநேர இலக்கியப் பணியை இந்த நாள் வரை செய்து வருகிறார் தி.க.சி. இலக்கியத்தில் பெரும் புகழ் பெறுவதற்கு அரசாங்கத்தில் சம்பளம் வாங்கிக் கொண்டு, வேலை எதுவும் செய்யாமலிருக்கும் துரோகத்தை தி.க.சி. செய்யவில்லை. ஜெயமோகன், தொலைத்தொடர்பு துறையில் சம்பளம் பெறும் பணியாளர். இரண்டு/மூன்று மாதங்களுக்கு ஒன்று என்று ஆயிரம் பக்கம் கொண்ட நாவல்களாக எழுதிக் கொண்டிருக்கிறார். இது எப்படி ஜெயமோகனுக்குச் சாத்தியமாகிறது. ஆழமாக யோசித்துப் பார்த்தால் யாருக்கோ துரோகம் செய்கிறார். அது தொலைத் தொடர்புத் துறைக்கா? அல்லது இலக்கியத்திற்கா? என்பதுதான் புரியவில்லை. இதையொட்டி, மிக நேர்மையான இலக்கியப் பயணத்தில் ஈடுபட்டு வரும் தி.க.சி. யை விமர்சிக்கும் தார்மீகம் ஜெயமொகனுக்கு உண்டா? என்றக் கேள்வி எழுகிறது.

இலக்கிய மதிப்பீடு பற்றி ஜெயமோகன் அடிக்கடி கவலைப்படுவதாகக் காட்டிக் கொள்கிறார். சமூகத்திலுள்ள பெரும்பான்மையினரின் விருப்பங்களைத் தரம் தாழ்ந்தவை என்று கருதுகிறார். 'இல்லை அவர்களின் அனுபவம், குளிர்சாதன அறைகளுக்கிடையே அமர்ந்து, மேலான விஷயங்களை கொரித்துக் கொண்டிருக்கும் உயர்குடி மக்களின் இலக்கியத்தை விட ஜீவனுடையது' என்றால் ஜெயமோகனுக்கு ஆத்திரம் வருகிறது. வியர்வை மனிதர்களுக்கும் உலகத்திற்குமான உழைப்புப் பந்தம் மறுக்கக் கூடியதா? இதை மறுத்தால் தாயை மறுக்கும் தறுதலைகளை போலல்லவா மனித குலம் அனாதையாகி விடும். இந்த நன்றி கெட்ட செயலுக்கு 'இலக்கிய அந்தஸ்தை' அளித்து, இதுதான் மேலானது என்று முடி சூட்டிக் கொள்கிறார் ஜெயமோகன். இது ஒரு எழுத் தாளனுக்கு மேன்மை அளிக்கக் கூடியதாக முடியாது.

கம்யூனிசத்தையும், இதன் அடிப்படைத் தத்துவமான மார்க்சீயத்தையும் ஜெயமோகன் மிக மோசமாக வெறுத்து ஒதுக்குவது நன்றாகவே நமக்கு புரிகிறது. மார்க்சீயம் வெறுக்கக் கூடியது தானா என்று பலமுறை நான் யோசித்துப் பார்த்திருக்கிறேன். கம்யூனிஸ்ட் கட்சிகளோடு ஆழமான கருத்து வேறுபாடு கொண்டவர்கள் கூட



படிப்பகம்

www.padippakam.com

மார்க்சீயத்தை வெறுப்பதில்லை. ஆதிக்கக்காரர்கள் மட்டும் வெறுக்கிறார்கள். கீழவெண்மணியில் 44 மனித உயிர்களைத் தீயிட்டுப் பொசுக்கிய நிலப்பிரபு கோபாலகிருஷ்ண நாயுடு கம்யூனிசத்தை எதிர்த்தான். இப்படி சிலரை மட்டுமே கூற முடியும். ஜெயமோகனும் எதிர்க்கிறார். இவர் நிலப்பிரபுவோ / ஆலை அதிபரோ அல்ல. ஜெய மோகனைப் போன்றே, கம்யூனிசத்தை அருவெறுப்போடு நோக்கிய வேறு சிலரை நான் பார்த்திருக்கிறேன். இவர்களும் வயிற்றுக்குக் கைநீட்டிச் சம்பளம் வாங்கும் ரகம்தான். ஆனால் இவர்கள் ஆதிக்க சக்திகளின் எடுபிடிகளாக வாழ்நாள் முழுவதும் ஊழியம் செய்து வந்தவர்கள். ஜெயமோகனின் கம்யூனிச வெறுப்பு எந்த வகையைச் சார்ந்தது என்று இன்னமும் புரியவில்லை.

கம்யூனிஸத்தின் மீதான வெறுப்புதான் தி.க.சி. யிடம் குறை கண்டு பிடிக்க காரணமாயிற்று. இவருடைய எழுத்து உழைக்கும் மக்களுக்குச் சொந்தமானது. உழைக்கும் மக்களுக்காக எழுதும் தலைமுறையை ஊக்குவிக்கக் கூடியது. குழந்தையை வளர்த்தெடுக்கும் பொறுப்போடு கூடிய தாய்மையின் விமர்சனம் இது. நச்சு இலக்கியங்களுக்கெதிரான இவருடைய விமர்சனங்கள் புகழ் பெற்றவை. இவையெல்லாவற்றையும் மூடி மறைத்துவிட்டு சார்பு நிலையில் வந்த தாக்குதலாகவே இவர் மீதான விமர்சனங்கள் அமைந்துள்ளன.

ஜெயமோகன் மற்றொரு கருத்தையும் முன் வைத்துள்ளார். இது மிகவும் வேடிக்கையாகத் தெரிகிறது. மிக மர்மமான முறையில் குழு அமைத்து, நுட்பமாக செயல்பட்டு, சாகித்ய அகாதமியினை வளைத்து, விருதுகளை கம்யூனிஸ்டுகள் பறித்துக் கொள்கிறார்கள். தங்கள் நண்பர்களுக்கும் பறித்துக் கொடுக்கிறார்கள் என்கிறார். கொக்கு தலையில் வெண்ணெய் வைத்து பிடிப்பதாக, இதனைக் குறுக்கிப் பார்க்கிறார். ஜெயமோகனின் இலக்கியப் பயிற்சி வித்தியாசமானது. இத்தகைய பயிற்சியைப் பெற்றவர்கள் இப்படித்தான் யோசிக்க முடியும். மார்க்சீயம் உருவாக்கிய முற்போக்கு இலக்கிய முகாம் பலவீனமானதல்ல. கவி ரவீந்திரநாத் தாகூர் முதல் பிரேம்சந்த், முல்க்ராஜ் ஆனந்த், சரத்சந்திர சட்டர்ஜி உள்ளிட்ட அனைவரின் தொடர்புகளைக் கொண்டது. இப்பொழுது, இந்திய மொழிகளுக்கு வழங்கப் பெறும் அகாதமி விருதுகளில் ஆண்டுதோறும் நான்கு அல்லது ஐந்து விருதுகளை மார்க்சீய - இலக்கியங்கள் தான் பெற்று வருகின்றன. இதனை வெறும் தந்திரத்தால் அடைந்தது என்று பிரச்சாரம் செய்வது எவ்வளவு ஏமாற்றுத்தனமானது.

இதைப் போலவே இலக்கியத்திற்கான நோபல் பரிசை தொடர்ந்து கம்யூனிஸ்டுகள் தான் பெற்று வருகிறார்கள். 1996 ஆம் ஆண்டு பரிசு லத்தீன் அமெரிக்காவின் மாபெரும் எழுத்தாளர் மார்க்கூஸ், 1997 ஆம் ஆண்டில் இத்தாலி மார்க்சீயர் கூரிய்ஃபா, 1998 ஆம் ஆண்டில் போர்த்துக்கீசிய கம்யூனிஸ்ட் கவிஞர் சஜியாகோ ஆகியோருக்கு விருது வழங்கப்பட்டுள்ளது. இவை கூட ரகசியக் குழு அமைத்துத்தான் கம்யூனிஸ்டுகள் கைப்பற்றினார்கள் என்று ஜெயமோகன் சொல்லமாட்டார் என்று நினைக்கிறேன்.

தி.க.சி. யிடம் கண்டறிந்த மற்றொரு குறைபாடாக ஜெயமோகன் 'தபால் கார்டு' எழுதுவதைக் கூறுகிறார். சக மனிதர்களுடன் தொடர்பு கொள்ள எத்தனையோ முறைகள் தேவைக்கேற்ப பயன்படுத்தப்படுகின்றன. நவீன யுகத்தில் மின்னஞ்சல் மூலம் தொடர்பு கொள்கிறார்கள். தி.க.சி. காலத்தில் தபால் கார்டு முக்கிய பங்காற்றியுள்ளது. அன்றைய மனிதர்களைப் போன்றே இது எளிமையானது. எந்தவிதமான ரகசியங்களையும், இது மறைத்து வைத்துக் கொள்வதில்லை. மிக வெளிப்படையான ஊடகம். இதன் மீதும் ஜெயமோகனுக்கு அருவெறுப்பு வந்துள்ளது. பெரும்பாலான உழைக்கும் மக்களின் அபிப்பிராயங்களை தகுதியில்லாதவை என்று வெறுத்து ஒதுக்கக் கூடியவருக்கு விலைக் குறைந்த தபால் கார்டும் மதிப்பிழந்ததாகவே தோன்றுகிறது. இதனால் தான் தி.க.சி. யைப் போலவே தபால் கார்டையும் இழிவுபடுத்துகிறார். இவர் தபால் கார்டு எழுதக் கூடிய ஆசாமி. இவருக்கு சாகித்திய அகாதமி விருது பெற தகுதி இல்லை என்ற கருத்து நிலையை வளர்த்துக் கொண்டுள்ளார். இது எவ்வளவு வேடிக்கை மிக்கது.

கடைசியாக ஒன்று, தமிழில் எதுவுமில்லை என்ற கருத்து ஜெயமோகனுக்கு வலுவாக இருக்கின்றது. தமிழை தாம் தாழ்த்த இவர் செய்த முயற்சிகளுக்கு இலக்கிய உலகில் பெரும் எதிர்ப்பு உருவானது.

ஆனால், அதே சமயம் தமிழுக்கான சாகித்ய அகாதமி தனக்கு கிடைக்கவில்லை என்ற ஆதங்கத்தில் இப்படிப்பட்ட குழப்பங்களை வெளியிட்டுக் கொண்டிருக்கிறார்.

ஜெயமோகனின் போலித்தனங்கள் கொஞ்சம் கொஞ்சமாக வெளிப்படத் தொடங்கியுள்ளன. ●

## வருந்துகின்றோம்

ஈழத்து இலக்கிய உலகில் பரவலாகத் தெரிந்தவரும் தரமான படைப்பாளியுமான திரு.வ.அ. இராசரத்தினம் அண்மையில் நம்மை விட்டு மறைந்து விட்டார். ஈழத்து இலக்கிய உலகிற்குப் பெரிய இழப்பு இது.

அன்னாரினது இழப்பை எண்ணி மல்லிகை தனது ஆழ்ந்த துயரத்தை இலக்கிய உலகிற்குத் தெரிவித்துக் கொள்ளுகின்றது.

- ஆசிரியர்



படிப்பகம்

www.padippakam.com

# இரண்டு பெரியவர்கள்

செ. யோகநாதன்.

பெரியவர்கள் என்ற சொல்லிற்கு எல்லா விதத்திலும் தகுதி பெற்ற இருவரோடு நெருங்கிப் பழகவும், தோழமை கொள்ளவும் கிடைத்த வாய்ப்பினை எனக்குக் கிடைத்த பெரும் பேறாக நான் கருதுகின்றேன்.

அன்புடமை, ஒழுக்கம், துணிவு, சான்றாண்மை, அறிவுத்தேடல், பிறரை மதித்தல் என்ற அருங்குணங்கள் அமையப்பெற்ற இவர்கள் இருவரும் இன்றைய தமிழியலுக்கும், படைப்புக்கும் வாய்த்துள்ள அரும் பொக்கிஷங்களாகும்.

ஒருவர் முத்து விழாக் கண்ட வல்லிக்கண்ணன். மற்றவர் காலம் பிந்திச் சாகித்திய அகாதமிப் பரிசைப் பெற்றுள்ள தி.க. சிவசங்கரன். இவர்களை தமிழ் பல்லாண்டு காலம் வாழ வாழ்த்தி வணங்கும்.

இவர்களோடான என் பரிச்சயம் 1978ல் உண்டாயிற்று. இந்த ஆண்டிலே நான் தமிழகம் சென்றிருந்தேன். இது முற்றிலும் ஒரு இலக்கியப் பயணமே. நான் மிகவும் மதித்துப் போற்றிய பேராசிரியர் நா. வானமாமலையைச் சந்திப்பதற்காகப் பாளையங்கோட்டைக்குச் சென்றிருந்தேன். அங்கே உடனடியாகவே 'இலக்கிய ஒன்றுகூடலுக்கு பேராசிரியர் ஒழுங்கு செய்திருந்தார். இதில் வல்லிக்கண்ணன், திரு. க. சி, தோத்தாத்ரி, பொன்னீலன், மங்கை போன்றோர் கலந்து கொண்டிருந்தனர். முதல் சந்திப்பிலேயே இவர்கள் அனைவரும் என் அன்புக்கும் அபிமானத்துக்கும் முற்றிலும் பாத்திரமானார்கள்.

நான் இலங்கை திரும்பியதும் இந்த அன்பு நெருக்கமும் இறுக்கமும் மேலும் வலுப் பெற்றன. வளர்ச்சியடைந்தன. கடிதத் தொடர்பால் கலை இலக்கியம் அரசியல் என்பன பற்றி விவாதித்தோம். இவர்களோடான கடிதத் தொடர்பு எனக்குப் பல விளக்கங்களையும் தெளிவையும் உண்டாக்கின.

வல்லிக்கண்ணன் சிறந்த படிப்பாளி. படிப்பையே தவமாகக் கொண்டவர். இலக்கிய வாழ்வு கருதியே கிராமத்தை விட்டு நடையாகப் புறப்பட்டவர். பத்திரிகையாளராக இருந்து எண்ணற்ற புனைப்பெயர்களில் காரசாரமாக எழுதியவர். ''கிராம ஊழியன்'' இதழினால் முதல்தரமான படைப்பாளிகளுடன் நட்புக் கொண்டவர். நாவலாசிரியர், சிறுகதையாளர், புதுக்கவிதையாளர், மொழிபெயர்ப்பாளர், திறனாய்வாளர்.

பாரதிதாசனின் கவிதைகளைப் பற்றிய முதல் திறனாய்வு நூல் இவராலேயே எழுதப்பட்டது. 'புதுக்கவிதையின் தோற்றமும் வளர்ச்சியும்', 'தீபம்யுகம்' பற்றிய இவரது ஆய்வு நூல்களை சிறந்த உசாத்துணை நூல்களாக இன்னும் பல காலத்திற்குக் கொள்ளலாம். 'பாரதிக்குப் பின் தமிழ் உரைநடை' என்ற அண்மைய வெளியீடும் இவற்றுள் அடங்கும்.

'இருட்டுராஜா', 'நினைவுச்சரங்கள்' என்ற இவரது நாவல்கள் இரண்டும் பாத்திரவார்ப்பு, சம்பவக்கோவை, கலாநேர்த்தி என்ற தன்மைகளால் முழுமையும் சிறப்பும் பெற்ற காலப்பதிவு ஆக்கங்கள். வல்லிக்கண்ணன் எழுதிய பல சிறுகதைகள் இன்னமுமே முழுமையாக நூலுருப் பெறவில்லை. புதுக்கவிதைகளும் அப்படியேதான்.

மொழிபெயர்ப்புத் துறையிலே ஆக்கபூர்வமான பங்களிப்பைச் செய்தவர் வல்லிக்கண்ணன். ரொபர்ட் ரூர்க்கின் 'தாத்தாவும் பேரனையும்' அற்புதமாக மொழியாக்கம் செய்தவர் இவர். ஏ. கே. ராமானுஜனின் 'இந்திய நாட்டுப்புறக் கதைகளை' அழகிய நடையில் மொழிபெயர்த்தார். எண்ணற்ற குழந்தைகளால் விரும்பிப் படிக்கப்பட்ட தமிழ்க் கதைகளை ஆங்கிலத்திற்கும் ஆங்கிலக் கதைகளை தமிழிற்கும் மொழிபெயர்ப்பாக இவர் கொண்டு சென்றார். எமிலிஜோலாவின் நாவல், 'நிலம்' - மற்றும் சிறுகதைகளை மொழிபெயர்த்தார்.

('தமிழ்ச் சிறுகதைத் தொகுப்பு' இவற்றுள் குறிப்பிட்டுச் சொல்லத் தக்கது)

சிற்றேடுகள் பற்றிய முழுமையான ஞானமுள்ளவர். சிற்றேடுகளில் தொடர்ச்சியாகவே எழுதுபவர். இவரது உற்சாகப் படுத்துதல் சிற்றேட்டு எழுத்தாளர்களை முழுமையாகச் செயற்பட வைத்தது.

இளம் எழுத்தாளர்களை உற்சாகப்படுத்துவதிலே வல்லிக்கண்ணனும், தி. க. சி யும் மேன்மையான மனிதர்கள். தரமான எதைப் படித்தாலும் அதற்குப் பாராட்டு எழுதுவதும் உற்சாகப்படுத்துவதும் இவர்கள் இருவரதும் தனித்துவமான குணங்கள். இவர்களால் தாம் உருவாக்கப்பட்டு பெருமையடைபவர்கள் பலரில் இன்றைய முன்னணி எழுத்தாளர்கள் நிறையப் பேர் அடங்குவார்கள்.

தமிழின் எல்லா விருதுகளையும் பெற்ற பெருமைக்குரியவர் வல்லிக்கண்ணன்.

அமைதியானவர். மென்மையானவர். அடக்கமானவர். ஆனால் அநீதிகளைக் கண்டு பொறுமையாயிராமல் சினந்தெழுந்து எதிர்க்குரல் கொடுத்து வீறோடு இயங்குபவர். அண்மையில் இந்திய சாகித்திய அகாதமியின் சில நூல் வெளியீட்டு முறைகேடுகள் சம்பந்தமாக ஆணித்தரமான எதிர்ப்புக் கருத்துக்களை வெளியிட்டு ஓர் இயக்கமாகவே செயல்படுகின்றார் இவர்.

உண்மையிலே இவர் ஒரு இலக்கிய இயக்கம்.

தமிழக முற்போக்கு இயக்கப் பிதாமகர்களில் ஒருவர் திரு.தி.க.சி. இந்தியாவின் சிறந்த படைப்பாளரான முல்க்ராஜ் ஆனந்த், எமது கே. கணேஷ், தி. க. சி ஆகிய மூவரும் சேர்ந்தே முற்போக்கு எழுத்தாளர்



படிப்பகம்

www.padippakam.com


மல்லிகை 36

ஆண்டு மலருக்கு
இதயம் கனிந்த வாழ்த்துக்கள்

# JAYARAM BROTHERS

**Dealers In**

* Jute Gunny Bags
* Tea Chest
* Twine
* Polythene

**Importers Of**

* All Jute Items
* Paper
* Pearl Brand Cellophane (Chinese & Japanese)

**118/7, S.R. Saravanamuttu Mw,**
**Wolfendhal Steeet,**
**Colombo-13,**
**SriLanka.**

**Tel : 445615, 348430**
**Stores: 345099**
**Fax : 00941-330164**
**E-mail : jayaram@slt.net.lk**


படிப்பகம்

www.padippakam.com

இயக்கத்தினைத் தமிழ கத்தில் ஆரம்பித்தனர். சகல பிற்போக்குத்தனங்களுக்கு எதிராகவும் படைப்பாளிகளைக் கிளர்ந்தெழச் செய்தனர். வங்கிப் பணியாளரான தி. க. சி. அர்ப்பணிப் புள்ள தொழிற்சங்கவாதியாகப் பரிணமித்தார். இதனால் பல இடங்களுக்கும் இடமாற்றம் என்ற பெயரில் பந்தாடப்பட்டார்.

சிறந்த மொழிபெயர்ப்பாளர். மார்க்சிய சித்தாந்த நூல் களையும், இலக்கிய, சிறுகதைகளையும் களைப்பின்றி உயிர்த்துடிப்போடு மொழிபெயர்த்தவர். 'சீனத்துப் பாடகன்', 'போர்வீரன் காதலி' என்பன அருமையாக இவரால் மொழிபெயர்க்கப்பட்ட நாவல்கள்.

'சோவியத் நாடு' என்ற இதழிலே இவர் கடமை யாற்றிய போது, மொழிபெயர்ப்பு இலக்கியங்கள் உச்ச நிலையை எய்தின. தமிழ்ப் படைப்பிலக்கியத்திலும் உத்வேகமும் செழுமையும் உண்டாயிற்று.

'தாமரை' மாத இதழின் ஆசிரியராக இவர் இருந்த காலம் தமிழப் படைப்பிலக்கியத்தின் பொற்காலம். பூமணி, பொன்னீலன், பிரளயன், பா. செயப்பிரகாசம், பரிணாமன், சூரிய தீபன், தனுஷ்கோடி ராமசாமி, ராஜநாராயணன், வண்ணநிலவன், கே. டானியல், டொமினிக் ஜீவா, அகஸ்தியர், செ. கதிர்காமநாதன், பெனடிக்ற் பாலன், செ. யோகநாதன், டி செல்வராஜ், சின்னப்பபாரதி என்ற பெரிய படைப்பாளர் அணியே எழுதுவதற்கு உற்சாகமும் தளமும் கொடுத்தார் தி. க. சி.

இளம் எழுத்தாளரின் படைப்பு வெளியானால் அதைப் படித்துவிட்டு, பத்திரிகைக்குப் பாராட்டுக் கடிதம் எழுதுவ தோடு படைப்பாளிக்கும் நேரடியாகவே கடிதம் எழுதும் உயர்ந்த பண்பாளராயிருக்கின்றார் இன்றுவரை தி.க.சி.

திறனாய்வுத் துறையில் நிறையக் கட்டுரைகள் எழுதி யிருக்கின்றார் தி. க. சி. அவர் எல்லோருடனும் வெகு அன்பாகப் பழகுபவர். ஆனால் தனது கொள்கை, சித்தாந் தம் என்பவற்றில் உறுதியாக இருந்தார். அவரது எழுத்தும் அத்தகையதே. இந்தக் கட்டுரைகள் யாவும் இப்போது நூல்களாக வெளியாகிவிட்டன. சிறந்த காலப் பதிவான திறனாய்வு இலக்கியங்கள் இவை.

தி. க. சி அருமையான தோழர். தோழமையின் அர்த்தம் உணர்ந்த மனிதாபிமானி. நான் இருதய அறுவை சிகிச்சைக்கு அவசரப்படுத்தப் பட்டபோது, எனக்காக தமிழகம் முழுதும் உதவிக்கான குரலை ஒலிக்க வைத்து, தமிழின் படைப்பாளிகள் யாவரும் எனக்காக கைகோர்த்து உதவுவதற்குக் காரணமானவர் தி. க. சி. இவரோடு அருந்துணையாக நின்றவர் வல்லிக்கண்ணன்.

தி. க. சிக்கு சாகித்திய விருது கொடுக்கப்பட்டதால் அந்த விருது பெருமை பெற்றது. இவ்வேளையில் நுணலொன்று இதற்கு எதிர்ப்புக் கூறியுள்ளது. அந்த நுணலின் பெயர் ஜெயமோகன். அறியாமையினால் பிதற்றும் நுணல். இதைப்பற்றி யாரும் அக்கறைப்பட வேண்டியதில்லை.





படிப்பகம்

www.padippakam.com

# மல்லிகை நூலகம்

## மதிப்புரைக் குறிப்புக்கள்

**- நீலவண்ணன்-**



**ஈழகேசரிச் சிறுகதைகள்**
தொகுப்பாசிரியர்: செங்கை ஆழியான்
வடக்கு கிழக்கு மாகாண கல்வி
பண்பாட்டலுவல்கள் அமைச்சு
வெளியீடு. திருகோணமலை - 2000.
பக். 218 + XVIII = 236

ஈழத்து இலக்கியப்புனைகதைத் துறையின் ஈழகேசரிக் காலகட்டத்துச் சிறுகதை நாற்பத்திரண்டினைச் செங்கை ஆழியான் தொகுத்து வழங்க, வடக்கு - கிழக்கு மாகாணக் கல்விப் பண்பாட்டலுவல்கள் அமைச்சு பெரியதொரு நூலாக வெளியிட்டுள்ளது. 1930 - 1958 காலகட்டத்தில் ஈழகேசரியில் வெளிவந்த 513 சிறுகதைகளுள் தெரிந்தெடுத்த முத்துக்களாக ஈழகேசரிச் சிறுகதைத் தொகுதியுள்ளது. ஈழகேசரிக் காலம் மூன்று இலக்கியக் காலகட்டங்களைக் கொண்டது. முன்னோடிகள் காலம் (1930 - 1945), மறுமலர்ச்சிக் காலம் (1946 - 1949). முற்போக்குக் காலம் (1950 - 1958) ஆகிய மூன்று காலத்து இலக்கியப் படைப்பாளிகளின் சிறு கதைகள் ஒருங்கே இத் தொகுதியிலுள்ளன.

ஈழத்தின் சிறுகதை முன்னோடிகள் காலத்தில் நவீன சிறுகதை வடிவத்திற்கு அத்திபாரமிட்ட ஆனந்தன், பாணன், சுபா, சி.வைத்திலிங்கம், சம்பந்தன், இலங்கையர் கோன், இராஜ அரியரத்தினம், சோ.சிவபாதசுந்தரம் ஆகியோரின் மணியான சிறுகதைகளும், மறுமலர்ச்சிக் கால கட்டத்து வரதர், அ.செ. முருகானந்தன், கனக செந்தி நாதன், அ.ந. கந்தசாமி, சொக்கன், கசின் ஆகியோரின் சிறுகதைகளும், முற்போக்குக் காலகட்டத்து வ.அ. இராச ரத்தினம், சிற்பி, டானியல், டொமினிக் ஜீவா, என்.கே. ரகுநாதன், எஸ். பொன்னுத்துரை, புதுமை லோலன், இ. நாகராஜன் ஆகியோரின் சிறுகதைகளும் இத் தொகு தியிலிடம் பிடித்துள்ளன. இவற்றுக்கும் மேலாக மிக அற்புதமான சிறுகதைககள் சிலவற்றை அதிகம் அறியப் படாத பரிதி, நவாலியூர் சோ. நடராஜன், நாவற்குழியூர் நடராஜன், ந. பாலசுப்பிரமணியம், ராதா கிருஸ்ணன், செ. நடராசா முதலானோர் படைத்தளித்துள்ளனர் என்பது ஈழகேசரிச் சிறுகதைகள் மூலம் அறிய வருகின்றது.

ஈழத்துச் சிறுகதை வளர்ச்சியின் இருப்பினை அறிய இத்தொகுதி உதவுகின்றது. ஈழத்துச் சிறுகதை இலக்கிய த்திற்குப் பெருமை சேர்க்கக் கூடிய உன்னதமான சிறுகதைகளான தண்ணீர்த்தாகம், வண்டிற்சவாரி, ஒரு பிடி சோறு, வெள்ளிப் பாதசரம், தோணி, கற்சிலை, வயலுக்குப் போட்டார் என்பன இத்தொகுதியிலுள்ளன.

ஈழகேசரிச் சிறுகதைகள் குறித்து அதன் தொகுப் பாளர் செங்கை ஆழியான் நீண்டதொரு முன்னுரை எழுதியளித்துள்ளார். ஈழகேசரி பற்றிய அதன் சமூக, இலக்கியப் பணிகளை விளக்கமாக அந்த முன்னுரை சுட்டி நிற்கின்றது. ஒரு காலகட்டப் பணிகளை ஆவணப் படுத்தியுள்ள இத் தொகுதியைத் தொகுத்தளித்த செங்கை ஆழியானும் அதனையேற்று நூலுரு வழங்கிய கல்விச் செயலாளர் க. பரமேஸ்வரனும் பாராட்டுதலுக் குரியவர்கள்.

**- கமலன் -**




**சண்முக தரிசனம்.**
மலராசிரியர்: பா. தனபாலன்
வெளியீடு: பேராசிரியர் சண்முகதாஸ்
மணிவிழாக் குழு, யாழ்ப்பாணம்.
2001. பக்: 156.

பேராசிரியர் அ. சண்முகதாஸ் அவர்களின் மணி விழாவை முன்னிட்டு, ஓராண்டு கழிந்த நிலையில், இவ்வாண்டு வெளியிடப்பட்ட மலர் சண்முக தரிசனம் ஆகும். தமிழியல் ஆய்வுக் கட்டுரைகளும் ஆக்கவிலக்கி யங்களும் சம்பந்தமான பதினாறு ஆய்வுக்கட்டுரைகள் சண்முகதிரிசனத்திலிடம் கொண்டுள்ளன. பேராசிரியர் அ. சண்முகதாசின் முழு ஆளுமையை வெளிப்படுத்து வனவாக சண்முகதரிசனம் மலரமையவில்லை. தமிழில் ஆய்வுக் கட்டுரைகளும் ஆக்கவிலகியங்களும் என்று மலரில் குறிப்பிட்ட வகையில் அமைந்த கட்டுரைகளென சண்முகதரிசனம் (நாச்சியார் செல்வநாயகம்), சங்க இலக்கிய ஆய்வும் தனிநாயக அடிகளாரும் (அ. சண்முகதாஸ்), சூழற்கல்வியும் எதிர்கால இளந்தலை



படிப்பகம்

www.padippakam.com

முறையினரும் (மனோன்மணி சண்முகதாஸ்), திருக் கோயில் பண்பாட்டில் இராமேஸ்வரம் (ப. கோபால கிருஸ்ண ஐயர்) ஆகிய கட்டுரைகளே அமைந்துள்ளன. ஏனையவை சாதாரண தகவற் கட்டுரைகளாகவே விளங்குகின்றன.

பேராசிரியர் அ. சண்முகதாஸ் அவர்கள் மணிவிழாக் காணும் தகுதி கொண்டவர். அவருடைய வெற்றி அவரின் சமூக அக்கறையிலும் கல்வியுலகக் கரிசனையிலும் தங்கியிருக்கின்றன. கிராமியக் கலைகளை அவர் தன்னுள் வாங்கிக் கொண்டார். அவற்றை அட்சரம் பிசகாது நாட்டாரியலாகச் சமூகத்தின் முன் வைக்கும் திறனைப் பலரும் வியந்துள்ளனர். தமிழிலக்கியத்தினை 'அ' விலிருந்து 'அஃகே'னம் வரை துறைபோகக் கற்றவர். ஈழத்து இலக்கியத்திற்குப் பல்கலைக்கழக உயர் அந்தஸ்து வழங்கியவர்களில் சண்முகதாஸ் முக்கிய மானவர். எல்லாவற்றிற்கும் மேலாக அவர் ஒரு படைப் பாளி. சிறுகதை, கவிதை, ஆய்வுக் கட்டுரைகள் ஆகிய பல் துறைகளிலும் காலூன்றியவர். அவரின் பல பரிமாணங்ளைத் தரும் மணிவிழா மலரொன்று அவசியம் போலப் படுகின்றது. அவரின் கல்விப்புலமை, புனை கதைத்திறன், ஆய்வுத்திறன், நூலாக்க வல்லமை, பேச்சுத்திறன், கற்பித்தல் திறன், நாட்டாரியற்திறன், இசைப்புலமை, கல்வி நிர்வாகம் என அவரின் ஆளுமை ிரியும். அவை சீராக ஆவணப்படுத்தப்படல் வேண்டும்.

**- விஷ்ணுவர்த்தனன் -**




**உதிரவேர்கள்**
சிறுகதைத் தொகுதி
ஆசிரியர்: முத்து இராதா கிருஸ்ணன்
மனுஷா வெளியீடு, திருகோணமலை.
பக்: 86 + xi = 97. விலை: 100
2002

ஈழத்து இலக்கியச் சூழலில் நவீன ஓவியராக, நாடகவியலாளராக, சிறுகதை எழுத்தாளராக எனப் பல்வேறு துறைகளில் அமைதியாகத் தடம் பதித்து வருபவர் முத்துக்குமாரு இராதா கிருஸ்ணன் ஆவார். இவர் இலங்கைக் கல்வி நிர்வாக சேவையைச் சேர்ந்தவர். திருகோணமலை வடக்கு கிழக்கு மாகாணக் கல்வித் திணைக்களத்தில் உதவிக் கல்விப் பணிப்பாளராகக் கடமையாற்றி வருகிறார். கல்வி பற்றியும் சமூகம் பற்றியும் மிகத் தாக்கமான சிந்தனை கொண்டவர். அரங்கின் மூலம் உணர்வுகளுடன் பேச முடியும் என்பதை ஆணித்தரமாகக் கொண்டு அரங்க வேலைகளில் ஈடுபடுபவர். இவரது 'மானிடச் சிக்கல்' என்ற நாடக இலக்கிய நூலிற்கு 1998 ஆம் ஆண்டுக்குரிய தேசிய சாகித்திய விருதும், வடக்கு - கிழக்கு மாகாண இலக்கிய விருதும் கிடைத்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

'உதிரவேர்கள்' முத்து இராதா கிருஸ்ணனின் முதலாவது சிறுகதைத் தொகுதியாகும். இதிலுள்ள சில சிறுகதைகள் கணையாழி, தாமரை, புது ஊற்று, புதிய வசந்தம், சரிநிகர் போன்ற சஞ்சிகைகளில் வெளிவந்துள்ளன. வழிந்து போன வாழ்க்கையும், அந்த ஓவியக் களமும், வீடுபேறு தர்மசக்கரம், ஒரு முடல் மட்டும், உதிரவேர்கள், பயணத்தில் பதிந்த கண்கள், அந்தப் பெட்டைக் குட்டிகள், வலி, கறுப்புச் சப்பாத்து ஆகிய ஒன்பது சிறுகதைகள் இத்தொகுதியிலிடம் பெற்றுள்ளன. பேராசிரியர் கா. சிவத்தம்பி இத்தொகுதிக்கு முன்னுரை அளித்துள்ளார்.

'இலங்கையின் இனக் குழுப் பிரச்சினை வழி வரும் இன்னல்கள், தமிழிலக்கண வழிகாட்டி, வரும்முறைமைகளுக்கும், உணர்வாழத்துக்குமான இலக்கியப் பதிவுகள் 1980 கள் முதல் ஒரு புதிய இலக்கிய வரலாற்றுக் காலகட்டத்தை அறிமுகம் செய்யும் வகையில் வெளிவந்துகொண்டிருக்கின்றன. இந்த அனுபவங்களின் மேலும் ஒரு சிறுகதைத் துறைப் பதிவாக முத்து இராதா கிருஸ்ணனின் இத்தொகுதி உள்ளது. போர்ச்சூழல் வாழ்க்கையில் காணும் சாதாரண சம்பவங்களையும், நுணுக்கமாக அவதானிக்கும் சக்தியும் உள்ளது. இராதா கிருஸ்ணனின் சிறுகதைகள் விமர்சன வாசிப்புக்குச் சுவாரசியமாகவே அமைந்துள்ளன' எனப் பேராசிரியர் கா. சிவத்தம்பி தனது முன்னுரையில் குறித்துள்ளமை ஏற்கக் கூடியவையே.

'உதிரவேர்கள்' சிறுகதைத் தொகுதியின் அட்டைப் படத்தையும், ஒவ்வொரு சிறுகதைகளுக்குமான நவீன சித்திரங்களையும் கதாசிரியரே வரைந்துள்ளார். 'கோமாளி' என்ற பெயரில் முதன் முதல் ஓவியராக அறிமுகமாகிய ஆசிரியர், ராதா என்ற பெயரில் இந்தச் சித்திரங்களைத் தந்துள்ளார். அவருடைய கதைகளைப் புரிந்து கொள்வது போல, அவருடைய நவீன பாணி ஓவியங்களை இலகு வில் புரிந்து கொள்ள முடியாது. முத்து இராதா கிருஸ்ண னின் 'உதிரவேர்கள்' ஈழத்துச் சிறுகதைத் துறைக்குப் புதியதொரு படைப்பாளியை அறிமுகப்படுத்துகின்றது.

**- கமலநாதன் -**

'மல்லிகை நூலக மதிப்புரைக் குறிப்புகளுக்கு படைப்பாளிகள், தமது நூற்பிரதி ஒன்றினை அனுப்பி வைத்தல் அவசியம்'

முகவரி:
**மல்லிகை,**
**201 1/1, புதிய கதிரேசன் வீதி,**
**கொழும்பு – 13.**



படிப்பகம்

www.padippakam.com



# வ.அ. இராசரத்தினம்

**செங்கை ஆழியான**

1940 களின் இறுதிக் காலத்தில் எழுத்துத் துறையில் காலடி எடுத்து வைத்த வ.அ. இராசரத்தினம், 2001 இன் ஆரம்பகாலம் வரை திறந்த தன் பேனாவை ஒரு போதும் மூடி வைத்துவிடவில்லை. ஈழத்திலக்கியத்தின் எல்லாக் காலகட்டங்களிலும் அவர் தன் இலக்கியப் படைப்புக்களைத் தந்து புனைகதைத் துறைக்கு அளவிலாப் பங்களிப்புச் செய்துள்ளார். 1925 இல் கிழக்கிலங்கையின் ஒரு கோடியிலமைந்திருக்கும் மூதூர்க் கிராமத்தின் மகாவலி கங்கையும் கொட்டியாரமும் கலந்த மண்ணில் பிறந்து, அப்பிராந்தியக் காற்றையும், களத்தையும் நுகர்ந்து அவற்றின் அழகையும் அவலங்களையும் தன் படைப்புக்களில் பதிவு செய்திருக்கும் படைப்பாளி அவர், அவர் படைப்பிலக்கியத்துக்கு ஆற்றிய பங்களிப்பினை மெச்சித் தமிழ் கூறும் நல்லுலகம் அவருக்கு 2000 ஆண்டு ஜூன் மாதம் 5 ஆந் திகதி பவள விழா எடுத்து அரிய மலரொன்றினையும் வெளியிட்டுத் தன்னைக் கௌரவப்படுத்திக் கொண்டது.

வ.அ. இராசரத்தினத்தோடு எனக்கான உறவு மிக நெருக்கமானது. கிண்ணியா காரியாதிகாரியாக நான் விளங்கிய 1971 களில் அவரை மூதூரில் அடிக்கடி சந்திக்கும் பேறு பெற்றவன். அவர் பவள விழா முடிந்த கையோடு எழுதிய கடிதத்தில், "எனது பவள விழா மலர் வெளிவந்துவிட்டது. மலர் 200 பக்கங்களையுடைய கனதியான மலராகத்தான் இருக்கிறது. மலர் வெளியீட்டு விழாவுக்குக் கண்டியிலிருந்து வந்திருந்த திரு. ஞானசேகரன், ஈழத்தில் பவள விழா கொண்டாடிய ஒரேயொரு தமிழ் எழுத்தாளர் நான்தான் எனச் சொல்கிறார். சரியா பிழையா என எனக்குத் தெரியாது. கொஞ்சத் தூரம் நடந்தாலே களைக்கிறது. அத்தோடு சமீப நாட்களில் புறங்கால் வீங்கியுள்ளது. ஏதோ குளிசைகளோடு வாழ்கிறேன். ஆனாலும் இருந்து எழுதுவதற்கோ படிப்பதற்கோ சிரமமில்லை" எனக் குறிப்பிட்டுள்ளார். பெப்ரவரி 2001 இல் மறையும் வரை எழுதிக் கொண்டிருந்தார் என்பது அவர் குறிப்பிடுவது போல, "எழுத்து என் தவமானது. அது என் வேள்வி. அது என்னுள் கருமயோகமாகவும் சித்தித்தது" என்ற சுய மதிப்பீட்டிற்கு மிகவும் பொருத்தமாகின்றது.

### இலக்கியப் பின்னணி

ஈழத்துத் தமிழ்ப் புனைகதை வரலாற்றில் 1936 தொட்டு 1949 வரையிலான கால கட்டத்தினை முன்னோடிகள் காலம் என வரையறுக்க முடியும். உண்மையில் இது ஒரு சமூக சீர்திருத்தக் காலமாகவும் மறுமலர்ச்சிக் காலமாகவும் விளங்கியது. அக்காலகட்டத்தில் ஆனந்தன், சுபா, பாணன், சி. வைத்தியலிங்கம், சம்பந்தன், இலங்கையர் கோன், இராஜ அரியரத்தினம், சோ. சிவபாதசுந்தரம், அ.செ. முருகானந்தன், கசின், சொக்கன், கனக. செந்திநாதன், சு.வே,வரதர், தாழையடி சபா ரத்தினம், கு. பெரியதம்பி முதலான இலக்கிய ஜாம்பவான்கள் புனைக் கதைத் துறைக்கு கருக்கட்டி புதுநீர் பாய்ச்சி விட்டனர். அவர்களின் படைப்புக்கள் கலைநயத்தோடும் இலக்கியச் செழுமையோடும் ஆக்கப்பட்டிருந்தன. இந்த மண் சார்ந்த பிரச்சனைகளை மண்வாசனையோடு யதார்த்தமாக அவர்களின் பல புனைகதைகள் சித்திரித்துள்ளன. 1950 தொட்டு 1960 வரையிலான காலகட்டத்தை முற்போக்கு இலக்கியக் காலமென வரையறுக்கலாம். சமூகத்தின் புற்றுநோயாகவிருக்கும் சாதியக் கொடுமைகளுக்கும் குடிமை முறைகளுக்கும் அடக்கியொடுக்கலுக்கும் தீண்டாமைக்கும் எதிராக படைப்பாளிகள் போர்க் கொடியுயர்த்தி, தம் படைப்புக்களை இவற்றிற்கு எதிரான கருவியாகப் பயன்படுத்திய காலமிதுவாகும். கலையழகிலும் தாம் வரித்துக் கொண்ட கருத்து வளத்திற்கு முக்கியத்துவம் கொடுத்த படைப்புக்கள் இக்காலகட்டத்தில் வெளிவந்தன. உண்மையில் இக் காலகட்டம்தான் வ.அ. இராசரத்தினம் புனைகதைத் துறைக்குள் நுழைந்த வேளையாகும். 1950 ஒக்டோபர் 1 ஆந் திகதி வ.அ. இராசரத்தினத்தின் ஆரம்பச் சிறுகதையான "இதயதாகம்", நவீன இலக்கியத்திற்கு ஆரோக்கியமான தடமும் தளமும் அமைத்துக் கொடுத்து ஆக்கவிலக்கிய கர்த்தாக்களை இனங்கண்டு வெளிக் கொணர்ந்த ஈழகேசரியில் வெளிவந்தது. அதன் பின்னர் அவர் எழுதிய நூற்றுக்கணக்கான சிறுகதைகளில் முன்னோடி எழுத்தாளர்கள் புனைகதைகளின் கலாபூர்வத் தாக்கமும் முற்போக்குக் காலகட்டத்து கருத்துவளத் தாக்கமும் தெளிவாக இடங்கொண்டிருந்தன. இவ்விடத்தில் குறிப்பிடத்தக்க இன்னொரு முக்கிய அம்சம் யாதெனில் வ.அ. இராசரத்தினம் குறித்த கால கட்டத்துள் தன்னை ஒடுக்கிக் கொள்ளாது, ஈழத்துப் புனைகதை வரலாற்றின் புத்தெழுச்சிக் காலத்திலும் (1961-1982), தமிழ்த் தேசியவுணர்வுக் காலத்திலும் (1983-2000) தொடர்ந்து எழுதியுள்ளார் என்பதாகும்.



படிப்பகம்

www.padippakam.com

மல்லிகையின் ஆரம்ப காலம் தொட்டே நாம் அதன் சுவைஞர்களாக இருந்து வருகின்றோம். 36—வது ஆண்டுச் சிறப்பு மலர் மலர்வதையிட்டு மட்டற்ற மகிழ்ச்சி அடைகிறோம்.

மல்லிகை

# VEGETARIAN HOTEL

சுத்தமான, சுவையான, சுகாதார முறைப்படி தயாரிக்கப்பட்ட சிற்றுண்டி வகைகளுக்கு கொழும்பு மாநகரில் பிரசித்தி பெற்ற ஹோட்டல். எப்பொழுதும் நினைவில் வைத்திருக்கத்தக்க பெயர்

# கோல்டன் கபே

98, பாங்ஷால் வீதி,
கொழும்பு 11.
☎ : 324712

படிப்பகம்

www.padippakam.com

### இலக்கிய முன்னோடிகள்

வ.அ. இராசரத்தினத்தின் படைப்பு முயற்சிக்கு உந்து சக்தியாக விளங்கியவர்களெனத் தமிழகத்தில் மணிக் கொடி எழுத்தாளர்களையும் ஈழத்தில் ஈழகேசரிப் பண்ணையையும் மறுமலர்ச்சிக் குழுவைச் சேர்ந்தவர் களையும் குறிப்பிடலாம். மணிக்கொடி எழுத்தாளர்களே தமிழ்ச் சிறுகதைகளுக்கு இலக்கிய அந்தஸ்து தேடித் தந்தவர்கள் என்பது வ.அ. இராசரத்தினத்தின் கருத் தாகும். மணிக்கொடி எழுத்தாளர்களில் முக்கிய மாகப் புதுமைப்பித்தனின் எழுத்துக்களால் அவர் மிகவும் கவரப் பட்டிருந்தார் என் தெரிகிறது. "புதுமைப்பித்தனையே துரோணாச்சாரியாராக வரித்து ஏகலைவனாகச் சிறுகதை வித்தை பயின்றவர்'' என எஸ். பொன்னுத்துரை ஓரிடத் தில் குறிப்பிட்டுள்ளார். புதுமைப்பித்தனின் உரைநடைப் பாங்கையும் விபரணச் செல்வாக்கினையும் இராசரத்தினத் தின் சிறுகதைகளில், குறிப்பாக ஆரம்பகாலச் சிறுகதை களில் அவதானிக்க முடியும். புதுமைப்பித்தனின் திருநெல் வேலி வட்டாரப் பேச்சு வழக்கும் தாமிரபரணிக்கரை மக்களின் வாழ்க்கைச் சித்திரிப்புகளும் அவரைக் கிறங்க வைத்துள்ளன. அதனால்தான் வ.அ. இராசரத்தினத்தின் சிறுகதைகளில் கொட்டியாரக்கரை மக்களின் வாழ்க்கைச் சித்திரிப்பு திறம்பட அமைந்துள்ளது போலும்.

புதுமைப்பிததனுக்குப் பின்னர் இராசரத்தினத்தை மிகவும் கவர்ந்த தமிழகப் படைப்பாளிகளாக வல்லிக்கண்ணன், சிதம்பர ரகுநாதன், கு. அழகிரிசாமி என்போர் அமைந்தனர். இவர்களின் ஆழமான எழுத்துக் களை இரசித்தது போலவே கல்கியின் அகலமானதும் எளிமையானதுமான எழுத்துக்களும் இராசரத்தினத்தைக் கவர்ந்திருந்தன. உலகரீதியாக இராசரத்தினத்தை மிகவும் பாதித்த எழுத்தாளர் ஜேம்ஸ் ஜோய்ஸ் ஆவார். அவருடைய பாணியிலும் இவர் சில சிறுகதைகளைப் படைத்துள்ளார். மேலும் கீட்ஸினுடைய கவிதைகளில் அவர் ஈடுபாடு கொண்டிருந்தார். அவருடைய கவிதை யொன்றின் அருட்டலால்தான், உன்னதமான சிறுகதை யாகப் பலராலும் கருதப்படுகின்ற தோணியை எழுதிய தாக அவர் குறிப்பிட்டார்.

ஈழத்து எழுத்தாளர்களில் சம்பந்தன், சி.வைத்திய லிங்கம், இலங்கையர் கோன் ஆகியோரின் எழுத்துக்கள் அவரை எழுதத் தூண்டியுள்ளன. மேலும் 1946 களில் யாழ்ப்பாணத்தில் தோன்றிய மறுமலர்ச்சிக் குழுவின் முக்கிய படைப்பாளிகளான தி.ச. வரதராசன், அ.செ. முருகானந்தன், அ.ந. கந்தசாமி ஆகியோரின கடித முயற்சிகள் தனக்கு உந்துதலாக விளங்கியதாக அவர் குறிப்பிட்டிருக்கிறார். யாழ்ப்பாணத்தில் மறுமலர்ச்சிக்குழு செயற்பட்டுக் கொண்டிருந்த காலகட்டத்தில் ஈழத்தின் கிழக்குக்கரைக் கிராமம் ஒன்றிலிருந்து தானும் சிறுகதைகள் எழுத ஆரம்பித்ததாக அவர் நினைவு கூர்ந்துள்ளார். இலங்கையர் கோனுடன் ஏற்பட்ட நட்பு, வ.அ. இராசரத்தினத்தின் எழுத்துப் பணிக்கு வழிகாட்டியாகவும் இலங்கையர் கோனைத் தன் குருவாக மதிக்கவும் வைத்தது. நாற்பத்தாறுகளில் இலங்கையர் கோன் கொட்டியாரபற்றுக் காரியாதிகாரியாக கடமை யேற்றிருந்தார். பணிமனை மூதூரில் இருந்தமை யால் இலங்கையர் கோனின் நட்பும் வழிகாட்டலும் வ.அ. இராசரத்தினத்திற்கு அவரின் படைப்பிலக்கியங்களைச் சமைக்க ஏற்ற ஊக்கிகளாக அமைந்தன. 1944 களில் ஈழகேசரியில் இலங்கையர் கோனின் 'வெள்ளிப்பாதசரம்' சிறுகதை வெளிவந்தது. அச்சிறுகதை வ.அ. இராசரத்தினத்தை இலங்கையர் கோன் பால் அப்படியே கட்டிப் போட்டுவிட்டது. 1953 களில் வ.அ. இராசரத் தினத்தின் 'தோணி' என்ற சிறுகதை ஈழகேசரியில் வெளிவந்தது. அதனைப் படித்துவிட்டு இலங்கையர் கோன், "நீ என்னை விஞ்சிவிட்டாய்'' என வ.அ. இராச ரத்தினத்திடம் கூறிப் புளங்காகிதமடைந்தார். எனவே வ.அ. இராசரத்தினத்திற்கும் இலங்கையர்கோனிற்கும் இடையிலான இலக்கிய உறவு நெருக்கமானதாகவும் ஆரோக்கியமானதாகவும் இருந்துள்ளது.

வ.அ. இராசரத்தினத்தின் சிறுகதைப் படைப்புக் களுக்கு முன்னுரிமை கொடுத்துப் பிரசுரித்தவர்களில் இராஜ. அரியரத்தினம், அ.செ. முருகானந்தன் ஆகிய இருவரும் முக்கியமானவர்கள். அவர்கள் ஈழகேசரியின் ஆசிரியர்களாக விளங்கிய காலவேளையில் வ.அ. இராசரத்தினத்தின் சிறுகதைகள் வெளிவரக் களமமைத துக் கொடுத்துள்ளனர். அக்காலகட்டத்தில் கனக செந்திநாதனுடனான இலக்கிய உறவும், பிற்காலத் தில் எஸ். பொன்னுத்துரையுடனான நட்பும், வ.அ. இராச ரத்தினத்தின் படைப்புக்களில் அவர் வரித்துக் கொண்ட இலக்கிய நோக்கிலும் போக்கிலும் பெரும் செல்வாக்கினைச் செலுத்தியுள்ளன.

### இலக்கியக் கோட்பாடு

நான் எழுத ஆரம்பித்த காலத்தில் எனக்கு எந்த 'இசம்'களும் தெரியாது. 'இயல்'களும் தெரியாது. ஆனால் மகாவலிகங்கை கடலோடு கலக்கும் எனது வட்டாரத்து மக்களின் வாழ்க்கையையும், காவும் பொழிலும் கழி முகமும் புள்ளவிந்த ஏரியும் மல்கிய கொட்டியாபுரப்பற்றின் அழகையும் என் கதைகளிற் கொண்டு வரவேண்டும் என்ற ஆசை, என்னுள் வெறியாகவே உருவெடுத் திருந்தது. அந்த வெறியோடு தான் எழுதினேன்' என தனது நூலொன்றில் வ.அ. இராசரத்தினம் குறித்திருக்கிறார். எனினும் அவருக்குத் தெளிவானதொரு இலக்கிய நோக்கு இருந்துள்ளது. யதார்த்தம், தேசியம், மண்வாசனை என்பன சம்பந்தமாக இலக்கியக் கருத்தியல்புகள் இக்கருத்துக்கள் முன் வைக்கப்படு வதற்கு முன்னரேயே அவரது படைப்புக்களில் முன் வைக்கப்பட்டிருந்தன. மேலும் சாதித்திமிரையும், வறுமையின் கொடுமையையும், அதிகார மமதையையும் மட்டுமே எழுத வேண்டுமென்பதில் அவருக்கு உடன் பாடிருந்ததில்லை. இவ்வாறு வரம்பு வகுத்து எழுதுவதால் அழகியல் அந்நியப்படுகின்றது. மென்மையான உணர்வுகள் புறந்தள்ளப்படுகின்றன. ஒவ்வொரு மனிதனிலும் ஏதோ ஒரு கணமாவது வெளியாகும் மனிதநேயத் தெறிப்புக்கள் மறுக்கப்படுகின்றன. கலாபூர்வமான சாத்தியங்கள் சுருங்கிப் படைப்புக்கள் பிரசாரங்களாக மலினப்படுத்தப்படுகின்றன என அவர் தெளிவாகக் கூறி வைத்துள்ளார். வாசகனிடம் கொள்கைகளையும் சித்தாந்தங்களையும் திணிக்க விரும்பவில்லை. மாறாக தான் காணும் மக்கள் வாழ்க் கையை வாசகனோடு பகிர்ந்து கொள்ளவே விரும்பியிருக்



படிப்பகம்

www.padippakam.com

கிறார். இவ்வாறு கூறினாலும் மாக்ஸிம் கோர்க்கியையும் மாயா கோவ்ஸ்கியையும் அவரால் ஒதுக்கி விட முடியவில்லை. அவரது படைப்புக்கள் தொழிலாளரின் இடர்ப்பாடுகளையும் ஏக்கங்களையும் பேசின. அவர்களது அடக்குமுறை வாழ்க்கையையும் அதற்கான மூலவேர் களையும் பேசியுள்ளன. ஆக அவருக்கு மார்க்சிய முற்போக்கில் வெறுப்பிருக்கவில்லை. ஈழத்து முற்போக்காளரிடம் தான் வெறுப்பிருந்திருக்கிறது.

ஐம்பதுகளின் பிற்கூற்றில் இலங்கை முற்போக் கெழுத்தாளர் சங்கத்தில் அவர் அங்கத்தவராக விளங்கினார். திருகோணமலை வட்ட அமைப்பாளராக அவர் பதவி வகித்துள்ளார். அவருடைய ஆளுமையை மதிக்காமையும், முற்போக்கு தலைமைத் திறனாய் வாளர்களின் கருத்துக்களுக்கு எதிர்வாதக் கருத்துக்கள் ஏற்கப்படாமையும் அவரை முற்போக் அணியிலிருந்து விலகவைத்ததென அவர் குறிப்பிடுகிறார். முற்போக்காளர் எழுத்தாளர் சங்கத்தில் ஏற்பட்ட முரண்பாடுகளால் எஸ். பொன்னுத்துரையின் நற்போக்கு அணியினருடன் வெளியேறிய வர்களில் வ.அ. இரரசரெத்தினம் ஒருவர். எனினும் பொன்னுத்துரையின் கருத்துக்களை முற்றாக ஏற்றுக் கொண்டவருமல்லர்.

ஆசிரியத் தொழிலில் உயர்வு பெற்றுப் பட்டதாரியாக வரவேண்டுமென்ற அவர் பெற்றார், கூறியதையெல்லாம், பாராதி பாடியது போல 'தேடிச் சோறு நிதம் தின்பதற் காகச் சொல்லும் சின்னஞ் சிறு கதைகளாகவே அவருக்குப்பட்டன. ஆசிரியத் தொழிலை இலக்கியம் படிப்பதற்கான கருவியாகவே அவர் வரித்தார். வேறெந்த ஈனக்கவலைகளும் தன்னை அண்டாமற் பார்த்துக் கொண்டாராம்.

### சிறுகதைப்படைப்புக்கள்

வ.அ. இரரசரெத்தினம் சிறுகதைத்துறையினுள் தன் காலடிகளை எடுத்து வைத்த காலம் அவரின் பதினைந் தாவது பராயத்திலாகும். அவரின் முதலாவது சிறுகதை மழையால் இழந்த காதல் / 1948 இல் செப்டெம்பர் மாதம் தினகரனில் பிரசுரமாகியதாக அவர் குறிப்பிடுகிறார். ஆனால் சிறுகதையின் வடிவத்தினைச் சரிவரப்புரிந்து கொண்டு அவர் தனது முதலாவது சிறுகதையை 1950 ஒக்டோபர் முதலாம் திகதி 'இதயதாகம்' என்ற தலைப்பில் ஈழகேசரியில் எழுதினார். வ.அ. இராசரெத்தினத்தின் சிறுகதை வரலாறு அக்கதையிலிருந்து ஆரம்பமாவதாக நான் கருதுகிறேன். முன்னோடிச் சிறுகதை ஆசிரியர்களின் வழியொற்றி முற்போக்குக்கால உதயத்தின் பிதாமக ராகவே இவரை நான் கருதுகின்றேன்.

ஈழகேசரிப் பண்ணையில் முகிழ்ந்த எழுத்தாளர் அவரென்பதில் இரண்டு கருத்துக்கள் இருக்க முடியாது. 1930 தொட்டு 1958 வரையிலான ஈழகேசரியின் கால கட்டத்தில் 514 சிறுகதை ஈழகேசரியில் வெளியாகி யுள்ளன. ஈழகேசரித் தளத்தினை நன்கு பயன்படுத்திக் கொண்ட வ.அ. இரரசரெத்தினம் 1950 இலிருந்து 1957 வரையிலான ஏழு வருடங்களில் 29 சிறுகதைகளை ஈழகேசரியில் எழுதியுள்ளார் என்பது குறிப்பிடத்தக்க சாதனை. வாழ்க்கை, பிரிவின் துயர், பென். ஒற்றைப்பனை, தோணி, அறுவடை, உலகநியதி, வீடு, தலாக் முதலான வை ஈழகேசரியில் அவர் எழுதிய நல்ல சிறுகதைகளாம். 1950 களிலிருந்து 1953 நவம்பர் வரை ஈழகேசரியில் இரரசரெத்தினத்தின் 13 சிறுகதைகள் வெளிவந்துள்ளன. இச்சிறுகதைகளில் அவர் வெறும் கதைசொல்பவராகக் காணப்படுகிறார். ஆனால் 1953 ஆம் ஆண்டின் இறுதி மாதத்தில் அவரின் உன்னதமான சிறுகதையான 'தோணி' ஈழகேசரியில் வெளிவந்தது. அக்கதையுடன் ஈழத்துச் சிறுகதை இலக்கியம் ஒருகணம் தன்னைச் சிலிர்த்துக் கொண்டது. தோணி மூலம் அவர் தன்னை ஒரு படைபாளியாக இனங் காட்டிக் கொண்டார்.

தேசிய ரீதியாக இலங்கைத் தமிழ் எழுத்தாளர்கள் அனைவரையும் ஒருங்கிணைத்த சுதந்திரன் பத்திரி கையில் வ.அ. இரரசரெத்தினத்தின் பத்திற்கு மேற்பட்ட சிறுகதைகள் வெளிவந்துள்ளன. சிருஷ்டி கர்த்தா, தாலி. உள்ளும் புறமும், பிரிவுபசாரம், அண்ணன் பாசம், தோழரின் மனமாற்றம், சரிவு என்பன அவற்றில் குறிப்பிடத்தக்கன. சரிவு என்ற சிறுகதை வ.அ. இரரச ரெத்தினத்தின் இன்னோர் சிறந்த ஒரு சிறுகதையாகும். ஈழகேசரியிலிருந்து விலகிய இராஜ அரியரத்தினத்தை ஆசிரியராகக் கொண்டு யாழ்ப்பாணத்தில் ஈழநாடு என்ற பத்திரிகை தொடங்கிய போது வ.அ. இரரசரெத்தினம் அதில் வீரன்துயர், வெந்தணலால் வேகாது ஆகிய சிறுகதைகளை எழுதியிருக்கிறார். இவற்றோடு தினகரன், வீரகேசரி, சிந்தாமணி ஆகிய பத்திரிகைகளிலும் ஈழத்தில் வெளிவந்த பல்வேறு சஞ்சிகைகளிலும் (விவேகி,மலர், கலைச்செல்வி, சுடர்) அவருடைய சிறுகதைகள் வெளிவந்துள்ளன.

வ.அ. இரரசரெத்தினம் தனது ஐம்பது வருட இலக்கிய வாழ்க்கையில் முன்னூறுக்கும் மேற்பட்ட சிறுகதைகளை எழுதியுள்ளதாகக் கூறியுள்ளார். அக்கதைகளைத் தொகுத்தும் வகுத்தும் பத்துத் தொகுதிகளாக கோவைகள் வைத்திருந்தார். அத்தொகுதி களை அவருக்குச் சொந்தமாகவிருந்த அமுதா அச்ச கத்தில் அச்சிட்டுப் புத்தகமாக்க எண்ணியிருந்தார். ஆனால் தொண்ணூறாம் ஆண்டில் மூதூரில் நிகழ்ந் தேறிய வன்செயல்களால் அவரது அத்தனை எழுத்துக் களும் அச்சகமும் எரிந்து சாம்பலாகியது. வ.அ. இராசரத்தினத்திற்கு மட்டும் இந்த அவலமல்ல. ஈழத்தின் பல எழுத்தாளர்களின் படைப்புக்கள் இவ்வாறு இன்று நமது நாட்டில் நிகழ்ந்த வன்செயல்களால் தீக்கும் வெள்ளத்துக்கும் ஷெல்களுக்கும் இரையாகிவிட்டன.

### நாவல் படைப்புக்கள்

ஈழகேசரியின் தளத்தைச் சிறுகதைகள் எழுதுவதற்கு மட்டும் வ.அ. இராசரத்தினம் பயன்படுத்திக் கொள்ள வில்லை. ஈழகேசரியில் அவர் தொடராக எழுதிய 'கொழுகொம்பு' ஈழத்தின் ஆரம்ப நாவல்களில் முக்கியமானதாக இன்று கணிப்பீட்டிற்குள்ளாகி யிருக்கிறது. அவரால் நாவலாக எழுதி வீரகேசரிப் பிரசுர மாக வெளிவந்த "கிரௌஞ்சப் பறவைகள்" வரலாற்று நவீனமொன்று எவ்வாறு உருவாக்கப்பட வேண்டுமென்ப தற்குத் தக்க உதாரணமாக அமைந்தது. (1975) திருகோணமலை ஆலங்கேணிக் கிராமத்தில் பரம்பரை பரம்பரையாக வாழ்ந்து வந்த மக்கள் இனக்கலவரத்தால் இடம் பெயர்ந்து படும் அவதிகளை "ஒரு வெண்மணல் கிராமம காத்துக் கொண்டிருக்கிறது" என்ற நாவலாக



படிப்பகம்

www.padippakam.com

எழுதி வெளியிட்டார். அவருடைய இன்னொரு நாவல் "மண் சமைந்த மனிதர்கள்" ஆகும். மேலும் ஈழநாடு பத்திரிகையில அவர் எழுதிய "துறைக்காரன்" நூலாக வெளிவரின், ஈழத்து நாவலிலக்கியத்திற்குப் புதியதொரு பரிமாணம் சேரும்.

வ.அ. இராசரத்தினம் நாவல்களோடு இலக்கியத் திற்குப் பெருமை சேர்க்கும் சில குறுநாவல்களை எழுதியுள்ளமை தவிர்க்கமுடியாத தகவலாகும். அவற்றில் 'விவேகி' சஞ்சிகையில் அவர் எழுதிய "தேய்பிறை" குறிபபிடத்தக்க குறுநாவலாகும். நனவோடை உத்தியில் 'குரூஸ்' வாத்தியாரின் குடும்ப அவலங்களைச் சித்திரிப்பதன் மூலம், மீனவ வாழ்வின் முழுப் பரிமாணத் தையும் தேய்பிறையில் அவர் கொண்டுவந்துள்ளார். அவர் படைத்த இன்னொரு குறுநாவல் "ஒரு காவியம் நிறைவு பெறுகின்றது" என்பதாகும். அது அவரின் சுய வரலாற்றுக் குறிப்புக்களைக் கொண்ட கலாபூர்வமான சிருஷ்டி. அவருடைய மனைவிக்கும் அவருக்குமிடையிலான உறவுமேன்மையும் அந்த மாதரசி அவரின் பணிக்கு எவ்வாறு உந்து சக்தியாக விளங்கினாள் என்பதையும் அளவிலாப் பாசத்தோடு அக்குறுநாவலில் அவர் சித்திரித் துள்ளார். படைப்பாளி ஒருவன் நேர்மையுடன் தன் பலத்தையும் பலவீனங்களையும் இக்குறுநாவலில் அவலச் சுவையோடு நனவோடையில் கலைத்துவமாக அவர் சிததிரித்திருக்கினறாா். இக்குறுநாவல் 'சுடர்' சஞ்சிகையில் தொடராக வெளிவந்தது. சாலை இளந்திரையன் இக் குறுநாவலைப் படித்துவிட்டு மிகவும் பாராட்டுதலாக ஒரு விமர்சனம் எழுதியிருந்தார். "அதனை மலரில் சேர்க்க விரும்பினேன். சுவடிகள் திணைக்களததிற்குப் போனேன். நான் திரும்பி வந்ததே போதும் போலிருந்தது. அத்தனை கெடுபடி. இன்னும் ஐந்தாண்டுகளில் சுவடிகள் திணைக்களத்தில் தமிழ்ப் பிரிவு இல்லாமற் போனாலும் ஆச்சரியமாக இராது" என வ.அ. இராசரத்தினம் எனக்கெழுதிய கடிதத்தில் வருத்தத்துடன் குறித்திருந்தார்.

**ஏனைய இலக்கிய முயற்சிகள்.**

சிறுகதை, நாவல் ஆகிய இலக்கிய வகைகளோடு வ.அ. இராசரத்தினம் மொழிபெயர்ப்பு, நாடகம், கவிதை, இலக்கியக் கட்டுரைகள் முதலான துறைகளில் கால் ஊன்றியிருக்கிறார். அவர் "ஈழநாகன்" என்ற புனை பெயரில் ஈழகேசரியில் பக்தி இலக்கியக் கட்டுரைகள் பலவற்றினைப் படைத்துள்ளார். அதே புனைபெயருடன் இரண்டு கவிதைகளையும் ஈழகேசரியில எழுதியுள்ளார். மாப்பசானின் எழுத்துக்களின் மீது வ.அ. இராசரத்தினத் திற்கு அளவற்ற பற்று இருந்தமையால், அவரின் இன்பம், விஷப்பரீட்சை, பாவமன்னிப்பு முதலான சிறுகதைகளை அவர் தமிழில் மொழி பெயர்த்துத் தந்துள்ளார். ஜேம்ஸ் ஜோய்ஸின் இரு நண்பர்கள் என்ற சிறுகதையையும் தமிழாக்கம் செய்து வழங்கிள்ளார். அவர் ஏராளமான வானொலி நாடகங்களை எழுதியுள்ளார். தந்தையின் காதலி குறிப்பிடத் தக்க ஒரு நாடகமாக எனக்குப் படுகின்றது. பொச்சங்கள் என்ற தலைப்பில் தனது நினைவுகளையும் தான் சந்தித்த மனிதர்களையும் சுவைபட அவர் தினக்குரலில் தந்துள்ளார். அல்லாமா இக்பாலின் கவிதைகளைப் "பூவரசம் பூ" என்ற தலைப்பில் மொழி பெயர்த்துள்ளார். இவற்றோடு திருக்கரசைப் புராணம், மூதூர் அந்தோனியார் கோயிலின் பூர்விக சரித்திரம் ஆகிய நூல்களையும் ஆக்கியளித்துள்ளார்.

**வெளிவந்த நூல்கள்**

ஈழகேசரியில் தொடராக வெளிவந்த வ.அ. இராசரத்தித்தின் நாவலான "கொழுகொம்பு" ஈழகேசரித் தளத்திற்குச் சொந்தமான வடவிலங்கைத் தமிழ் நூற்பதிப்பகத்தினால் முதன் முதல் வெளியிடப்பட்டது. அவ்வேளையில் நவீன படைப்பாளியொருவரை இனங்கண்டு வெளியிட்ட பெருமை குரும்பசிட்டி பொன்னையாவிற்குரியதாகும். 1954க்கு முன்னர் வ.அ. இராசரத்தினம் எழுதிய பதினான்கு சிறுகதைகளைத் தொகுத்து, 1962 இல் அரசு வெளியீட்டினர் "தோணி" என்ற சிறுகதைத் தொகுதியை வெளியிட்டனர். அரசு வெளியீட்டின் உரிமையாளரான எம்.ஏ. ரஹ்மான் தனது வெளியீட்டின் முதலாவது நூலாக தோணியை வெளியிட்டமை விதந்துரைக்கத்தக்க பணியாகும். வ.அ. இராசரத்தினத்தின் சிறுகதைத் தொகுதியான தோணி அவ்வாண்டின் சாகித்திய மண்டலப் பரிசினைப் பெற்றுக் கொண்டது. கிழக்கிலங்கையில் சாகித்திய மண்டலப் பரிசில் பெற்ற முதலாவது படைப்பாளி வ.அ. இராசரத்தினமாவார். 1975இல் அவருடைய "கிரௌஞ்சப் பறவைகள்" என்ற வரலாற்று நாவல் வீரகேசரிப் பிரசுரமாக வெளிவந்தது. இதனை அடுத்து 1992இல் "ஒரு வெய்மணல் கிராமம் காத்துக் கொண்டிருக்கிறது" என்ற நாவலும், 1996 இல் "மண் சமைந்த மனிதர்கள்" என்ற நாவலும் வெளியாகின. 1996 இல் எஸ். பொன்னுத் துரையின் மித்ர வெளியீடாக "ஒரு காவியம் நிறைவு பெறுகின்றது" என்ற தலைப்புடன், வ.அ. இராசரத் தினத்தின் படைப்பாற்றலை முழுமையாக இனங் காணக்கூடிய நாற்பத்தொன்பது சிறுகதைகளையும் ஒரு காவியம் நிறைவு பெறுகின்றது என்ற குறுநாவலையும் உள்ளடக்கிய பெரும் சிறுகதைத் தொகுதியொன்று வெளியாகியது. இத்தொகுதியை வெளியிட்டதன் மூலம் மித்ர வெளியீட்டினர் ஈழத்து இலக்கியத்திற்குப் பெரும் பங்களிப்புச் செய்திருக்கின்றார்கள் என்பேன். வ.அ. இராசரத்தினத்தின் சிறுகதைகள் யாவும் தொலைந்து போன நிலையில் மித்ர வெளியீட்டினர் தந்த ஊக்கத்தால் வ.அ. இராசரத்தினம் தனது நண்பர்கள் மூலம் அரிதிற் தேடிய சிறுகதைகள் இத்தொகுதியில் இடம் பெற்றுள்ளன. தோணிச் சிறுகதைத் தொகுதியிலிடம் பெற்றிருந்த எட்டுச் சிறுகதைகளும், வேறு தேடிப் பெற்ற சிறுகதைகளும். தன் நினைவிலிருந்து மீட்டெழுதிய சுமை என்ற சிறுகதையும், கோலங்கள் மனை கோலின, கோயில் மணியோசை, ஓர் ஆலமரத்தின் கதை, பெண்ணியம் ஆகிய புதிய சிறுகதைகளும் இத்தொகுதியில் இடம் பிடித்திருக்கின்றன.

கொட்டியாரச் சிறுகதைகள், ஐந்திணைக் கதைகள் என்பன வ.அ. இராசரத்தினத்தின் ஏனைய சிறுகதைத் தொகுதிகளாம். ஐந்திணைக் கதைகளில் நற்றிணையை வைத்து எழுதிய ஆறு கதைகள் உள்ளன. ஐந்திணைக் கதைகள் தொகுதியை எம்.டி. குணசேன நிறுவனம் வெளியிட்டிருக்கின்றது. அவ் வகையில் அந்த நிறுவனத்தின் தமிழப்பிரிவு ஆசிரியர் செ. யோகநாதன்



படிப்பகம்

www.padippakam.com

பாராட்டிற்குரியவர். வ.அ. இராசரத்தினத்தின் பவள விழாவின்போது அவரது பணிதனை தொகுத்து பவள விழா மலராக வெளியிட்ட கேணிப்பித்தன் அருளானந்தம் ஆற்றிய சேவை மூலம் படைப்பாளி ஒருவரின் படைப்பாற்றலையும் தரிசனத்தையும் தமிழுலகம் அறிய முடிகின்றது.

**இலக்கியக் கணிப்பீடு**

"சிறுகதைகளை இவர் சிருஷ்டித்தது போல மற்றவர்கள் செய்யவே முடியாது. ஈழத்துச் சிறுகதைத் தொகுதியொன்று வெளியிட விரும்பும் எவரும் இவருடைய தோணியை விட்டுவிட்டு ஒரு தொகுதியை வெளியிட முடியாது. நிதர்சன இலக்கியம், வாழ்க்கையோடு ஒட்டிய இலக்கியம் என்று துடியாய்த் துடிக்கும் முன்னேற்ற எழுத்தாளர்கள் கூட அதிசயப்படும் படியாக அது அமைந்திருக்கின்றது" என இரசிகமணி கனக செந்திநாதன் குறிப்பிட்டுள்ளமை ஏற்கக் கூடியதாகும். வ.அ. இராசரத்தினத்தின் தோணி, தமிழக மஞ்சரியில் மறுபிரசுரமானது. சிற்பியின் ஈழத்துச் சிறுகதைகள், செ. யோகநாதனின் வெள்ளிப் பாதசரம், இந்து சமய கலாச்சாரத் திணைக்களத்தின் பொன்விழாச் சிறுகதைகள், செங்கை ஆழியானின் ஈழத்துச் சிறுகதைகள் முதலான தொகுதிகளில் தோணி இடம் படித்திருக்கின்றது. வ.அ. இராசரத்தினத்தின் உன்னதமான சிறுகதையாகத் தோணியைக் கருதலாம்.

"கலையழகுடன் யதார்த்த வாழ்வைச் சித்திரிக்கும் நல்ல கதை தோணி" என வல்லிக்கண்ணன் குறிப்பிட்டுள்ளார். "இதில் அவரின் எழுத்தாற்றலும், வாழ்க்கை பற்றிய கண்ணோட்டமும் முற்போக்குச் சிந்தனையும் மனித நேயமும் நம்பிக்கை மனோபாவமும் புலனாகின்றது" என வல்லிக்கண்ணன் விதந்துரைத்துள்ளார். மீனவனுக்குத் தோணி சொந்தமில்லை: நாளை அது அவனுக்குச் சொந்தமாகும் என்ற கருவை வெகு நேர்த்தியாக வ.அ. இராசரத்தினம் இச் சிறுகதையில் சித்திரித்திருக்கின்றார்.

தோணியின் பின்னர் வெகுவாகப் பேசப்படும் வ.அ. இராசரத்தினத்தின் புனைகதைக்கான கருத்தியல் நிலை மிகத் தெளிவானதாகும். வர்க்கியம், தலித்தியம். பெண்ணியம், இனத்துவம், சூழலியம் மதலிய கருத்தியல் நிலைகளுக்கு அப்பால் தான் வாழும் பிரதேசத்து மக்களது வாழ்க்கை, பிரதேச அழகு, அவர்களின் வாழ்க்கையின் பலமும் பலவீனமும் என்பவற்றினை எழுத்தில் தந்துவிடும் ஆவலும், அவற்றினூடாகத் தான் வாழ்கின்ற சமூகத்தின் மேம்பாட்டிற்குச் சில கருத்துக்களைச் சொல்லிவிடும் ஆதங்கமும் அவரது படைப்புக்களில் காணப்படுகின்றன. 1954 களில் மண் வாசனை, தேசியம், யதார்த்தம் என்பன முக்கிய அம்சங்களாக வலியுறுத்தப்படுவதற்கு முன்னரேயே வ.அ. இராசரத்தினத்தின் சிறுகதைகளில் அவை விரவி வந்துள்ளன.

"தத்துவங்களைப் போட்டுக் குழப்பாமல் பிறந்த கொட்டியாரப்பற்று மண்ணையும், அதன் இயற்கை லாவண்யங்களையும், அதில் வாழும் மக்களையும் ஆத்மார்த்தமாக நேசிப்பவர். இந்த நேசிப்பின் சம்பாவனையாக அந்த மண்ணின் மக்களுடைய வாழ்க்கையிலுள்ள மனிதநேய ஒற்றுக்களை, தமக்கு வாலாயமான ஒரு நடையிலே கதைகளாகப் பதிவு செய்தவர். அவருடைய கனவுகளையும், ஆசைகளையும், இன்பங்களையும், நிமிர்வுகளையும் பங்கிட்டுக் கொண்ட பரவசத்தினை அவர் கதைகளில் காணலாம்" என எஸ். பொன்னுத்துரை குறிப்பிட்டுள்ளார்.

வ.அ. இராசரத்தினத்தின் படைப்புக்கள் இந்த மண்ணைத்தான் பேசுகின்றன. பாசாங்கற்ற சகாயமான மொழியில் சமூக முரண்பாடுகளையும் சமூக அவலங்களையும் அனுபவ ரீதியாகத் தன் படைப்புக்களில் தந்துள்ளார். எல்லாவற்றிற்கும் மேலாக அவரின் படைப்பனுபவங்களை நாம் அவர் படைப்புக்களில் தரிசிக்க முடிகிறது.

நிறைவாக ' ஒரு காவியம் நிறைவு பெறுகின்றது' என்ற குறுநாவலின் இறுதி வரிகள் பின்வருமாறு வ.அ. இராசரத்தினத்தினால் எழுதப்பட்டிருக்கின்றது.

"என் சிருட்டி காலத்தாற் சாகாது. காலத்தின் ஏலத்தால் மலியாது"

# கடிதம்

தமிழ் இனி – 2000 விழாவில் உங்களைச் சந்தித்து மகிழ்ந்தது பெரிய இனிய அனுபவம். மூன்று நாட்களும் நிறையப் பார்த்துக் கொள்ள முடிந்தது. கௌரவம், அலைச்சல் எதுவுமே பார்க்காமல் நீங்கள் நேய மயமாகத் தேடி வந்தது மனதில் ஒளிமயமான சித்திரமாக உள்ளது. அன்பையும் முடிந்த எல்லாவற்றையும் வாரி வழங்கினீர்கள். வியந்து பார்த்து மகிழ்ந்தேன்.

உங்களது மணிவிழா மறுபதிப்பு வெளியீடு சிறந்த முறையில், பயனுள்ள வகையில் அமைந்துள்ளது. உங்களது வாழ்க்கை வரலாற்று நூல் 'எழுதப்படாத கவிதைக்கு வரையப்படாத சித்திரம்' மிகவும் சுவாரஸ்யமாக இருக்கிறது. துணிச்சலாக, அதே சமயம் உண்மைகளை வெளிப்படையாகச் சொல்லியுள்ளீர்கள். மிகைப்படுத்தல் இல்லை. வாசகர்களைக் கவர்ந்துவிட வேண்டும் என்ற உத்திகள் இல்லை.

மல்லிகை 35 – வது மலரும் ஆச்சரியமளிப்பதாகவே இருக்கிறது. இவ்வளவு காத்திரமான விஷயங்களை வெளிக் கொணர்ந்து எப்படிச் சாத்தியமானது ...?

மகன் அறம், அரசு மருத்துவராகப் பணியாற்றி வருகிறார். இன்னும் நான்கு மாதத்தில் அவருக்குத் திருமணம். திருமணம் முடிவானதின் பின்னர் திகதி அறிவிப்பேன். உங்களது வருகை என் வாழ்நாளில் நேர்ந்த சிறந்த பேறுகளில் ஒன்றாக அமையும்.

**சாத்தூர் தனுஷ்கோடி ராமசாமி.**

201-1/1 ஸ்ரீ கதிரேசன் வீதி, கொழும்பு முகவரியைக் கொண்டவரும், ஆசிரியரும், வெயளியிடுபவருமான திரு. டொமினிக் ஜீவா அவர்களுக்காக கொழும்பு 13 விவேகானந்தா மேட்டிலுள்ள யு.கே. அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

படிப்பகம்

www.padippakam.com

மல்லிகைப்பந்தல்

201-1/1. ஸ்ரீ கதிரேசன் வீதி,
கொழும்பு-13.
Tel: 320721

# வெளியீடுகள்

1. பித்தன் கதைகள் - கே. எம். எம். ஷா (சிறுகதைத் தொகுதி)
2. மல்லிகை முகங்கள் - டொமினிக் ஜீவா (65 தகைமை சான்றவர்களின் அட்டைப்படத் தகவல்கள்)
3. அநுபவம் - நாகேசு. தர்மலிங்கம் (சிறுகதைத் தொகுதி)
4. தலைப் பூக்கள் - டொமினிக் ஜீவா (55 மல்லிகைத் தலையங்கங்களின் தொகுப்பு நூல்)
5. விடை பிழைத்த கணக்கு - திக்குவல்லை கமால் (சிறுகதைத் தொகுதி)
6. மாத்து வேட்டி - தெணியான (சிறுகதைத் தொகுதி)
7. அனுபவ முத்திரைகள் - டொமினிக் ஜீவா (வாழ்க்கை அனுபவங்கள்)
8. ஈழத்திலிருந்து ஓர் இலக்கியக் குரல் (பல்வேறு பேட்டிகள்) - டொமினிக் ஜீவா
9. மீறல்கள் - மு. பஷீர் (சிறுகதைத் தொகுதி)
10. எங்கள் நினைவுகளில் கைலாசபதி (தொகுப்பு நூல்) - டொமினிக் ஜீவா
11. எண்பதுகளில் மல்லிகை விமர்சனங்கள் (விமர்சன நூல்) - ம. தேவகௌரி
12. டொமினிக் ஜீவா – சிறுகதைகள் (தேர்ந்தெடுக்கப் பெற்ற 50 சிறுகதைகளின் தொகுப்பு)
13. ஒரு தேவதைக் கனவு (சிறுகதைத் தொகுதி) - கெக்கிராவ ஸஹானா
14. தெரியாத பக்கங்கள் - சுதாராஜ் (சிறுகதைத் தொகுதி)
15. உணர்வின் நிழல்கள் (சிறுகதைத் தொகுதி) – யோகேஸ்வரி சிவப்பிரகாசம்
16. தூண்டில் - டொமினிக் ஜீவா (கேள்வி - பதில்)
17. அந்தக் காலக் கதைகள் - தில்லைச் சிவன் (நடைச் சித்திரம்)
18. நினைவின் அலைகள் - எஸ். வீ. தம்பையா (தன் வரலாற்று நூல்)
19. பாட்டிசொன்ன கதை - முருகபூபதி (சிறுவர் இலக்கியம்)
20. முன்னுரைகள் - சில முகவுரைகள் - டொமினிக் ஜீவா
21. எழுதப்படாத கவிதைக்கு வரையப்படாத சித்திரம் (சுயவரலாறு) - டொமினிக் ஜீவா
22. நானும் எனது நாவல்களும் –செங்கை ஆழியான்
23. கார்டூன் ஓவிய உலகில் நான் –சிரித்திரன் 'சுந்தர்'
24. எழுதப்பட்ட அத்தியாயங்கள் –சாந்தன்
25. கிழக்கிலங்கைக் கிராமியம் (நாட்டார். இயல்) - ரமீஸ் அப்துல்லாஹ்

www.padippakam.com

# இலக்கிய வாதிகளின் இலக்கியம் பேசாத முகாம்.

முன்னைய முகாம்

கடந்த 06-07-86 ஞாயிற்றுக்கிழமை காலை 9.00 மணி முதல் பி. ப. 5.00 மணிவரை ஆனைக் கோட்டையிலுள்ள சுதாராஜ் அவர்களது 'கவிதை' இல்லத்தில் முற்றிலும் புது விதமான தமாஷான இலக்கிய நிகழ்ச்சி ஒன்று நடைபெற்றது.

'இலக்கியவாதிகளின் இலக்கியம் பேசாத முகாம்' என்ற தலைப்பில் இந்த ஓய்வு நாள் முகாம் சிறப்படைந்தது. இதில் சுவையான அம்சங்கள் என்னவென்றால், இந்த முகாமில் யாருமே இன்று இலக்கியம் என்ற ஒரு சொல்லைக் கூட இந்தக் காலந்துரையாடலில் பேசக் கூடாது என்ற அறிவுறுத்தலுக்கு அமைய முடிவு வரை கவனமாகக் கைக் கொள்ளப்பட்ட போதிலும் கூட, இடையிடையே இலக்கியம் என உச்சரித்ததற்காகச் சில பிரபலஷ்தர்கள் குற்றப் பணம் செலுத்த வேண்டியும் ஏற்பட்டு விட்டது.

*

யாழ்ப்பாண இலக்கிய வாதிகளிடையே இந்த இலக்கிய முகாம் பற்றி முகாம் நடந்து முடிந்ததன் பின்னர் பெரிய சர்ச்சையே ஏற்பட்டு விட்டது. இங்கு குறிப்பிடத்தக்கது.

இந்த அநுபவப் பின்னணியைப் பின் பலமாகக் கொணடு கடந்த 18-03-2001 ஞாயிறன்று புத்தளத்திலுள்ள சுதாராஜ் வீட்டில் இலக்கியவாதிகளின் இலக்கியம் பேசாத இனிய முகாம் இடம் பெற்றது.

கொழும்பிலிருந்து பேராசிரியர் சந்திரசேகரம் வன்னியகுலம் யோகநாதன், டொமினிக் ஜீவா, மேமன் கவி, இப்நு அசுமத், தெளிவத்தை ஜோசப், பாஸ்கரன், கே. எஸ் சிவகுமாரன், ஸ்ரீதர் பிச்சையப்பா, ஆப்டீன் ஆகியோர் காலை 9.00 மணிக்கு புத்தளத்திற்கு வந்து சேர்ந்து விட்டனர்.

தொடர்ந்து மாத்தளையிலிந்து மரைக்கார், ஹமீட் ஹாஜியார், ஃபுவாஜி ஆகியோரும் சிலாபத்திலிருந்து பைஸ்தீன் ஆகியோர் வந்திருந்தனர்.

தினசரிப் பத்திரிகைகளின் பிரசுர பலத்தைச் செய்தியாகக் கேள்விப்பட்டு புத்தளம் பிரதேசத்தைச் சேர்ந்த சுவைஞர்கள், எழுத்தாளர்கள், ஆய்வாளர்கள் போன்றோர் கூட்டம் கூட்டமாக வர ஆரம்பித்தனர். இவர்களை இன் முகத்துடன் வரவேற்றார் புத்தளம் நகர பிதா பாயிஸ் அவர்கள். அவரும் ஒரு கவிஞர் என்பது இங்கு கவனிக்கத் தக்கது. சுதாராஜ் குடும்பத்தினர் வரவேற்றனர்.

பத்து மணிக்கு மேல் இலக்கியம் பேசாத முகாம் களை கட்டத் தொடங்கி விட்டது. ஆரம்பத்தில் சீட்டுத் துண்டு உருட்டிப் போட்டு அந்தத் துண்டில் ககாணப்பட்டபடி சகலரும் அதற்குக் கட்டுப்பட்டு நடக்க வேண்டும் என முகாமை ஒழுங்கு செய்த டொமினிக் ஜீவா, வந்திருந்த அனைவரையும் கேட்டுக் கொண்டார். இந்த ஆலோசனையை

மேமன் கவி நிராகரித்துப் பேசினார். "வந்திருப்பவர்கள் எல்லாம் கண்ணியவான்கள். இப்படிச் செய்வது அவர்களது இமேஜிற்குக் குந்தகம் ஏற்படலாம் அல்லவா?" என அவர் இந்த ஆலோசனையை நிராகரித்தார்.

இந்த முகாம் ஒழுங்கு செய்யப்பட்டதே தாங்கள் சமூகத்தில் கனதனவான்கள். கண்ணியவான்கள் என்ற மனப் பான்மையை நீக்கத்தான் சம்பந்தப்பட்டவர்களுக்கும் முன்னரே இதன் அடிநாதம் கோடிட்டுக் காட்டப்பட்டே அழைக்கப்பட்டனர்.

எந்தவிதமான முகமுடிகளுமற்ற வெறும் மனிதர்களாகவே இங்கு கூடிக் களிக்க விரும்புவோரே இந்த முகாமுக்கு வருகை தரச் சம்மதிக்கலாம் எனப் பதில் கூறப்பட்டது. வந்திருந்தோர் பலத்த சிரிப்புக்கும் கரகோஷத்திற்கும் மத்தியில் இதனைப் பூரணமாக ஏற்றுக் கொண்டனர்.

ஒவ்வொருவராகத் துண்டுச் சீட்டை எடுத்தனர். விரித்துப் பார்த்தனர் சிலர். சிலருக்கு தமக்கு வந்துள்ள துண்டுச் சீட்டின் உள்ளடக்கத்தை வெளியே சொல்லக் கொஞ்சம் கூச்சமாகக் கூட இருந்தது. இருந்தும் சிரித்துச் சமாளித்துக் கொண்டனர்.

சம்பவங்கள் தொடர்ந்து துரித கதியில் நடந்தேறி வந்தன. பலர் பாடினார்கள், சிலர் கடந்த கால அநுபவங்களைச் சிரிக்கச் சிரிக்கச் சொல்லி கலகலப்பு மூட்டினார்கள். இந்த இலக்கிய முகாமில் இரண்டு பேர்களினுடைய குரல் வளம் தான் பலராலும் வியந்து பாராட்டப் பெற்றது.

ஒருவர் ஸ்ரீதர் பிச்சையப்பா, இன்னொருவர் உடப்பு சோமஸ்கந்தர். இந்த இருவரும் தமக்கு வாலாயமாக வந்தமைந்த மெல்லிசை, நாட்டார் இயல் இசைப் பாடல்களைப் பாடி சபையினரின் ஏகோபித்த பாராட்டுக்களையும், கைதட்டர்களையும் ஒருங்கே பெற்றுக் கொண்டனர்.

நினையாப் பிரகாரமாக ஒரு கவிஞரும் புத்தளத்திற்கு வந்த இடத்தில் எம்முடன் கலந்து கொண்டு கவிக் குரலில் பாடினார். மருதூர்க் கனி என்ற கிழக்கு மாகாணக் கவிஞரும் ஹனிபா என்ற பாராளுமன்றப் பிரதிநிதியுமே அவர்.

வந்திருந்த பலருக்கு இந்த முகாமில் நடைபெறும் நிகழ்ச்சிகள் அனைத்துமே வித்தியாசமாகவும், விசித்திரமாகவும் பட்டது.

பலர் மனமாரப் பாராட்டினர்.

சுதாராஜ் குடும்பத்தினரின் உபசரிப்பு இலக்கிய உலகில் விதந்து பேசப்படும் ஒன்றாகும். மத்தியான உணவு ஏற்றவர்களுக்கு ஏற்ற விதமாக மிக அருமையாகத் தயாரிக்கப்பட்டிருந்தது. சுவையாகவும் தரமாகவும் இருந்தது.

நேரம் போனதே தெரியவில்லை. அத்தனை உற்சாகம். மாலையில் மாணவிகளின் கலை நிகழ்ச்சி எழுத்தாளர்களுக்கு விசேஷமாக நடத்திக் காண்பிக்கபப்பட்டது.

வந்திருந்த விருந்தினரை நகர பிதா அழைத்துச் சென்று பட்டினத்தின் நூலக வளர்ச்சியையும் அவைகளின் தராதரத்தையும் நேரில் காண்பித்து விளங்கப்படுத்தினார்.

இந்த ஒன்று கூடலில் அவசியம் கலந்து கொள்ள வேண்டுமென மாத்தளை யிலிருந்து ரொம்பவும் ஆர்வத்துடனும் அக்கறையுடனும் மூவர் நேரகாலத்தோடையே புத்தளத்திற்கு வந்து சேர்ந்து கொண்டனர். இலக்கிய நல விரும்பிகளான மரைக்கார், ஹமீட் ஹாஜியார், ஃபூவாஜி போன்றோர் இந்த நிகழ்ச்சிகளின் தனித்துவத்தையும் இலக்கிய ஆளுமையையும் கண்டு ஒரே பரவசப்பட்டு விட்டனா.

அடுத்த எழுத்தாளர்களது ஒன்று கூடல் முகாம் மாத்தளையில் ஒரு முழுநாளும் நடைபெறும் என்றும் சகல எழுத்தாளர்களையும் இதில் கலந்து கொள்ள அழைப்பதாகவும் முன்கூட்டியே அழைப்பு விடுத்தனர்.

சூரியன் புத்தளத்து மக்களிடம் விடை பெற்றுச் சரிந்தது. வந்திருந்த இலக்கிய வாதிகளும் விடைபெற்றுத் தமது ஊர்களுக்குத் திரும்பினர்.

- ரமேஷ்

www.padippakam.com

மல்லிகை

36வது ஆண்டு மலருக்கு

மனமார்ந்த வாழ்த்துக்கள்

SURIYA
TEXTILE MILLS (PVT) LTD.

32/34, 3rd Cross Street,
Colombo-11

T.P 336977, 438494,449105 Fax :438531

படிப்பகம்

www.padippakam.com

**MALLIKAI**
**36th Year Special Issue**
**January 2001**

Best Wishes to
**MALLIKAI**
36th year Special Issue

# PARA EXPO PRODUCTS (PVT.) LTD.

Exporters of
Non Traditional
Sri Lankan Foods

30, Sea Avenue,
Colombo - 3
Tel: 573717



படிப்பகம்